தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு-140

இலக்கண விளக்கம்

பொருளதிகாரம்

புறத்திணையியல்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல் நிலையம்

1972

T.4270

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு- 140.

வைத்தியநாத தேசிகர் இயற்றிய

இலக்கண விளக்கம்

பொருளதிகாரம்—புறத்திணையியல்

பதிப்பாசிரியர் :

பண்டித வித்துவான், தி. வே. கோபாலையர் எம். ஏ., பி.ஓ எல்.,

திருவையாறு.

தஞ்சை சரசுவதி மகால் நிர்வாகக் கமிட்டியினருக்காகக்

கௌரவ காரியதரிசி,

நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களால்

வெளியிடப்பட்டது.

கி. பி 1972] [விலை ரூ. 15-00

துணை

வெற்றிவேல் பிரான்.

Publisher's Preface

Ilakkanavilakkam, which is popularly known as *Tholkappiyam in parvo,* is a standard treatise on Tamil Grammar, containing all the three divisions of Tamil Grammar in three parts. Now, we place before the public the second volume of the third part, dealing with ***Purathinai*** of ***Porulathikaram.*** We have already placed before the public *Ezuthathikaram*, ography, and *Sollathikaram* dealing with letters and words. The remaning parts of ***Porulathikaram*** dealing with subject matter, rhetoric, prosody, conventions etc. are already in the press. The author of this work, Vaithianatha Desigar, is a most respected person among the distinguished grammarians of the seventeenth century, coming from a family of Tamil scholars attached to the Dharmapuram monastery; he was for sometimes preceptor to the sons of one of the governors of Madura Naiks in the southern districts. As grammarian, poet, scholar and teacher, he has contributed substantially to the development of sound scholarship in his period, the continued effect of which is discernible even today.

When presenting a treatise on Grammar, we think it necessary to say a few words about Grammar in general and its usefulness in directing the mental activities on right lines to achieve the ideal of human nature and to develop it harmoniously to the full perfection which it is capable of,

but we reserve detailed introduction, giving all particulars about our language, the grammatical studies in general and in particular and other linguistic information, which are essential to bring our language and grammatical studies in the proper perspective in the international academic studies, to the last volume of this work.

We are profoundly indebted to Thiru N. Mahalingam, B. Sc., M. I. E., leading industrialist and well-known savant of Tamil for his gift to this library, of a hand-written copy of Ilakkanavilakkam, which, along with a very old printed edition, long out of print, has been the main basis of this publication.

We thank the learned editor, Thiru Panditha Vidvan, T. V. Gopala Iyer, M. A., B. O. L., for bringing out a self-contained volume giving all parallel citations in the original and all aids a student would like to have. We are thankful to our learned Librarian, Prof. V. Gopala Iyengar, M. A., for his general supervision of the editorial and printing work and to Messrs Vetrivel Press for their neat and speedy execution of the printing.

We wish to record our gratitude to the Government of Tamil Nadu for their annual publication grant which has made this publication possible.

Thanjavur
12—10—72

N. Kandaswamy.
Honorary Secretary,
T. M. S. S. M. Library.

பதிப்பாசிரியர் முன்னுரை

பதினேழாம் நூற்றுண்டில் இலக்கணப் பெரும்புலவ-ராய்த் தமிழகத்தில் வாழ்ந்த சான்றோர் மூவருள்ளும், ஏனை யார் இருவரும் சொல்லிலக்கணம் ஒன்றுபற்றியே நூல் யாத்தாராக, எழுத்து - சொற்-பொருள் மூன்றனையும் பற்றி, யாப்பு, அணி என்ற இரண்டனையும் பொருளினுள் அடக்கி, திருவாரூர் வைத்தியநாத தேசிகர் வரைந்த இலக்கணவிளக்க நூலின் பொருட்படலத்தின் இரண்டாம் இயலாகிய புறத் திணையியல் இப்பொழுது வெளியிடப்படுகிறது.

இப்புறத்திணையியல் தொல்காப்பியப் புறத்திணையியல் அமைப்பை ஓரளவு பின்பற்றியுள்ளது. பெரும்பான்மையான எடுத்துக்காட்டுக்கள் புறப்பொருள்வெண்பாமாலையின்கண் அமைந்துள்ள எடுத்துக்காட்டு வெண்பாக்களேயாம். சிறு பான்மை தொல்காப்பியப்புறத்திணையியல் எடுத்துக்காட்டுப் பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

'பழிப்பில் சூத்திரம்' தொ. பொ. 656 என்ற நூற்பா உரையில் பேராசிரியர் பழிப்பில் சூத்திரம் என்றதனுல், காண்டிகை செய்யத்தகாது என்று இகழ்ச்சிப்படப் பரந்தன உளவாயின் மறுத்துச்செய்க எனவும், பரந்துபட்ட சூத்திரத் தினை அங்ஙனம் மறுத்துச் செய்யாது தொகுத்துக் காண்டி கையான் உரைக்குங்கால் உட்பொருளெல்லாம் விளங்கா-மல் கரந்து செய்தலும் உண்டு என்பதுகொள்க எனவும் கூறிய செய்திகளை உட்கொண்டு இவ்வாசிரியர் துறைகளை விளக்கக் கூறும் பரந்துபட்ட நூற்பாக்களுக்கு, உட்பொரு-ளெல்லாம் விளங்காமல் காண்டிகை கரந்து செய்துள்ளார். எடுத்துக்காட்டுப் பாடல்களுக்கு அருகி ஒரோவழிச் சிறிது விளக்கம் தரப்பட்டுள்ளது.

இப்புறத்திணையியலை முன்னைய பதிப்புக்களையும் தஞ்சை மன்னர் சரபோஜி சரசுவதிமகால் கையெழுத்துச் சுவடியினையும், இவ்வாசிரியர் எடுத்தாண்டுள்ள தொல்காப்பியப் புறத்திணையியல் உரைப் பகுதிகளையும், கூர்ந்துநோக்கிக் கசடு அறுத்து, புறப்பொருட் செய்திகளை முன்னுரையில் தொகுத்துக் கூறி, நூற்பா, எடுத்துக்காட்டுப் பாடல்கள் ஆகியவற்றைச் சந்தி பிரித்து, நூற்பாக்களில் காணப்படும் துறைகளுக்கு விளக்கம் வரைந்து, எடுத்துக்காட்டுப் பாடல்களுக்குப் போந்த பொருள்எழுதி அவற்றில் துறைச்செய்தியைச் சுட்டி, பாடல்களுக்குத் தலைப்பிட்டு அடுத்துப் புறப்பொருள் வெண்பாமாலையின் கொளுச்செய்யுள்களையும் குறிப்பிட்டு ஏனைய அகரவரிசைகளுடன் துறைப்பெயர் அகரவரிசை, அருஞ்சொல் அகரவரிசை முதலியவற்றையும் இணைத்துப் பதிப்பித்தல் வேண்டும் என்று தஞ்சை சரசுவதிமகால் நூல் நிலையக் கௌரவக் காரியதரிசி முதுபெரும்புலவர் உயர்திரு நீ. கந்தசாமிப் பிள்ளையவர்கள் ஆணையிட்டார்கள்.

அவர்தம் ஆணையை மேற்கொண்டு வெளிவரும் இப் பதிப்பிற்கு உறுதுணையாகிய என் இளவல் திரு. வித்துவான் கங்காதரன் **M. A.** முதலியவருக்கு என் நல்லாசி வழங்கி, இதனை விரைவில் பதிப்பித்தளித்துள்ள தஞ்சை வெற்றிவேல் அச்சகத்தாருக்கு என் நன்றியைத் தெரிவித்து என் அயர்வான் இடையிடையே நிகழ்ந்திருக்கக்கூடிய சிறுபிழைகளைப் பொறுத்தருளுமாறு தமிழ்கூறு நல்லுலகத்தை வேண்டி, என்னை இந்நற்பணிக்கண் தோன்றாத் துணையாய் இயக்கி வரும் ஐயாறன் அடியிணை இறைஞ்சி இந்நற்பணியினைத் தொடர்கிறேன்.

46, மேலமடவளாகம்,
திருவையாறு.
12—10—72

தி. வே. கோபாலையர்.

பொருளடக்கம்

புறத்திணையியல் — பொருட்சுருக்கம்	....	1— 44
பொதுச்செய்தி	....	45— 53
வெட்சிப் பகுதி	....	53— 95
வஞ்சிப் பகுதி	....	95—116
உழிஞைப் பகுதி	...	116—151
தும்பைப் பகுதி	....	151—176
வாகைப் பகுதி	....	176—207
காஞ்சிப் பகுதி	....	207—229
பாடாண் பகுதி	....	230—275
ஒழிபு	....	276—368
நூற்பா அகரவரிசை	....	369
எடுத்துக்காட்டு அகரவரிசை	....	370—386
உரைமேற்கோள் நூற்பா அகரவரிசை	....	387
உரைவிளக்க ஒத்தநூற்பா அகரவரிசை	....	388—392
துறை அகரவரிசை	....	393—410
கொளு அகரவரிசை	....	411—424
சுருக்கெழுத்து விளக்கம்	....	425—426
அருஞ்சொற்பொருள் அகரவரிசை	....	427—449
பிழையும் திருத்தமும்	....	450

இரண்டாவது
புறத்திணை இயல்
பொருட்சுருக்கம்

உலகத்து உறுதிப்பொருள்கள் நான்கனுள் இலக்கண வகையான் எடுத்துக் கூறப்படுவன பொதுவாக அறம் பொருள் இன்பம் என்ற மூன்றுமே. அவற்றுள், இன்ப மாவது தமிழ்நூலாரால் அகம் என்று பெயரிடப்படுவது. அஃது அகத்திணை இயலுள் விளக்கப்பட்டது. இனி, அறமும் பொருளும் புறம் என்று பெயரிடப்பட்டுப் புறத்திணை இயலுள் கூறப்படுவன ஆயின.

அகத்திணை, குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை பெருந்திணை கைக்கிளை என்று எழுவகைத்து ஆயவாறுபோல, அதன் புறமாகக் கொள்ளப்படும் புறத்திணையும் வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை காஞ்சி பாடாண் என்று எழுவகைத் தாகப் பகுக்கப்பட்டது. அகத்திணைக்குப் புறத்திணை அவ் வந்நிலத்து மக்கள் செய்யும் செயல் வேறுபாடுகளே யாத லின், அகத்திணை ஏழனுக்கும் புறத்திணை ஏழு என்பதே இந் நூலாசிரியர் கருத்து. பன்னிருபடலமும் அதனை அடி யொற்றி எழுந்த புறப்பொருள் வெண்பாமாலையும் புறத் திணை பன்னிரண்டு என்று குறிப்பிடும் செய்தி இந்நூலாசிரி யருக்கு உடன்பாடு அன்று.

பசுநிரையைக் கைப்பற்றச் செல்லும் வீரர் வெட்சிப்பூச் சூடவும் அதனை மீட்போர் கரந்தைப்பூச் சூடிப் பொருதலின் வெட்சி இருவகையாகவும், மதிலை வளைப்போர் உழிஞைப்பூச்

சூடவும் அதனைக் காப்போர் நொச்சிப்பூச் சூடலின் உழிஞை இருவகையாகவும், சூடும் பூக்கள் பற்றிப் பகுத்துக் கொள்ளப் படும் என்றார்.

வெட்சி

வெட்சி என்ற புறத்திணையாவது குறிஞ்சி என்ற அகத் திணைக்குப் புறனாவதாம். குறிஞ்சி களவொழுக்கமாகும். அதற்குரிய இடம் மலையும் மலைசார்ந்த இடமும் ஆகும். அதற்குரிய நேரம் இராக்காலமாகும். அதற்குரிய புணர்தல் ஒழுக்கத்தைத் தலைவன் ஊர்க்காவலர்களையும் பொருட்படுத் தாது தன்திறமையால் தவறாது முடித்துவருவான். வெட்சி வீரரும் களவினால் மலையும் மலைசார்ந்தஇடமும் ஆகியவற் றிற்கு இரவில் சென்று ஊர்க்காவலர் பற்றிக் கவலையுறாது தாம் கருதிய பசுக்கூட்டங்களைக் கவர்ந்தே வருதலின், வெட்சியானது குறிஞ்சிக்குப் புறன் ஆயிற்று. இருபெரு வேந்தரும் தம்முள் மாறுபாடுகொண்டு போரிடக் கருதுங் கால், ஒவ்வொருவரும் மற்றவர் நாட்டு வாழும் ஆவும் அந்த ணரும் பெண்டிரும் பிணியாளரும் புதல்வர்ப்பெறாதாரும் முதலிய தீங்கு செய்யத் தகாத சாதிகளை வெளியே புறப் பட்டுச் செல்லுமாறு தெரிவிப்பார்கள்; பசுக்கள் தாமாகவே வேற்றிடம்சென்று பிழைத்தல் இயலாது ஆகலின், அவற்றைக் கவர்ந்து சென்று தீங்குநேராது பாதுகாப்பார்கள். ஆதலின் வெட்சி வீரருக்கு மறத்துறையிலும் அறமே அடிப்படையாக உள்ளது என்பது பண்டையார் கருத்து. வெட்சி நிகழ்ச்சி கள் யாவும் 'அரசனுடைய ஆணையை உட்கொண்டே நிகழ் தல் வேண்டும். வீரர் தாமாகவே சென்று பகைவர்நாட்டுப் பசுக்களைக் கவர்ந்து வருதல் ஏற்புடைத்தன்று.

பகைமன்னனொடு போரிட முடிவுசெய்த மன்னவன் தன் தானைத்தலைவர்களை அழைத்துப் பகைவருடைய பசுக் கூட்டங்களைக் கவர்ந்து வருமாறு ஆணையிடுவான். அவர் கள் அவன் ஆணைவழி நடப்பதற்கு ஆயத்தம் ஆவார்கள்.

படை புறப்படுங்கால் பெரிய ஆரவாரம் தோன்றும். தாங்கள் மேற்கொள்ளும் செயல் வெற்றியாக முடியுமா என்பதனை அறிவதற்கு வீரர்கள் நல்வாய்ப்புள் கேட்பார்கள். வீரருள் சிலர் தம் வீரத்திடம் கொண்ட நம்பிக்கையால் தமக்கு நல்வாய்ப்புள் தேவையில்லை என்று பேசுவார்கள். வீரர்கள் பகைவர் நாடு நோக்கிச் செல்வார்கள். அதற்குள் சிலர் ஒற்றராகிச் சென்று பகைவருடைய பசுக்கூட்டங்களைக் கவர்தற்கு உரிய வழிவகைகளை அறிந்து வருவார்கள். அச்செய்திகளை அறிந்த வீரர்கள் பகைவரின் பசுக்கூட்டங்கள் இருக்கும் பகுதிகளைச் சூழ்ந்துகொள்வார்கள். இவ் வீரருக்கும் பசுக்களைப் பாதுகாப்பாருக்கும் இடையே பூசல் நிகழும். அப்பூசலில் சிலர் இறந்துபடுதலும் கூடும். பசுக்கள் கவரப்படும். பசுக்கள் கவரப்பட்ட செய்தி யறிந்த பகை வீரர் சிலர் எதிர்த்து வந்து, வெட்சிப்பூச் சூடித் தம் பசுக்களைக் கவர்ந்து செல்லும் வீரரை எதிர்த்துப் போரிடுவார்கள், பெரும்பாலும் மீட்க வந்தவர்கள் தோற்றோடுவர். பசுக்கூட்டங்களைத் துன்பம் எதுவும் இன்றி வெட்சி வீரர்கள் ஓட்டிச் செல்வார்கள்; கவலைப்பட்டுக் கொண்டிருந்த தம் உறவினர் மகிழுமாறு பசுக்கூட்டங்களுடன் தம் ஊர் வந்து அடைவார்கள்; கவரப்பட்ட பசுக்கூட்டங்களைத் தம் ஊரில் கொண்டுவந்து சேர்ப்பார்கள்; அவற்றைப் பெரும்பாலும் தமக்குள் பகுத்துக்கொள்வார்கள்; தாம் கொண்ட வெற்றிச் சிறப்பைக் கொண்டாடுவதற்குக் கள் உண்டு களிப்பார்கள். கிணையன், பறையன், துடியன், பாணன் முதலியவருக்கும் விறலியருக்கும் சில பசுக்களைக் கொடையாக வழங்குவார்கள். ஒற்றராகிச் சென்று நல்வாய்ப்பினை அறிந்து வந்து சொல்லிய வீரருக்குச் சில பசுக்கள் மிகுதியாகவே வழங்கப்படும். நல்வாய்ப்புள் சொன்னவர்க்கும் தக்கபரிசு வழங்கப்படும். பரம்பரையாகத் தமக்குத் துடி என்ற பறையினை இயக்கி உற்சாகம் ஊட்டியவனுக்குக் கள்ளினை மிகுதியும் வழங்கிக் கொற்றவைக்குப் பூசனை செய்து, பெண்டிரைக் கொண்டு வேலனொடு வெறியாட்டு நிகழ்த்தி மகிழ்வார்கள்.

இனி, வெட்சிப்பகுதி இரண்டனுள், பசுக்கூட்டங்களை மீட்கச் செல்வார் கரந்தைப்பூச் சூடிப் போராடச் செல்லும் இயல்பினைக் கூறும் பகுதி கரந்தையாகும்.

பசுக்கூட்டங்கள் கவரப்பட்ட செய்தியை அறிந்த மன்னன் அவற்றை மீட்டு வருமாறு தன் வீரர்களுக்கு ஆணையிடுவான். அப்படைகள் பேராரவாரத்துடன் புறப்படும். நல்வாய்ப்புள் கேட்கப்படும். பசுக்கள்சென்ற சுவட்டைப் பின்பற்றி அவற்றை மீட்டுவர வீரர்கள் விரைந்து செல்வர். வீரர்களுக்குச் சான்றோர் நல்லாசி கூறி விடுவர். பசுக் கூட்டங்களை வீரர்கள் விரைவில் சென்று அடைவர். வெட்சி வீரருக்கும் கரந்தை வீரருக்கும் இடையே பூசல் நிகழும். வீரருள் சிலர் உடல்முழுதும் புண்பட்டும், வெற்றியோடு மீள்வதும் உண்டு; சிலர் போர்க்களத்தில் விழுப்புண்பட்டு வீரத்துறக்கம் அடைதலும் உண்டு. பலரும் பகைவருக்கு அஞ்சித் தோற்றோடவும், தான் ஒருவன் மாத்திரம் பகைவரை எதிர்த்து நிற்கும் வீரனும் கரந்தையாரிடையே இருத்தலும் உண்டு. அவ்வீரன் பகைவரை வெட்டி வீழ்த்தி, அப் பகைவருடைய கவந்தம் ஆடுதலைக் கண்டு தானும் கூத்தாடுதலும் உண்டு. பகைவருடைய குடர்மாலை சூடி வேலைச் சுழற்றி அவன் ஆடுதலும் உண்டு. போரில் இறந்துபட்ட கரந்தை மறவர் பிரிவிற்கு இரங்கி யாழ்ப்புலவர் முதலியோர் கையறுநிலை பாடுவர். கரந்தை வீரர் சிலர் தம் வீரத்தின் மேம்பாடு கூறிப் பகைவரை எதிர்க்க முற்படுவர். அவருள் சிலர் தீய சகுனங்களையும் பொருட்படுத்தாது போரிட்டுப் பசுநிரைகளைக் கவர்ந்து மீள்வர். அவர்களுக்கு அரசன் சிறப்புச் செய்வான். அரசனிடத்துக் கொண்ட அன்பினால் நாட்டின் பெருமைக்காகப் போரிட்டு உயிர் துறத்தலை வீரர்கள் மகிழ்வோடு ஏற்பர். வீரர்குடி தொன்றுதொட்டு வீரம் செறிந்தது என்று புகழப்படும். வெட்சி மறவர் கைப்பற்றிய பசுக்கூட்டங்கள் கரந்தை வீரரால் மீட்கப்படும். அப்பொழுது இருதிறத்தாருக்கும் இடையே கடும்பூசல் நிகழும். மீட்ட

பசுக்களை வெருட்டி அழைத்து வாராது, மெல்ல நடத்தி வருவார்கள். மீண்டுவந்த பசுக்களைக் கண்டு உடைமை யாளர் அவற்றை மகிழ்ச்சியால் தழுவிக் கண்ணீர் விடுவர். மீட்கப்பட்ட பசுக்கள் ஓரிடத்தில் தொகுக்கப்படும். பசுக்கள் உடைமையாளரிடம் தாமே போய்ச்சேரும். வெற்றி பெற்ற மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையில் கரந்தை வீரர் கள்ளுண்டு களிப்பர். வீரர்களுக்கு நன்கொடை வழங்கப் படும். தமக்கு வெற்றி யளித்த கொற்றவைக்கு வழிபாடு நிகழ்த்துவர். அப்பொழுது எருமை பலியிடப்படும்.

வஞ்சி

முல்லைக்கு உரிய நிலம் காடும் காடு சார்ந்த இடமும் ஆகும். அதற்குரிய பெரும்பொழுது கார்காலம். அதற்குரிய உரிப்பொருள் இருத்தல். பசுக்கூட்டங்களைக் கவர்ந்தோர், மீட்டோர் என்ற இருதிறத்தாருள், வெட்சியில் தோற்றவர் வாளா இராது, பகைவர் நிலத்தைக் கைப்பற்றும் நோக்கத் துடன் படைதிரட்டிப் பகைவர்மேற் சேறல் வஞ்சியாம். இதற்கு வஞ்சிப்பூச் சூடிச் செல்வர். படை தங்குதற்குரிய இடம் காட்டுப்பகுதி. படை புறப்படுதலுக்கு உரிய காலம் கார்காலம். அக்காலத்தில் வீரர் தலைவியரைப் பிரிந்து பாச றைக்கண் இருப்பர். தலைவியர் இல்லில் இருந்து நல்லறம் செய்துகொண்டிருப்பர். ஆதலின், வஞ்சி என்பது முல்லை என்ற அகத்திணைக்கு ஏற்ற புறத்திணை ஆயிற்று.

பகைவர் நாட்டைக் கைப்பற்றுதலுக்குப் படைஎடுத்துச் செல்லும் வீரர் வஞ்சிப்பூவைச் சூடிக்கொள்வர். படைகள் புறப்படுங்கால் பெரிய ஆரவாரம் ஏற்படும். அரசன் நல்ல நாளில் நல்லநேரத்தில் தான் புறப்படுதலுக்கு அறிகுறியாகத் தன்குடையினைப் புறப்படவிடுவான்; பிறகு தன் கொற்ற வாளினைப் புறப்பட விடுவான். கொற்றவைக்கு வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டு அவள் அருள் வேண்டப்படும். வீரர்கள் நிகழ்த்த இருக்கும் வீரத்தொழில்கள் விளம்பப்படும். அரசன்

வேலை ஏந்தியவுடன் அவன் வெற்றிச்சிறப்புப் புகழ்ந்துகூறப் படும். அரசன் புகழைக் கூறும்பொழுதே, அவன் படையெ டுப்பினால் பகைவர்நாடு அழிந்துபடுமே என்று இரங்கிக் கூறுவர். முன்பு பகைவர் பலரைப் பொருது வென்ற வீர ருக்கு அரசன் சிறப்புச் செய்வான். படையெழுச்சியைக் கண்ட அளவிலேயே அஞ்சிச் சரணடைந்து பகைவேந்தன் திறைப்பொருள் கொடுப்பக் கண்டு, வஞ்சிவேந்தன் சினம் தணிந்து போர் செய்ய நினையாது மீள்வதும் உண்டு. பகை வரொடு போரிட்டு வென்ற சிறந்த வீரருக்கு அரசன் முத்து மாலை அணிவித்துச் சிறப்புப்பெயர் வழங்குவதும் உண்டு. வீரர்கள் போர்க்களம் சென்று பகைவரை அணுகி வஞ்சினம் கூறிப் போரிடத் தொடங்குவர். பகைவரோடு போரிட்டுப் புண்பட்டு வந்தவனுடைய புதல்வனுக்கு நல்ல மருதநில வயல்களைப் பரிசிலாக வழங்குமாறு பரிந்துரை வழங்கப்படும். பகைப்புலம் சென்ற வஞ்சி வீரர் பகைவருடைய கோநகரங் களை எரியூட்டுவதும் வழக்கம். பகைவர்நாட்டு மக்கள் அலறி ஓட, அவர்கள் வீட்டில் உள்ள விலையுயர்ந்த பொருள் களைக் கொள்ளையிடுதலும் உண்டு. அங்ஙனம் கொள்ளை யிட்ட பொருள்கள் எல்லாம் பாணர்களுக்குப் பரிசிலாக வழங்கப்பெறும். இவற்றால் கலங்கிய பகைமன்னன் பல யானைகளைத் தன்னை எதிர்க்கவந்த அரசனுக்குத் திறைப் பொருளாக வழங்கித் தன் குடிமக்களைத் துன்பத்திலிருந்து பாதுகாத்தலும் உண்டு.

போரிடற்கு எழுந்த வேந்தனுடைய பாசறைச்செய்தி கள் புகழ்ந்து கூறப்படும். பகைவர் பலர் எதிர்க்கவும், வேக மாக வரும் நீரைத் தடுத்து நிறுத்தும் அணைபோல ஒருவனே இருந்து அத்தனை வீரர்களையும் தடுத்துப் போரிடும் நிகழ்ச்சி யும் ஏற்படும். சிறந்தவீரர்கள், தோற்றுப் புறமுதுகிட்டு ஓடும் பகைவர்மேல் ஒருபோதும் படைதொடாத பேராண்மை உடையவராய் விளங்குவர். பகைவர்ஊரைப் பாழாக்கி அவர்களை வணக்கியபின்னும், வஞ்சிவேந்தன் மீண்டும் இகல்

கருதிப் பாசறையிலேயே தங்கிஇருத்தலும் உண்டு. தான் பெரிதும் துன்புறுத்தியும், தனக்குப் பணியாத பகைவர் நாட்டினை மீண்டும் வஞ்சிவேந்தன் தீக்கொளுவுதலும் உண்டு. வஞ்சிமன்னன் போர்செய்யப் புறப்படும்முன், தன்வீரர் களிடையே தானும் இருந்து, தானும் படையாளருடன் உடன் உண்பான் போல்வதொரு முகமனாகப் பிண்டித்து வைத்த உண்டியைக் கொடுத்தல் மேயின பெருஞ்சோற்று நிலை நிகழும். பகைவரைச் சிதறஅடித்த பின்னரும் வஞ்சி வேந்தனுடைய கோபம் மேலும்மேலும் பெருகுதலும் உண்டு. தன்னிடம் அடிபணியாத வேந்தனது நாட்டினைப் பாழாக்கி, அந்நிலை நிகழ்த்தவேண்டிய தேவை ஏற்பட்டதற்கு வருந் தலும் உண்டு.

உழிஞை

மருதம் என்பது வயலும்வயல்சார்ந்த ஊரும் போல்வன வற்றை நிலமாகக் கொள்வது. மருதத்திற்குப் பெரும் பொழுது வரையறுக்கப்படவில்லை. சிறுபொழுதில் விடியற் காலமே மருதத்திற்குச் சிறந்தது. மருதத்தின் உரிப்பொருள் ஊடலாதலின், தலைவி வீட்டிற்குள் இருப்பவும், தலைவன் வெளியிருந்து வீட்டிற்குள் வருவதற்கு ஆவன செய்தற்கண் முயல்வான். உழிஞைத்திணையுள் மதில் பெரும்பாலும் மருத நிலத்திலேயே இருக்கும். அம்மதிற்போர் ஆண்டுமுழுதும் நிக ழும். போர் தொடங்குங்காலம் விடியற்காலமே. ஒருவன் மதி லின் உள் இருப்பவும், மற்றவன் வெளியிலிருந்து மதிலின் உள் புகுவதற்கு ஆவன செய்வான். தலைவி ஊடல்தீர்ந்து தலைவ னுடன் கூடுதலை விரும்புவதுபோல, மதிலின் உள்இருக்கும் மன்னனும் பகை தீர்ந்து மதில்கதவினைத் திறந்து வெளி மன்னனுடன் நட்புறவோடு இருத்தலையே பெரும்பாலும் விரும்புவான். ஆதலின் உழிஞை என்பது மருதம் என்ற அகத்திணைக்கு ஏற்ற புறத்திணை ஆயிற்று.

மதிலின் வெளியிலிருந்து மதிலை வளைத்துப் போரிடும் மன்னன் உழிஞைப்பூச் சூடவும், மதிலின் உள்ளிருப்போன் நொச்சிப்பூச் சூடி மதிலைக் காத்தலின் உழிஞை இருவகைப் படுவது ஆயிற்று.

பகைமன்னனது மதிலை முற்றுகையிட்டுக் கைப்பற்றக் கருதிய மன்னன், உழிஞைப்பூவைச் சூடிப் பகைவர்மதிலைக் கைப்பற்றுதற்குத் திட்டம் இடுவான். நல்லநாளில் நல்ல நேரத்தில் அரசன் வெண்கொற்றக்குடை புறப்பட விடப் படும். அங்ஙனமே அரசன் கொற்றவாளும் புறவீடு செய்யப் படும். படை ஊழிக்காலக்கடல் வெள்ளம்போல முழங்கும். அரசனுடைய முரசம் உழிஞைமாலை சூட்டப்பட்டுப் புகழப் படும். உழிஞை சூடிய வீரர்களோடு அரசன் பகைவரது மதிலைக் கைப்பற்றுவதற்குப் புறப்படுவான். அவ்வரசனுடைய ஊக்கம், மாறுபாடு, ஆலோசனைத்திறம், செல்வம் இவற்றை உட்கொண்டு விரைவில் பகைவர்மதில் அவன் கைப்படும் என்று கூறுவர். வாணாசுரனுடைய சோ என்ற மதிலினை அழித்த கண்ணனொடு அரசனை ஒப்பிட்டுப்புகழ்ந்து கூறுவர். 'வானத்தில் இயங்கிய முப்புரங்களையும் எரித்த சிவபெருமானும் உழிஞைப்பூவினைச் சூடியே புறப்பட்டான்' என்று உழிஞைப்பூவின் சிறப்புக் கூறப்படும். கிரவுஞ்சமலையை இரு கூறுக்கிய முருகனும் பூவினுள் ஒன்றாகிய காந்தளைச் சூடினான் ஆதலின், போருக்குப் புறப்படுவோர் தவறாது பூச்சூடியே செல்வர் என்ற செய்தி புகலப்படும். அரண்அகத்துள்ளோர் வெளியேறுதலும் அவர் நண்பர் உள்ளே புகுதலும் நிகழ்த்தாதபடி, உழிஞை வேந்தன் பகைமன்னனது அரணத்தைத் தன்வீரர்களோடு நன்கு சூழ்ந்துகொள்வான். உழிஞை வீரர்கள் தாம் வளைத்த மதிலின் உயர்வு அகலம் திண்மை பொறியமைப்பு இவற்றை நோக்க, அம்மதிலைக் கைக்கோடல் அத்துணை எளியசெயல் அன்று என்பது குறிப்பிடப்படும். தம் கிடுகுப்படையின் உதவியால் தவறாது வெற்றியும் புகழும் அடையலாம் என்று உழிஞைவீரர் உளங்

கொள்வர். உழிஞை வீரன் மதில்மேல் ஏறித் தான் ஒருவனாகவே போரிடும் செயல் நிகழ்தலும் உண்டு. புறமதில் கதவுகளை யானைகொண்டு திறப்பித்து முரசம் முதலியவை முழங்கக் காவற்காட்டினுள் புகுவர். கிடுகுப்படையினை உடைய உழிஞை வீரர் தாம் புறமதிலைக் கைக்கொண்ட மகிழ்ச்சியால் கூத்தாடிக்கொண்டே காவற்காட்டினைக் கடக்க முற்படுவர்; காவற்காட்டை அரிதின் கடந்து ஆழமான அகழியின் வெளிக்கரையினை அடைவர்; அவ்வகழியின் இருகரைக்கண்ணும் இருதிற வீரரும் இருப்பப் பாசி போல ஒருகால் விலகியும் ஒருகால் நெருங்கியும் போரிடுவர்; புறஎதிர்ப்புக்களுக்கு இடையே அகழியைக்கடந்து அகமதிலை அடைவர். மதிலில் உள்ள பொறிகள் பலவாறு தாக்கவும், உயிருக்கு அஞ்சாது அம்மதில்மீது உழிஞை வீரர் ஏணிகளைச் சார்த்தி, மதில்மீது ஏறத் தொடங்குவர். குளத்தைப் பாசி விடாது பற்றிக்கொண்டிருப்பது போல நொச்சிவீரர்தம் தாக்குதலுக்குச் சலியாது ஏணியைப்பற்றி உழிஞைவீரர் விடாது அகமதில்மீது ஏறுவர். அகமதில்மீது உழிஞையாருக்கும் நொச்சியாருக்கும் போர் நடந்துகொண்டிருக்கும். இச் செய்திகளுள் எதனையும் அறியாது மதிலகத்து இருக்கும் பொதுமக்கள் மகிழ்ச்சியாக இருந்துகொண்டிருப்பர். காலையில் மதிலின் உட்புறம் வழக்கம் போல முரசவாத்தியங்கள் ஒலிக்கும். அதுகேட்டுப் பொறுது வெளியில் இருக்கும் உழிஞைவீரர் வஞ்சினம் கூறி அன்று மாலைக்குள் மதிலைக் கைப்பற்றி மதிலுக்குள் களவேள்விக்குக் கூழ் பலியிடப் போவதாகக் கூறி, முழை துடுப்பு முதலியவற்றை மதிலுக்குள் வீசிஎறிவர். உழிஞைமன்னன் பகைவரை அழித்து மதில்காவலையும் யானைப்படையையும் கைப்பற்றிவிடுவான். இதற்கிடையே மதிலகத்து இருக்கும் வேந்தனுடைய நண்பன் செய்தி அறிந்து படையொடு விரைந்து வந்து உழிஞைமன்னனை வெருட்டிவிடுவதற்கு முற்படுதலும் உண்டு.

மதிலைக் கைப்பற்றியபின் உழிஞைவேந்தன் மதிலகத்துள்ள பெரிய மாடங்களை இடித்து மதிலகத்தைக் கழுதையை ஏர் பூட்டி உழுது, வெள்வரகையும் கொள்ளையும் விதைப்பான். மதிலைக் கைப்பற்றிய மன்னவன், புண்ணிய நதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட நீரினால் விசயாபிடேகம் தன்வாளினுக்கு நிகழ்த்துவான். உழிஞைமன்னன் வெற்றிச்சிறப்பு நன்கு கொண்டாடப்படும். அந்நேரத்தில் அவனுக்கு அடங்கிய நொச்சிமன்னன் முதலியோர் அவன்அடி பணிந்து நிற்பர். சிலஇடங்களில், புறமதிலைக் கைப்பற்றிய மன்னவன் அகத்தே இருக்கும் மன்னவன் தன்மகளை அவனுக்கு மணம் செய்து கொடுத்தால் முற்றுகையை விட்டுவிடுவதாகக் கூறுதலும் உண்டு. சிலசமயம் புறமதிலைக் கைப்பற்றிய அளவிலேயே அகத்தோன் நடுங்கி வழிபாடு கூறித் திறை அளப்ப, உழிஞைமன்னன் முற்றுகையை விடுத்து மீளுதலும் உண்டு. தன்னிடம் அடங்கி வாழும் குறுநிலமன்னர் நாட்டை வளமாக வாழவிடும் உழிஞைவேந்தன், நொச்சிமன்னனுடைய மதிலைப் பலநாள் முற்றுகையிட்டும் கைப்பற்ற இயலாத நிலையில், திரும்பிச்செல்ல மனம் இன்றிப் பலநாள்கள் மதிற்புறத்துப் பாடிவீட்டில் இருந்துகொண்டே பகைவருக்கும் சேதம் விளைத்து முற்றுகையைத் தொடர்ந்து நடத்துதலும் நிகழும். இறுதியில் மதிலகத்து மன்னன் வெளியிலிருந்து முற்றுகையிடும் மன்னனுக்கு வழிபாடுகூறி மாறுபாட்டை நீக்கிக்கோடலும் உண்டு.

உழிஞைத்திணையின் மற்றொரு பகுதி நொச்சியாகும். அம்பு எய்து மறைதலுக்கு உரிய மதில்உறுப்புக்களைஉடைய மதிலைக்காப்போர் நொச்சிப்பூவினைச் சூடுவர். புறமதிலில் இருந்து பகைவராகிய உழிஞைவீரரை எதிர்க்குங்காலை, நொச்சிமறவர் சிலர் வீரசுவர்க்கம் அடைதலும் உண்டு. காவற்காட்டிற்கும் அகழிக்கும் சேதம் ஏற்படாதவகையில் நொச்சிவீரர் போரிடுவர். தம்வீரத்தை வெளிப்படுத்தி அப்போரில் நொச்சிமறவர் உயிர்நீத்தலும் உண்டு. மதில்மீது

குதிரை பிறர் தடுக்கமுடியாத வேகத்தோடு தாவிச்சென்று வீரனைத் தன்மீதுகொண்டு வீரத்தை வெளிப்படுத்தும் காட்சியையும் காணலாம். உள்மதிலைச் சார்ந்து போரிட்டு வாள் வடுப்பட்டபின்னும் தம்மானத்தால் நொச்சிவீரர் மதிலுக்கு வெளியே போந்து உழிஞைவீரரோடு போரிடும் நிலையும் ஏற்படும். மதில்மீது மானமும் வீரமும்கொண்டு போரிடும்வீரர் தோளும்தாளும் துணிக்கப்பட்டு வீரசுவர்க்கம் அடைதலும் உண்டு. எஞ்சியவர், மதிலுக்குள் உழிஞைவீரர் அடியெடுத்து வையாதவாறு வெட்டிச் சாய்ப்பர். உழிஞைமன்னன் நொச்சியானிடம் மகட்கொடை வேண்டவும், நொச்சியான் மறுத்துக் கூறும் நிகழ்ச்சியும் இந்நொச்சிப் பகுதியில் இடம்பெறும்.

தும்பை

நெய்தலுக்கு உரியநிலம் பெருமணல் உலகம். நெய்தல் திணைக்குப் பெரும்பொழுது வரைவின்று. நெய்தலின் சிறுபொழுது எற்பாடு ஆகிய பிற்பகல். தலைவனது பிரிவினால் தலைவிக்கே இரக்கம் பெரும்பாலும் நிகழும். வினைவயின் பிரிந்த தலைமகனிடம் பெரும்பாலும் இரக்கம் இராது. தும்பைப்பூச் சூடி இருதிறத்தாரும் போர் நிகழ்த்தும் களம் காடும் மலையும் கழனியும் அல்லாத களரும் மணலும் சார்ந்த இடமாகும். போரிடுவதற்குப் பெரும்பொழுது வரைவின்று. சிறுபொழுதிலும் பிற்பகலே போர் முடியும் காலமாகும். போர் முடிவுபற்றி வீரருக்கு இரக்கம்இன்று; வீரர்தம் மனைவிமார்களுக்கே இரக்கம் ஏற்படும். வீரக்குறிப்பின் அருள் பற்றி வீரர் ஒருவர் ஒருவரை நோக்கி இரங்குவர். இருதிறத்தாரும் ஒழியாது போர்க்களத்து இறந்துபடும்வழிக் கண்டோர் இரங்குவர். இவற்றை நோக்கத் தும்பை என்ற திணை நெய்தல் என்ற அகத்திணைக்குப் புறனாயிற்று.

களம் வகுத்துப் போரிடுதல் தும்பையாம். போர் நிகழ்த்துங்காலை, இருதிறத்து வீரரும் தும்பைப்பூச் சூடியே

போரிடத் தொடங்குவர். இம்முறையில் வெட்சி, வஞ்சி. உழிஞை என்ற திணைகளிலிருந்து இது வேறுபடுகிறது.

அரசன் பகைமன்னனொடு போர்செய்யக் கருதிக் களங் குறித்துத் தும்பைப்பூச் சூடுவான். பிறகு முன்பு போரிட்டுச் சிறந்த வீரருக்கு விளைநிலன் முதலியன கொடுத்துச் சிறப்புச்செய்யவே, வீரர்பலரும் ஆரவாரம் செய்வர். இரு திறப் படைகளும் போரிடுவதால், அரசர்கள் தம்செங்கோலால் நாட்டினைக் காப்பர் என்றகருத்துக்குமாறாக, 'இருவர் நாடுகளுக்கும் அல்லல் நிகழுமே' என்று நன்மக்கள் குறிப்பிடுவர். 'பகைவர்களை அழிப்பினும் அரசனுடைய நாட்டிற்கும் அல்லல் ஏற்படுமே' என்று இரங்குவாரும் உண்டு. 'இம்மன்னன்படை போர் நிகழ்த்தின் பகைவர்படை சிதைந்து ஒழியுமே' என்று கழிவிரக்கம் கொள்வாரும் இருப்பர். அரசனுடைய யானைப்படை முதற்கண் தன்வீரத்தை வெளிப்படுத்தப் புறப்படும். அடுத்துக் குதிரைப்படை எய்த அம்பினைப் போல விரைந்து புறப்படும். அரசனுடைய தூசிப் படை பகைவருடைய படையைத் தடுத்து அழிப்பதாகக் கூறிப் புறப்படும். அரசனைப் பகைவர்படை எதிர்த்த அளவில், வீரன் ஒருவன் விரைந்து வந்து அப்படைகளை அழித்து யானையையும் கொன்று குவிப்பான். அரசனுடைய தேர், இறந்துபட்ட பகைவர் உடல்மேல் ஊர்ந்து போர்க்களத்தில் பெருமிதத்தோடு காணப்படும். யானைகளைக் கொன்று போர்க்களத்து இறந்துபட்ட வீரர்களைக் குறித்து யாழ்ப் பாணர் விளரிப்பண் பாடித் தம் கடமையைச் செய்வர். இரு திறத்து வேந்தரும் இறந்துபட்டபின்னும், போரினை நிறுத்தாது இருதிறப்படைகளும் தொடர்ந்து போரிடும். தன்னைச் சேர்ந்தோர் பலரும் அஞ்சி ஓடவும், மறம் மிக்க எருமைபோல வீரன் ஒருவன் தான் தனியே நின்று பகைவரது படையை எதிர்க்கும் காட்சியையும் காணலாம். சிலவீரர் தம் கைப் படைகளை யானைகளின்மேல் செலுத்தி அவற்றை வெருட்டிப் பின் எதிர்த்துவரும் வீரருடன் தம் உடல்வலியால் மற்போர்

செய்ய முற்படுவர். வீரன் ஒருவன் தன்மார்பினைப் பிளந்து நிற்கும் வேலினைப் பிடுங்கிக் கைக்கொண்டு பகைவரை எதிர்க்கவரும் காட்சியும் காணப்படும். பகைவர்மார்பினைப் பிளந்த வேலினைக் கையில் ஏந்திப் பகைவர் அஞ்சி ஓட அதனைச் சுழற்றி ஆடுதலும் உண்டு. அரசனுடைய பெருமிதமான தேரின்முன்பு வீரர்கள் ஆடிக்கொண்டு வருவர். அத்தேரின் பின்புறம் பாணரும் விறலியரும் பாட்டுடன் கூத்தாடிக்கொண்டு வருவர். வீரம் மிக்க அரசனுடைய தேரின் முன்னும்பின்னும் தமக்கு உணவு கிடைக்கும் வாய்ப்பை நினைத்துப் பேய் ஆடிவரும். சிலவீரர் தம்வேலினைப் பகைவர் களிற்றின்மீது பாய்ச்சித் தம்மீது அவை திடீரென்று சாயவே, அவற்றின் அடியில் அகப்பட்டு மடிவர். வீரர்சிலர் தம் அரசனுடன் தம் வாட்படையைச் சுழற்றி ஆடுவர். இருதிறத்து வீரரும் தன்வீரத்தைப் புகழுமாறும் யாவரும் கண்டு நடுங்குமாறும் தன்பேராண்மையை வெளிப்படுத்தும் வீரனும் போர்க்களத்தில் காணப்படுதலும் உண்டு. தன் உடலில் அம்பும் வேலும் பலவாய் மொய்த்தலால் உடல் கீழே சாய்ந்த போதும், அது தரையில் படாமல் அவை கால்களாய் இருந்து தடுத்தலாலே, கண்டாருக்கு அச்சம் தரத்தக்க வகையில் சாய்ந்துகிடக்கும் வீரனையும் போர்க்களத்தில் காணலாம். இறந்துபட்ட வீரர்களை வீரபத்தினியர் தழுவி மகிழ்வர். விழுப்புண்பட்டு மாண்ட வீரரின் உறவினர் அவர் உடலங்களைக் கண்டு உருகிக் கண்ணீர் உகுப்பர். தன் அரசன் இறந்துபட்டபின், தான் உயிர்வாழ விரும்பாது பகைவரைக் கடுமையாக எதிர்த்துப் பொருது போர்க்களத்தில் தன் உயிரைப் பலியிடும் வீரனும் அப்படைகளின் நடுவில் இருத்தலும் கூடும். கணவனை இழந்த மறக்குடிமகள் தன் கற்பின் திண்மையால் வீட்டை விடுத்துப் போர்க்களம் வந்து பிணங்களிடைத் தனகணவன் உடலைத் தேடுதற்கு வருதலும்உண்டு. சிலபோர்களில் இருதிறத்து மன்னரும் வீரரும் ஒருசேர இறந்துபடுதலும் நிகழும். அப்பொழுது வீரபத்தினியர் உடன்

கட்டை ஏறுவர். அக்காட்சி காண்போர் எல்லோருக்கும் பேரிரக்கத்தைத் தரும்.

வாகை

பாலையாவது தனக்கென நிலன் இன்றி, முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்ற நால்வகை நிலனும் தத்தம் இயல்பின் திரிதலால் நிகழும் நிலத்தைக்கொள்வது. அதன் உரிப் பொருள் பிரிதல். தலைவன் இல்லறம் நிகழ்த்திப் புகழ் எய்து தற்குப் பொருள் தேடவேண்டித் தலைவியைப் பிரியுமாறு போலச் சுற்றத்தொடர்பை நீத்துப் போர்செய்து துறக்கம் பெறும் கருத்தினுல் வீரர்கள் செல்கின்றனர். நால்வகை நிலத்தும் பாலை நிகழ்வதுபோல, வெட்சி வஞ்சி உழிஞை தும்பை என்ற நால்வகைத் திணைகளையும் நிலைக்களனுகக் கொண்டு வாகைத்திணை நிகழும். ஆதலின், வாகைத்திணை பாலை என்ற அகத்திணைக்குப் புறன்ஆயிற்று. வாகையா வது முயற்சியால் பெற்ற வெற்றி எனவும், இயற்கையாகப் பெற்ற வெற்றி எனவும் இரு கூறுபாடுகளைக்கொண்டு விளங்குகிறது.

கடல்போன்ற சேனையைஉடைய பகைமன்னனை வென்று அரசன் வாகைமாலை சூடுவான். வென்ற வீரருள் விழுப்புண்பட்டாருக்குக் கழலும் பூங்கண்ணியும் கச்சும் வழங்கப்படும். ஓதல் வேட்டல் ஈதல் படைக்கலம்பயிறல் பல்லுயிர்ஓம்பல் என்ற ஐந்தொழில், நான்மறை, முத்தீ, இரு பிறப்பு, வெந்திறல், தண்ணளி இவற்றையுடைய அரச னுடைய ஆட்சியில் உயிர்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றன என்று புகழ்வர். அரசனுடைய கோநகரில் மன்னன் வெற் றியைக் கொண்டாட முரசு முழக்கப்படும். போர்க்கள மாகிய வயலிலே சினம் என்ற விதையை விதைத்துப் புகழ் என்ற விளைச்சலைச் செய்யும் அரசன் உழவனுகப் புகழப்படு வான். அவன் பலகறை போன்ற பற்களை உடைய பேய்கள் வயிறார உண்ணுமாறு தொடி யணிந்த கையைத் துடுப்பாகக்

கொண்டு மூளை கலந்ததாகிய ஊன்சோற்றை முகந்து கொடுத்து அடுகளம் வேட்பான். முரசம் ஒலிக்கப் பகைவரை வென்று அடுகளம் வேட்ட அரசனுடைய தேரின்முன் பேய்கள் தங்களுக்கு உணவளித்த அரசன் 'நீடுவாழ்க' என்று வாழ்த்தும். களிறும் பிடியும் போல இணையாகச் சேர்ந்து, வென்றமன்னன் தேரின்பின் வீரரும் விறலியரும் கைகோத்து ஆடுவர். ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்ற அறுதொழிலும் குறைவறச் செய்து அந்தணன் வீற்றிருப்பான். உழுது பயன்கொண்டு பசுக் கூட்டங்களைப் பாதுகாத்து வாணிகம்செய்து வேதம் ஓதி வேள்வி செய்து பல்லோருக்கும் ஈந்து வணிகர் தலைவன் வீற்றிருப்பான். அரசர் அந்தணர் வணிகர் என்ற மூவரும் மனம் மகிழுமாறு செயற்பட்டு, அவர் ஏவியவற்றைச் செய்து உழு தொழிலைக் குறைவறச் செய்து வேளாளன் வீற்றிருப்பான். தன்படை வெள்ளம் போலப் பெரிதாய்ப் பரவியிருப்பினும், அது குறித்துப் பகைவரைப் பற்றிக் குறைவாக நினையாது, என்றும் எச்சரிக்கையாகவே வீரர்தலைவன் வீற்றிருப்பான். முக்காலத்திலும் நிகழ்பவைகளைத் தவறின்றி அறிந்து உரைக்கும் அறிவன் தன்கூற்றுப் 'பால் புளிப்பினும், பகல் இருளினும், நால்வேத நெறிதிரியினும்' தவறுதவாறு வீற்றிருப்பான்.

நாடோறும் நீரில் பலகாலும் மூழ்கி நிலத்தில் படுத்துத் தோலாடை உடுத்துச் சடைமுடியுடன் வாழ்ந்து ஞாயிற்றை வழிபாடுசெய்து காட்டில் வாழ்ந்துகொண்டே தெய்வம்பேணி விருந்தோம்பித் தாபதர் சிறப்புறுவர். கூதிர்காலத்தும் வாடைக்காலத்தும் வீரர் தம் மனம் காதலால் திரியாது போரின்கண் உள்ள வேட்கையால் இல்லத்தை மறந்து போர்த்தொழிலில் ஒருமனத்தோடு ஈடுபட்டிருப்பர். அரசன் கருணை மிகுதியோடு பிறர் தன்குடிகளை நலியாது காத்துத் தானும் செங்கோலால் புரந்து ஞாயிறுபோல ஒளியுடன் வீற்றிருத்தல், அரசனுக்கு இயற்கையாக இருக்கவேண்டும் பண்பு

நலன் கூறும் அரசமுல்லை எனப்படும். முத்தீ வேட்டு நான் மறை ஓதும் அந்தணன் தன் அறிவாற்றலால் இகல்மேற் கொண்ட இருபெருவேந்தர் போர்மேற் செல்லாதவாறு சந்து செய்விக்கும் இயல்பினன் ஆவான். அறங்கூறு அவையத்தி லுள்ளார் குடிப்பிறப்பு கல்வி குணம் வாய்மை தூய்மை நடுவு நிலைமை அழுக்காறுமை அவாவின்மை என்ற எண் பண்புடையராய், இருதிறத்தார் கூற்றும் கேட்டு நீதி வழங்கு தற்குரியராவர். வானம் நிலவுலகம் இவ்விரண்டன்கண் ணும் ஆறுபருவத்தும் நிகழ்வனவற்றைக் கண்ணி உரைக் கும் ஆற்றலை உடையவனுய்க் கணிவன் விளங்குவான். பகைவன் போரிட வந்தமை அறிந்தால், தனிப்புதல்வனையும் தவருது போருக்கு அனுப்பிவைக்கும்அளவு மறக்குடிமக ளிடத்தும் வீரம் செறிந்து காணப்படும். 'என்தந்தை வீர மரணம் எய்தி நடுகல்லுள் தெய்வமாக உள்ளான்; என் கணவன் போர்க்களத்தில் உயிர்நீத்தான்; என் உடன்பிறந் தோரும் போர்க்களத்திலேயே பட்டனர்; என் புதல்வனும் மாற்றலரை எதிர்த்துப் பொருது அவர் விடுத்த அம்புகள் உடல்முழுதும் தைத்ததனுல் முள்ளம்பன்றிபோல் கிடந்தான்' என்று கூறும்அளவுக்கு ஏருண்குடி சிறந்து விளங்கும். 'பெருவீரனுடைய பரம்பரையில் தோன்றிய சிறுவரும் குல விச்சை கலலாமல் பாகம்பட்டு வில்தொழிலில் சிறந்துவிளங் குவர்' என்று இல்லும் பதியும் இயல்பும் சுட்டி வல்லாண் முல்லை விளக்கப்பெறும். 'அரசனுடைய காவல் நிகழாவிடின் நாட்டில் சான்ருேர்தம் வாழ்க்கை அமைதியாக நிகழ்வுருது' என்று காவல்முல்லை சிறப்பிக்கப்படும். அரசன் வீரன்செய்த வீரச்செயலைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கவும், வீரன் தான் பயன்கருதிச் செயற்படுபவன் அல்லன் ஆதலின், அப்பரிசு களை ஏற்றுக்கொள்ளாது தன் பண்புநலன் கூறிப் பெருமிதத் துடன் நிற்கும் திறன் மறமுல்லை என்று புகழப்படும். அரச னுடைய வெண்குடை உலகத்திற்கே நிழல் செய்வதாகும் என்று புகழப்படும். இரவு நெடுநேரம் உறங்காது பகைவ ரொடு பொருதல் பற்றி எண்ணமிடும்மன்னனை உறங்குமாறு

உழையர் வேண்டுவர். வீரர்கள் போர்க்களம் என்ற தீயிலே தம் உயிர் என்ற அவியைச் சொரிந்து செஞ்சோற்றுக் கடன் கழிப்பர். வான்றோய் புகழுடைய சான்றோர், 'பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளாத' உயர் நிலையினரா யிருப்பர். கிணைவன் பெருநிலக்கிழவனைப் பாடி வாழ்த்திப் பெரும்பரிசில் பெறுவான். வையகத்து விழைவு அறுத்து மெய்யாய பொருள் நயப்பதும், ஒலிகடல் வையகத்து நலிவுகண்டு நயப்பு அவிப்பதுமே வாகையுள் சிறந்த வாகையாம்.

காஞ்சி

பெருந்திணை . எண்வகை மணங்களுள் பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் என்ற நான்கு மணங்களைத் தான் பெறுவது. இவை அகன் ஐந்திணைக்கு மிகுதியும் ஏற்புடைய அல்ல என்று இழித்துக் கூறப்படுவன. ஏறிய மடல்திறம், இளமைதீர்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிடல் என்ற பெருந்திணைப்பகுதி நான்கும் பொருந்தாக் காமமாம். பெருந்திணை ஐந்திணைக்கண் கலந்து வருமே யன்றித் தனக்கென வரையறுக்கப்பட்ட நிலம் உடையது அன்று. காஞ்சியாவது அறம் பொருள் இன்பம், அறத்தது நிலையாமை, பொருளது நிலையாமை, இன்பத்தது நிலையாமை ஆகிய ஆறனுள்ளும் நிலையாமை மூன்றற்கும் உரித்தாய் எல்லாத்திணைகட்கும் பொதுவாக வருவதாகும். அறம் முதலியவற்றது நிலையின்மையை உணர்ந்து சான்றோர் அவற்றை இகழ்ந்து கூறுவர். உலகியலை நோக்க, நிலையாமை மனத்திற்குப் பொருந்தாததாகி உள்ளது. அறம் பொருள் இன்பம் என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு நிலையாமை தோன்றுமே அன்றித் தனிப்பட்ட வகையில் நிலையாமை என்பதொரு பொருள் இன்று; ஆதலின், பெருந்திணை என்ற அகத்திணைக்குக் காஞ்சி ஏற்ற புறத்திணை ஆயிற்று.

தன் நாட்டைக் கவர்ந்து கொள்ளும் விருப்பத்தான் வஞ்சி வேந்தன் படைஎடுத்துவரப் படையெடுக்கப்பட்ட மன்னன் அவனை எதிர் ஊன்றுதற்குப் புறப்படும் முன் காஞ்சிப் பூவினைச் சூடிக்கொள்வான். பகைவேந்தன் படையெடுத்துவருதலைக் காண்பதற்குப் பொருத வீரன் போருக்கு ஆயத்தம் ஆவான்.

வஞ்சிமன்னன் தன் நாட்டு எல்லைக்குள் நுழையாதபடி காஞ்சி வேந்தனது படை தக்க இடங்களில் இருந்து நாட்டைக் காத்துவரும். மறக்குடிவீரர் பலருக்கும் அரசன் அவரவர்க்கு ஏற்ற படைக்கலன்களை வழங்குவான். படைபெற்ற வீரர் முரசம் அதிரத் தத்தம் வீரத்தைக் கூறி ஆரவாரம் செய்வர். வீரர்களின் கணைமாரிக்கு ஆற்றாது பகைவர் படையகத்து யானைகள் பெரிதும் புண்பட்ட செய்தி குறிப்பிடப்படும்.

வஞ்சி வேந்தன் போருக்கு அறைகூவியது கேட்டலும், காஞ்சி மன்னன் நல்லநேரத்தில் தன் வாளினைப் புறவீடு செய்வான். பகைப்புலம் சேர்தற்கு நல்ல நேரத்தில் குடை நாட்கோள் நிகழும். 'இன்னது பிழைப்பின் இது ஆகுக' என்று காஞ்சி வீரர் வஞ்சினம் கூறுவார்கள். காஞ்சி மன்னனின் வீரர்கள் போர்க்களத்தைக் குருதிக்களம் ஆக்குவதற்காகத் தம் தலையில் காஞ்சிப் பூவினைச் சூடுவர்.

சிறந்தவீரன் ஒருவன் பகைவருடைய முன்னணிப்படையொடு பொருது தலை அறுபட்டு வீரசுவர்க்கம் எய்துதலும் உண்டு. அவன்தலை பகைவர் கையில் அகப்படாமல் காஞ்சி மன்னன் முன்னிலையில் கொணர்ந்து சேர்க்கப்படும். அவ்வீரன் தலையினைத் தன்முகத்தோடும் மார்போடும் தழுவி அவன் மனைவி உடன் உயிர்நீத்தலும் உண்டு.

தன்வீரனுக்கு நேர்ந்த நிலையை உட்கொண்டு காஞ்சி மன்னன் பகையரசன் தலை நடுங்குமாறு தன் வீரம் முழுவதையும் வெளிப்படுத்திக் கடும்போர் புரிவான். பகைவர்

வேலானும் அம்பானும் ஏற்பட்ட விழுப்புண்கள் பலவாக, 'இனிப் போரிடல் இயலாது' என்ற நிலையில் சிறந்த வீரன் மாற்றான் தன் உயிரைப் போக்கும் அளவும் காத்திராது தன் புண்களைக் கிழித்துக்கொண்டே உயிர் நீப்பான்.

போர்க்களத்தில் புண்பட்டுக் கிடக்கும் வீரரை இரவில் காப்பார் ஒருவரும் இல்லாத நிலையில் பேய்களே பாது காக்கும். வீழித்துக் கொண்டே உயிர் நீத்த வீரர்கள் உயிருடன் உளரோ இவரோ என்பதனைத் துணிவாக அறிய இயலாத நிலையில் பேய் அவரை அணுகுதற்கு அஞ்சும். விழுப்புண்பட்டு வீழ்ந்து குற்றுயிராய்க் கிடக்கும் வீரர் உடல்களைப் பெண்பேய்கள் தொட்ட அளவிலே அவர் உயிர் நீங்குதலும் நிகழும். பேய்கள் அணுகாதவகையில் வெண் சிறுகடுகினைச் சிதறி நறை புகைத்து மலர் தூவிக் குறிஞ்சிப் பண் பாடிப் புண்பட்ட வீரர்களை அவர்தம் உரிமைமகளிர் பேய் தொடாமல் இரவு முழுவதும் காப்பதும் உண்டு.

போரில் இறந்துபட்ட சான்றோனுடைய நற்குணங்களை யும் நற்செயல்களையும் குறிப்பிட்டு அவனது பிரிவு குறித்துப் பல்லோரும் வருந்துதலும் உண்டு.

மறுநாட் போருக்குப் புறப்படுமுன் காஞ்சிவேந்தன் தன் படைவீரர்களுக்குச் சிறந்த மதுவினைத் தேவையான அளவு வழங்கச் செய்வான்.

தன்காதலுக்கு உரிய கணவன் விழுப்புண்பட்டு இறந் தானாக, அவன் உடலைஎரிக்கும் ஈமத்தீயில் வீழ்ந்து தானும் உயிர்நீக்கும் கற்புடையாளும் ஆண்டுக் காணப்படுவாள். தன்கணவன் உயிரைப் போக்கிய வேலினாலே தன்உயிரையும் போக்கிக் கொள்ளும் நங்கைநல்லாளும் காணப்படுவாள்.

வஞ்சி மன்னன் காஞ்சி மன்னனுடைய மகளைத் தனக்கு மணம்செய்து தருமாறு வேண்டவும், காஞ்சி மன்னன் மறுத் துரைத்துப் போரினைத் தொடர்தலும் உண்டு.

இறுதியில் காஞ்சி வேந்தன் தன் நாட்டுமக்கள் மகிழப் பகைவரை அடியோடு புறங்காட்டி ஓடச்செய்தலும் உண்டு.

பாடாண்

கைக்கிளை ஆவது ஒருதலைக்காமம். அதுபோலத் தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்டுகிறான்; ஆனால் அவனைப்பாட வரும்புலவன் பரிசிலை வேண்டியே வருகிறான். ஆதலின் ஒருதலைக்காமமாக அமையும் பாடாண், ஒருதலைகாமத்தை நுவலும் கைக்கிளை என்ற அகத்திணைக்கு ஒத்தபுறத்திணை ஆயிற்று.

புலவன் அரசனுடைய ஒளி ஆற்றல் ஓம்பாஈகை அளி முதலியவற்றைப் புகழ்ந்து பாடுவான். புலவன், தான் சேய்மையினின்றும் வள்ளலைக்காண வந்திருக்கும் செய்தியை வாயிற்காவலன் வாயிலாக வள்ளலுக்குச் சொல்லியனுப்பு வான்.

வள்ளலைப் புலவன் உலகினைப் படைத்துக் காத்து அழிக்கும் முப் பெருந்தேவருள் திருமாலாகவே புகழ்ந்து பாடுவதும் உண்டு. பெரும்பாலும் அரசனைத் திருமாலோடும் சிறு பான்மை ஏனைய கடவுளரோடும் ஒப்பித்துப் புகழ்ந்து பாடுவது வழக்கம். அரசன் தேவர் அமிசமாய்த் தேவர்உருவம் சிறிதுமாறித் தோன்றியவன் என்று வருணிப்பதும் உண்டு.

புலவன் அரசனை அணுகித் தான் கருதிவந்த பரிசில் இன்னது எனக்குறிப்பிடுவான். 'உனக்கு முன் இன்னஇன்ன வள்ளல்கள் இவ்விவற்றை ஈந்தனர்; அவர் போல நீயும் எனக்கு ஈதல் வேண்டும்' என்று புலவன் அரசனிடம் குறிப் பிடுதலும் உண்டு. குற்றமற்ற புகழினை உடைய அரசனுடைய இயல்பினை உள்ளவாறு எடுத்துக் கூறுதலும் உண்டு.

பகைவனுடைய பலவகைப் படைகளையும் சிதைக்கும் ஆற்றலுடைய அரசன் துயிலுதலை வேண்டிப் பாடுவர்; அங்

ஙனம் துயின்ற அரசன் வைகறைப்பொழுதில் தனக்குத் திறை யளிப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கும் அரசர்க்கு அருள் செய்வதற்காகக் கண் விழித்தல் வேண்டும் என வேண்டுவர்; அங்ஙனம் துயில் உணர்ந்த மன்னனது புகழ் கிளந்து மங்கல இசை பாடுவர். இன்பப்பொழுதாய் இரவினைக்கழித்து உறங்கிய மன்னன் துயில் நீங்கியதும், மங்கலப் பொருள்களைத் தீண்டியும் நுகர்ந்தும் செவிமடுத்தும் எழுவது வழக்கம் என்பது குறிப்பிடப்படுகிறது. நல்ல காற்றடிக்கும்போதும் அணையாது சுடர்விட்டு எரியும் அரண்மனை விளக்கு அரசனுடைய வெற்றிச்சிறப்பைக் காட்டும் அறிகுறியாகக் குறிக்கப்படும். உலகில் இருளகற்றும் ஞாயிற்றினோடு அரசனை ஒப்பிட்டுப் பேசுவதும் உண்டு.

வரையா ஈகையன்றி, 'இன்னல் உற்றால் கொடுக்க' என்று பெரியோர் கூறும் நாட்காலையிலே அரசன் தன் துன்பம் கெடக் கபிலைப் பசுவை அந்தணருக்குத் தானமாக முறையே வழங்குவான். அரசன் தன்புகழ் சிறக்க வேள்வி வேட்டுத் தேவர்களுக்கு ஆவுதி அருத்துவான். அரசனுடைய செங்கோலினால் பருவமழை தவறாது பெய்யுமாறு வெள்ளி சிறிது வடக்குத்திசை நோக்கியே இருந்து மழைவளம் சுரக்கும் என்று வெள்ளிநிலை விளம்பப்படும். அரசனுடைய நாடு, விட்டில் கிளி நால்வாய் வேற்றரசு தன்னரசு நட்டம் பெரும்பெயல் பெருங்காற்று என்ற எட்டுவகை இடரும் இன்றி நல்ல நெல்வளம் பொருந்திப் பொலிவதாக என்று நாட்டுவாழ்த்து நவிலப்படும்.

கிணைவன் நாள்விடியலிலே வள்ளல் இல்லத்தின் முன்னிடத்தை அடைந்து வாழ்த்திய அளவில் தன்வறுமை நீங்கப் பெறுவான்.

அரசன் போர்க்களத்தில் கைப்பற்றிய செல்வங்களை எல்லாம் தன்புகழ்பாடும் பாணர் முதலியோருக்கு வழங்கிவிடுவான். அரசன் குறுநிலமன்னர் தன் அடிபோற்றிப் பரவ

அரியணையில் பெருநாட்டு மன்னவனாய் வீற்றிருப்பான். முருகனைப்போன்ற பேராற்றலுடைய மன்னவன் பகைவர் மதிலைக் கைக்கொண்டு பின்னரே தன் வஞ்சினம் வாய்த்ததற்கு அறிகுறியாகத் தன் மயிர்ச்சிகையைக் கூட்டிமுடிப்பான். அத்தகைய மன்னன் தனக்குரிய உரிமை மகளிரை மணந்து பல்லோரும் தன் மணக்கோலத்தைப் பாடுமாறு அவரோடு வீற்றிருப்பான்.

அரசனுக்குப் புதல்வன் பிறந்தபோது தேவர் மகிழ, நாட்டுமக்கள் வாழ்த்த, பகைவர் மாறுபாடுகெடப் பொலிவு மங்கலம் கொண்டாடப்படும். அரசனுடைய பிறந்தநாள் விழா, வெள்ளணி அணிதல் முதலியவற்றோடு சிறைவீடு செய்தல் முதலிய செயல்கள் நிகழ, வெள்ளணிநாள்விழா என்ற பெயருடன் கொண்டாடப்படும்.

சிலநேரத்தில், பரிசில்பெற வந்த பரிசிலன், பரிசில் பெறுமலை பலநாள்களும் கழிந்தனவாக, வள்ளலிடம் தன் கடும்பினது இடும்பைகூறி விரைவில் பரிசில்வேண்டி நிற்றலும் உண்டு.

அரசன் புலவனுக்கு அவன் சிறப்பிற்கும் தன்சிறப்பிற்கும் தக்க பரிசில் நல்கி ஏழடி அவனை வழிகொண்டுவிட்டு விடைபெறுவான். வள்ளல்களுடைய இல்லங்களில் புகழ் நிலை பெறுதலுக்குக் காரணமான விருந்தோம்பல் எனப்படும் ஆள்வினைவேள்வி இடையறாது நிகழ்ந்துகொண்டிருக்கும்.

'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்—ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்—பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச் சென்று பயன் எதிரச் சொன்ன பக்கத்' தனவாகிய கூத்தராற்றுப்படை பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை, என்பனவும் இப் பாடாண் திணையைச் சேர்ந்தனவாம். சொல்லால் கடுமையவாய்ப் பயன்தருதலால் மிகச்சிறக்கும் வாயுறை வாழ்த்து,

'சான்றோர் முன் அடங்கி ஒழுகுதல் வேண்டும்' என்று வற்புறுத்தும் செவியறிவுறூஉ என்பனவும் இத்திணைத் துறைகளாம்.

நாற்றிசையும் நிழல்செய்து கவிக்கும் அரசனுடைய வெண்கொற்றக் குடையைப் புகழ்ந்து பாடுதலும் உண்டு. பகைமன்னரை அழித்துக் குடிமக்களைப் பாதுகாத்தற்கு உதவும் அரசனுடைய வாள் முதலிய படைக்கலன்களைப் புகழ்ந்து பாடுதல் வாள் மங்கலமாகும்.

அரசன் புண்ணிய நீர்களைக்கொண்டு மந்திரவிதியால் நீராடி முடிசூட்டுவிழா, வெற்றிவிழா, வீரவிழா என்பன கொண்டாடுதலும் உண்டு.

முக்காலமும் உணர்ந்த ஞானிகள் அரசனை அணுகி, 'இவை இவை செய்வாயாக' என்று குறிப்பிடும் செய்தி ஓம்படை எனப்படும். 'நீ வழிபடும் தெய்வம் உன்னைப் புறத்திருந்து தீங்கு வாராமல் பாதுகாக்க, நீ குற்றமற்ற செல்வத்தோடு வாழ்வாயாக' என்று வாழ்த்துவது புறநிலைவாழ்த்து எனப்படும்.

பெருந்தேவராகிய அயன் அரி அரன் என்ற மூவர் கொடிகளுள்ளும் ஒருவருடைய கொடியோடு ஒப்பிட்டு, அரசனுடைய கொடி புகழ்ந்து வாழ்த்தப்படும். வாணாசுரனுடைய சோ மதிலினை அழித்த திருமாலின் ஆற்றல் கந்தழி என்ற பெயரான் புகழப்பட்டு அரசனுக்கு ஏற்றி உரைக்கப்படுதலும் கூடும். பெண்கள் முருகப்பெருமானைக் குறித்து வள்ளிக்கூத்து ஆடுவர்.

இறைவன்பால் வீடுபெற்றான் ஒருவன் வீடு பெறுதற்குச் சமைந்தான் ஒருவனை ஆற்றுப்படுப்பது புலவராற்றுப்படையாகும். உலகப்பற்றினை அறுத்து வீடுபேறு அடைவதற்குச் சான்றோர் இறைவனை வேண்டுதல் 'புகழ்ந்தனர் பரவல்'

என்ற பெயரால் புகலப்படும். இறைவனுடைய அருள்வெள்ளத்தைப் பழிச்சிப்பணிதலும் உண்டு.

தலைவி ஒருத்தி தான் கண்ட தலைவனை அவன் விருப்பம் அறியாமலேயே, தானே விரும்பி அவன் மாலையைப் பெறுதற்கு விரும்பும் கைக்கிளையும் இத்திணையில் இடம்பெறும். இரவிடைத் தலைவனைத் தழுவுதலை விரும்பிக் கார்கால இருட்கண்ணும் தலைவி சேர்தலாகிய பெருந்திணையும் இதன்கண் கூறப்படும். தலைவி தலைவனுடைய புறத்தொழுக்கத்தைத் தான் அறிதலானே, அவனைத் தழுவுதலை வேண்டாது புலவி கொள்ளுதலும் உண்டு. இக்கைக்கிளை, பெருந்திணை புலவி மூன்றற்கும் பாட்டுடைத் தலைவன்பெயர் உணர்த்தப்பட்டால்தான் இவை புறத்திணைப்பாடாண் பகுதியாகும். கிளவித்தலைவன் பெயரே கூறப்படின், இவை அகத்திணைப்பாற்படுவனவேயாம்.

தெய்வமகளிர் தெய்வங்களை நயந்த பக்கமும், மானுடமகளிர் தெய்வங்களை நயந்த பக்கமும், மகளிர் குழந்தையிடம் கொள்ளும் அன்பின்பகுதியும், மகளிரும் மைந்தரும் மகிழ்ந்து வாழும் ஊர்ச்சிறப்பு உரைக்கும் திறனும் ஆகியனவும் பாடாண் திணையின் பகுதிகளாம்.

ஒழிபு

வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை காஞ்சி பாடாண் என்ற ஏழுதிணைக்கண்ணும் எல்லாச்செய்திகளும் கூறப்பட்டன என்று கொள்ளுதற்கு இடம் இல்லை. அவற்றுள் கூறப்பட வேண்டியன சில இயைபு பெரிதும் இன்மை பற்றிக் கூறப்படாமல் விடுக்கப்பட்டுள்ளன மேலும் அவ்வெழு திணைகளுக்கும் பொதுவான செய்திகள் சிலவும் தனித்தனியே ஒவ்வொன்றன்கண் கூறற்கு இடன் இன்மையான் கூறப்படாது விடுபட்டுள்ளன அவ்விரு திறத்தனவும் புறப்பொருள் ஒழிபு என்று பெயர்பெறும்.

தமிழகத்து அரசர்கள் தம்மை அடையாளம் தெரிந்து கொள்ளுதற்காக முறையே சேரன் பனம்பூ மாலையினையும் பாண்டியன் வேப்பம்பூ மாலையினையும் சோழன் ஆத்திப்பூ மாலையினையும் அடையாள மாலையாக அணிந்துகொள்ளுதல் மலைந்தபூ எனப்படும்.

மேம்பட்ட சிறப்பினை உடைய அரசனுக்கு வெற்றி நிலவுதலுக்காக அவன் அரண்மனையில் இருக்கும் உன்னமரம் தழைப்பதாகுக என்று கூறுதல் உன்னநிலை எனப்படும். அரசன் ஏழகத்தை ஊர்ந்து சென்றும் வெற்றி எய்துவான் என்று ஏழகத்தகரைப் புகழ்ந்து கூறுவது ஏழக நிலையாம். அரசன் மிக இளையனாகிய காலத்திலேயே நாட்டாட்சியை மேற்கொண்டு சிறப்பாகச் செங்கோல் ஓச்சுதலும் ஏழகநிலை எனப்படும். இளையோன் போரிடத்து வேட்கையான் பண்டு கிண்கிணி அணிந்த காலில் கழல் அணிதல் கழல் புனைதல் எனப்படும்.

போரில் இறந்துபட்ட சிறந்த வீரனுக்கு நடுகல் நடுதற்குத் திட்டமிட்டு நல்லகல்லைத் தேர்ந்து எடுத்தல் கற்காண்டலாகும். அக்கல்லில் மறவனை நிறுவுதல் கற்கோள் நிலையாகும். அக்கல்லினைப் புண்ணிய நீரில் புரையோர் ஏத்தக் கழுவிக்கொள்ளுதல் நீர்ப்படை ஆகும். அக்கல்லினை மறவன் பீடும் பெயரும் பொறித்து அணிவகைகளோடு நடுதல் நடுகல் ஆகும். அக்கல்லில் நிறுவப்பட்ட மறவனுடைய கல்லினைத் தம் வீட்டிற்கு உறவினர் கொண்டு சேர்த்தல் இற்கொடு புகுதலாகும்.

தலைவனோடு பாலைநிலத்தில் செல்லும் தலைவி எதிர் பாராத வகையில் தன் தலைவன் இறந்துபட்டானாகத் தான் தனித்து இருந்து துன்பமுறுதல் முதுபாலை ஆகும். தலைவன் தலைவியைப் பாலைநில வழியே அழைத்துச் செல்கையில்

அவள் எதிர்பாராதவகையில் இறந்துபடின் அப்பொழுது தலைவன் வருந்தும்நிலை சுரநடை எனப்படும். வீட்டில் இல்லறம் நடத்துங்காலைத் தன்மனைவி இறந்துபட்டாளாகக் கணவன் வீட்டில் தனித்திருந்து வருத்தமுறும் நிலை தபுதார நிலை எனப்படும். அதுபோலக் கணவன் இறந்துபட்டானாக மனைவி வீட்டில் கைம்மைக் கோலத்தோடு வருந்தியிருக்கும் நிலை தாபதநிலை எனப்படும். புதல்வற்பயந்த பூங்குழை மடந்தை மகனை ஈன்ற அணிமைக் காலத்திலேயே உயிர் நீத்த செய்தியை விளக்குவது தலைப்பெயல் நிலை எனப்படும். அதுபோலச் சிறுவன் ஒருவன் எதிர்பாராத வகையில் இறந்துபட்டானாக அவன் சுற்றத்தார் பலரும் அவன் பிரிவிற்கு இரங்கித் தவிக்கும்நிலை பூசல் மயக்கு எனப்படும். அரசன் இறந்துபட்டானாக நாட்டு மக்கள் புலம்பித் தவிப்பதும் பூசல்மயக்கு ஆகும்.

கணவன் இறந்துபட்டானாக அவன் உடலை எரிக்கும் ஈமத் தீயில் தானும் விழுந்து அவன் உயிரைப் பின்தொடர்வதற்குச் சமைந்த மனைவியின் செயலைத் தடுத்தாரிடம் மனைவி உழுவலன்பின் திறத்தை எடுத்துக்கூறித் தீப்பாய்தல் மாலை நிலை எனப்படும். போர்க்களத்தில் இறந்துபட்ட கணவனைக் கண்ட அளவில் மனைவியும் உயிர்நீத்தாளாக அதுகண்டு பொதுமக்கள் கூறுவது மூதானந்தம் எனப்படும். பகை மன்னனை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெறும் முன்னரே வீரன் தன்உடலை உகுத்து வீரசுவர்க்கம் பெறுதலும் மூதானந்தம் ஆகும்.

விழுப்புண்பட்டு வீரன் இல்லம் அடைந்தானாக, அவன் இல்லத்தில் விரிச்சியும் சொகினமும் தீயனவாதலை ஓர்ந்த உறவினர் அவன் பிரிவு அணிமைத்தாயிருக்கும் என்று கோடலின் அவன் மனைவியின் எதிர்காலநிலைகண்டு அஞ்சிச் சொல்லுவது விதுப்பானந்தமாகும். மிகப்பெரிய போருக்கு அஞ்சாது செல்லும் வீரன் நிலைகுறித்து, விரிச்சியும் சொகின

மும் தீயவாதலை ஓர்த்து உறவினர் மனம் கலங்கிக்கூறும் கூற்றும் விதுப்பானந்தத்தின் பகுதிஆகும். தன்கணவன் வீரசுவர்க்கம் அடைந்ததனைக் கண்டபின்னரும் தன்உயிர் நீங்கவில்லையே என்று தலைவி மனஞ்சுழலும் செய்தியைச் சொல்லுவது ஆனந்தப்பையுள் ஆகும். கொடித்தேர் மன்னவன் இறந்துபட்டானாக அவனை அடுத்தோர் தமக்கு நேர்ந்த இழவு கருதிச் செயலற்று இருக்கும் நிலையைச் சொல்லுவது கையறுநிலை ஆகும். இறந்தவனுடைய குணநலன்களைப் பற்பல்கால் கூறி மனஞ்சுழன்று வருந்தி இருப்பதும் கையறு நிலையின் பாற்படும்.

அறம் பொருள் இன்பம் என்ற உறுதிப்பொருள்களின் இயல்பு இவை என்பதை விளக்கிக் கூறும் துறை முதுமொழிக் காஞ்சியாகும். கூற்றவன் நம் உயிரை உடலின் நின்றும் பிரித்துக்கொண்டு போவதன்முன் தீயனவற்றை விடுத்து நல்லனவற்றையே செய்தல்வேண்டும் என்று உபதேசம் செய்வது பெருங்காஞ்சி எனப்படும். மேம்பட்ட முனிவர்கள் இவ்வுலக வாழ்வு சிறப்பதற்காக வகுத்து உணர்த்திஅருளிய நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ்க என்பது பொருள்மொழிக் காஞ்சி ஆகும். இவ்வுலகிற்கு மேலதாகிய தேவர் உலகத்தையும் கடந்து ஞானிகளால் புகழப்படும் வீடுபேற்றின் இயல்பு இங்ஙனமாய் இருக்கும் என்று விளக்கிக் குறிப்பிடும் துறை புலவர் ஏத்தும் புத்தேள் நாடு எனப்படும்.

உலக நிலையாமையை எடுத்துக்கூறிப் பின்பற்றவேண்டிய உயர்ந்த பொருளை உணர்த்துவது முதுகாஞ்சிஆகும். உலக மரபினை எடுத்துக்காட்ட மக்கள்பலர் மடிந்து தன்கண் புகவும் தான் அழியாது நிற்கும் சுடுகாடு பற்றிக் கூறுவது காடுவாழ்த்து ஆகும்.

வினைமுற்றி மீண்ட தலைவன் கார்காலத்தில் தன்இல்லம் எய்தித் தன்மனையாளோடு இல்லிலிருந்து நல்லறம் செய்தல் கவலை இலேம் எனக் கழறிய முல்லையாகும். போர்க்களம்

சென்ற தலைவன் வினைமுற்றாமல் பாசறையிலேயே இருந்தானாக அவன் வருவதற்கு முன் கார்காலம் வருவதனைக் குறிப்பிடுவது கார்முல்லையாகும். பகைவரை வென்று திறை கொண்டு வெற்றிச்சிறப்போடு மன்னவன் தேர் ஏறித் தன் கோநகருக்கு மீண்டு வரும் சிறப்பைத் தெரிவிப்பது தேர் முல்லை ஆகும். கணவன் பிரிந்து சென்றகாலைத் தலைவி தன் இல்லில் தன் நாணமே துணையாக வாழ்ந்து வருவதனைக் குறிப்பது நாண்முல்லை யாகும்.

செல்வமிகுதி வேண்டாமல் போதிய செல்வத்தோடு இல்லிலிருந்து கணவற்பேணி விருந்தோம்பி வாழும் இல்லற மாண்பினை இயம்புவது இல்லாண் முல்லையாம். வயல்வளம் சுரக்கப் பல்லாற்றானும் உதவும் பகடுபோல இல் நலம் சுரக்கப் பல்லாற்றானும் முயலும் கணவன் வாழ்கிறான் என்று தலைவி கணவனைப் பகட்டினோடு ஒப்பிட்டுக்கூறுவது பகட்டு முல்லையாம்.

திருமண மாலை யணிந்து தலைவியை மணந்த தலைவன் தனக்கு அவளை மனையாளாக்கித் தந்த ஊழ் வினையை வாழ்த்தி உரைப்பது பால் முல்லையாகும். செல்வவளம் மிக்க தம் உறவினர் வீட்டு உணவினும் தன்கணவன் தாளாற்றித் தந்த பொருள்கொண்டு இல்லறத்தை நல்லறமாகச் செய்து உண்ணும் எளிய உணவே மேம்பட்டது என்று தலைமகள் கூறுவது கற்பு முல்லையாம். கணவன் பிரிந்தகாலைத் தலைவி கார்ப்பருவம் வந்த பின்னரும் மனம் தளராது மறைபிறர் அறியாமல் தன்நெஞ்சினை நிறுத்தற்கு ஆம் நிறையோடு அமைதியாக இல்லில் இருப்பது காவல் முல்லையாம். மணம் செய்து புக்ககம் புக்க தலைவி தன் தலைவனுடைய பெருவளம் இல்லறம் நிகழ்த்தப் பயன்படுவது குறித்து மகிழ்ந்து உரைப்பது பெருவளனேத்தும் முல்லையாம்.

புலவர்கள் தமக்குப் பரிசில் நல்கும் வள்ளலரைப் புகழ்ந்து பரிசில் ஈயா உலோபிகளைப் பழித்துப் பாடுவது

கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலாம். இவையே யன்றி வாணிகன் வெற்றி, உழவன் வெற்றி, மல்லன்வெற்றி, ஏற்றுவெற்றி, கோழிவெற்றி, தகர் வெற்றி, யானை வெற்றி, குறும்பூழ் வெற்றி, சிவல் வெற்றி, கிளி வெற்றி, பூவை வெற்றி, குதிரை வெற்றி, தேர் வெற்றி, சூதுவெற்றி, யாழ் வெற்றி, பாடல் வெற்றி, ஆடல் வெற்றி, பிடி வெற்றி. முதலிய பலவகைப் பொருள்களின் வெற்றி பற்றிப் பாடப் படும் புறத்துறைகளும் இவ்வொழிபின் பாற்படும்.

இவையே அன்றிப் பாட்டுடைத்தலைவன் பெயரன்றிக் கிளவித்தலைவன் பெயரைக் குறிப்பிட்டுப் பாடப்படும் ஆண் பாற் கூற்றுக் கைக்கிளை, வெண்பாற் கூற்றுக்கைக்கிளை, பெண்பாற் கூற்றுப் பெருந்திணை, இருபாற் கூற்றுப் பெருந் திணை என்பனவும் புறத்திணை யிறுதியில் ஒழிபாய் இடம் பெறுவனவாம்.

ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை

சுரும்பிவர் பூம்பொழில் சுடர்வேல் காளை
கருந்தடங் கண்ணியைக் கண்ட காட்சியும்,
கல்நவில் தோளான் கண்டபின் அவளை
இன்னள் என்று உணரான் ஐயுறும் ஐயமும்,
மாநிலத்து இயங்கும் மாதர் ஆம்எனத்
தூமலர்க் கோதையைத் துணிந்து உரைத்த துணிபும்
இணர்ஆர் கோதைான் நெஞ்சத்து இருந்தும்
உணராள் என்னைஎன்று உட்கொணட உட்கோளும்
இவளைப் பயந்துஎடுத்தோர் வாழியர் நெடிதுஎன
அவளைப் பயந்தோரை ஆறுதுபுகழும் பயந்தோர்ப்
[பழிச்சலும்,
அழிபடர் எவ்வம் கூர ஆயிழையின்
பழிதீர் நன்னலம் பாராட்டிய நலம் பாராட்டலும்,
கொய்தழை அல்குலாளின் கூட்டம் வேண்டிஅஃது
எய்துதல் அருமையின் இறப்பப் புகழ்ந்த நயப்புற
[றிரங்கலும்,

உணரா எவ்வம் பெருகுதலின் ஒளியிழையைப்,
புணரா இரக்கத்தொடு புலம்பிய புணரா இரக்கமும்,
அந்தழை அல்குலாளின் அணிநலம் புணராத,
வெந்துயர் பெருக வெளிப்படஇரந்த வெளிப்பட
இரத்தலும்,

என்ற ஒன்பது துறைகளை உடையது.

பெண்பாற் கூற்றுக் கைக்கிளை

தேம்பாய் தெரியல் விடலையைத் திருநுதல்
காம்புஏர் தோளி கண்டுசோர்ந்த காண்டலும்.
கல்நவில் திணிதோள் காளையைக் கண்ட
நன்னுதல் அரிவை நயப்புஉரைத்த நயப்பும்,
வண்டுஅமர் குஞ்சி மைந்தனை நயந்த
ஒண்தொடி அரிவை உட்கொண்ட உட்கோளும்,
ஒன்னுர் கூறும் உறுபழி நாணி,
மென்தோள் அரிவை மெலிவொடு வைகிய மெலிவும்,
மணிவளை நெகிழ மாநலம் தொலைய,
அணியிழை மெலிவின் ஆற்றல்கூறிய மெலிவொடு
வைகலும்,
மைவரை நாடனை மடந்தை பின்னரும்
கைவளை சோரக் காணவிரும்பிய காண்டல் வலித்தலும்,
புரிவளை நெகிழப் புலம்பொடு நின்றேள்
பருவரல் உள்ளமொடு பகற்பொழுதை வெறுத்த
பகல்முனி வுரைத்தலும்,
புலம்பொடு வைகும் பூங்குழை கங்குல்
கலங்கினேன் பெரிதுஎனக் கசிந்துஉரைக்கும்
இரவு நீடுபருவரலும்,
ஒண்தொடி மடந்தை உருகெழு கங்குலில்
கண்டவன் கரப்பக் கனவில் அரற்றிய கனவின்
[அரற்றலும்,
பெய்வளை அவனொடு பேணிய கங்குல்
உய்குவன் வரின்என உரைத்த அதன்பக்கமும்,

அஞ்சொல் வஞ்சி அணிஇருள் செலீஇய
நெஞ்சொடு புகன்ற நிலைஉரைத்த நெஞ்சொடு
[மெலிதலும்
வரிவளை நெகிழ்த்தோன் முன்செல வலித்தேன்
அரிவையர் அறிகஎன உரைக்கும் அதன்பக்கமும்,
பெண்பாற் கூற்றுக் கைக்கிளை ஆகும்.

பெண்பாற் கூற்றுப் பெருந்திணை

கைஒளிர் வேலவன் கடவக காமம்
மொய்வளைத் தோளி முந்துறமொழிந்த வேட்கை
[முந்துறுத்தலும்,
முன்இழந்த நலன் நச்சிப் பின்னிலை மலிந்த
[பின்னிலைமுயறலும்,
இறைவளை நெகிழ இன்னாது இரங்கிப்,
பிறைநுதல் மடந்தை பிரிவுகுறித்துப் பிதற்றிய
பிரிவிடைஅரற்றலும்,
முகைபுரை முறுவல் முள்எயிற்று அரிவை
வகைபுனை வளமனை வரவு எதிர்ந்த
[வரவெதிர்ந்திருத்தலும்,
நெடுவேய்த் தோளி நிமித்தம் வேறுபட
வடிவேல் அண்ணல் வாராமைக்கு அழிந்த
[வாராமைக்குஅழிதலும்,
காண்டல் வேட்கையொடு கனைஇருள் நடுநாள்
மாண்ட சாயல் மனைஇறந்த இரவுத்தலைச்சேறலும்,
இல்லவை சொல்லி இலங்குஎயிற்று அரிவை
நல்வயல் ஊரனை நகைமிகுத்த இல்லவைநகுதலும்,
நல்வளை மடந்தை நற்றூர் பறித்து
புலவி ஆற்றாள் புலம்புற்ற புலவியுள்புலம்பலும்,
நிற்றல் ஆற்றாள் நெடிது உயிர்த்து அலமரும்
பொற்றொடி அரிவை பொழுதுகண்டு இரங்கிய
[பொழுதுகண்டிரங்கலும்,
அணிவயல் ஊரனொடு அப்புவிழ அமரும்

பணிமொழி அரிவை பரத்தையை ஏசிய
[பரத்தையைஏசலும்,
உறுவரை மார்பன் ஒள்ளிணர் நறுந்தார்
கறுவொடு மயங்கிக் கண்சிவந்த கண்டுகண்சிவத்தலும்,
மைவரை நாடன் மார்பகம் பொருந்திக்
கைவீடல் அறியாக் காதலில் களித்த
[காதலிற்களித்தலும்,
காதல் பெருகக் கணவனைக் கண்ணுற்றுக்
கோதையால் பிணித்துக் கொண்டு அகம் புகுந்த
[கொண்டகம்புகுதலும்,
பெய்தார் அகலம் பிரிதல் ஆற்ருக்
கொய்தழை அல்குல் கூட்டத்துக் குழைந்த
[கூட்டத்துக்குழைதலும்,
நல்லிருள் மாலை நடுங்குஅருர் நலிய
ஒள்வளைத் தோளி ஊடலுள் நெகிழ்ந்த
[ஊடலுள்நெகிழ்தலும்.
துயரொடு வைகிய சூழ்வளைத் தோளி
உயர்வரை நாடன் புகழ் கேட்டு விரும்பும்
[உரைகேட்டுநயத்தலும்,
கோடுயர் வெற்பன் கூப்பிய கையொடு
பாடகச் சீறடி பணிந்த பின் இரங்கிய இரக்கமும்,
மாயிருங் கங்குல் மாமலை நாடனைப்
பாயல் நீவிப் பள்ளி மிசைத்தொடரும்
[பள்ளிமிசைத்தொடர்தலும்,
பாயிருள் கணவனைப் படர்ச்சி நோக்சிச்
சேயிழை அரிவை செல்கென விடுத்த
[செல்கெனவிடுத்தலும்,
என்ற துறைகளை உடையது.

இருபால் கூற்றுப் பெருந்திணை

நிலவுவேல் நெடுந்தகை நீள்கழை ஆற்றிடைச்
செலவுமுள் வலித்துச் செலவு அழுங்கிய
[செலவு அழுங்கலும்,

ஒன்றல்ல பலபாடி மன்றிடை மடலூரும்
[மடல்ஏறுதலும்,
ஊழி மாலை உறுதுயர் நோக்கித்
தோழி நீங்காள் தூதுஇடை ஆடிய தூதிடைஆடலும்,
மான்ற மாலை மயிலியல் வருத்தல்
தோன்றக் கூறிய துயர்உரைக்கும்
[துயர்அவர்க்குஉரைத்தலும்,
போதார் கூந்தல் பூந்தொடிஅரிவை
காதல் கைம்மிகக் கண்டு மனம் சோரும் கைசோர்தலும்,
உருவ வால்வளை உயங்கத் தோழி
பருவம் மயங்கிப் படர் உழந்த பருவமயக்கமும்,
ஆங்கு அவர் கூறிய பருவம் அன்றுஎனத்
தேங்கமழ் கோதை தெளியும் அதன்பகுதியும்,
காமுறு காமம் தனைபரிந்து ஏங்கி
ஏமுற்று இருந்த இறைவன் உரைக்கும்
[ஆண்பாற்கிளவியும்,
வெள்வளை நெகிழவும் எம்முள்ளாத
கள்வனைக் காணுது இவ்வூர் எனக்கிளக்கும்
பெண்பாற்கிளவியும்,
தேங்கமழ் கோதை செம்மல் அளிநினைந்து
ஆங்கு அந்நிலைமை யாய் அறியாமை
வேங்கைஅஞ் சிலம்பற்கு வெறியாடிய வெறியாட்டும்,
மாண் இழைக்கு வயலூரன்
பாண்வரவு பாங்கி மொழிந்த பாண்வரவுஉரைத்தலும்,
தேங்கமழ் சிலம்பன் தார் எனக்கு எளிது என
பாங்கவர் கேட்பப் பரத்தை மொழியும்
[பரத்தைகூறலும்,
பேணிய பிறர்முயக்கு ஆர்அமுது அவர்க்குஎன
பாணன் விறலிக்குப் பாங்கி கூறும் பாங்கிகூற்றும்,

ஆங்கவன் மூப்பு அவர்க்கு அருங்களி தருமென
பாங்கி கேட்ப விறலி பகர்ந்த விறலிகூற்றும்,
உம்மில் அரிவை உயர்மொழி ஒழிய
எம்மில் அவனும் தேரும் வருமெனப்
பரத்தை வாயிற்குப் பாங்கி பகர்ந்த கூற்றும்,
மற்றவர் சேரியில் மைந்தன் உறைந்தமை
இற்றென விறலி எடுத்துரைத்த கூற்றும்,
பொற்றார் அகலம் புல்லிய மகளிர்க்கு
அற்றாங்கு ஒழுகாது அறம் கண்மாறிய குற்றிசையும்,
நாறிருங் கூந்தல் மகளிரை நயப்ப
வேறுபடு வேட்கை வீயக் கூறிய குறுங்கலியும்,
பெருந்திணைத் துறைகளாம்.

இவ்வாறாகப் புறத்திணை வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை காஞ்சி பாடாண் என்ற எழுவகைப்படும் எனவும், இவற்றில் கூறப்படாமல் விடுக்கப்பட்டன யாவும் புறத்திணை ஒழிபாகக் கொள்ளப்படும் எனவும், அகத்திணை ஒழிபாகிய கைக்கிளை பெருந்திணைத் துறைகளும் பொருட்பகுதி யிறுதி யில் ஒழிபாக ஈண்டே கூறப்படல் வேண்டும் எனவும், இவ் வாசிரியர் கொண்டுள்ளமை உணரப்படும்.

பொருளடக்கம்

தொடர் நூற்பா எண்		இயல் நூற்பா எண்
599	அகத்திணையின் இயற்கையை நன்கு உணர்ந்தோர் கூறும் புறத்திணை எனப்படுவது அறம் பொருள் என்ற இரண்டன் இயல்பினை உடைத்தாய் வெளியே புலப்பட நிகழும் ஒழுக்கமாம் என்பது.	1
600	வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை காஞ்சி பாடாண் எனப்புறத்திணைக் கூறுகள் எழுவகைய என்பது.	2
601	வெட்சிக்கண்ணும் உழிஞைக்கண்ணும் நிகழும் நிறைமீட்டலும் வாயில்காத்தலும் ஆகிய செயற்கு முறையே கரந்தைப் பூவினையும் நொச்சிப் பூவினையும் சூடுதல் வழக்காறு என்பது.	3
602	அவற்றுள், வெட்சித்திணையாவது குறிஞ்சி என்ற அகத்திணைக்கு ஏற்ற புறத்திணையாய் அஞ்சதக்க போர்த்தொழிலைத் தொடங்கிய அரசனால் விடுக்கப்பட்ட முனைப்புலங் காத்திருக்கும் வீரர் பகைவர் ஆநிரைகளைக் கைப்பற்றுதலும், பகைவரால் கைப்பற்றப்பட்ட ஆநிரைகளை மீட்டலும் என்ற இருபகுதிப்படும் என்பது.	4
603	வெட்சியின் முதற்கூறு மண்டு அமர்க்கு இவர்ந்தோன் தண்டத்தலைவரை அழைத்து மருவலர் ஆநிரைகளைக் கவர்ந்துவருக என்று பணித்தல் முதலாக வெறியாட்டு ஈருக அமைந்த இருபத்திரண்டு துறைகளை உடையது என்பது,	5

தொடர் நூற்பா எண்		இயல் நூற்பா எண்
604	வெட்சிப்பகுதி இரண்டனுள் பின்னர்த்தாகிய கரந்தைசூடியவீரர்செயல்கள்-நிரைகோள் கேட்டகுரைகழல் அரசன் விரை செலல் மறவரை மீட்க எனப்பணித்தல் முதலாகக் கொற்றவை நிலை ஈருக் கூறப்பட்ட இருபத்தேழு துறைகளை உடையது என்பது.	6
605	வஞ்சி என்ற புறத்திணை முல்லை என்ற அகத் திணைக்கு ஏற்ற புறத்திணையாம். அது மண்ணிடத்துக் கொண்ட வேட்கையானே மன்னன் ஒருவன் மாற்றுவேந்தன் அஞ்சுமாறு அவன் நாட்டிடைப் படையொடும் மேற்சேறலைக் குறிப்பதாம் என்பது.	7
606	வஞ்சித்திணை வாடா வஞ்சி மலைதல் முதலாக இறுத்தபின் நாடு அழிவு இரங்கி மறுத்து உரைத்தபக்கம் ஈருகச் சொல்லப்பட்ட இருபத்தைந்து துறைகளை உடையது என்பது	8
607	உழிஞை என்ற புறத்திணை மருதம் எனற அகத் திணைக்குப் புறனுகும். அது சிறந்த அரணத்தை முற்றுகையிடலும் காத்தலும் என்ற இருபகுதியினை உடையது என்பது.	9
608	முதற்கூறு முடிமிசை உழிஞை சூடி ஒன்னார் கொடிநுடங்கு ஆர்எயில் கொளற்குக் குறித்தல் முதலாகத் தொகைநிலை ஈருகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டு துறைகளை உடையது என்பது.	10
609	உழிஞையின் இரண்டாங் கூறு ஏப்புழை ஞாயில் ஏந்து நிலை அரணம் காப்போர் சூடிய பூவினைப் புகழ்தல் முதலாக வெம்முரணுன்	

தொடர் நூற்பா எண்		இயல் நூற்பா எண்
	மகள் வேண்ட அம்மதிலோன் மறுத்து உரைத்தது இறுதியாக ஒன்பது துறையினை உடையது என்பது.	11
610	தும்பை என்ற புறத்திணை நெய்தல் என்ற அகத்திணைக்குப் புறனாவதாம். அது தன் வலிமையைப் பெரிதாகக்கருதிக் களம் வகுத்துப் பொர வந்த வேந்தனை மாற்றரசன் எதிர்த்து அழிக்கும் சிறப்பினைக் கூறுவதாம் என்பது.	12
611	தும்பைத்திணை-கருங்கழல் வேந்தன் செங்களம் கருதிப் பைந்துணர்த்தும்பை வெண்பூச் சூடல் முதல், தொகைநிலை இறுதியாகக் கூறப்பட்ட இருபத்தெட்டுத் துறைகளை உடையது என்பது.	13
612	வாகை என்ற புறத்திணை பாலை என்ற அகத்திணைக்குப் புறனும் என்பது. அது முயற்சியால் பெற்ற வென்றி, இயல்பாக உள்ள வென்றி என்ற இரு வேறுபாட்டு வென்றிகளையும் விளங்க உரைப்பதாம் என்பது.	14
613	வாகைத்திணை, அலைகடல் தானை அரசு அட்டு இறையோன் இகல் புனை வாகை சூடல் முதலாக அருளொடு நீங்கல் ஈருகக் கூறப்படும் முப்பத்திரண்டு துறைகளை உடையது என்பது.	15
614	காஞ்சி என்ற புறத்திணை பெருந்திணை என்ற அகத்திணைக்குப் புறனாகும். அது பலவகை நிலையாமையை உடைய உலகுஇயற்கையைப் பொருந்திய நெறியினை உடைத்து என்பது.	16

தொடர் நூற்பா எண்		இயல் நூற்பா எண்
615	காஞ்சித்திணை, வருபடை நோனான் மடுத்து எதிர் ஊன்றல் முதலாக மன்னவன் இகல் மறம் மடங்க வேல் இறைவன் முன் இருந்து அருமுனை முடித்த முன்னிருப்பு ஈறுகச் சொல்லப்படும் இருபத்தைந்து துறைகளை உடையது என்பது.	17
616	பாடாண்திணை யாவது, கைக்கிளை என்ற அகத்திணைக்குப் புறனாவதாம். அது பாடப்படும் ஆண் மகனது ஒழுக்கத்தைப் பாடும் முறைமையினை உடையது என்பது.	18
617	பாடாண்திணை ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும் அளியும் என்றிவை ஆய்ந்து இனிது உரைத்தல் முதல், நீங்காக் காதல் மைந்தரும் மகளிரும் பாங்குறக் கூடும் பதிநிலை உரைத்தல் ஈறுகக் கூறப்படும் நாற்பத்தொன்பது துறையினை உடைத்து என்பது.	19
618	கூறப்படாதனவும் பொதுவாயினவும் ஒழிபாகக் கொள்ளப்படும் என்பது.	20
619	ஒழிபாவது—மாபெருந்தானையர் மலைந்த பூ முதலாகப் பெரும்பெயர் வெற்றி ஈறுகக் கூறப்பட்ட பிற துறைகளும் கொண்டு இயல்வது என்பது.	21

புறத்திணை இயலில் காணப்படும் தொல்காப்பிய நூற்பாக்களும் பகுதிகளும்.

தொல்காப்பிய நூற்பா எண்			இயற்பா நூற்பா எண்
4	வெட்சி தானே குறிஞ்சியது புறனே.	தொல் பொ.	56
	வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின் ஆதந்து ஓம்பல்	,,	57
5	ஒற்றின் ஆகிய வேய் வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்திறை முற்றிய ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே நோயின்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம் தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடை.	,,	58
7	வஞ்சி தானே முல்லையது புறனே.	,,	61
	எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே.	,,	62
8	வருவிசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கி	,,	63
9	உழிஞை தானே மருதத்துப் புறனே.	,,	64
	முழுமுதல் அரணம் முற்றலும்	,,	65
12	தும்பை தானே நெய்தலது புறனே.	,,	69
	மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச் சென்றுதலை அழிக்கும் சிறப்பிற்று என்ப.		70
13	வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன் தான் மீண்டு எறிந்த .... இருவர் தலைவர் தபுதி		72
	கணையும் வேலும் துணையுற மொய்த்தலின் சென்ற உயிரின் நின்ற யாக்கை இருநிலந் தீண்டா		71

தொல்காப்பிய நூற்பா எண்		இயற்பா நூற்பா எண்
	இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும் ஒழியாத் தொகைநிலை	72
14	வாகை தானே பாலையது புறனே.	73
	தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப் பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப.	74
14	அறுவகைப் பட்ட பார்ப்பன ... . ஐவகை மரபின் அரசர் .... இருமூன்று மரபின் ஏனோர் .... நாலிரு வழக்கின் தாபத	75
	கூதிர் ... என்றிரு பாசறைக் காதலின் ஒன்றிக் கண்ணிய	76
15	எட்டுவகை நுதலிய அவையம்	76
16	காஞ்சி தானே பெருந்திணைப் புறனே	77
	பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே.	78
17	இன்னது பிழைப்பின் இதுவா கியர்எனத் துன்னருஞ் சிறப்பின் வஞ்சினம் முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன் தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ பண்புற வரூஉம் பகுதி நோக்கிப் புண்கிழித்து முடியும் .. .. ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோற் பேஎய் ஓம்பிய .... இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோன் துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும் இன்னன் என்று இரங்கிய மன்னை	79
18	பாடாண் .... கைக்கிளைப் புறனே.	80

தொல்காப்பிய நூற்பா எண்		இயற்பா நூற்பா எண்
19	சேய்வரல் வருத்தம் வீட வாயில்	
	காவலர்க்கு உரைத்த கடைநிலை யானும்	90
	மாயோன் மேய மண்பெருஞ் சிறப்பின்	
	தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்	60
	கபிலை .... நிலையு	90
	கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்	
	ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்	
	பெற்ற பெருவளம் பெறுஅர்க்கு அறிவுறீஇச்	
	சென்று எதிர.	91
	புரையோர் நாப்பண் அவிதல் கடன்என	426
	வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்	
	பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே	422
20	.... வேந்திடை தெரிதல் வேண்டிப்	
	போந்தை வேம்பே ஆரென வரூஉம்	
	மாபெருந் தானையர் மலைந்த பூவும்	60
	நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து	
	தனிமகள் புலம்பிய முதுபாலை	
	தாய்தப வரூஉம் தலைபெயல் நிலையும்	
	நல்லோள் கணவனொடு நனிஅழல் புகீஇச்	
	சொல்லிடை யிட்ட மாலை நிலையும்	79
21	மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்	
	பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்து.	79
	கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்.	90

ஏனைய நூற்பாக்கள் புறப்பொருள்வெண்பாமாலை நூற்பா, கொளு என்பவற்றை உட்கொண்டு, இவ்வாசிரியர், தொல்காப்பிய அமைப்பில் அமைத்தனவேயாம்.

புறத்திணையியல் அமைப்பு

தொல்காப்பியத்திணைப் பெரும்பாலும் அடியொற்றிப் புறத்திணையியலை அமைத்த ஆசிரியர் துறைகளைப் பெரும் பாலும் புறப்பொருள் வெண்பாமாலையை ஒட்டியே வகுத் துள்ளார். புறப்பொருள் வெண்பாமாலை புறத்திணைப் பகுதி கள் பன்னிரண்டு என்று குறிப்பிடவும், அகத்திணை ஏழற்குப் புறத்திணை ஏழே இருத்தல் வேண்டும் என்ற கொள்கை யினராய்ப் புறத்திணை ஏழே என்று வலியுறுத்திப் பேசுகிறார். கரந்தைத்திணை வெட்சியின் ஒரு கூறே என்பதனையும் நொச்சித்திணை உழிஞையின் ஒருகூறே என்பதனையும் விளக் குகிறார். காஞ்சி எதிர்ஊன்றலாகும் என்ற புறப்பொருள் வெண்பாமாலைஉடையார் கொள்கையை விடுத்துத் தொல்-காப்பியனார் குறிப்பிடுவது போல உலக நிலையாமையைக் காஞ்சித்திணை உணர்த்துகிறது என்று குறிப்பிடும் ஆசிரியர் துறைவகைகளைப் புறப்பொருள் வெண்பாமாலையை ஒட்டியே புகல்கிறார். அந்நூல் குறிப்பிடும் பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்ற திணைகள் இவ்வாசிரியரால் புறத்திணை ஒழிபு என்ற பகுதியுள் அடக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியத்தை ஒட்டியே இவ்விப்புறத்திணை இவ் விவ்வகத்திணைக்குப் புறனும் என்று சுட்டும் ஆசிரியர் திணை இலக்கணத்தையும் தொல்காப்பியத்தை ஒட்டியே குறிப் பிட்டுத் துறை விளக்கத்தில் சிற்சில இடங்களில் மாத்திரம் தொல்காப்பிய நூற்பாப் பகுதியைக் கொள்கிறார்.

வெட்சித்திணையில் மண்டமர்க்கு இவர்ந்தோர் மருவலர் நிரையினைத் தண்டத் தலைவரைத் தருக எனப் பணித்தல், விரிச்சி ஓர்த்தல் வேண்டா வீரம் என்பனவும்,

வெட்சித்திணையின் இரண்டாங் கூறாகிய கரந்தைப் பகுதியில், நிரைகோள்கேட்ட குரைகழல்அரசன் விரைசெலல் மறவரைமீட்க எனப் பணித்தல், பறவாப்புள் தெரிதல், நன்கு

உணர் உசா, புறத்திறை, ஆபெயர்த்துத் தருதல், அருஞ் சமர் விலக்கல், நலிவின்று உய்த்தல், நண்ணுவழித் தோற்றம், நிறைத்தல். பாதீடு, உண்டாட்டு, கொடை, துடிநிலை, கொற் றவை நிலை என்பனவும் கூறப்பட்டுள்ளன.

உழிஞைத்திணைத் துறையுள் செருமதிலோர் சிறப்பு உரைத்த பக்கம் அகத்துழிஞையின் பகுதியாக அமைக்கப் பட்டிருத்தலே ஏற்றது

தும்பைத்திணைத் துறையுள் நூழில், நூழிலாட்டு என்-பனவற்றை இவ்வாசிரியர் உள்ளவாறு அறிந்து இயம்பி உள்ளார்.

பாடாண்திணைத் துறையுள் பூவைநிலை செவியறிவுறூஉ ஆகிய இரண்டன் விளக்கமும் தொல்காப்பியத்தை ஒட்டிச் சிறப்பாக உள்ளன.

ஒழிபில் தலைப்பெயல்நிலைக்குத் தொல்காப்பிய நூற் பாப் பகுதியைக் கொண்டு வெண்பாமாலையை ஒட்டிப் பொருள் கொண்டுள்ளார். இப்பகுதியில் கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல் இடம் பெற்றுள்ளது.

சுருங்கச் சொல்லின் இப்புறத்திணையியல் தொல்காப் பியத்தையும் வெண்பாமாலையையும் இணைப்பதாக உள்ளது.

இப்பதிப்பின் திறம்

இப்புறத்திணை இயற் பதிப்பின்கண் ஆட்டாண்டு எடுத்துக் கொள்ளப்பட்ட பண்டை உரையாசிரியர்தம் கருத்துக்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. துறைகளுக்கு விளக்கம் வரையப் பட்டுள்ளது ஏற்றவழி எல்லாம் புறப்பொருள் வெண்பாமாலையின் கொளுக்கள் உடன் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. வெண்பாக்களுக்குப் போந்தபொருள் பொருத்தம் உற வரையப்பட்டுள்ளது. ஏனைய எடுத்துக்காட்டுக்களும் விளக்கப் பெற்றுள்ளன. இவ்வாசிரியர் தம் கருத்தாக வெளியிட்டுள்ளன யாவும் ஏற்றபெற்றி விளக்கப் பெற்றுள்ளன. இவர் புறப்பொருள் வெண்பாமாலையைக் கூர்ந்து நோக்கியவராவர் என்பது அகத்துழிஞையின் பக்கம், நூழில் நூழிலாட்டு என்பனவற்றை உள்ளவாறு உணர்ந்து, புறப்பொருள் வெண்பாமாலைப் பதிப்பிற்கு மாறுக, உண்மை நிலைப்படி அவற்றை அமைத்துள்ள திறம்நோக்கி உணரலாம்.

இரண்டாவது புறத்திணையியல்.

புறத்திணை இலக்கணம்

599 ஆன்ற காட்சியின் அகன்நன்கு உணர்ந்தோர்
தோன்றக் கூறிய புறன்எனப் படுவது
அறம்பொருள் என்னும் இயல்பிற் ருகிப்
புறம்பயில் ஒழுக்கம் என்மனுர் புலவர்.

என்பது சூத்திரம். நிறுத்தமுறையானே புறத்திணை இலக்கணம் உணர்த்திற்று ஆகலான், இவ்வோத்துப் புறத்திணையியல் என்னும் பெயர்த்து. மேல் அகத்திணை இலக்கணம் உணர்த்தி அதற்குப் புறனுகிய புறத்திணை இலக்கணம் உணர்த்தினமையின் மேல் ஓத்திேனுடு இயைபு உடைத்தாயிற்று. இதனுள் இத்தலைச் சூத்திரம், மேற்கூறிய புறப்பொருளாவது இன்னதுஎன அதன் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) நிறைந்த அறிவானே அகப்பொருள் இலக்கணத்தை ஐயம் திரிபுஅற ஆராய்ந்து அறிந்தோர் விளங்கக்கூறிய புறன் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, மேற்கூறிப்போந்த அறமும் பொருளும் என்று சொல்லப்படும் இயல்பினை உடைத்தாய்ப் புறம்பே நிகழும் ஒழுக்கம் என்று கூறுவர் அறிந்தோர் என்றவாறு.

அகம்போல ஒத்த அன்புடையார் தாமே அன்றி எல்லாரானும் துய்த்து உணரப்படுதலானும், இவ்வாறு இருந்தது எனப் பிறர்க்குக் கூறப்படுதலானும் இது புறமாயிற்று. எனவே, அறமும் பொருளும்பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்திற்குப் புறம் என்றது ஓர் ஆகுபெயராம்.

‘ ஆன்ற காட்சியின் அகன்நன்கு உணர்ந்தோர்
தோன்றக் கூறிய புறன்எனப் படுவது ’.

என்றூர், குறிஞ்சி முதலியவற்றிற்கு வெட்சி முதலிய புறனுங் கால் அவ்விலக்கணங்கள் ஒருபுடை ஒப்புமைபற்றிச் சார்பு உடைய ஆதல் கூறவேண்டுதலின்.

‘ ஆன்ற சிறப்பின் அறம்பொருள் இன்பம்என
மூன்றுவகை நுதலியது உலகம் அவற்றுள்
அறமும் இன்பமும் அகலா தாகிப்
புறம்எனப் படுவது பொருள்குறித் தன்றே ’.

எனப் பன்னிரு படலத்துள் அறம் சார்பாகப் புறம், பொருள் குறித்துவரும் என்றது என்னைஎனின், அது மயங்கக் கூற லாம்; ஆசிரியர் தொல்காப்பியனுர் சார்பாகக் கூறுது வாகைத் திணைக்கண் ‘கட்டில் நீத்த பால் ’ தொல். பொ. 75 முதலாகக் ‘காமம் நீத்த பால்’ ஈருக அறத்தையே விதந்து கூறுதலின். 1

விளக்கம்

நிறுத்தமுறை - ‘ போக்கறு மரபின் பொருளெனப்படு வது ’ இ. வி. பொ. 2 என்ற நூற்பாவில் அகனும் புறனும் என நிறுத்தமுறை. அகம் இன்பப் பொருளது ஆகவே, புறம் அறமும் பொருளும் பற்றி நிகழ்வதாகும். புறம்—வெளிப் படை. எனவே வெளிப்படையாக உணர்த்தப்படும் அறம் பொருள் என்பனபற்றிப் புறத்திணை நிகழ்வதாகிறது.

குறிஞ்சிக்கு வெட்சி புறன் போல்வன பின் விளக்கப்படும். பன்னிருபடலத்துள் புறத்திணை பொருள் குறித்துவரும் எனக் கூறியிருப்பது தொல்காப்பியனுர் கருத்துக்குப் பொருந்து வது அன்றும்; ஏனெனில் அவர் புறத்திணை அறம் குறித்தும் தோன்றும் என்பதனை வாகைத்திணைக்கண் அறவெற்றி களின் பட்டியலை,

‘ கட்டில் நீத்த பாலி னுனும்
எட்டுவகை நுதலிய அவையத் தானும்
கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வன்புகழ்க் கொடைமை யானும்

பிழைத்தோர்த் தாங்கும் காவ லானும்
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த அகற்சி யானும்
காமம் நீத்த பாலி னானும்'. தொ. பொ. 75

என்று குறிப்பிட்டுள்ளமை சுட்டப்படுகிறது. 1

புறத்திணை வகை

600 வெட்சி வஞ்சி உழிஞை தும்பை
உட்குவரு சிறப்பின் வாகையொடு காஞ்சி
பாடாண் திணையும் உளப்படத் தொகைஇ
நாடுங் காலை எழுவகைத்து அதுவே.

இது மேல் புறன் எனப்பட்ட பொருட்கு வகையும் விரியும் பொருளும் கூறுகின்றது.

(இ-ள்) வெட்சியும் வஞ்சியும் உழிஞையும் தும்பையும் அஞ்சத்தக வரூஉம் சிறப்பினை உடைய வாகையும் ஆகிய ஐந்திணையுடனே காஞ்சியும் பாடாணும் ஆகிய இரண்டு திணையும் கூடத் தொகுதலால் ஆராயுங்காலத்து எழு கூற்றதாம் மேற்கூறிப்போந்த புறத்திணைதான் என்றவாறு.

இங்ஙனம் வகுத்தும் விரித்தும் கூறினர், உரிமை வகையான் நிலம் பெறுவனவாகிய குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் அகனைந்திணைக்கும் முறையே வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை என்னும் ஐந்தும் புறனாகலானும், நிலன் இன்றி அந்நிலத்திடை நிகழும் பெருந்திணையும் கைக்கிளையும் ஆகிய அகத்திணை இரண்டற்கும் முறையே காஞ்சி பாடாண் என்னும் இரண்டு திணையும் புறனாகலானும் என்பது. அகங்கை இரண்டு உடையார்க்குப் புறங்கை நான்கு ஆகாது இரண்டே ஆகியவாறுபோல, அகத்திணை ஏழ் என்றார்க்குப் புறத்திணை ஏழ் என்றலே பொருத்தமுடைத்து என்பார், 'நாடுங்காலை எழுவகைத்து' என்றார்.

எனவே, அகத்திணைக்குப் புறத்திணை அவ்வந் நிலத்துமக்கள் வகையால் பிறந்த செய்கை வேற்றுமை ஆகலின் ஒன்றற் கொன்று இன்றியமையாதவாறு ஆயிற்று.

இக்குறிகள் காரணக் குறிகளாம், பூக்களால் போந்தன ஆதலின்; அற்றேல்,

‘ஆங்கனம் உரைப்பின் அவற்றது வகையால்
பாங்குறக் கிளந்தனர் என்ப அவைதாம்
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குவரு சிறப்பின் உழிஞை நொச்சி
முரண்மிகு சிறப்பின் தும்பையுள் ளிட்ட
மறனுடை மரபின ஏழே ஏனைய
ஆகோள் மரபின் வாகையும் சிறந்த
பாடாண் பாட்டொடு பொதுவியல் என்ப
கைக்கிளை ஏனைப் பெருந்திணை என்றாங்கு
அத்திணை இரண்டும் அகத்திணைப் புறனே’.

எனப் பன்னிருபடலத்துப் புறத்திணை பன்னிரண்டு எனக் கூறுபவால் எனின்,

‘கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப’. தொ. பொ. 1

எனக்கூறிய ஆசிரியர் தொல்காப்பியனாருக்குப் பிற்படக் கிளக்கப்படும் புறத்திணை ஏழ் என்பதே கருத்தாகலானும் கரந்தையும் நொச்சியும் முறையே வெட்சிக்கும் உழிஞைக்கும் மறுதலையாய், அவற்றின்பாற்படும் ஆகலானும், பொது வியல் என்பது,

‘பல்லமர் செய்து படையுள் தப்பிய
நல்லாண் மாக்கள் எல்லாரும் பெறுதலின்
சிறப்பட மொழிந்து தெரிய விரித்து
முதற்பட எண்ணிய எழுதிணைக்கும் உரித்தே’.

என அவர்தாமே கூறுப ஆகலானும், கைக்கிளையும் பெருந்திணையும் புறமாயின், அகத்திணை ஏழ் என்னாது ஐந்து எனல் வேண்டுதலானும், பிரமம் முதலாகச் சொல்லப்பட்ட மணம் எட்டனுள்ளும் யாழோர் கூட்டமாகிய மணம் ஒன்றனையும் ஒழித்து, ஏனைய ஏழும் புறமாதல் வேண்டுதலானும், முனைவன் நூலிற்கும் கலிமுதலாகிய சான்றோர் செய்யுட்கும் உயர்ந்தோர் வழக்கிற்கும் இயையாமையானும் அங்ஙனம் கூறுதல் பொருந்தாது என மறுக்க. 2

விளக்கம்

இவ்வாசிரியர் தொல்காப்பியனார் கருத்தை அடிஒற்றிப் புறத்திணையும் ஏழே என்பதனை உட்கொண்டு அதன் காரணங்களை நச்சினார்க்கினியர் உரைத்தனவற்றை உட்கொண்டு கூறியுள்ளார்.

மேலும் வெட்சியும் உழிஞையும் இருகூறுகளாகப் பிரித்துக் கொள்ளப்படுவன என்பதும், வெட்சியின் இரண்டாம் கூற்றுக்குக் கரந்தைப் பூச் சூடுதலையும் உழிஞையின் இரண்டாம் கூற்றுக்கு நொச்சிப்பூச் சூடுதலையும் உட்கொண்டு கரந்தைத்திணை நொச்சித்திணை எனப் பிரித்துத் தனியே திணைகோடல் கூடாது என்பதும் இவர் கருத்தாம். வஞ்சிக்கு மறுதலையாகக் காஞ்சியை எதிர் ஊன்றல் என்ற பொருளில் பிறர் கொள்ளவும் இவர் தொல்காப்பியனாரை ஒட்டிக் காஞ்சி நிலையாமையைக் கூறுவது என்று உட்கொண்டுள்ளார். யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை இவற்றை உட்கொண்டு நிலைபெற்ற புகழை பெறுதலுக்காகவே வஞ்சி வேந்தனை மாற்றான் எதிர்ஊன்றிப் பொருவான் ஆதலின் நிலையாமை கூறும் காஞ்சி எதிர்ஊன்றலையும் உட்கொள்ளும் என்பது இவர் கருத்து. பொதுவியலாவது வெட்சி முதல் பாடாண் ஈறாகிய திணைகளுக்குப் பொதுவான செய்திகளே

கூறுவது ஆதலானும், கைக்கிளையும் பெருந்திணையும் அகத்திணையின்பாற் படுவனவே ஆகலானும் இவற்றைப் புறம் எனச் சேர்த்தல் கூடாது என்பதும் இவர் கருத்தாம்.

கைக்கிளையும் பெருந்திணையும் புறத்தின் பாற்படுவன ஆயின் அகத்திணை ஏழு என்னாது ஐந்து என்றே கொள்ளப் படுதல் வேண்டும். மேலும் எண்வகை மணங்களுள் பிரமம் முதலிய நான்கும் பெருந்திணையின் பாற்படுவன. ஆசுரம் முதலிய மூன்றும் கைக்கிளையின் பாற்படுவன. எனவே காந் தருவம் ஒன்றே ஐந்திணையின் பாற்படுவது ஆகலான் எண் வகை மணங்களுள் அது ஒன்றே அகத்திணையின் பாற் படுவது ஆகும். ஏனைய ஏழு மணங்களும் புறத்திணையின் பாற்பட்டு விடும். கலித்தொகை முதலிய நூல்களில் கைக் கிளையும் பெருந்திணையும் ஐந்திணைக்குள் அமைத்துக் கூறப் பட்டுள்ளன. இவற்றை நோக்கக் கைக்கிளையும் பெருந்திணை யும் அகத்திணையைச் சார்ந்தன என்பதே ஏற்புடைத்து என்ற விளக்கமும் தருகிறார்.

ஆனால் கிளவித் தலைவன் பெயர் கூறிப் பாட்டுடைத் தலைவன் பெயர் சுட்டாது எழும் கைக்கிளை, பெருந்திணைப் பகுதிகள் புறத்திணையிறுதியில் ஒழிபாக இவரால் அடக்கப் பட்டுள்ளமையும் அறிக.

வெட்சி முதல் தும்பை ஈறாகிய திணைகள் புறம் எனவும் வாகைபாடாண் பொதுவியல் என்ற மூன்றும் புறப்புறம் என வும் கைக்கிளையும் பெருந்திணையும் அகப்புறம் எனவும் பண் னிரு படலம் முதலிய நூல்கள் கருதும்.

> ‘ ஆற்றும் அகமே புறமே அகப்புறம் அன்றி வென்றி
> போற்றும் புறப்புறம் என்றும் பொருள் ’ வீர. 86

என்ற நூற்பாவான் வீரசோழியமும் இக்கருத்துக் கொண் டமை தேற்றம். அந்நூலில்,

'ஏற்றும் முதுபாலை பாசறைமுல்லை இயன்றவள்ளி
தோற்றும் சுரநடை இல்லவள் முலலைதொல் காந்தளன்றி
மாற்றுங் குறுங்கலி தாபதம் குற்றிசை கைக்கிளையோடு
ஆற்றும் பெருந்திணை யாம்தபு தாரம் அகப்புறமே'

வீர. 97

'வெட்சி கரந்தை விறல்வஞ்சி காஞ்சி உழிஞைநொச்சி
உட்கிய தும்பையென் றேழும் புறம்உயர் வாகைதன்பின்
கொட்கும் பொதுவியல்பாடாண் புறப்புறம் கொண்டிவற்றை
உட்கு மதுவிட் டுரவோர் உரைப்படி ஓர்ந்தறியே' வீர. 98

என்று வரும் நூற்பாக்களையும்,

'வெட்சிமுத லாகத் தும்பை ஈருகப்
புக்கு அமர் செய்வது புறத்திணை ஆகும்'.
'வாகை பாடாண் பொதுவியல் திணைஎனப்
போகிய மூன்றும் புறப்புறப் பொருளே'.
'கைக்கிளை ஏனைப் பெருந்திணை என்றிவை
அக்கரம் அறிவோடு அகப்புறம் என்ப'.

வீர. 106 மேற்

என்று வரும் மேற்கோள் நூற்பாக்களையும் நோக்குக.

தொல்காப்பியத்தை ஒட்டிப் புறத்திணை ஏழே என்று வரையறுத்தும் பிற்கால நூல்கள் புறத்திணை பன்னிரண்டு என்று கொண்டு சொற்றவற்றையும் புதுவது புகுதலாகத் தழீஇ இவ்வாசிரியர் ஏற்றபெற்றி ஒழிபுப்பகுதியில் பொருட் கூற்றின் ஒழிபாக இணைத்துக் கூறியுள்ள திறமும் உணரப் படும்.

இனி, தொன்னூல் விளக்கம் கரந்தையையும் நொச்சி யையும் கூட்டி வாகையையும் பாடாணையும் விடுத்துப் புறத் திணை ஏழே என்று கூறும்.

'அகப்பொருள் புறப்பொருள் ஆம்இரண்டு அவற்றுள்
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பைஏழ் புறத்திணை

பகைநிரை ஓட்டல் தன்நிரை மீட்டல்
பகைமேற் செல்லல் பகைக்குஎதிர் ஊன்றல்
தன்எயில் காத்தல் பகைஎயில் கொள்ளல்
போர்வெல்லல் எனமுறை புறப்பொருள் திணையே'.

தொ. வி. 199

முத்துவீரியம்—பொருளதிகாரம்

'புறத்திணை அகத்திணைப் புறனு கும்மே'. 51

'வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பை வாகை
எச்சப் படலமோடு இவைஎன மொழிப'. 52
போகிப் பகைவர்ஊர்ப் புக்குஅவர் நிரையைக்

'கவர்தல் வெட்சியாம் காணுங் காலே'. 53

'பகைவர் கவர்ந்ததன் பசுக்களை மீட்டல்
கரந்தை என்மனுர் கற்றுணர்ந் தோரே'. 54

'மாற்ருர் மேற்செலல் வஞ்சி ஆகும்'. 55

'இரைந்து பகைவரோடு எதிர்ப்பது காஞ்சி'. 56

'காமரு தன்அரண் காப்பது நொச்சி'. 57

'பகைவர் அரணைப் பற்றுதல் உழிஞை'. 58

'அதிரப் பொருவது தும்பை ஆகும்'. 59

'மாற்ருர் ஓட வருத்தி வெல்வது
வாகை எனப்பெயர் வைக்கப் படுமே'. 60

என முத்துவீரியம் புறத்திணையை எட்டாகப் பகுத்தலும் காண்க. 2

கரந்தை-நொச்சி-சூடுதல்

601 வெட்சியும் உழிஞையும் வேற்றுவினை உடைமையின்
உட்குவரு கரந்தையும் நொச்சியும் சூடுதல்
அவ்வினை மருங்கின் அமைந்ததொல் வழக்கே.

இது மேல் கூறியவற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது.

(இ-ள்) வெட்சியும் உழிஞையும் முறையே நிரைகோடலாகிய ஒருதொழிலே அன்றி அதன் மறுதலைத் தொழிலாகிய நிரைமீட்டலும், எயில் அழித்தலாகிய ஒரு தொழிலேயன்றி அதன் மறுதலைத் தொழிலாகிய எயில் காத்தலுமாகிய வேறுபட்ட தொழில்களை உடைமையின், அவ்வேறுபட்ட தொழிற்கண் முறையே அஞ்சுதலுடைய கரந்தையும் நொச்சியும் சூடுதல் அமைதிபெற்ற பழைய நெறியாம் என்றவாறு. 3

விளக்கம்

நிரைகோடல், எயிற்போர் என்ற இரு தலைப்புக்களின் கூறுகளே நிரைமீட்டலும் எயில் காத்தலும் ஆதலின் அடையாளமாக வேற்றுப் பூ அணிதல் ஒன்றனையே உட்கொண்டு அவற்றைத் தனித்தனித் திணைகளாகக் கோடல் கூடாது என்பது.

கரந்தையையும் நொச்சியையும் தனித்தனித் திணையாகக் கொளளாத தொல்காப்பியனாரும்,

'அனைக்குரி மரபின் கரந்தை அன்றியும்'
தொ. பொ. 60

'அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்' 68

எனக் கரந்தை, நொச்சி என்பனவற்றைச் சுட்டியுள்ளமையும் காண்க. 3

வெட்சி இலக்கணம்

அவற்றுள்,

602 வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரப் பொருபோர் உறுமுறை தொடங்கிய
வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பலும் அந்நிரை மீட்டலும்
எனஇரு பாற்றே அஃதுஎன மொழிப.

இது வெட்சித்திணை, குறிஞ்சித் திணைக்குப் புறன் என் பதூஉம் அதன் பொருள்திறனும் கூறுகின்றது.

(இ-ள்) மேற்கூறிய புறத்திணை ஏழனுள் வெட்சித்திணை முற்கூறிய அகத்திணை ஏழனுள் குறிஞ்சித்திணைக்குப் புறனும். அச்சந்தோன்றப் பொரும் போரைத் தனக்கு உரிய அறநெறி யால் எடுத்துக் கொண்ட வேந்தனால் விடப்பட்ட முனைப் புலம் காத்திருக்கும் தண்டத்தலைவர் பகைநிலத்துச் சென்று, களவினாலே ஆநிரையைக் கைக்கொண்டு போந்து மீளாமல் பாதுகாத்தலும், நிறைகோள் கேட்ட வேந்தனால் விடுக்கப் பட்ட தண்டத் தலைவர் அந்நிரையினை மீட்டலும் என இரண்டு வகையினை உடைத்தாம் மேற்கூறிய அத்திணை என்றவாறு

கவர்ந்தோர்க்கு மறுதலையாகிய மீட்டோர் வருவித்து உரைக்கப்பட்டது. 'அவற்றுள்' என்பதனை மேல் இவ்வாறு வருவனவற்றிக்கு எல்லாம் உய்த்து உரைத்துக் கொள்க.

புறத்திணை பலவற்றுள் 'வெட்சிதானே குறிஞ்சியது புறனே' என இதனைப் பிரித்து ஓதினார், களவு ஒழுக்கமும் மலை சார்ந்த இடனும் கங்குற் காலமும், அந்நிலத்துப் பூ ஆகிய வெட்சி சூடலும், காவலர் கடுகினும் தான் கருதிய பொருளை இரவின்கண் முடித்து மீடலும் போல்வன ஒத்தலின் என்பது. எனவே, வெட்சித்திணை குறிஞ்சித்திணைக்குப் புறன் என்றல், ஆணைகூறல் அன்றாயிற்று. மன்னுயிர் காக்கும் அன்புடை வேந்தர்க்கு மறத்துறையும் அறமே நிக ழும் ஆதலின், 'உட்குவரப் பொருபோர் உறுமுறை தொடங் கிய வேந்து' என்றார். உறுமுறை தொடங்குதலாவது, இரு பெருவேந்தர் பொருவது கருதியக்கால், ஒருவர், ஒருவர் நாட்டு வாழும் அந்தணரும் ஆவும் முதலியன தீங்குசெய்யத் தகாத சாதிகள் ஆதலின், அவற்றை ஆண்டுநின்றும் அகற் றல் வேண்டிப் போதருக எனப் புகறலும், அங்ஙனம்

போதருதற்கு அறிவில்லாத ஆவினைக் களவினால் தாமே கொண்டுவந்து மீளாமல் பாதுகாத்தலும் முதலியனவாம். அஃது,

ஆவும் ஆன்இயல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வன் பெறுஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை .... புற நா. 9

எனச் சான்றோர் கூறியவாற்றான் உணர்க. மேல் ஊர் கொலையும் கூறுவார், அகநாட்டில் அன்றிப் புறஞ்சிறைப் பாடியில் ஆநிரை காக்கும் காவலரைக் கொன்றே நிரை கொள்ள வேண்டுதலின். இக்களவொழுக்கம் தீது எனப் படாது அறமேயாம் என்பார், ‘ஆதந்து ஓம்பலும்’ என்றார். எனவே, புறப்பொருளுக்கு உரிய அறனும் பொருளும் கூறத் தொடங்கி ஈண்டு அறத்தால் பொருள் ஈட்டுமாறும் கூறினார். ‘ஆதந்து ஓம்பலும் அந்நிரை மீட்டலும் என இரு பாற்று’ என்றது,

‘தன்னுறு தொழிலே வேந்துஉறு தொழில்என்று
அன்ன இரு வகைத்தே வெட்சி’

எனப்பன்னிரு படலத்துள் கூறியவாறு கூறின், முன்வருகின்ற வஞ்சி முதலியவற்றின் பொருளாகிய எடுத்துச்செலவு முதலியன வேந்தன்மேல் இயன்று உறுதலானும், வேந்துறு தொழிலே அன்றித் தன்னுறு தொழிலும் கூறின் வேந்தனது ஆணையைக் கடந்து தம்நாட்டும் பிறர்நாட்டும் களவு நிகழ்த்தினர் ஆப ஆகலானும் அது மரபு அன்று எனமறுக்க. 4

விளக்கம்

இந்நூற்பா ஒருபுடையான் தொல்காப்பிய நூற்பாக்களை அடியொற்றியது. வெட்சி குறிஞ்சிக்குப் புறனாதற்கு நச்சினார்க்கினியர் தந்துள்ள விளக்கமே வரையப்பட்டுள்ளது.

'வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற் றாகும்'. தொல் பொ. 57

'ஆதந்து ஓம்பல்' என்ற பகுதிக்கு நச்சினார்க்கினியர் வரைந்த விளக்கத்தினையே இவர் 'உறுமுறை தொடங்கல்' என்பதற்கும் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசனுடைய ஆணை இன்றி வீரர்தாமே போர்ச் செயற்கண் ஈடுபடுதல் தவறுதலின், தன்னுறுதொழில், வேந்துறு தொழில் என்று பாகுபடுத்துக் கூறுவது பொருந்தாது என்பதனை விளக்கியுள்ளார். பன்னிரு படலத்தை ஒட்டி வெண்பாமாலை ஆசிரியரும் தன்னுறு தொழில் கொண்டுள்ளமை உணர்க.

வெட்சி குறிஞ்சிக்குப் புறன் ஆதல் அடிப்பட்ட மரபால் கொள்ளப்பட்டதே அன்றித் தொல்காப்பியனார் வலிய ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்திச் சொற்றது அன்று என்பதனை 'ஆணை கூறல் அன்றும்' என்ற தொடரால் விளக்கினார். மேல்வருவனவற்றிற்கும் இவ்விளக்கம் கொள்க.

வெட்சி குறிஞ்சிக்குப் புறனயது எவ்வாறெனின், நிரை கோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின்கண் நிகழ்தலானும், அந்நிலத்தின் மக்களாயின் பிறநாட்டு ஆநிரையைக் களவிற்கோடல் ஒருபுடை குறிஞ்சிக்கு உரித்தாகிய களவோடு ஒத்தலானும் அதற்கு அது புறனயிற்று என்க. சூடும் பூவும் அந்நிலத்திற்கு உரிய பூ ஆதலானும் அதற்கு அது புறனும் என்பது-உரையாசிரியர் உரை. தொ. பொ. 59

காதல் கண்ணிய அனைத்தக ஒழுக்கங்களுக்கும் குறிஞ்சி முதலாதல்போல, அமர்கொள் மரபின் புறத்திணைகள் எல்லாம் வெட்சியைக்கொண்டு துவங்குதலானும், குறிஞ்சியும் வெட்சியும் ஒருங்கே களவில் நிகழ்வ ஆதலானும், ஒழுக்க முறையால் வெட்சி குறிஞ்சிக்குப் புறனயிற்று. இனி, நிரை மேயும் மலைச்சார்பு களவில் கூடும் குறிஞ்சிக்கும், களவில்

ஆதந்து ஓம்பும் வெட்சிக்கும் சிறந்துரியதாகலும், நள்ளிரா இவ்வீரொழுக்கங்களுக்கும் ஏற்புடைத்தாகலும், இடத்தானும் காலத்தானும் இவற்றிடை ஒருபுடை இயைபுடைமை எய்து வித்தலானும் வெட்சி குறிஞ்சிக்குப் புறனாய் அமையும்.

பாரதியார். புற. 1 உரை

ஒத்த நூற்பாக்கள்

'வெட்சி தானே குறிஞ்சியது புறனே'. தொ. பொ. 56
'வேந்துவிடு .... மேவற்றாகும்'. ,, 57
4

வெட்சித் துறைகள்

603 மண்டமர்க்கு இவர்ந்தோன் மருவலர் நிரையினைத்
தண்டத் தலைவரைத் தருகஎனப் பணித்தல்[1]
பணிதலைக் கோடல்[2] படைஇயங்கு அரவம்[3]
தணியலர் எழுந்தோர் சமரவாய்ப்பு அறீஇயர்
விரிச்சி ஓர்த்தல்[4] வேண்டா வீரம்[5]
வரிச்சிலை மறவர் வழியிடைச் சேறல்[6]
ஒற்றின் ஆகிய வேயே[7] வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்திறை[8] முற்றிய
ஊர்கொலை[9] ஆகோள்[10] பூசல் மாற்றே[11]
நோயின்று உய்த்தல்[12] நுவல்வழித் தோற்றம்[13]
தந்துநிறை[14] பாதீடு[15] உண்டாட்டு[16] உறுகொடை[17]
புலன்அறி சிறப்பொடு[18] பிள்ளை வழக்கே[19]
பெருந்துடி வழக்கொடு[20] அருந்திறல் கலைஊர்
கொற்றவை நிலையொடு[21] வெறியாட்டு[22] உளப்பட
தெருண்டுமுன் வகுத்த கவர்ந்தனர் கோடல்
இரண்டுதலை இட்ட ஐந்நான்கு துறைத்தே.

இது மேற்கூறிய வெட்சிப்பகுதி இரண்டனுள் முன்னையது இத்துணைத் துறை உடைத்து என்கின்றது.

(இ-ள்) மண்டு அமர்க்கு இவர்ந்தோன் மருவலர் நிரையினைத் தண்டத்தலைவரைத் தருக எனப் பணித்தல் முதல் ஈறுகக்கிடந்த வெறியாட்டும் கூடத் தொகுத்து எண்ணுதலால் ஆராய்ந்து மேல் வகுக்கப்பட்ட கவர்ந்தனர் கோடல் இருபத்திரண்டு துறையினை உடைத்தாம் என்றவாறு.

விளக்கம்

[1 தருகஎனப் பணித்தல் :

மிக்குச் செல்கின்ற போர்க்கண் விருப்பம் கொண்ட வெட்சிமன்னன் தன் தானைத்தலைவர்களை அழைத்துப் பகைவருடைய பசுக் கூட்டங்களைக் கவர்ந்து வருமாறு ஆணையிடுதல்.

2 பணிதலைக் கோடல் :

பகைவர்தம் பசுநிரைகளைக் கவர்ந்து வருமாறு தம் அரசன் இட்ட ஆணையைத் தானைத்தலைவர் ஏற்று நடத்தல்.

3 படை இயங்கு அரவம் :

வெட்சி மன்னனுடைய படைகள் பகைவர் ஆநிரைகளைக் கவர்ந்து வருவதற்காகப் புறப்பட்டுச் சென்றபோது ஏற்பட்ட ஆரவாரம்.

4 விரிச்சி ஓர்த்தல் :

போர்வேட்கை நீங்காதவராகி ஆநிரை கவர்வதற்குப் புறப்பட்ட வெட்சிவீரர் போர் தமக்கு வாய்க்குமாற்றை அறிவதற்கு நல்வாய்ப்புள் கேட்டல்,

5 வேண்டா வீரம் :

தம் போர்ஆற்றலில் துணிவான நம்பிக்கை கொண்ட வெட்சிவீரர் நல்வாய்ப்புள் முதலியன அறிதல் வேண்டா என்று விரிச்சியை விலக்குதற்குக் காரணமாகிய வீரம்.

6 வழியிடைச் சேறல்:

வெட்சிமறவர் பகைவர் ஆநிரைகளைக் கவர்வதற்குப் போகவேண்டிய நெறியில் புறப்பட்டுச் சேறல்.

7 வேய் :

நிரைகோடற்கு எழுந்த வெட்சிவீரர் ஒற்றர்களை அனுப்ப ஒற்றுவகையான் அவர் உணர்த்திய குறளைச் சொல்

8 புறத்து இறை :

நிரைகோடற்கு எழுந்தோர் வேய் உரைத்தோர் இடத்துச் செய்யும் சிறப்புக்கள் முடிந்தபின்னர் உளதாகிய நிரைப்புறத்து ஒடுங்கிய இருக்கைப் பகுதி.

9 ஊர் கொலை :

நிரைகோடற்கு எழுந்தோர் பகைவர் புறஞ்சேரியை வளைத்துக்கொண்டு ஆண்டுநின்ற காவலரைக் கொன்று பகை அறுத்தல்.

10 ஆகோள் :

நிரைகோடற்கு எழுந்தோர் எதிர்விலக்குவோர் இலராக நிரை அகப்படுத்திச் சேறல்.

11 பூசல் மாற்று :

நிரைகொண்டு போகின்றார் தம் பின்னே உளைத்தல் குரலோடு தொடர்ந்து சென்று ஆற்றிடைப் போர் செய்தோரிடம் மீண்டு, போரிட்டுப் பூசலை நீக்குதல்.

12 நோய் இன்று உய்த்தல் :

நிரை கொண்டோர் அங்ஙனம் நின்று நின்று சிலர் பூசல் மாற்றத் தாம் கொண்ட நிரையினை இன்புறுத்திக் கொண்டு போதல்.

13 நுவல்வழித் தோற்றம் :

பாடிவீட்டில் உள்ளோர் மகிழ்ந்து உரைத்தற்குக் காரணமான நிரை கொண்டோர் வருகை.

14 தந்து நிறை :

நிரை கொண்டோர் தாம் கைப்பற்றிய நிரையைத் தம் ஊர்ப்புறத்துத் தந்து நிறுத்தல்.

15 பாதீடு :

வேந்தன் ஏவலால் தாம் கொண்ட நிரையைப் பகுத்துக் கோடல்.

16 உண்டாட்டு :

நிரை கொண்டார் தாம் கொண்ட நிரையைப் பாத்துத் தாம் கொண்ட மகிழ்ச்சியால் சுற்றத்தொடு கள்ளுண்டு மகிழ்ந்து விளையாடுதல்.

17 கோடை :

தாம் கொண்ட நிரையை இரவலர்க்கு வரையாது கொடுத்து மனம் மகிழ்தல்.

18 புலன்அறி சிறப்பு :

பகைப்புல நிலையை ஒற்றினுல் ஒற்றி வந்தவருக்கு மிக்க சிறப்புச் செய்தல்.

19 பிள்ளை வழக்கு :

கரும்பிள்ளை நிமித்தம் கண்டு பின் நிகழ்வதனை உணர்த்தியவருக்கு வழக்கம்போல ஆநிரைகளைப் பரிசாக வழங்குதல். பிள்ளை — கரிக்குருவி.

20 துடிநிலை :

வெட்சி மறவருக்குப் பரம்பரை பரம்பரையாகத் துடி கொட்டுபவனது பண்பைப் பாராட்டிச் சிறப்புச் செய்தல்.

21 கொற்றவை நிலை :

மிக்க ஆற்றலை உடைய மானை ஊர்தியாக உடைய கொற்றவையின் திருவருளை வழுத்திப் பாராட்டுதல்.

22 வெறியாட்டு :

வெட்சிவீரர்தம் வெற்றி குறித்து இள மகளிர் வேலனொடு முருகப்பெருமான் பொருட்டாக வெறியாடலை நிகழ்த்துதல்]

அகத்திணைக்கண் துறை உட்பகுதிகள் எல்லாம் விரித்து உரைத்தாங்கு உரையாது புறத்திணைக்கண் துறை உட்பகுதிகள் எல்லாம் அத்துறைக்கண் துறுத்துக் கூறுதலின் துறை ஆயிற்று. துறுத்தலாவது ஒன்றன் காரணம் ஆயினவற்றை எல்லாம் அவற்றின் காரியம் ஆகிய அதன்கண் செறித்தல். அஃதாவது படைத்தலைவரைத் தருக என்றலும், படையைக் கூஉய் வருக என்றலும், அவர் வருதலும் முதலிய காரணங்களை அவற்றின் காரியம் ஆகிய 'நிரையினைத் தண்டத் தலைவரைத் தருக எனப் பணித்தற்கண்' அடக்குதல். பிறவும் அன்ன.

[இப்பத்தியில் கூறப்பட்ட செய்தி தொல்காப்பியப் புறத்திணையியல் மூன்றும் நூற்பா இறுதியில் நச்சினார்க்கினியர் வரைந்தனவற்றை ஏற்றுக்கொண்டு சொற்றதாகும். அவர் கூறியன பின்வருமாறு.

' இனி, துறை என முற்கூறினமையின் இது காரியமாக இதற்குக்காரணம் ஆயின எல்லாம் படை இயங்கு அரவம் எனவேபடும். அது இருபெருவேந்தரும் போர் தொடங்குங்கால் பூக்கோள் ஏவி நிரைகோடல் குறித்தோன் படைத் தலைவரைத் தருக என்றலும், அவர் வருதலும், அவர் வந்துழி இன்னது செய்க என்றலும், அவர் வேந்தர்க்கு உரைத்தலும் அவர் படையைக் கூஉய் அறிவித்தலும், படைச்செருக்கும், அதனைக்கண்டோர் கூறலும், அவர் பகைப்புலக்கேட்டிற்கு

இரங்கி வருந்துதலும், நாள் கோடலும், அவர் கொற்றவைக்-குப் பரவுக்கடன் பூண்டலும் பிறவும்ஆம். களவில் செல்வோர்க்கும் அரவம் கூறினர், இவர் பாக்கத்தே தங்கி விரிச்சி பெற்றுப் போதலின். பிறவும் வருவன எல்லாம் இதனுள் அடங்கும்.

இனி, பாக்கத்து விரிச்சிக்குக் காரணமாவன ; பாக்கத்தச்சென்றுழி இருப்பு வகுத்தலும், பண்டத்தொடு வல்சி ஏற்றிச் சென்றோரை விடுத்தலும், விரிச்சி வேண்டா என விலக்கிய வீரக்குறிப்பும், விரிச்சிக்கு வேண்டும் நெல்லும் மலரும் முதலியன தருதலும், பிற நிமித்தப் பகுதிகளும், அவை அறிந்தோர்க்குச் சிறப்புச் செய்தலும் பிறவுமாம். பிறவும் வந்துழிக் காண்க. அரசன் ஏவலால் போந்தோரும், விரிச்சி கேட்டார். இன்ன ஞான்று வினைவாய்க்கும் என்று அறிதற்கு. இனி வேய்க்குக் காரணங்கள் ஆவன வேய் கூறினார்க்குச் சிறப்புச் செய்தல் போல்வன.

இனி, ஏனைய ஒன்று பலவாய்த் துறைப்பாற்படுவன வந்துழிக் காண்க.

இங்ஙனம் புறத்திணைக்குச் சிறுவரவீற்றுதலின் அன்றே,

' பாடல் சான்ற புலனெறி வழக்கம் ' தொல். பொ. 53

என்று அகத்திற்குக் கூறியது.

படைத்தலைவரைக் கூஉய் வருக என்றற்குச் செய்யுள் :

' கடிமனைச் சீறூர் கடுங்கட் கறவை
வடிநவில் வேலான் மறித்தோம்ப லொட்டான்
அடிபுனை தோலின் அரண்சேர்ந்து மள்ளர்
வருகமன் வாயிற் கடை '. தொ. பொ. 58 ந

எனவரும். ஏனையவற்றிற்கும் வந்துழிக் காண்க.

[விளக்கம் பொருந்திய இல்லங்களை உடைய பகைவருடைய சீறூரின்கண் உள்ளார் சிவந்த கண்களை உடைய பசுக்களைத் தொடர்ந்து பாதுகாத்தலைப் பொருத வடித்தல் தொழில் பழகிய வேலினை உடைய வெட்சி மன்னன் தன் அரண்மனை வாயிலுக்குப் படை வீரர்கள் தொடுதோல் அணிந்து ஏனைய பாதுகாவல்களோடு வருமாறு பணித்தான் என்றவாறு.

'வேலான் கறவை ஓம்பல் ஒட்டாது மள்ளர் வாயிற் கடை வருக' என்று ஆணையிட்டமை படைத் தலைவரைக் கூஉய் வருக என்ற செய்தியைச் சுட்டுதல் காண்க]

மருவலர் நிரையினைத் தருக என்றல் :

மண்டும் எரியுள் மரந்தடிந் திட்டற்றுக்
கொண்ட கொடுஞ்சிலையன் கோல்தெரியக் — கண்டே
அடையார் முனைஅலற ஐஇலைவேற் காளை
விடைஆயம் கொள்கென்றான் வேந்து. பு. வெ. 1

[வீரன் வில்லினைக் கொண்டு அம்புகளை ஆராய்தலைக் கண்ட அரசன் 'காளையே! நீ பகைவருடைய பசு நிரைகளைக் கவர்க' என்று ஆணையிட்ட செயல் எரியும் நெருப்பில் விறகினை இட்டாற் போல்வது என்பதாம் காளை! விடை ஆயம் கொள்க என்பது துறைச்செய்தி.]

இதனைத் திணைப்பாட்டு என்பாரும் உளர். (வெண்பாமாலை நூலார்) திணைப்பாட்டாயின் அத்திணைக்கண் கூறும் துறை எல்லாம் அகப்படத்தழீஇவருதல் வேண்டும்; அங்ஙனம் வாராது 'வேந்தன் தண்டத்தலைவரை நிரை கவர்க' என்ற ஒருதொழிலே குறித்து வந்தமையான் துறைப்பாட்டே ஆவது அல்லது திணைப்பாட்டு ஆகாதுஎன மறுக்க. மேல் இங்ஙனம் வருவனவற்றிற்கு எல்லாம் இக் கடாவிடை உய்த்துணர்ந்து கொள்க.

பணிதலைக் கோடல் :

‘ அருஅநிலைச் சாடி ஆடுறு தேறல்
மருஅல் மழைத்தடங் கண்ணி — பொருஅன்
கடுங்கண் மறவன் கழல்புனைந்தான் நாளை
நெடுங்கடைய நேரார் நிரை. பு. வெ. 2

எனவரும். பொருஅன் என்பதற்கு அரசன் ஏவுதலான் பாணித்தல் இலனாகி எனப்பொருள் உரைத்துக் கொள்க. தன்னுறு தொழிலும் உளது என்று கொண்டார், அதற்கும் இப்பாட்டினையே உதாரணமாக்கிப் பொருஅன் என்பதற்குத் தனிசு (கடன) பொருஅன் என்று உரைப்ப.

[கள்விலையாட்டியே! சாடியிலுள்ள அடப்பட்ட தேறலை மறுக்காது வழங்கு. கழல் புனைந்த காளை நிறைகவரச் செல்வதில் காலம் தாழ்த்தான். கள்விலையாக நாளையே பகைவர் ஆநிரைகளை நின் கடைவாயிலில் நிறுத்துவான் என்பதாம்.

வீரன் நிரைகோடற்குச் செல்லக் கழல் புனைந்தான் என்பது துறைச்செய்தி.]

படை இயங்கு அரவம் :

‘ கலவார் முனைமேல்
செலவு அமர்ந் தன்று ’. பு. 2

‘ நெடிபடு கானத்து நீள்வேல் மறவர்
அடிபடுத்து ஆரதர் கொள்வான் — துடிபடுத்து
வெட்சி மலைய விரவார் மணிநிரைக்
கட்சியுள் காரி கலுழ்ம். பு. வெ. வெட். 3

[வீரர்கள் துடியை ஒலித்து வெட்சி சூடிச் சிள்வீடு என்ற வண்டுகள் ஒலிக்கும் காட்டுவழியே சென்று பகைவர் ஆநிரைகளைக் கைப்பற்றுதற்கு ஒருப்பட்ட அளவில், பகைவர்தம் ஆநிரைகள் தங்கிய காட்டில் கரிக்குருவி தீ நிமித்தம் காட்டி அழும் என்பதாம்.

துடிபடுத்து வெட்சிமலைதல் என்பது துறைச்செய்தி' நெடி—சிள்வீடு என்ற வண்டு; அடி—செருப்பு; கட்சி—காடு; காரி—நிமித்தம் காட்டும் ஒரு பறவை.]

விரிச்சி ஓர்த்தல் :

'வேண்டிய பொருளின் விளைவுகன்கு அறிதற்கு
ஈண்டுஇருள் மாலைச் சொல்லோர்த் தன்று'. பு. 3

'எழுஅணி சீறூர் இருள்மாலை முன்றில்
குழுவினம் கைகூப்பி நிற்பத் — தொழுவில்
குடக்கண் ஆ கொண்டுவா என்றாள் குனிவில்
தடக்கையாய் வென்றி தரும். பு. வெ. 4

[யாம் ஊர்ப்புறத்தே கூடி நற்சொல் நயந்து நின்ற அளவில் ஆய்மகள் 'குடம் பால் கறக்கும் பசுவினைக்கொண்டு வா' என்ற நல்வாய்ச் சொல்லே நமக்கு வெற்றி தரும் என்பதாம்.

'தொழுவில் குடக்கண் ஆ கொண்டுவா என்றாள்' என்பது துறைச்செய்தி.]

அரசன் ஏவலால் போந்தோருக்கு விரிச்சி ஓர்த்தல் இயல்வது அன்றேனும் இன்னஞான்று வினைவாய்க்கும் என்று அறிதற்பொருட்டு இயலும் என்பார் 'சமர வாய்ப்பு அறிஇயர் விரிச்சி ஓர்த்தல்' என்றார். [இது நச்சினார்க்கினியர் தரும் விளக்கமாகும்.]

வேண்டா வீரம் :

'நாளும் புள்ளும் கேளா ஊக்கமொடு
எங்கோன் ஏவினன் ஆதலின் யாமத்து
செங்கால் வெட்சியும் தினையும் தூஉய்
மறிக்குரற் குருதி மன்றுதுகள் அவிப்ப

விரிச்சி ஓர்த்தல் வேண்டா
எயிற்புறம் தருதும்யாம் பகைப்புல நிரையே

தகடூர்.

[எம் அரசன் உள்ளமிகுதியால் நல்லநாளும் நல்வாய்ப் புள்ளும் தேராது எம்மைப் பகைவர் ஆநிரை கோடற்குப் பணித்துள்ளான் ஆதலின் யாமத்து இறைவழிபாடியற்றி விரிச்சி கேட்டலும் எமக்குத் தேவையின்று. எம் ஊக்க மிகுதியால் யாம் விரிச்சி ஓராதே சென்று பகைவர் ஆநிரை கவர்ந்து தருவேம் என்பதாம்.

விரிச்சி ஓர்த்தல் வேண்டா என்பது துறைச்செய்தி.]

வழியிடைச் சேறல் :

'வில்லேர் உழவர் வேற்றுப் புலம்முன்னிக்
கல்லேர் கானம் கடந்துசென் றன்று'. பு 4

கூற்றினத் தன்னார் கொடுவில் இடனேந்திப்
பாற்றினம் பின்படர முன்படர்ந்து — ஏற்றினம்
நின்ற நிலைகருதி ஏகினார் நீள்கழைய
குன்றம் கொடுவில் லவர். பு. வெ 5

[கூற்றினத்தை ஒத்த வெட்சிமறவர் பகைவர் ஆநிரை கோடல் கருதிப் பருந்துக் கூட்டம் பின்தொடர நீண்ட மூங்கில்வளரும் காட்டுவழியில் சென்றனர் என்பதாம்.

கொடுவில்லவர் ஏற்றினம் நின்ற நிலைகருதி ஏகினார் என்பது துறைச் செய்தி. பாறு — பருந்து]

ஒற்றின் ஆகிய வேய் :

'பற்றார் தம்முனைப் படுமணி ஆயத்து
ஒற்றுஆ ராய்ந்த வகைஉரைத் தன்று'. பு. 5

நிலையும் நிரையும் நிரைப்புறத்து நின்ற
சிலையும் செருமுனையுள் வைகி — இலைபுனைந்த
கள்அவிழ் கண்ணிக் கழல்வெய்யோய் சென்றறிந்து
நள்ளிருட்கண் வந்தார் நமர். பு. வெ. 6

ஒற்றின் ஆகிய வேய் — ஒற்று வகையான் உணர்த்திய குறளைச் சொல்.

[பகைவர்நிலை, ஆநிரை, நிரைக்காவல் ஆகியவற்றை வெட்சியாரின் ஒற்றர் பகைவர் புலம்சென்று நள்ளிருட்கண் அறிந்து மீண்டனர் என்பதாம்.

நிலையும் நிரையும் சிலையும் நமர் சென்றறிந்து வந்தார் என்பது துறைச் செய்தி.]

வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்திறை :

'நோக்கருங் குறும்பின் நூழையும் வாயிலும்
போக்குஅற வளைஇப் புறத்திறுத் தன்று'. பு. 6

உய்ந்தொழிவார் ஈங்கில்லை ஊழிக்கண் தீயேபோல்
முந்தமருள் ஏற்றூர் முரண்முருங்கத்—தந்தமரின்
ஒற்றினன் ஆய்ந்தாய்ந் துரவோர் குறும்பிணைச்
சுற்றினர் போகாமல் சூழ்ந்து. பு. வெ. 7

வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்திறை — வேய்க்கப் பட்ட இடத்தின் புறத்தினைச் சூழ்தலான் ஆகிய புறத்திறை.

[வெட்சி வீரர் ஆநிரை இருந்த பகுதிகளை ஒற்றரான் அறிந்து எதிர்ப்பாரை அழிக்கும் ஆற்றலோடு சூழ்ந்து கொண்டார் ஆதலின் அவரிடம் பிழைத்துப் போவார் காவலருள் ஒருவரும் இரார் என்பதாம்.

உரவோர் குறும்பிணைச் சூழ்ந்து சுற்றினர் என்பது துறைச்செய்தி.]

முற்றிய ஊர்கொலை :

விரைபரி கடவி வில்லுடை மறவர்
குரைஅழல் நடப்பக் குறும்புஎறிந் தன்று'. பு, 7

இகலே துணையா எரிதவழச் சீறிப்
புகலே அரிதென்னுர் புக்குப் — பகலே
தொலைவிலார் வீழத் தொடுகழல் ஆர்ப்பக்
கொலைவிலார் கொண்டார் குறும்பு. பு. வெ 8

[மாறுபாட்டையே துணையாகக்கொண்டு புகமுடியாத இடங்களிலும் புகுந்து சீறி ஊர்க்காவலர் வெட்டுண்டு வீழ வெட்சி மறவர் சிற்றூரைக் கைப்பற்றினர் என்றவாறு.

தொடுகழலார் கொலைவில்லார் வீழக் குறும்புகொண்டார்என்பது துறைச்செய்தி.]

ஆகோள் :

'வென்று ஆர்த்து விறல் மறவர்
கன்றோடும் ஆதழீஇ யன்று. பு 8

கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தால்
நெடுவரை நீள்வேய் நரலும் — நடுவூர்க்
கணநிரை கைக்கொண்டு கைஅகலார் நின்ற
நிணம்நிரை வேலார் நிலை. பு வெ 9

[மலையிடத்து மூங்கில் ஒலிக்கும் ஊர்நடுவே பசுக்களைக் கைக்கொண்டு வேலை ஏந்திய வெட்சி வீரர் நின்றநிலை புலிகள் கூட்டமாகக் கூடிநின்ற நிலையை ஒக்கும் என்றவாறு.

நடுவூர்க் கணம் நிரை கைக்கொண்டு வேலார் நின்றார் என்பது துறைச்செய்தி.]

பூசல் மாற்று :

'கணம் பிறங்கக் கைக் கொண்டார்
பிணம் பிறங்கப் பெயர்த்திட்டன்று'. பு. 9

சூழ்ந்த நிரைபெயரச் சுற்றித் தலைக்கொண்டார்
வீழ்ந்தனர் வீழ்ந்தார் விடக்குணியத் — தாழ்ந்த
குலவுக் கொடுஞ்சிலைக்கைக் கூற்றனையார் எய்த
புலவுக் கணைவழிபோய்ப் புள். பு. வெ. 10

[வெட்சிவீரர் ஆநிரையைச் சூழ்ந்தாராக, நிரை மீட்க வந்து பொருது உயிர்நீத்த ஊர்க்காவலர் பிணத்தை உண்ண, வெட்சியார் அம்புசென்ற வழியே பருந்து கழுகு முதலிய பறவைகள் வந்து கூடின என்றவாறு.

சூழ்ந்த நிரைபெயரச் சுற்றித் தலைக்கொண்டார் வீழ்ந்தனர் என்பது துறைச்செய்தி]

நோய் இன்று உய்த்தல்:

‘ அருஞ்சுரத்தும் அகன்கானகத்தும்
வருந்தாமல் நிரைஉய்த்தன்று ’. பு. 10

புல்மேய்ந்து அசைஇப் புணர்ந்துடன் செல்கென்னும்
வில்மேல் அசைஇயகை வெல்கழலான் — தன்மேல்
கடுவரை நீரில் கடுத்து வரக்கண்டும்
நெடுவரை நீழல் நிரை. பு. வெ. 11

[ஆமீட்க வருவோர் மலையருவிபோல விரைவாகத் தம்மை நோக்கி வரவும் பசுக்களைக் கைப்பற்றிய வெட்சிவீரர் தலைவன் மலையில் புல்மேய்ந்து பசுக்கள் நிழலில்தங்கி ஓய்வுஎடுத்துக் கூட்டமாகச் செல்க என விடுத்திருந்தான் என்றவாறு.

நிரை புல்மேய்ந்து அசைஇப் புணர்ந்து உடன்செல்க என்பது துறைச் செய்தி.]

நுவல்வழித் தோற்றம்:

‘ உரவெய்யோன் இனம்தழீஇ
வரவுஉணர்ந்து கிளைமகிழ்ந்தன்று ’. பு. 11

மொய்அணல் ஆநிரை முன்செல்லப் பின்செல்லும்
மைஅணல் காளை மகிழ்துடி — கைஅணல்
வைத்த எயிற்றியர் வாட்கண் இடனுட
உய்த்தன்று உவகை ஒருங்கு. பு. வெ. 12

நுவல்வழித் தோற்றம் — தமர் கவன்று உரைத்தனர்; அவர் மகிழ்தற்குக் காரணமாகிய தோற்றரவு.

[செறிந்த அலைதாடியை உடைய பசுக்கூட்டம் முன்னே செல்லப் பின்னே மயிரால் கறுத்த கபோலத்தை உடைய வீரன் மகிழ்ந்து கொட்டும் துடி, கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு கவலைப்பட்டுக் கொண்டிருந்த மகளிருக்கு நன்னிமித்தமாக இடக்கண் ஆட மகிழ்ச்சியைத்தந்தது என்றவாறு.

ஆநிரை முன்செல்லக் காளை துடிகொட்டிப் பின் செல்லும் என்பது துறைச் செய்தி.]

தந்து நிறை :

'வார்வலந்த துடிவிம்ம
ஊர்புகல நிரைஉய்த்தன்று'. பு. 12

தண்டா விருப்பினள் தன்னை தலைமலைந்த
வண்டார் கமழ்கண்ணி வாழ்கென்று — கண்டாள்
அணிநிரை வாள்முறுவல் அபமா எயிற்றி
மணிநிரை மல்கிய மன்று. பு. வெ. 13

[தலைவி தன் கணவன் கண்ணி வாழ்க என்று வாழ்த்தி ஊர் மன்றத்தில் கொண்டு நிறுத்தப்பட்ட பகைவர் ஆநிரையைக் கண்டாள் என்றவாறு.

மன்று மணி நிரை மல்கிய என்பது துறைச் செய்தி.]

பாதீடு :

'கவர்கணை சுற்றம் கவர்ந்த கணநிரை
அவரவர் வினைவயின் அறிந்து ஈந்தன்று'. பு. 13

ஒள்வாள் மலைந்தார்க்கும் ஒற்றுய்ந்து உரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் — விள்வாரை
மாறட்ட வென்றி மறவர்தம் சீறூரில்
கூறிட்டார் கொண்ட நிரை. பு. வெ. 14

ஈத்தலும் ஈதலும் போலப் பாத்தலும் பாதலும் ஒன்றுதலின் பாதீடு ஆயிற்று.

[வாள் வீரருக்கும் ஒற்றருக்கும் நிமித்தம் கூறியவருக்கும் பகைவர் ஊரிலிருந்து வெட்சிவீரர் கைப்பற்றிய ஆநிரைகளை அரசன் ஆணையைப் பெற்றுப் பகிர்ந்து கொடுத்தார்கள் என்றவாறு.

வென்றி மறவர் கொண்டநிரை கூறு இட்டார் என்பது துறைச்செய்தி.]

உண்டாட்டு :

'தோட்டு இமிழும் கழல் மறவர்
மட்டு உண்டு மகிழ் தூங்கின்று பு. 14

இளிகொண்ட தீஞ்சொல் இளமா எயிற்றி
களிகொண்ட நோக்கம் கவற்றத் — தெளிகொண்ட
வெங்கள் மலிய விளிவதுகொல் வேற்றூர்மேல்
செங்கண் மறவர் சினம். பு. வெ. 15

[பண்ணை ஒத்த குரலைஉடைய தம் உரிமை மகளிர் களிக்கும் நோக்கம் தம் நெஞ்சத்தைக் காமத்தால் வருத்துதலாலும், பகைவரிடம் வீரர்கொண்டசினம், தெளிந்த நாட்படு தேறல் குடித்ததனாலும் நீங்கும் போலும் என்றவாறு. கள்ளும் காமமும் கலந்தே இவர் சினத்தை மாற்றும் என்பது.

தெளிகொண்ட வெங்கள் மலியச் சினம் விளியும் என்பது துறைச்செய்தி.]

உறுகொடை :

'ஈண்டியநிரை ஒழிவின்றி
வேண்டியோர்க்கு விரும்பிவீசின்று'. பு. 15

அங்கண் கிணையன் துடியன் விறலிபாண்
வெங்கட்கு வீசும் விலையாகும் — செங்கண்
செருச்சிலையா மன்னர் செருமுனைமேல் சீறி
வரிச்சிலையால் தந்த வளம். பு. வெ. 16

[செங்கண்ணராய்ப் போருக்குப் பின்னிடாத பகைவரை எதிர்த்து வில் வலிமையால் கைப்பற்றிய ஆநிரையைக் கள் விலைக்குச் சிறிது வழங்கிப் பின் கிணையன் துடியன் விறலி பாணன் இவர்களுக்குக் கொடையாக வழங்கினர்.

தந்தவளம் கிணையன் துடியன் விறலிபாண் விலை ஆகும் என்பது துறைச்செய்தி]

புலன் அறி சிறப்பு :

'வெம்முனைநிலை உணர்த்தி யோர்க்குத்
தம்மினும் மிகச் சிறப்பு ஈந்தன்று. பு. 16

இறுமுறை எண்ணது இரவும் பகலும்
செறுமுனையுள் சென்றறிந்து வந்தார்—பெறுமுறையின்
அட்டுக் கனலும் அயில்வேலோய் ஒன்றிரண்டு
இட்டுக் கொடுத்தல் இயல்பு. பு. வெ. 17

புலனறி சிறப்பு—வெம்முனை நிலை உணர்த்தியோர்க்குத் தம்மினும் மிக்க சிறப்புச் செய்தல்.

[உயிரையும் பொருட்படுத்தாது இரவும் பகலுமாகப் பகைவரிடத்துத் தங்கி ஒற்றி வந்தவருக்குச் சில பசுக்களை மற்றவரினும் மிகுதியாக வழங்குதல் மரபாகும் என்றவாறு.

செருமுனையுள் சென்றறிந்து வந்தார்க்கு ஒன்று இரண்டு இட்டுக் கொடுத்தல் இயல்பு என்பது துறைச்செய்தி.]

பிள்ளை வழக்கு :

'பொய்யாது புள்மொழிந்தார்க்கு
வையாது வழக்குரைத்தன்று'. பு. 17

புல்லார் நிரைகருதி யாம்செல்லப் புள்நலம்
பல்லார் அறியப் பகர்ந்தார்க்குச் — சொல்லால்
கடன்சுட்ட வேண்டா கடுஞ்சுரை ஆ நான்கு
குடம்சுட்டு இனத்தால் கொடு. பு. வெ. 18

பிள்ளை வழக்கு — கரும்பிள்ளை நிமித்தம் கூறியார்க்கு **விதந்து கொடுத்தல்.**

[பகைவர் நிரைமேற் செல்ல நன்னிமித்தம் கூறியவருக்கு வார்த்தை அளவில் நன்றி பாராட்டுதலோடு குடம் பால் கறக்கும் பசுக்களை ஒவ்வொருவருக்கும் நன்ஞுன்காகக் கொடு என்றவாறு.

புள்நலம் பகர்ந்தார்க்குக் கடுஞ்சுரை ஆ நான்கு கொடு என்பது துறைச்செய்தி.]

பெருந்துடி நிலை :

'தோகெழல் மறவர் தோல்துடி மரபின்
படுகண் இமிழ்துடிப் பண்புஉரைத் தன்று'. பு. 18

முந்தை முதல்வர் துடியர் இவன்முதல்வர்
எந்தைக்குத் தந்தை இவன்எனக்கு — வந்த
குடியொடு கோடா மரபினோர்க்கு இன்னும்
வடியுறு தீந்தேறல் வாக்கு. பு. வெ. 19

[பரம்பரை பரம்பரையாக எங்களுக்குத் துடி கொட்டி வரும் இவனுக்கு இன்னும் இனிய கள்ளினை வழங்குக என்றவாறு.

'குடியொடு கோடா மரபினோற்குத் தேறல் இன்னும் வாக்கு' என்பது துறைச் செய்தி.]

கொற்றவை நிலை :

‘ ஒளியின் நீங்கா விறற் படையோள்
அளியின் நீங்கா அருள்உரைத் தன்று ’. பு. 19

ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை — மீளி
அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார்
முரண்முருங்கத் தான்முந்து உறும். பு. வெ 20

[சிங்கக் கொடி, கிளி, கலை ஊர்தி, கூளிப் படை இவற்றை உடைய கொற்றவை, வீரர் பகைவர் ஆநிரை கவரச் செல்லின் பகைவர் மாறுபாடு கெடுமாறு தான் முந்திச் சென்று வெற்றி அளிப்பாள் என்றவாறு.

கொற்றவைதான் முந்துறும் என்பது துறைச்செய்தி.

‘ மறங்கடை கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே ’.
தொ. பொ. 59

சிலப்பதிகார வேட்டுவ வரியினை நோக்குக.]

வெறியாட்டு :

‘ வாலிழையோர் வினைமுடிய
வேலனொடு வெறியாடின்று ’.

காணில் அரனும் களிக்கும் கழல்மறவர்
பூண்இலங்கு மென்முலைப் போதரிக்கண் —வாள்நுதல்
தான்முருகு மெய்ந்நிறீஇத் தாமம் புறந்திளைப்ப
வேல்முருகற்கு ஆடும் வெறி. பு. வெ 21

முருகு — நறு நாற்றம்.

[வாள்நுதலினுள் நறு நாற்றம் கமழ மெய்யில் கலவை பூசி மாலை முதுகுப்புறமும் அலைய முருகக் கடவுளுக்கு ஆடும்

வெறியாட்டினைக் காணின் கூத்தப்பிரானாகிய சிவபெருமானும் களிப்படைவான் என்றவாறு.

வாள்நுதல் வேல்முருகற்கு வெறி ஆடும் என்பது துறைச்செய்தி.]

வெட்சியின் முதற் கூறு முற்றும் 5

ஒத்த நூற்பாக்கள்

'வெட்சி தானே,
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே.
தொல். பொ. 59

'படைஇயங்கு அரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்திறை முற்றிய
ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்
தந்துநிரை பாதீடு உண்டாட்டுக் கொடையென
வந்த ஈரேழ் வகையிற்று ஆகும்'. ,, 61

'வெட்சி வெட்சிஅரவம் விரிச்சி செலவு
வேயே புறத்திறை ஊர்கொலை ஆகோள்
பூசல் மாற்றே புகழ்சுரத்து உய்த்தல்
தலைத்தோற் றம்மே தந்துநிறை பாதீடு
உண்டாட்டு உயர்கொடை புலன்அறி சிறப்பே
பிள்ளை வழக்கே பெருந்துடி நிலையே
கொற்றவை நிலையே வெறியாட்டு உளப்பட
எட்டிரண்டு ஏனை நான்கொடு தொகைஇ
வெட்சியும் வெட்சித் துறையும் ஆகும்.' பு. வெ. 1

'ஒருப்பாடு நற்சொற் செலவொற் றுரைப்புப் புகல்பொருதல்
வீருப்பா நிரைகொண் டவரைத் தடுத்தல் நெறிசெலுத்தல்
செருப்பாடு கைப்படை காத்தூர் புகல்திறங் கூறிடுதல்
பருப்பாடு பாலாற் களித்தல்வெட் சித்திறம் பால்மொழியே.'
வீர. சோ. 99

வெட்சியின் இரண்டாம் பகுதித்துறைகள்

604 நிரைகோள் கேட்டுக் குரைகழல் அரசன்
விரைசெலல் மறவரை மீட்கஎனப் பணித்தல்[1]
படைஇயங்கு அரவம்[2] பறவாப்புள் தெரிதல்[3]
நடைவயின் சேறல்[4] நன்குஉணர் உசாஅ[5]
புறத்திறை[6] அதனொடு திறப்படப் பொருதல்[7]
புண்ணொடு வருதல்[8] போர்க்களத்து ஒழிதல்[9]
ஆள்எறி பிள்ளை[10] பிள்ளைத் தெளிவு[11]
பிள்ளை யாட்டொடு[12] கையறு நிலையே[13]
நெடுமொழி கூறல்[14] பிள்ளைப் பெயர்ச்சி[15]
வேத்தியல் மலிபொடு[16] மிகுகுடி நிலையே[17]
ஆபெயர்த்துத் தருதலொடு[18] அருஞ்சமர் விலக்கல்[19]
நலிவின்று உய்த்தல்[20] நண்ணுவழித் தோற்றம்[21]
நிறைத்தல்[22] பாதீடு[23] உண்டாட்டுக்[24] கொடையொடு[25]
துடிநிலை[26] கொற்றவை நிலை[27] அவை இரண்டும்
கூட்டுதல் உறுத்தல் மீட்டனர் கோடல்
எழுதலைப் பெய்த இருபதிற்று உடைத்தே.

இது முற்கூறிய வெட்சிப்பகுதி இரண்டனுள் பின்னையது இத்துணைத் துறை உடைத்து என்கின்றது.

(இ-ள்) நிறைகோள் கேட்ட குரைகழல் அரசன் விரை செலல் மறவரை மீட்க எனப்பணித்தல் முதலியவற்றோடு துடி நிலையும் கொற்றவை நிலையும் ஆகிய அவ்விரண்டனையும் கூட்டி எண்ணுதலால் மீட்டனர் கோடல் இருபத்தேழு துறையினை உடைத்தாம் என்றவாறு.

1 மீட்கஎனப் பணித்தல் :

பசுக்கூட்டங்கள் கவரப்பட்டதைக் கேட்ட ஒலிக்கின்ற வீரக் கழலை உடைய அரசன் விரைந்து செல்லும் ஆற்றலை உடைய கரந்தை வீரர்களைக் கூஉய்ப் பசுநிரைகளை மீட்டு வருமாறு கூறுதல்.

2 **படை இயங்கு அரவம் :**

கரந்தை வீரர் தம் படைகள் இயங்குங்கால் ஏற்படும் ஆரவாரம்.

3 **பறவாப்புள் தெரிதல் :**

கரந்தை வீரர்கள் நல்வாய்ப்புள் கேட்டல்.

4 **நடைவயின் சேறல் :**

ஆநிரைகள் சென்ற சுவட்டை அடியொற்றிக் கரந்தை வீரர்கள் விரைந்து செல்லுதல்.

5 **நன்கு உணர் உசா :**

ஆநிரையின் சுவட்டினை அடிஒற்றிச் சேரும் வாய்ப்புக் கிட்டியமையின் விரைவில் அவற்றை மீட்கலாம் என்று உணர்ந்து தமக்குள் கூறுதல்.

6 **புறத்து இறை :**

கவரப்பட்ட ஆநிரைகள் கொண்டு செல்லப்பட்ட இடம் நோக்கிச் சென்று கரந்தை வீரர்கள் அவற்றைச் சூழ்ந்து தங்குதல்.

7 **திறப்படப் பொருதல் :**

பசுக்கூட்டங்கள் தம் பக்கல் மீண்டு அடையுமாறு கரந்தை வீரர்கள் வெட்சி மறவரோடு போரிடுதல்.

8 **புண்ணொடு வருதல் :**

வெட்சி மறவரை வென்று பசு நிரையை மீட்ட வீரன் ஒருவன் புண்ணோடு வெற்றி வீரனாக மீளுதல்.

9 **போர்க்களத்து ஒழிதல் :**

வெட்சி வீரரை எதிர்த்த கரந்தை வீரன் போர்க்களத்தில் விழுப்புண்பட்டு இறத்தல்.

10 ஆள்எறி பிள்ளை :

தான் ஒருவனேயாகி நின்று கரந்தை வீரன் ஒருவன் வெட்சி வீரர்களை எதிர்த்தல்.

11 பிள்ளைத் தெளிவு :

கரந்தை வீரன் தான்பட்ட விழுப்புண்கண்டு மகிழ்ந்து துடி முழங்க விரும்பிக் கூத்தாடுதல்.

12 பிள்ளையாட்டு :

கரந்தை மறவன் வெட்சிமறவரைக் கொன்று அவர்கள் குடர்களைத் தன் வேலுக்கு மாலையாகச் சூட்டி விரும்பிக் கூத்தாடுதல்.

13 கையறுநிலை :

வாட்போரில் இறந்தோரைக் கண்டு பாணர் முதலியோர் விளரிப்பண் பாடுதல்.

14 நெடுமொழி கூறல் :

கரந்தை வீரன் தன் மன்னனிடம் தன் மேம்பாட்டை எடுத்துக் கூறுதல்.

15 பிள்ளைப் பெயர்ச்சி :

தீய நிமித்தங்களையும் மனங்கொள்ளாது பகைவரை எதிர்த்து வென்ற வீரனுக்கு அரசன் தண்ணளி செய்தல்.

16 வேத்தியல் மரபு :

தோள் வலிமிக்க மறமன்னனை வாள் வீரர் புகழ்ந்து கூறுதல்.

17 குடிநிலை :

இவ்வுலகில் பழைமையும் வீரமும் செறிந்த மறக்குடியின் மாண்பினைக் கூறல்.

18 ஆபெயர்த்துத் தருதல் :

வெட்சியார் கைப்பற்றிய ஆநிரைகளைக் கரந்தை வீரர் மீட்டுத் தருதல்.

19 அருஞ்சமர் விலக்கல் :

ஆ மீட்குங்காலைத் தம்மை எதிர்த்த வெட்சிமறவர்தம் போரினை நீக்குதல்.

20 நலிவின்று உய்த்தல் :

தாம் மீண்டும் கைக்கொண்ட ஆ நிரைகளைக் கரந்தை வீரர் ஏதம் ஏதும்இன்றித் தாம் மீட்டுச் செல்லுதல்.

21 கண்ணுவழித் தோற்றம் :

ஆ நிரைகள் வந்துசேர வேண்டிய இடத்து அவை அழைத்து வரப்படுதல்.

22 நிறைத்தல் :

கரந்தை வீரர்கள் பசுக் கூட்டங்களைத் தம் ஊர் அகவயின் கொண்டு நிறைத்தல்.

23 பாதீடு :

கரந்தை வீரர்கள் தாம்மீட்ட பசு நிரைகளை உரியாருக்குப் பகிர்ந்து கொடுத்தல்.

24 உண்டாட்டு :

தாம் ஆ நிரைகளை மீட்ட மகிழ்ச்சி குறித்துக் கரந்தை வீரர் கள்ளுண்டு மகிழ்தல்.

25 கோடை :

மகிழ்ச்சிக்கு அறிகுறியாகப் பாணர் முதலியோருக்குப் பரிசில் வழங்குதல்.

26 துடிநிலை :

மகிழ்ச்சியைத் துடிகொட்டி வெளிப்படுத்தல்.

27 கொற்றவை நிலை :

தங்களுக்கு நிரைமீட்டற்கண் வெற்றி வழங்கிய கொற்றவையைப் பரவுதல்.

இவ்விருபத்தேழு துறைகளும் வெட்சியின் இரண்டாங் கூறுகிய கரந்தைப் பாலன.

மீட்க எனப் பணித்தல் :

அழுங்கல் நீர் வையகத்து ஆருயிரைக் கூற்றம்
விழுங்கியபின் வீடுகொண் டற்றால் — செழுங்குடிகள்
தாரார் கரந்தை தலைமலைந்து தாம்கோடல்
நேரார்கைக் கொண்ட நிரை. பு. க. 1

செழுங்குடிகள் தாரார் கரந்தை தலைமலைந்து நேரார் கைக்கொண்ட நிரை தாம்கோடல் அழுங்கல் நீர் வையத்து ஆருயிரைக் கூற்றம் விழுங்கியபின் வீடு கொண்டாற்போல அரிதாகலான், விரைந்து மீட்பாராக என்பது குறிப்பெச்சமாகப் பொருளுரைத்துக் கொள்க.

[கூற்றம் விழுங்கிய உயிரை மீட்பது போலக் கரந்தை சூடி வீரர் நேரார் கைக்கொண்ட நிரையை நிகழா நிகழ்ச்சியை உண்டாக்கி அரிதின் மீட்பாராக என்பதாம்.

நேரார் கைக்கொண்ட நிரையைக் கரந்தை தலைமலைந்து சென்று மீட்க என்பது துறைப்பொருள்.]

படை இயங்கு அரவம் :

'நிரைகோள் கேட்டுச் செய்தொழில் ஒழிய
விரைவனர் குழூஉம் வகைஉரைத் தன்று'. பு. 2

காலார் கழலார் கடுஞ்சிலையார் கைக்கொண்ட
வேலார் வெருவந்த தோற்றத்தார்—காலன்
கிளர்ந்தாலும் போல்வார் கிணைப்பூசல் கேட்டே
உளர்ந்தார் நிரைப்பெயர்வும் உண்டு. பு. க. 2

[கழல் அணிந்து சிலைபூண்டு வேல்கைக்கொண்டு கரந்தை சூடிய மறவர் அஞ்சத்தக்க தோற்றத்தால் போருக்குப் புறப்பட்ட காலன் போன்றார் ஆதலின் கிணை ஓசை கேட்டு அவர் புறப்பட்டதனால் நிரை தவறாது மீட்கப்படும் என்றவாறு.

வேலார் கிணைப்பூசல் கேட்டு உளர்ந்தார் என்பது துறைச்செய்தி.]

பறவாப்புள் தெரிதல் :

வந்தநீர் காண்மினென்று ஆபெயர்ப்போர் மாட்டிசைத்த
பைந்தொடியார் கூறும் பறவாப்புள் — உய்ந்த
நிரையளவைத் தன்றியும் நீர்சூழ் கிடக்கை
வரையளவைத் தாவதாம் மண். தொ. பொ. 58. ந.

பறவாப்புள் — வெளிப்படை.

['இங்கு வந்த நீர் பசுக்களைக் காணுங்கள்' என்று பெண்கள் கூறிய நல்வாய்ப்புள்ளைப் பசுநிரை மீட்போர் கேட்டனர். அந்நல்வாய்ப்புள் இப்பசு நிரையினை மீட்டலே அன்றி உலகத்துப் பலநாடுகளையும் கைப்பற்றும் வாய்ப்பினை நல்கும் என்றவாறு.

'வந்தநீர் காண்மின் என்றிசைத்த பறவாப்புள்' துறைச்செய்தி.

பறக்கும் புள் —பறவை. பறவாப்புள் — சகுனச்செய்தி.]

நடைவயின் சேறல் :

ஆற்றார் ஒழியக் கூற்றெனச் சினைஇப்
போற்றார் போகிய நெறியிடை ஏகின்ற'. பு. க. 3

சங்கும் கருங்கோடும் தாழ்பீலிப் பல்லியமும்
எங்கும் பறையோடு எழுந்தார்ப்ப — வெங்கல்
அழற்சுரம் தாம்படர்ந்தார் ஆன்சுவட்டின் மேலே
நிழற்கதிர்வேல் மின்ன நிரைத்து. பு. க. 3

[சங்கும் கொம்பும் இயமும் பறையும் ஒலிப்ப வேல் மின்ன ஆன் சுவட்டினை நோக்கிக் கொடிய பாலைவழியே கரந்தை சூடிய வீரர் சென்றனர் என்றவாறு.

ஆன் சுவட்டின் மேலே அழற்சுரம் தாம்படர்ந்தார் என்பது துறைச்செய்தி.]

நன்கு உணர் உசா :

நெடுநிலை ஆயத்து நிரைசுவடு ஒற்றிப்
படுமணி ஆயம் பகர்ந்தோய் — நெடிது
மனக்குரிய காதல் வயவேந்தன் என்றும்
நினக்குரிய வாக நிரை. தகடூர்

['வயவேந்தனுடைய பசுக்கூட்டங்களின் அடிச்சுவடு ஒற்றிச் சென்று அவற்றை விளிக்கும் வீரனே! எந்நாளும் உங்கள் பசுக்கூட்டங்கள் உன் வயத்தன ஆகுக' என்று சான்றோர் ஆசி வழங்கினர் என்றவாறு.

' சுவடு ஒற்றி, ஆயம் பகர்ந்தோய்! என்றும் நிரை நினக்கு உரியவாக' என்பது துறைச் செய்தி.]

புறத்திறை

இருநில மருங்கின் எப்பிறப் பாயினும்
மருவின் மாலையோ இனிதே, இரவின்
ஆகோள் மன்னரும் அருள்வரக் கானத்து
நாம்புறத்து இறுத்தனம் ஆகத் தாம்தம
கன்றுகுரல் கேட்டன போல,
நின்றுசெவி ஏற்றன; சென்றுபடு நிறையே. தகடூர்.

[இவ்வுலகில் எல்லா உயிர்களுக்கும் பழகினவர்களைக் கூடுதற்குரிய மாலை நேரம் இனிது. இரவில் பசுக்களைக் கவர்ந்த வெட்சி மன்னரும், அருளால் வாளா இருக்குமாறு, கரந்தை சூடிய வீரர் ஆநிரையைப் பின் தொடர்ந்து தம் ஆநிரைகளை விளித்தாராக, ஆநிரைகள் தம் கன்றுகளின் குரல்களைக் கேட்டன போலச் செவி சாய்த்துக் கேட்டு நின்றன என்றவாறு.

நாம் புறத்து இறுக்க நிரை நின்று செவி ஏற்றன என்பது துறைச்செய்தி.]

திறப்படப் பொருதல் :

‘ வெட்சி யாரைக் கண்ணுற்று வளைஇ
உட்குவரத் தாக்கி உளர்செருப் புரிந்தன்று’. பு. க. 4

புலிக்கணமும் சீயமும் போர்க்களிறும் போல்வார்
வலிச்சினமும் மானமும் தேசும் — ஒலிக்கும்
அருமுனை வெஞ்சுரத்து ஆன்பூசற்கு ஓடிச்
செருமலைந்தார் சீற்றம் சிறந்து. பு. க. 4

[சினத்தால் புலியினையும் மானத்தால் சீயத்தினையும் பெருமையால் பொரு களிற்றையும் போல்வாராகிய ஆ மீட்-கும் வீரர் சுரத்தே ஆநிரையை அடிஒற்றிச் சென்று சினம் சிறந்து வெட்சியாரோடு பொருதனர் என்றவாறு.

புலியும் சீயமும் களிறும் போல்வார் ஆன்பூசற்கு ஓடிச் சினந்து செருமலைந்தார் என்பது துறைச்செய்தி.]

புண்ணொடு வருதல் :

‘ மண்ணொடு புகழ்நிறீஇப்
புண்ணொடு தான்வந்தன்று’. பு க. 5

வெங்குருதி மல்க விழுப்புண் உகுதோறும்
இங்குலிகம் சோரும் வரைஏய்க்கும் — பைங்கண்

இனம்போக்கி நின்றார் இகல்வாட்டி வேந்தன்
மனம்போல வந்த மகன், பு. க. 5

[வெட்சியாரை வென்று துரத்தி அரசன் விரும்பியவாறு ஆநிரைகளை மீட்ட வீரன் தன்விழுப்புண்கள் வழியே வடியும் குருதியால் சாதிலிங்கம் சொரியும் மலையை நிகர்த்தான் என்றவாறு.

பைங்கண் இனம்போக்கி வந்த மகன் விழுப்புண்ணால் இங்குலிகம் சோரும் மலையை ஒப்பான் என்பது துறைச் செய்தி.]

போர்க்களத்து ஒழிதல் :

'படைக்கு ஓடா விறல்மறவரைக்
கடைக்கொண்டு களத்து ஒழிந்தன்று'. பு க. 6

உரைப்பின் அதுவியப்போ ஒன்னார் கைக்கொண்ட
நிரைப்பின் நெடுந்தகை சென்றான் — புரைப்பின்று
உளப்பட்ட வாயெல்லாம் ஒள்வாள் கவரக்
களப்பட்டான் தோன்றான் கரந்து. பு. க. 6

[பகைவர் கைக்கொண்ட நிரைப்பின் சென்ற கரந்தை சூடிய வீரன் தன் மார்பு தோள் முதலிய உறுப்புக்கள் முழுதும் வாட்புண், ஆழ வடிவு இழந்து போர்க்களத்திலேயே பட்டான் என்றவாறு.

நெடுந்தகை வாள் கவரக் களப்பட்டான் என்பது துறைச்செய்தி]

ஆளெறி பிள்ளை :

'வருவாரை எதிர் விலக்கி
ஒருதானாகி ஆளெறிந் தன்று. பு. க. 7

பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க ஆளெறிந்து
கொள்ளைகொள் ஆயம் தலைக்கொண்டா — எள்ளிப்

பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளான்
ஒருதனியே நின்ருன் உளன். பு. க. 7

ஆள் எறி பிள்ளை — ஆளை எறியும் பிள்ளைத் தன்மையன்.

[இழந்த ஆ நிரையை அணுகிய கரந்தை சூடிய வீரர் வெட்சியாரோடு பொருது அழிந்து திரும்பவும் வீரன் ஒருவன் தோற்றோடும் தமரை இகழ்ந்து தான் ஒருவனே தமியனாய் நின்றானும் உளன் என்றவாறு.

தமர் பொருது அழிந்து மீளவும் பூங்கழலான் மீளான் ஆள் எறிந்து ஒருதனியே நின்ருன் என்பது துறைச்செய்தி]

பிள்ளைத் தெளிவு :

' கண்மகிழ்ந்து துடிவிம்மப்
புண்மகிழ்ந்து புகன்றாடின்று '. பு. க. 8

மேவார் உயிர்உணங்க மேல்முடித்த பிள்ளையன்
பூவாள் உறைகழியாப் போர்க்களத்துள் — ஓவான்
துடிஇரட்டி வீம்மத் தொடுகழார் முன்நின்று
அடியிரட்டித்து இட்டாடும் ஆட்டு. பு. க. 8

இது கவந்தம் ஆடியது.

[பகைவரை அழித்த கரந்தை வீரன் வீரர்முன் துடி ஒலிப்ப வாளோடு விரும்பிக் கூத்தாடினான் என்றவாறு.

பிள்ளையன் வாள்உறை கழியாத் துடி வீம்ம ஆட்டு ஓவான் என்பது துறைச்செய்தி.

வீரன் இறந்துபடத் தலைநீங்கிய அவன் குறை உடலம் துடிஒலிக்கு ஏற்பக் கைவாளுடன் ஆடும் என்பது இவ்வாசிரியர் கருத்து.

மேல் முடித்த — கடமையைச் செய்து இறந்த என்பது இதற்குப் பொருளாகக் கொள்க.]

பிள்ளையாட்டு :

‘ கூடலர்குடர் மாலைசூட்டி
வேல்திரித்து விரும்பியாடின்று ’. பு. க. 9

மாட்டிய பிள்ளை மறவர் நிறந்திறந்து
கூட்டிய எஃகம் குடர்மாலை — சூட்டியபின்
மாறுஇரியச் சிறு நுடங்குவான் கைக்கொண்ட
வேல்திரிய விம்மும் துடி. பு. க. 9

[பகைவரை அழித்து அவர் குடர்சூடி அவர்அஞ்சிஓட வேல்திரித்து வீரன் ஆடத் துடிகள் ஒலிக்கும் என்றவாறு.

மாட்டிய பிள்ளை குடர்மாலை சூடி வேல் திரிய நுடங்கத் துடி விம்மும் என்பது துறைச்செய்தி.]

கையறு நிலை :

‘ வெருவரும் வாளமர் விளிந்தோற் கண்டு
கருவி மாக்கள் கையறவு உரைத்தன்று’. பு. க. 10

நாப்புலவர் சொல்மாலை நண்ணார் படைஉழக்கித்
தாப்புலி ஒப்பத் தலைக்கொண்டான் — பூப்புனையும்
நற்குலத்துள் தோன்றிய நல்லிசையாழ்த் தொல்புலவீர்
கல்கொலோ சோர்ந்திலாம் கண். பு. க. 10

[வீரன் பகைவர் படையை உழக்கிப் புலிபோல இறந்து கிடத்தலைக் கண்டும் யாழ்ப்பாணராகிய நம் கண்கள் ஒளி இழக்கவில்லையே என்று பாணர் வருந்தியவாறு.

புலி ஒப்பத் தலைக்கொண்டானைக் கண்டும் எம் கண் சோர்ந்தில—என்பது துறைச்செய்தி.]

நெடுமொழி கூறல் :

‘ மன்மேம் பட்ட மதிக்குடை யோற்குத்
தன்மேம் பாடு தான்எடுத்து உரைத்தன்று’. பு. க. 11

ஆள்அமர் வெள்ளம் பெருகின் அதுவிலக்கி
வாளொடு வைகுவேன் யானாக — நாளும்
கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோய் ஈயப்
பிழிமது உண்பார் பிறர். பு. க. 11

['அரசே! நின் பக்கலிருந்து பிறர்கள் உண்டு களித்திடுக. நான் பகைவர் வெள்ளம்வரின் அதனை விலக்கி வாளோடு போர்க்களத்துத் தங்குவேன்' என்று வீரன் தன் மேம்பாட்டை அரசனிடம் சொற்றவாறு.

'பிறர் பிழி உண்பார்; யான் ஆள்வெள்ளம் விலக்கி வாளொடு வைகுவேன்' என்பது துறைச்செய்தி.]

பிள்ளைப் பெயர்ச்சி :

'போர்தாங்கிப் புள்விலங்கியோனைத்
தார்வேந்தன் தலையளித்தன்று'. பு. க. 12

பிணங்கமருள் பிள்ளை பெயர்ப்பப் பெயராது
அணங்கஞர் செய்து ஆளெறிதல் நோக்கி — வணங்காச்
சிலைஅளித்த தோளான் சினவிடலைக்கு அன்றே
தலைஅளித்தான் தண்ணடையும் தந்து. பு. க. 12
பிள்ளை — காரிப்பிள்ளை.

[போரிடைக் கரிக்குருவி தீநிமித்தம் கூறவும் அதனைப் பொருட்படுத்தாது பகைவர் துயர்உற வெட்டி வீழ்த்திய வீரனுக்கு அரசன் மருதநிலம் வழங்கிச் சிறப்புச் செய்தான் என்றவாறு.

பிள்ளை பெயர்ப்பப் பெயராது சினவிடலை ஆள் எறிதல் நோக்கி அரசன் தலையளித்தான் என்பது துறைச்செய்தி.]

வேத்தியல்மலிபு :

'தோள்வலிய வயவேந்தனை
வாள்வலிவயவர் சிறப்புரைத்தன்று'. பு. க. 13

அங்கையுள் நெல்லி அதன்பயம் ஆதலால்
கொங்கலர் தாரான் குடைநிழற்கீழ்த் — தங்கிச்
செயிர்வழங்கும் வாளமருள் சென்று அடையார்வேல்வாய்
உயிர்வழங்கும் வாழ்க்கை உறும். பு. க. 13

[இவ்வரசன் குடைநிழலில் வாழ்ந்து இவன் பகைவரொடு பொருது உயிரைவிடும் வாழ்க்கையே உள்ளங்கை நெல்லிக்கனி போலச் சிறந்ததும் தெளிவானதும் ஆகும் என்று வீரன் சொல்லியவாறு.

தாரான் குடைநிழற்கீழ்த் தங்கி அமருள் உயிர்வழங்கும் வாழ்க்கை உறும் என்பது துறைச்செய்தி.]

குடிநிலை :

'மண்திணி ஞாலத்துத் தொன்மையும் மறனும்
கொண்டு பிறர்அறியும் குடிவரவு உரைத்தன்று'. பு. க. 14

பொய்அகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலிநீர் — கையகலக்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி. பு. க. 14

[உலகில் மலை வெளிப்பட வெள்ளம் குறைந்து மண் தோன்றாக் காலத்திலேயே வீரத்தோடு தோன்றிய குடியைச் சேர்ந்தவர் கரந்தைவீரர் ஆதலின் பகைவரை அழித்து நிரை மீட்டலில் வியப்பு ஒன்றும் இல்லை என்றவாறு.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்தகுடி என்பது துறைச்செய்தி.]

ஆபெயர்த்துத் தருதல் :

கடல்புக்கு மண்எடுத்த காரேனக் கோட்டின்
மிடல்பெரிது எய்தின மாதோ — தொடலைக்
கரந்தை மறவர்க் கருதார் குழாஅம்
துரந்து நிரைமீட்ட தோள். பெ. பொ. வீ.

[கரந்தை சூடிய வீரருடைய, பகைவரை அழித்து நிரை மீட்ட தோள் இரணியாட்சனால் கவரப்பட்ட பூமியைக் கடலின் உட்புக்கு எடுத்துக் காத்த மகாவராகத்தின் கொம்பினை விட வலியவாம் என்றவாறு.

கரந்தைமறவர் கருதார்த் துறந்து நிரைமீட்டனர் என்பது துறைச்செய்தி

'ஆபெயர்த்துத் தருதல்' என்பது தொல்காப்பியத் துறை. (தொ. பொ. 60).]

அருஞ்சமர் விலக்கல் :

இரவுஊர் எறிந்து நிரையொடு பெயர்ந்த
வெட்சி மறவர் விழவும் உட்காது
கயிறுஇயல் பாவை போல அயில்திரித்து
உழைக்குரற்கு உணர்ந்த அளைப்புலி போல
முற்படு பூசல் கேட்டனர் பிற்பட
நிணம்மிசை இழுக்காது தமர்பிணம் இடறி
நிலம்கெடக் கிடந்த கருந்தலை நடுவண்
மாக்கடல் நெருப்புப் போல நோக்குபு
வெஞ்சிலை விடலை வீழ்ந்தனன்
அஞ்சுதக் கன்றால் செஞ்சோற்று நிலையே.

தொ. பொ. 58. ந.

[இரவில் ஆநிரையைக் கைப்பற்றிய வெட்சிமறவர் விரும்பிப் போரிடவும் அஞ்சாது குருளையின் குரல்கேட்ட புலிபோல வந்து வேலைத் திரித்துச் சிறித் தமர் பிணத்தின் மேலும் அவர் நிணத்தின்மேலும் நடந்து வீரர் தலைகளின் நடுவே வடவை முக அங்கி போலத் தீ எழ விழித்து வெட்சி மறவர் பின்னிட்டு ஓடப் பொருத வீரன் பட்டானாகச் செஞ்சோற்றுநிலை கொடிது என்று கண்டோர் கூறியவாறு.

'ஆர் அமர் ஓட்டல்' என்பது தொல்காப்பியத்துறை. (தொ. பொ. 60) இப்பாடல் கரந்தை மறவர் 'பூசல் மாற்றுக்கு' நச்சினார்க்கினியர் தந்த எடுத்துக்காட்டாகும்.]

நலிவின்று உய்த்தல் :

கல்செழு சீறூர்க் கடைக்காண் விருப்பினால்
மெல்ல நடவா விரையும் — நிரைஎன்றோ
தெள்அறல் கானியாற்றுத் தீநீர் பருகவும்
மள்ளர் நடவாஅ வகை, புறத்திரட்டு. 768

[தம்ஊரை மீண்டு அடையும் விருப்பினால் ஆநிரை விரைந்து வரும் வழியிலே கான்யாற்றில் நீர்பருகினவாக வீரர் அவற்றை விலக்காது வாளா தாமும் நின்றனர் என்றவாறு

நிரை தீநீர் பருகவும் மள்ளர் நடவாநிலை என்றோ என்பது துறைச்செய்தி.]

நண்ணுவழித் தோற்றம் :

காட்டகம் சென்றுயிர் போற்றான் கடுஞ்சுரை ஆன்
மீட்ட மகனை வினவும்முன் — ஓட்டந்து
தன்எதிர் தோன்றும் புனிற்றாத் தழீஇக்கலுழும்
என்எதிர்ப் பட்டாயோ என்று. புறத்திரட்டு. 769

[காட்டில் வெட்சி வீரரைப் பின்தொடர்ந்து உயிரையும் கருதாது நிரையைமீட்ட மகனைக் கூட வரவேற்று வினவாது தாய் ஓடிவந்து புனிற்றாவைத் தழுவி நீ பகைவர் கையில் என்ன துன்பப்பட்டாயோ என்று கண்ணீர் உகுத்தாள்.

ஓட்டந்து தன் எதிர் தோன்றும் புனிற்றாத் தழீஇக் கலுழும் என்பது துறைச்செய்தி]

நிறைத்தல் :

கழுவொடு பாகர் கலங்காமல் யாத்துத்
தொழூவிடை ஆயம் தொகுமின் — எழுஒழித்தால்
போமே இவற்றைநீர் போற்றுமின் புல்லொடுநீர்
தாம்மேய் புலம்போலத் தந்து. தொ. பொ. 58. ந.

[பால் கறக்கவிடாத பசுக்களுக்குக் கழுத்திலிடும் கழு முதலிய கருவிகளை இடாமல் பசுக்களைத் தொழுவிடை எழுவை நீக்கித் தொகுத்து, நிறையப் புல்லும் நீரும் வழங்கிக் காப்பீராக என்றவாறு.

தொழுவிடை ஆயம் தொகுமின் என்பது துறைச்செய்தி]

பாதீடு :

யாமே பகுத்திடல் வேண்டா; இனம்நிரை
தாமே தமரை அறிந்தனகொல் — ஏமுற
அன்றீன்ற தம்மை அறிந்துகொள் கன்றேய்ப்பச்
சென்றீண்டும் ஆங்கவர்பாற் சென்று.

புறத்திரட்டு. 770

[கன்றைத் தாமே அறிவனபோலப் பசுக்கள் நாம் பிரித்து அளிக்கும் தேவை ஏற்படாத வகையில் தாமே தமரைச் சென்று அடைந்தன என்று வீரர் சொற்றவாறு.

யாமே பகுத்திடல் வேண்டா; இனநிரை தாமே தமரை அறிந்தன என்பது துறைச்செய்தி]

உண்டாட்டு :

பகைவர் கொண்ட படுமணி ஆயம்
மீட்டுஇவண் அடைந்த வாள்திறல் குரிசில்
முழவுத் துயில்மறந்த மூதூர் ஆங்கண்
விழவுத்தலைக் கொண்ட விளையாட்டு ஆயத்து
ஊன்சுடு கொழும்புகைக் கருங்கொடி உம்பர்

மீன்சுடு புகையின் விசும்புவாய்த் தன்றே
கைவல் கம்மியர் பல்கூட்டு ஆரமொடு
நெய்பிழி நறுவிரை நிலம்பரந் தன்றே
காவில் காலில் கணங்கொள் வண்டெனப்
பூவிலை மகளிர் புலம்படர்ந் தனரே
சந்தியும் சதுக்கமும் பந்தர் போகிய
ஆடுறு நறவின் சாடி தோறும்
கொள்விலை மாற்றுக் கொடையொடு
கள்விலை யாட்டியும் கைதூ வாளே. தொ. பொ 58. ந.

['வெட்சி மறவர் கைக்கொண்ட பசுக்களை மீட்டுக் கொணர்ந்த வீரன் தன் மூதூரில் நண்பரோடு விருந்து அமைக்கவே எழுந்த அட்டில்புகை வான் அடைந்தது. மகிழ்ச்சிக்காக வழங்கும் நறுமணப் பொருள்கள் எங்கும் பரவிக் கிடந்தன. தென்றல் வீசும் சோலையில் வண்டு கூட்டம் கூட்டமாகப் பரவுவது போலப் பூக்களை விலைகூறும் மகளிர் பலரும் ஊரில் சுற்றித் திரிகின்றனர். முச்சந்தி ஐஞ் சந்திகளிலும், நாற்சந்தியாகிய சதுக்கங்களிலும் பந்தல் இடப்பட்டுள்ளன. அடப்பட்ட நறவுச் சாடிகளைக் கொண்டு கள்ளை விலைகூறுவாள் கொடுத்த பொருளைப் பெற்று மாறுது கள்ளை வரையாது வழங்குகிறுள்' என்று கண்டோர் கூறியது. இஃது உண்டாட்டுக்கு நச்சிஞர்க்கினியர் தரும் எடுத்துக்காட்டு. (தொ. பொ 58)

கள்விலையாட்டி கைதூவாளே என்பது துறைச்செய்தி]

கொடை :

கொடைத்தொழில் எல்லாம் குறைவின்றிப் பண்டே
முடித்தனன் என்றிருந்த மூத்தோன் — கொடைக்கு
வரம்பிலன் என்றே மருண்டான் நிரைகோள்
கரந்தையங் கண்ணியாற் கண்டு. தொல். பொ. 58. ந.

[அன்று வழங்க வேண்டிய கொடைகளை எல்லாம் முற்பகலே கொடுத்து முடித்த அரசன், ஆநிரைகளை மீட்டு வந்த வீரர் தலைவனைக் கண்டு கொடைத் தொழிலுக்கு எல்லை இல்லையே என்று மயங்கினன் என்று கண்டோர் கூறியது. பசுவினைக் கவர்ந்தோருக்கு அப்பசுக்களே கொடையாக வழங்கப்படும். மீட்டோருக்கு அரசன் தானே தன்னிடம் இருக்கும் பிறபொருளை வழங்குதல் வேண்டும் என்பதும் கொள்ளப்படும்

கொடைக்கு வரம்பிலன் என்பது துறைச்செய்தி.]

துடிநிலை :

நித்திலய்செய் பட்டமும் நெற்றித் திலதமும்
ஒத்திலங்க மெய்ப்பூசி ஓர்ந்துடீஇத் — தத்தம்
துடியரோடு ஊர்ப்புறம் சூழ்ந்தார் மறவர்
குடிநிலை பாராட்டக் கொண்டு. தொல். பொ. 59 ந.

[நிரை மீட்ட மறவர் முத்துப்பட்டமும் நெற்றித் திலகமும் விளங்க நறுமணப்பொருள் பூசி நல்லாடை உடுத்துத் தத்தம் துடிகொட்டுவாரை அழைத்துக்கொண்டு வீரர் குடிப் பெருமையைப் பாராட்ட ஊருக்கு வெளியே கூடினர் என்றவாறு.

'துடியரோடு ஊர்ப்புறம் சூழ்ந்தார்' என்பது துறைச் செய்தி.

'மறம்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே'.
தொல். பொ. 59]

கொற்றவை நிலை :

அருவரைத் தலைத்தரும் ஆநிரையுள் ஐயை
எருமைப் பலிகோள் இயைந்தாள் — அரசனும்
வேந்தன்மேல் செல்வான் விறல்வஞ்சி சூடானென்று
யாம்தன்மேல் சீறுமல் இன்று. தொல். பொ. 59

[நம் பசுநிரைகளை வெட்சி மன்னன் கவர்ந்தான் ஆதலின் நம் அரசன் அவன்மேல் படைஎடுக்க வஞ்சி சூடவில்லையே என்று வீரராகிய நாம் அரசனிடம் கோபம் கொள்ளாத வகையில் பசுக்கூட்டங்கள் மீட்கப்பட்டனவாக, அவ் வெற்றியைத் தந்த கொற்றவை எருமைப் பலியை ஏற்றுக் கொண்டாள் என்றவாறு.

ஐயை எருமைப் பலிக்கோள் இயைந்தாள் என்பது துறைச்செய்தி. கொற்றவைக்கு நரபலியும் குருதிப் பலியும் எருமைப் பலியோடு கொள்வர் நச்சினார்க்கினியர். தொல். பொ. 59 ந]

வெட்சியின் இரண்டாம் கூறு முற்றும்.

ஒத்த நூற்பாக்கள்

'ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும்
தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்
வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தல்என்று
இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்
வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடுஅவற்கு அருளிய பிள்ளை யாட்டும்
அனைக்குரி மரபின் கரந்தை'. தொ. பொ. 63

'கதமலி கரந்தை கரந்தை அரவம்
அதரிடைச் செலவே அரும்போர் மலைதல்
புண்ணொடு வருதல் போர்க்களத்து ஒழிதல்
ஆள்எறி பிள்ளை பிள்ளைத் தெளிவே
பிள்ளை யாட்டொடு கையறு நிலையே
நெடுமொழி கூறல் பிள்ளைப் பெயர்ச்சி
வேத்தியல் மலிபே மிகுகுடி நிலைஎன
அருங்கலை உணர்ந்தோர் அவைபதின் மூன்றும்
கரந்தையும் கரந்தைத் துறையும் என்ப'. பு. வெ. 2

'ஓடாப்படையாண்மை உன்னம் நிரைமீட்டல் மன்னர்வெற்றி
கோடாத் திறம்கூறல் தன்திறம்கூறுதல் கொற்றப்பொற்றூர்
சூடாப் பொலிகுதல் ஆரமர் ஓட்டல் துசளறுதல்
தேடாப் பொறித்தல் கரந்தைத் திறம்பற்றும் தேர்ந்தறியே'.

வீர, 100

6

வஞ்சி இலக்கணம்

605 வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே.

இது வஞ்சித்திணை முல்லைத்திணைக்குப் புறன் என்பதூஉம் அதன் பொருளும் கூறுகின்றது.

(இ-ள்) மேற்கூறிய புறத்திணை ஏழனுள் வஞ்சித்திணை முற்கூறிய அகத்திணை ஏழனுள் முல்லைத்திணைக்கு புறனும்; அஃது ஒழியாத மண்ணை நச்சுதலை உடைய வேந்தனை, மற்றொரு வேந்தன், ஆண்டு வாழ்வோருக்கு அஞ்சுதல் உண்டாக அந்நாட்டிடத்தே சென்று வேறலைக் குறித்தது என்றவாறு.

புறத்திணை பலவற்றுள் 'வஞ்சி தானே முல்லையது புறனே' என இதனைப் பிரித்து ஓதினுர், முதல் எனப்பட்ட காடுறை உலகமும் கார்காலமும் அந்நிலத்திற்கு ஏற்ற கருப்பொருளும் அரசன் பாசறைக்கண் தலைவியை பிரிந்து இருத்தலும், அவன் தலைவி அவனைப் பிரிந்து மனைவயின் இருத்தலும் ஆகிய உரிப்பொருளும் ஒப்பச்சேறலின் என்பது. எனவே, வஞ்சித்திணை முல்லைத்திணைக்குப் புறன் என்றல் ஆணை கூறுதல் அன்று ஆயிற்று.

விளக்கம்

வஞ்சி முல்லைக்குப் புறனாதற்குக் கூறப்பட்ட விளக்கம் நச்சினார்க்கினியர் உரைத்ததேயாம்.

முல்லைக்கு வஞ்சி புறனாகியவாறு என்னையெனின், மாயோன் மேய காடுறை உலகமும் கார்காலமும் முல்லைக்கு முதற்பொருள் ஆதலானும், பகைவயின் சேறலாகிய வஞ்சிக்கு நிழலும் நீரும் உள்ள காலம் வேண்டுதலானும் பருமரக்காடாகிய மலை சார்ந்தஇடம் ஆகாமையானும், அதற்கு இது சிறந்தது என்க.

அன்னதாகல் முல்லை பாட்டினுள்,

‘கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்
சேண்நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை அருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுள் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியில் பரந்தபாடி’. முல்லைப் 24–28

தொல். பொ, 64 உரை

என்பதனானும் அறிக.

அகத்தில் தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் அல்லது வினைமேல் செல்வதுபோல, வஞ்சித் தலைவனும் தலைவியைப் பிரிந்து பகைமேல் செல்லுதலானும், முல்லையிலும் வஞ்சியிலும் தலைவரைப் பிரிந்த தலைவியர் தனிமை தாங்காது வருந்திக் கற்பறம் பேணி இருப்பது பொது ஒழுக்கம் ஆதலானும், முல்லைத் தலைவர் தம் புலம்புறு தலைவியரைப் பிரிந்து செலவு மேற்கொள்வது மனையறம் பேணும் கடன் இறுக்கும் பொருட்டாதல் போலவே, வஞ்சித் தலைவர் மேற்செலவும் ஆண்மையறம் பேணும் பொருட்டாதலானும், வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று.

பாரதியார். புற. 6 உரை

வஞ்சித் துறைகள்

606 வாடா வஞ்சி மலைதலும்[1] ஓடாப்
படைஇயங்கு அரவமும்[2] குடைநாள் கோளும்[3]
வாணாட் கோளும்[4] பேணார் உட்கும்
கொற்றவை நிலையும்[5] வெற்றிவேல் உழவர்
செய்தொழில் கூறிய மற்றதன் பகுதியும்[6]
மறிதிரை உலகம் வணங்கஎஃகு உயர்த்த
குரிசிலை வழுத்திய கொற்ற வஞ்சியும்[7]
வேந்தனைப் புகழ்ந்து வேற்றுநாட்டு அழிபு
கூர்ந்தமைக்கு இரங்கிய கொற்ற வள்ளையும்[8]
பொருமுறை பகையொடு பொருதவீ ரர்க்குப்
பெரிதுஅருள் சுரந்த பேராண் வஞ்சியும்[9]
அருந்திறை அளப்ப ஆறிய சினத்தொடு
பெரும்பூண் மன்னவன் பெயர்ந்த பக்கமும்[10]
திண்ணிய வேந்தின் சிறப்புற் றோர்பெறாஉம்
வண்மை கூறிய மாராய வஞ்சியும்[11]
செறியலர் போர்க்களம் சென்றுதன் ஆண்மை
நெறிஎடுத்து இயம்பிய நெடுமொழி வஞ்சியும்[12]
தொன்னெறி மரபின் வாட்குடித் தோன்றிய
முன்னவன் நிலைபுகல் முதுமொழி வஞ்சியும்[13]
கூடலர் நாட்டுக் கொடிநெடு வியலூர்
ஊடுஎரி ஊட்டிய உழபுல வஞ்சியும்[14]
குறுகலர் அருமனை கொள்ளை சாற்றி
மறுகுறக் கவர்ந்த மழபுல வஞ்சியும்[15]
நீடவும் குறுகவும் நிவப்பவும் தூக்கிப்
பாடிய பாணர்க்குப் பயந்தகொடை வஞ்சியும்[16]
மடுத்த வேந்தற்கு வழங்குவ வழங்கிக்
குடிக்குஅருள் சுரந்த குறுவஞ்சி யானும்[17]
மட்டூர் தெரியல் மறங்கெழு வேந்தன்

கட்டூர் வகைமை கட்டுரைத்த பக்கமும்[18]
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய ஒருதனி நிலையும்[19]
அழியுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக்
கழிதறு கண்மைத் தழிஞ்சியும்[20] அதாஅன்று
மதிக்குடை வேந்தன் மாற்றலர் வணங்கவும்
பதிப்பெயர் கில்லாப் பாசறை வஞ்சியும்[21]
முன்னடை யாதார் வளங்கெழு நாட்டைப்
பின்னும்எரி ஊட்டிய பெருவஞ்சி யானும்[22]
இறையவன் வயவர்க்கு இருஞ்சோறு அமலை
பெறமுறை உதவிய பெருஞ்சோற்று நிலையும்[23]
வெளிகெடப் பகைமுனை இறுத்த வேந்தன்
களிவிறல் மிகுத்த நல்லிசை வஞ்சியும்[24]
இறுத்தபின் நாடுஅழிபு இரங்கிமறுத்து உரைத்த
பக்கமும்[25] எனமுறை தொக்க ஐ யைந்தும்
நல்லிசைப் புலவர் நாடினர் தெளிந்து
சொல்லிய வஞ்சித் துறைஎனப் படுமே.

இது, முற்கூறிய வஞ்சித்திணை இத்துணைத்துறை உடைத்து என்கின்றது.

(இ-ள்) 'வாடாவஞ்சி மலைதல்' முதலாக, 'இறுத்த பின் நாடு அழிபு இரங்கி மறுத்து உரைத்த பக்கம்' ஈறாக முறையே தொக்க இருபத்தைந்தும் நல்லிசைப் புலவர் ஆராய்ந்து தெளிந்து சொல்லிய வஞ்சித்துறை என்று கூறப் படும் என்றவாறு.

விளக்கம்

[1 வாடா வஞ்சி மலைதல் :

பகையரசனை அவன் மண்ணிடத்துக்கொண்ட வேட்கை யானே எதிர்த்துப் பொருதற்கு வஞ்சிப் பூவினைச் சூடுதல்.

2 **படை இயங்கு அரவம் :**

வஞ்சிமன்னன் படை பகைவேந்தன் மண்ணைக் கோடற்குச் சேறற்கண் ஏற்பட்ட ஆரவாரம்.

3 **குடைநாட் கோள் :**

பகைவர் மண்ணினைக் கோடற்கு நன்னாளில் நன்னேரத்தில் அரசன் தன் வெண்கொற்றக் குடையைப் புறவீடு செய்தல்.

4 **வாள்நாட் கோள் :**

அரசன் தன் வாளினை நன்னாளில் நன்னேரத்தில் புறவீடு செய்தல்.

5 **கொற்றவை நிலை :**

பகைவர் அஞ்சுதற்குக் காரணமான கொற்றவைக்குத் தம்செயல் வெற்றி பெறுதலுக்காக வஞ்சி வீரர் பலியிட்டு வழிபாடு நிகழ்த்துதல்.

6 **கொற்றவை நிலைப் பக்கம் :**

வெற்றியைத் தரும் வேலைப் பகைவர் மார்பில் உழுதலைச் செய்யும் வீரர்தம் போர்த்தொழிலைக் கூறுதலும் கொற்றவை நிலையாம்.

7 **கொற்றவஞ்சி :**

கரையில் மோதி மீளும் அலைகளை உடைய கடலால் சூழப்பட்ட உலகத்தவர் தன்னை வணங்குமாறு படைக்கலங்களைச் செயற்படுத்திய அரசனை வழுத்துதல்.

8 **கொற்றவள்ளை :**

வஞ்சி வேந்தனைப் புகழ்ந்து அவன் மாற்றார் நாடு பல்லாற்றானும் அழியுமே என்று சான்றோர் மனம் இரங்கிக் கூறுதல்.

9 **பேராண் வஞ்சி :**

போரிடும் அறமுறை பிறழாது பகைவரொடு முன் பொருது வெற்றிகண்ட சிறந்த வீரருக்கு அரசன் மிகவும் அருள் சுரந்த செய்தியைக் கூறுதல்.

10 **பேராண் வஞ்சிப் பக்கம் :**

பகைவர் சிறந்த திறைப் பொருளைத் தருதலால் சினம் நீங்கி வஞ்சிவேந்தன் மீண்டு விடுதலும் அதுவாம்.

11 **மாராய வஞ்சி :**

வலிமைமிக்க வேந்தனால் சிறப்புப் பெற்றோர் அடையும் அரசனது வள்ளன்மையைக் கூறுதல்.

12 **நெடுமொழி வஞ்சி :**

போர் நெருங்கிய களத்திற்குச் சென்று தன் ஆண்மை நெறியினை வீரன் எடுத்துரைத்தல்.

13 **முதுமொழி வஞ்சி :**

பழையநெறி முறைமையினை உடைய வாட்போரில்வல்ல குடிக்கண் தோன்றிய குலமுன்னோன் புகழை எடுத்துக் கூறுதல்.

14 **உழபுல வஞ்சி :**

பகைவர் நாட்டில்உள்ள கொடிகள் இயங்கும் நெடிய பரந்த ஊர்களைத் தீயிட்டுக் கொளுத்துதல்.

15 **மழபுல வஞ்சி :**

பகைவருடைய கிட்டுதற்கு அரிய எல்லைப்பகுதிகளைக் கொள்ளையிட்டு ஆண்டு உள்ளார் வருந்துமாறு பொருள்களைக் கவர்தல்.

16 கொடை வஞ்சி :

பண்களை முறைப்படி நீட்டியும் குறுக்கியும் உயர்த்தும் பாடிய பாணருக்குக் கொடை அளித்தல்.

17 குறுவஞ்சி :

எதிர்த்து வந்த வஞ்சி வேந்தனுக்குக் கொடுக்க வேண்டிய திறைப்பொருள்களைக் கொடுத்துப் பகைமன்னன் தன் நாட்டு மக்களை அருளால் காத்தல்.

18 குறுவஞ்சிப் பக்கம் :

தேன் துளிக்கும் வஞ்சிமாலை யணிந்த வீரம் செறிந்த வேந்தனது பாசறையின் நிலையைக் கூறுதல்.

19 ஒருதனிநிலை :

வேகமாகவரும் நீரைத் தடுக்கும் கல்லணைபோலப் பகை வேந்தர் படையை வீரன் தான் ஒருவனாகவே இருந்து தடுத்த ஆற்றலைக் கூறுதல்.

20 தழிஞ்சி :

தோற்று ஓடுவார் முதுகுப்புறம் படைக்கலங்களைச் செலுத்தாத மேம்பட்ட ஆண்மையை விரும்பிக் கூறுதல்.

21 பாசறை வஞ்சி :

வெண்மதிபோன்ற கொற்றக் குடையை உடைய வஞ்சி வேந்தன் பகைவர் தன்னைவணங்கவும், அதனால் அமைதியுற்றுத் தன் ஊருக்கு மீளாது, தொடர்ந்து பாடி வீட்டின்கண்ணே இருத்தல்.

22 பெருவஞ்சி :

முன்கூர் எரி கொளுத்தவும், வஞ்சி வேந்தன் அடிக்கண் வழிபாடு சொல்லி அடையாத பகைவர் நாட்டினை, மறுபடியும் வெகுண்டு எரியூட்டுதல்.

23 பெருஞ்சோற்று நிலை :

வஞ்சி வேந்தன் தன் வீரருக்கு பெரிய சோற்றுத் திரளைத் தானும் அவர் உடன் இருந்து உண்பான்போல் வது ஒருமுகமனாக வழங்குதல்.

24 நல்லிசை வஞ்சி :

வெற்றிடம் இல்லையாம்படிப் பகைவரது போர்முனை யைத் தன்படைகளால் நிரைத்த வஞ்சி வேந்தன் கொண்ட செறிந்த ஆற்றலை மிகுத்துக் கூறுதல்.

25 நல்லிசை வஞ்சிப் பக்கம் :

வஞ்சிவேந்தன் பாடிவீடு அமைத்துத் தங்கியதால் பகை மன்னன் நாடு பாழாயின செய்தியை நினைத்துச் சான் றோர் இரங்கிக் கூறுதல்.

இவ்விருபத்தைந்து துறைகளும் வஞ்சித் திணையைச் சேர்ந்தனவாம்.]

வாடா வஞ்சி மலைதல் :

'வாடா வஞ்சி தலைமலைந்து
கூடார்மண் கோளல் குறித்தன்று'. பு. வ. 1

செங்கண் மழவிடையின் தண்டிச் சிலைமறவர்
வெங்கள் மகிழ்ந்து விழவயர — அங்குழைய
வஞ்சி வணங்கார் வணக்கிய வண்டார்ப்பக்
குஞ்சி மலைந்தான்எங் கோ. பு. வ. 1

[ஆன் ஏறுபோலச் சினந்து வில்ஏந்திய மறவர் கள் உண்டு வில்விழா அயரப் பகைவரைப் பணித்தற்குப் போரிடற்காக மன்னன் வஞ்சிப் பூவினைக் குஞ்சியில் சூடினன் என்றவாறு.

வஞ்சி குஞ்சி மலைந்தான் எங்கோ என்பது துறைச் செய்தி.]

ஓடாப்படை இயங்கு அரவம் :

' வள்வார் முரசமொடு வயக்களிறு முழங்க
ஒள்வாள் தானை உருத்தெழுந் தன்று '. பு. வ. 2

பௌவம் பணைமுழங்கப் பற்றார்மண் பாழாக
வவ்விய வஞ்சி வலம்புனையச் — செவ்வேல்
ஒளிறும் படை நடுவண் ஊழித்தீ அன்ன
களிறும் களித்ததிரும் கார். பு. வ. 2

[முரசங்கள் கடல்போல முழங்கவும் பகைவர் நிலத்தை அழித்தற்கு வீரர் வஞ்சிப் பூச்சூடவும் அவர் படைநடுவே யானைகள் கார்மேகம் போலப் பிளிறின என்றவாறு.

வஞ்சி புனையப் பௌவம் பணைமுழங்கக் களிறு அதிரும் என்பது துறைச்செய்தி.]

குடைநாட் கோள் :

' பெய்தாமச் சுரும்பிமிரப் பெரும்புலவர் புகழ்பாடக்
கோய்தார் மன்னவன் குடைநாள் கொண்டன்று '.
பு வ, 3

முன்னர் முரசிரங்க மூரிக் கடல்தானைத்
துன்னருந் துப்பின் தொழுதெழா — மன்னர்
உடைநாள் உலந்தனவால் ஓதநீர் வேலிக்
குடைநாள் இறைவன் கொள. பு. வ. 3

[முரசங்கள் ஒலிக்க வஞ்சிவேந்தன் தன் வெண்குடையைப் புறவீடு செய்யக் கடலை ஒத்த சேனையை உடைய வலிமை மிக்க பகைமன்னர் வாழ்நாட்கள் குறுகின.

முரசு இரங்க இறைவன் குடைநாள் கொண்டான் என்பது துறைச்செய்தி.]

வாள் நாட்கோள் :

‘ செற்றார்மேல் செலவு அமர்ந்து
கொற்றவாள் நாட் கொண்டன்று. புவ. 4

அறிந்தவர் ஆய்ந்தநாள் ஆழித்தேர் மன்னன்
எறிந்திலகு ஒள்வாள் இயக்கம் — அறிந்திகலிப்
பின்பகலே அன்றியும் பேணார் அகநாட்டு
நன்பகலும் கூகை நகும். பு. வ. 4

பின்பகல் — இரவு.

[நன்னாளில் மன்னன் தன் வாளினைப் புறவீடு செய்த அளவில் பகைவர் நாட்டினுள் இரவில் அன்றிப் பகற்பொழுதும் தீ நிமித்தம் காட்டிக் கோட்டான் ஒலிக்கும்.

ஆய்ந்தநாள் மன்னன் ஒள்வாள் இயங்கிற்று என்பது என்பது துறைச்செய்தி.]

கொற்றவை நிலை :

‘ நீடோளான் வென்றி பெறுகென்ன நிறைமண்டை வலனுயரிக்
கூடாரைப்புறங்காணும் கொற்றவைநிலை உரைத்தன்று. பு.வ. 5

அணங்குடை நோலை பொரிபுழுக்கல் பிண்டி
நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்துக் — கணம்புகலக்
கைஇரிய மண்டைக் கணமோடி காவலற்த
மொய்இரியத் தான்முந் துறும். பு. வ. 5

நோலை — எட்கசிவு.

[எட்கசிவு, நெற்பொரி, அவரை, துவரை, முதலியன, அவல், நிணம், குடர், குருதி, ஆகியவை படைக்கப்பட, கையில் மண்டையை உடைய கொற்றவை தன் பூதகணம் புடைசூழ, வஞ்சி வேந்தன் பகைவர் வலிமை கெட்டு ஓடத் தான் வஞ்சியானுக்கு முன்னே எழுந்தருளுவாள் என்றவாறு.

மோடி காவலற்கு முரண் இரியத் தான் முந்துறும் என்பது துறைச்செய்தி.]

கொற்றவை நிலைப் பக்கம் :

'மைந்துடை ஆடவர் செய்தொழில் கூறலும்
அந்தமில் புலவர் அதுஎன மொழிப'. பு. வ. 6

தமருள் தலையாதல் தார்தாங்கி நிற்றல்
எமருள்யாம் இன்னம்என்று எண்ணல் — அமரின்
முடுகு அழலின் முந்துறுதல் முல்லைத்தார் வேந்தன்
தொடுகழல் மைந்தர் தொழில். பு. வ. 6

[வீரருக்கு இடையே பெருமிதம் மிக்குப் பகைவருடைய தூசிப் படையைத் தடுத்துத் தமர்இடையே தம்வீரச்சிறப்பை வெளிப்படுத்திப் போர்எனின் காட்டுத் தீப்போல முற்பட்டு விரைந்து பொருதல், வஞ்சி முல்லைக்குப் புறன் ஆதலின்-முல்லைமாலை சூடிய வேந்தனுடைய வீரர்தம் செயல்களாம்.

அமரில் முடுகு அழலின் முந்துறுதல் மைந்தர் தொழில் என்பது துறைச்செய்தி.]

கொற்ற வஞ்சி :

'வையகம் வணங்க வாள்ஓச் சினன்எனச்
செய்கழல் வேந்தன் சீர் மிகுத்தன்று'. பு. வ. 7

அழல்அடைந்த மன்றத்து அலந்தயரா நின்றார்
நிழலடைந்தேம் நின்னைஎன் றேத்திக் — கழலடையச்
செற்றங்கொண் டாடிச் சிலைத்தெழுந்தார் வீந்தவியக்
கொற்றங்கொண்டு எஃகுயர்த்தான் கோ. பு. வ. 7

[பகைமை பாராட்டி எதிர்த்த வீரர் மடியவும், தீ வைக்கப் பட்ட மன்றத்திடை வருந்தியிருந்தார் தன்னைப் பாதுகாவ-

லாகக் கொண்டு சரண் அடையவும் வெற்றிபெற்ற மன்னன் தன் கொற்ற வேலை வலமாக உயர்த்தினான் என்றவாறு.

கொற்றம் கொண்டு எஃகு உயர்த்தான் கோ என்பது துறைச்செய்தி.]

கொற்ற வள்ளை :

'மன்னவன் புகழ்கிளந்து
ஒன்னார்நாடு அழிபுஇரங்கின்று'. பு. வ. 8

தாழார மார்பினான் தாமரைக்கண் சேந்தனவால்
பாழாய்ப் பரிய விளிவதுகொல் — யாழாய்ப்
புடைத்தேன் இமிர்கண்ணிப் பூங்கண் புதல்வர்
நடைத்தேர் ஒலிகறங்கும் நாடு. பு. ந. 8

வள்ளை — உலக்கைப் பாட்டு.

[அரசன் கண் வெகுளியால் சிவந்தன ஆதலின், மாலையை அணிந்த சிறுவர் தம் நடைவண்டிஓசை கேட்கும் இனிய பகைவர்நாடு இனி, பார்ப்பவர் இரங்கும்படி பாழாய்ப் போகுமே என்று சான்றோர் இரங்கியவாறு.

அரசன் கண் சேந்தன; பகைவர்நாடு பரியப் பாழாய் விளிவதுகொல் என்பது துறைச்செய்தி.

'கொற்றவள்ளையும் ஓரிடத்தான' — துறைகூறுதல் கருத்தாயின் வஞ்சியாம்; புகழ் கருதின் பாடாண் திணையாம் தொ. பொ. 86 உரை.]

பேராண் வஞ்சி ;

'கேளல்லார் முனைகெடுத்த
மீளியார்க்கு மிகஉய்த்தன்று'. பு. வ 9

பலிபெறு நன்னகரும் பள்ளி யிடனும்
ஒலிகெழு நான்மறையோர் இல்லும் — நலிவொரீஇப்

புல்லார் இரியப் பொருதார் முனைகெடுத்த
வில்லார்க்கு அருள்சுரந்தான் வேந்து. பு. வ. 9

[பகைவர், தம் துயர்நீங்க என்றும் தீங்கு அணுகாத கோயில்கள் துறவோர் இருக்கை, அந்தணர் உறைவிடம் இவற்றில் சென்று புகுமாறு, பொருது வென்ற வீரருக்கு அரசன் பெருஞ் சிறப்புச் செய்தான் என்றவாறு.

பொருதார் முனைகெடுத்த வில்லார்க்கு வேந்து அருள் சுரந்தான் என்பது துறைச்செய்தி]

பேராண் வஞ்சியின் பக்கம் :

' அருந்திறை அளப்ப ஆறிய சினத்தொடு
பெரும்பூண் மன்னவன் பெயர்தலும் அதுவே '.
பு. வ. 10

கூடி முரசிரங்கக் கொய்யுளைமா முன்உகளப்
பாடி பெயர்ந்திட்டான் பல்வேலான் — கோடி
நிதியம் திறையளந்தார் நேராரும் தன்கீழ்
முதியம் என்று ஆறி முரண். பு வ. 10

[பகைவரும் மாறுபாடு கெட்டுத் தன் நண்பர்களாகித் திறை செலுத்திய அளவில் முரசம் ஒலிக்கக் குதிரைகள் முன்னே தாவிச்செல்ல வஞ்சிவேந்தன் தன் பாசறையினின் றும் ஊருக்குத் திரும்பி விட்டான் என்றவாறு.

நேரார் நிதியம் திறை அளப்ப வேலான் பாடியினின் றும் பெயர்ந்திட்டான் என்பது துறைச்செய்தி]

மாராய வஞ்சி :

' மறவேந்தனின் சிறப்பு எய்திய
விறல் வேலோர் நிலைஉரைத்தன்று.' பு வ. 11

நேர்ஆரம் பூண்ட நெடுந்தகை நேர்கழலான்
சேரார் முனைநோக்கிக் கண்சிவப்பப்—போரார்

நறவுஏய் கமழ்தெரியல் நண்ணார் எறிந்த
மறவேல் இலைமுகந்த மார்பு. பு. வ. 21

[வஞ்சி வேந்தன் பகைவர் போர்முனை நோக்கி வெகுளியால் கண் சிவந்த அளவில் பகைவரை எதிர்த்து அவர்தம் வேல்களைத் தம்மார்பில் தாங்கி வென்று மீண்ட வீரர்கள் அரசனால் முத்துமாலை அணிவிக்கப்பட்டனர்.

நண்ணார் எறிந்த வேல் முகந்த மார்பு ஆரம் பூண்டன என்பது துறைச்செய்தி.

மாராயம் அரசனால் செய்யப்படும் சிறப்பு. சிறப்பாவது ஏனாதி காவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியனவும் பெறுதலாம்.]

நெடுமொழி வஞ்சி :

'ஒன்னார் படைகெழுமித்
தன்னாண்மை எடுத்துரைத்தன்று.' பு. வ. 12

இன்னர் எனவேண்டா என்னோடு எதிர்சீறி
முன்னர் வருக முரண் அகலும் — மன்னர்
பருந்தார் படைஅமருள் பல்லார் புகழ
விருந்தாய் அடைகுவார் விண். பு. வ. 12

[மாறுபாடு மிக்க வேந்தர் எவ்வித வேறுபாடும் நோக்காது என்னை எதிர்த்து வருவாராயின் இப்போர்க்களத்தில் பலரும் பாராட்டுமாறு தேவர்களுக்கு விருந்தாக வீர சுவர்க்கத்திற்கு அனுப்புவேன் என்று வீரன் ஒருவன் கூறியவாறு.

என்னோடு எதிர்சீறி வரும் மன்னர் வீண் அடைகுவர் என்பது துறைச்செய்தி.]

முதுமொழி வஞ்சி :

'தொல்மரபின் வாள்குடியின்
முன்னோனது நிலைகிளந்தன்று'. பு. வ. 13

குளிறு முரசம் குணில்பாயக் கூடார்
ஒளிறுவாள் வெள்ளம் உழக்கிக் — களிறெறிந்து
புண்ணொடு வந்தான் புதல்வற்குப் பூங்கழலோய்
தண்ணடை நல்கல் தகும். பு. வ. 13

[முரசம் முழங்கப் பகைவர் வாள் வெள்ளத்தைக் கலக்கிக் களிற்றைக் கொண்டு விழுப்புண் பட்டு வந்த வீரன் இப் பொழுது இலன் ஆதலின், அவன் புதல்வனுக்கு நல்ல மருத நிலங்களைக் கொடையாக வழங்குக என்றவாறு.

களிறு எறிந்து புண்ணொடு வந்தான் புதல்வன் என்பது துறைச்செய்தி]

உழபுலவஞ்சி :

'நேரார் வளநாட்டைக்
கூர்எரி கொளீஇயன்று.' பு. வ. 14

அயில்அன்ன கண்புதைத்து அஞ்சி அலறி
மயிலன்னார் மன்றம் படர — குயில்அகவ
ஆள்திரிய வண்டிமிரும் செம்மல் அடையார்நாட்டு
ஓடுஎரியுள் வைகின ஊர். பு. வ. 14

[பண்டு குயில் ஒலிக்க மக்கள் மகிழ்வுடன் நடமாட வண்டுகள் ஒலிக்கச் செழிப்பாக இருந்த ஊர்கள் இன்று கண்களை மூடி அஞ்சி அலறி மகளிர் பாதுகாவலுக்காகப் பொதுஇடத்தை அடையுமாறு தீக்கொளுவப்பட்டன என்றவாறு.

அடையார் நாட்டு ஊர் ஓடு எரியுள் வைகின என்பது துறைச்செய்தி.]

மழபுலவஞ்சி :

'கூடார் முனை கொள்ளை சாற்றி
வீடு அறக்கவர்ந்த வினைமொழிந்தன்று' பு. வ. 15

களமர் கதிர்மணி காலேகம் செம்பொன்
வளமனை பாழாக வாரிக் — கொளல்மலிந்து
கண்ணார் சிலையார் கவர்ந்தார் கழல்வேந்தன்
நண்ணார் கிளைஅலற நாடு. பு. வ. 15

[வஞ்சி வேந்தனுடைய பகைவர் நாட்டவர் அலற, அவன் வில் வீரர்கள் பகைவருடைய அடிமைகளையும் மணி முத்து பொன் இவற்றையும் அவர்கள் மனைகள் பாழாகக் கவர்ந்தார் என்றவாறு.

களமர் கதிர்மணி காலேகம் செம்பொன் வளமனை பாழாக வாரினர் சிலையார் என்பது துறைச்செய்தி]

கொடைவஞ்சி :

' நீடவும் குறுகவும் நிவப்பவும் தூக்கிப்
பாடிய புலவர்க்குப் பரிசில் நீட்டின்று '. பு. வ. 16

சுற்றிய சுற்ற முடன்மயங்கித் தம்வயிறு
எற்றி மடவார் இரிந்துஓட — முற்றிக்
குரிசில் அடையாரைக் கொண்டகூட்டு எல்லாம்
பரிசில் முகந்தன பாண். பு. வ. 16

[தம் மனை தீயிடப்பட்டும் கொள்ளையடிக்கப்பட்டும் பாழாயினமை குறித்து உறவினருடன் வருந்தி மகளிர் ஓடவும் பகைவரிடம் வீரர் கொள்ளையிட்ட பொருள்கள் பாணருக்குப் பரிசாக வழங்கப்பட்டன.

அடையாரைக் கொண்டன பாண் பரிசில் முகந்தன என்பது துறைச்செய்தி.]

குறுவஞ்சி

'மடுத்து எழுந்த மறவேந் தற்குக்
கொடுத்து அளித்துக் குடிஓம் பின்று.' பு. வ–17

தாள்தாழ் தடக்கைத் தனிமதி வெண்குடையான்
வாள்தானை வெள்ளம் வரஅஞ்சி—மீட்டான்
மலையா மறமன்னன் மால்வரையே போலும்
கொலையானை பாய்மாக் கொடுத்து. பு. வ. 17

[போரிடல் விரும்பாத பகைமன்னன் வஞ்சிவேந்தனுடைய தானைவெள்ளம் வந்த அளவிலேயே யானைகளையும் குதிரைகளையும் திறைப் பொருளாக வழங்கித் தன் நாட்டினைக் கேட்டினின்றும் காப்பாற்றினான்.

மலையாமன்னன் வெண்குடையானுக்கு யானை பாய்மாக் கொடுத்து மீட்டான் என்பது துறைச்செய்தி]

குறுவஞ்சியின் பக்கம்

கட்டூரது வகை கூறினும்
அத்துறைக்கு உரித்தாகும். பு. வ. 18

அவிழ்மலர்க் கோதையர் ஆட ஒருபால்
இமிழ்முழுவம் யாழோ (டு) இயம்பக்—கவிழ்மணிய
காய்கடா யானை ஒருபால் களித்(து) அதிரும்
ஆய்கழலான் கட்டூர் அகம். பு. வ 18

[வஞ்சி வேந்தனுடைய பாசறையில் ஒருபால் மகளிர் ஆடவும் ஒருபால் முழவும் யாழும் ஒலிப்பவும் ஒருபால் களிறுகள் மதமயக்கம் கொண்டு முழங்கா நிற்கும்.

ஆய்கழலான் கட்டூரில் கோதையர் ஆட யாழ்முழவம் இமிர யானை அதிரும் என்பது துறைச்செய்தி.]

ஒரு தனி நிலை :

'பொரு படையுள் கற்சிறை போன்று
ஒருவன் தாங்கிய நிலைஉரைத் தன்று'. பு. வ. 19

வீடுஉணர்ந் தோர்க்கும் வியப்பாமால் இந்நின்ற
வாடல் முதியாள் வயிற்றிடம் — கூடார்

பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா
இரும்புலி சேர்ந்த இடம். பு. வ. 19

[பகைவர் பெரிய படைவெள்ளம் தன்னை நோக்கிவரவும் கலக்கமின்றி இடப்பெயராது நின்று எதிர்த்த புலிபோல் வானாகிய இவ்வீரனைப்பெற்ற, இப்பொழுது மெலிந்து காணப் படும் முதியாளுடைய வயிறு வீடுபேற்றை உணர்ந்த ஞானி யருக்கும் வியப்பைத் தருகிறது என்றவாறு.

கூடார் பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா இரும் புலி என்பது துறைச்செய்தி.]

தழிஞ்சி :

'அழியுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக்
கழிதறு கண்மை காதலித்து உரைத்தன்று'. பு. வ. 20

கான்படு தீயின் கலவார்தன் மேல்வரினும்
தான்படை தீண்டாத் தறுகண்ணன் — வான்படர்தல்
கண்ணியபின் அன்றிக் கறுத்தார் மறந்தொலைதல்
எண்ணியபின் போக்குமோ எஃகு. பு. வ. 20

தழிஞ்சி—தழுவல். (மறத்துறையிலும் அறம் தழுவுதல்.)

[காட்டுத் தீப்போலப் பகைவர்கள் தன்னைநோக்கி விரைந்து வரினும் அவர்கள் தோற்றுப் புறங்காட்டி ஓடலைக் கருதாது பொருது வீரசுவர்க்கம் எய்துதலைக் கருதிய வழியே தான் தன்வேலினை அவர்கள்மீது வீரன் செலுத்துவான் என்றவாறு.

தறுகண்ணன் கறுத்தார் மறம் தொலைதல் எண்ணிய பின் எஃகு போக்குமோ என்பது துறைச்செய்தி.]

பாசறை வஞ்சி

'மதிக்குடைக்கீழ் வழிமொழிந்து மன்னரெல்லாம் மறந்துறப்பவும்
பதிப்பெயரான் மறவேந்தன் பாசறை இருந்தன்று.' பு. வ. 21

கரும்பொடு காய்நெல் கனைஎரி ஊட்டிப்
பெரும்புனல் வாய்திறந்த பின்னும்—சுரும்பின்
தொகைமலிந்த தண்குவளைத் தூமலர்த் தாரான்
பகைமெலியப் பாசறை உளான். பு. வ. 21

[கரும்பு வயல்களையும் நெல் வயல்களையும் கொளுத்தி நீர் நிலைகளின் கரைகளை உடைத்துப் பகைவர் நாட்டை அழித்த பின்னும் வஞ்சிவேந்தன், பகைவர் மெலிவுகண்டு சினம் நீங்காது பாசறையிலேயே உள்ளான் என்று கண்டோர் கூறியவாறு.

பகை மெலியவும் வேந்தன் பாசறை உளான் என்பது துறைச்செய்தி.]

பெருவஞ்சி :

'முன்அடையார் வளநாட்டைப்
பின்னரும் உடன்று எரிகொளீஇ யன்று'. பு. வ. 22

பீடுஉலாம் மன்னர் நடுங்கப் பெரும்புகை
ஊடுஉலாய் வானத்து ஒளிமறைப்ப — நாடெல்லாம்
பின்னும் பிறங்குஅழல் வேய்ந்தன பெய்கழற்கால்
மன்னன் கனல மறம். பு வ. 22

[வஞ்சி அரசனுக்குச் சினம் மிகுகையினாலே பகை மன்னர் நடுங்கவும் புகைவானத்தில் சந்திர சூரியர்களை மறைப்பவும் நாடுமுழுதும் மீண்டும் தீயிட்டான் என்றவாறு.

மன்னன் மறம் கனல நாடெல்லாம் பின்னும் பிறங்கு அழல் வேய்ந்தன என்பது துறைச்செய்தி]

பெருஞ்சோற்று நிலை :

'திருந்தார் தெம்முனை தெறுகுவர் இவர்எனப்
பெருஞ்சோறு ஆடவர் பெறுமுறை வகுத்தன்று.' பு.வ 23

இயவர் புகழ எறிமுரசு ஆர்ப்பக்
குயம்வரி வேங்கை அனைய — வயவர்
பெறுமுறையால் பிண்டங்கோள் ஏவினன் பேணர்
இறுமுறையால் எண்ணி இறை. பு வ. 23

[கருவியிசை பாடுவோர் புகழவும் முரசுகள் ஒலிக்கவும் வாள்போன்ற வளைந்த கோடுகளை உடைய புலியை ஒத்த வீரர்களுக்குப் பகைவரை அழிக்க எண்ணிய வஞ்சிவேந்தன் தானும் படையாளரும் உடன்உண்பான் போல்வது ஒரு முகமனாகப் பிண்டித்து வைத்த உண்டியைக் கொடுத்தல் மேயினான் என்றவாறு.

வயவர் பெறுமுறையால் பிண்டங்கோள் இறை ஏவினான் என்பது துறைச்செய்தி]

நல்லிசை வஞ்சி :

‘ ஒன்னாதார் முனைகெட இறுத்த
வென்வேல் ஆடவன் விறல்மிகுத் தன்று ’. பு. வ. 24

மடங்கலில் சீறி மலைத்தெழுந்தார் மண்மேல்
இடங்கெடச் சென்றிறுத்த பின்னும்— நுடங்கெரிபோல்
வெல்லப் பெருகும் படையாற்கு வேந்தன்மேல்
செல்லப் பெருகும் சினம் பு. வ. 24

[சிங்கம்போல வெகுண்டு தன்னை எதிர்த்த வீரர் தம் நாடு முழுமையும் கைப்பற்றிய பின்னும் தீப்போலப் பகைவரை வெல்லும் படையை உடைய வஞ்சிவேந்தன் சினம் இன்னும் பெருகி நிற்கின்றதே என்று கண்டோர் சொற்றவாறு.

மண்மேல் இறுத்த பின்னும் படையாற்குச் சினம் பெருகும் என்பது துறைச்செய்தி.]

நல்லிசை வஞ்சியின் பக்கம் :

‘ இறுத்தபின் அழிபு இரங்கல்
மறுத்து உரைப்பினும் அத்துறை ஆகும் ’ பு. வ 25

குரை அழல் மண்டிய கோடு உயர்மாடம்
சுரையொடு பேய்ப்பீர்க்கும் சுமந்த — நிரைதிண்தேர்ப்
பல்லிசை வென்றிப் படைக்கடலான் சென்று இறுப்ப
நல்லிசை கொண்டு அடையார் நாடு. பு. வ. 25

[வஞ்சிவேந்தன் நல்ல வெற்றிப் புகழ்கொண்டு தங்குசையாலே பகைவர் நாட்டு மாடங்கள் தீயால் அழிந்து சுரையும் பீர்க்கும் படரும் நிலையின ஆயின என்பதாம்.

நல்லிசைகொண்டு படைக்கடலான் சென்றிறுப்ப அடையார்நாட்டு மாடங்கள் சுரையும் பீர்க்கும் படரப் பெற்றன என்பது துறைப்பொருள்.]

ஒத்த நூற்பாக்கள்

‘ இயங்குபடை அரவம் எரிபரந்து எடுத்தல்
வயங்கல் எய்திய பெருமை யானும்
கொடுத்தல் எய்திய கொடைமை யானும்
அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருளின்று உய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்
பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்
வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்
குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்
அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பின் துறைபதின் மூன்றே .’
தொல். பொ. 65

வாடா வஞ்சி வஞ்சி அரவம்
கூடார்ப் பிணிக்கும் குடைநிலை வாள்நிலை
கொற்றவை நிலையே கொற்ற வஞ்சி
குற்றமில் சிறப்பின் கொற்ற வள்ளை

பேராண் வஞ்சி மாராய வஞ்சி
நெடுமொழி வஞ்சி முதுமொழி வஞ்சி
உழபுல வஞ்சி மழபுல வஞ்சி
கொடையின் வஞ்சி குறுவஞ் சிய்யே
ஒருதனி நிலையொடு தழிஞ்சி பாசறை
பெருவஞ் சிய்யே பெருஞ்சோற்று நிலையொடு
நல்லிசை வஞ்சிஎன நாட்டினர் தொகுத்த
எஞ்சாச் சீர்த்தி இருபத் தொன்றும்
வஞ்சியும் வஞ்சித் துறையும் ஆகும். பு. வெ. மா, 3

'அரவம் எடுத்தல் வயங்கியல் ஈகை விலக்கருமை
விரவு தனிச்சேவகம்வென்றி கூறல்வென்றூர் விளக்கம்
நிரவும் வழிவொடுசோற்றுநிலை கொற்றவர் மெலிவும்
பரவு தழிஞ்சியென்றின்னவைவஞ்சியின்பாற்படுமே'.
வீர: 101

8

உழிஞையின் இலக்கணம்

607 உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுதல் அரணம் முற்றலும் காத்தலும்
எனஇரு வகையது அதுஎன மொழிப

இஃது உழிஞைத்திணை மருதத்திணைக்குப் புறன் என்பதூஉம் அதன்பொருட்டிறனும் கூறுகின்றது.

(இ-ள்) மேற்கூறிய புறத்திணை ஏழனுள் உழிஞைத் திணை, முற்கூறிய அகத்திணை ஏழனுள், மருதத்திணைக்குப் புறனும்; வேற்று வேந்தன் குலத்திற்கு எல்லாம் எஞ்சாத முதலாய் வருகின்ற அரணைச் சென்ற வேந்தன் வளைத்துக் கோடலும், இருந்த வேந்தன் காத்துக் கோடலும் என இரண்டு வகையினையும் உடைத்தாம் அத்திணை என்று கூறுவர் அறிந்தோர் என்றவாறு.

புறத்திணை பலவற்றுள், 'உழிஞை தானே மருதத்துப் புறனே' என இதனைப் பிரித்து ஓதினர், இருபெரு வேந்தர்

தம்முள் மாறுகொண்டவழி எதிர் செலற்கு ஆற்றாது போய் மதிலகத்து இருந்த வேந்தன் மதில் பெரும்பான்மையும் மருதத்து இடத்தது ஆகலானும், அம்மதிலை முற்றுவோனும் அந்நிலத்து இருத்தலானும், ஒருவன் வாயில் வேண்டத் திறவாது அடைத்திருந்த ஒப்புமையானும், உள் இருந்த வனும் புறப்பட விரும்புதலானும், மருதம்போல இதற்கும் பெரும்பொழுது வரைவின்மையானும், சிறுபொழுதும் விடியற்காலமே போர்செய்தற்குக் காலம் ஆதலானும் என்பது. எனவே, உழிஞைத்திணை மருதத்திணைக்குப் புறன் என்றல் ஆணைகூறல் அன்று ஆயிற்று. 9

விளக்கம்

உழிஞை மருதத்திற்குப் புறனாகுமாற்றிற்கு நச்சினார்க்கினியர் வரைந்த விளக்கத்தையே இவ்வாசிரியரும் வரைந்துள்ளார்.

இனி, உரையாசிரியர் ‘உழிஞை மருதத்திற்குப் புறனாயவாறு என்னைஎனின், வஞ்சியில் சென்ற வேந்தனொடு போர்செய்தல் ஆற்றாது உடைந்து மாற்றுவேந்தன் அரண் வலியாகப் போர்செய்யும் ஆதலானும், அவர் நாட்டகத்து ஆகலானும் அவ்வழிப் பொருவார்க்கு விடியற்பொழுது காலமாகலானும் அதற்கு இது புறனாயிற்று’ என்பர். தொல். பொ. 66

மருதத்திற்கும் உழிஞைக்கும் அரண் உடைய ஊர்களே நிலைக்களம் ஆதலானும், புலத்தலும் ஊடலும் மருத ஒழுக்கம் ஆதல்போல முற்றிய ஊர் அரணின் அகப்புறப் படைகள் தம்முள் கலாய்த்து இகலுதலே உழிஞை ஆதலானும் மருதத்திற்கு உழிஞை புறனாயிற்று. பாரதியார். புற. 9 உரை

உழிஞை முதற்கூற்றின் துறைகள்

608 முடிமிசை உழிஞை சூடி ஒன்னார்
கொடிநுடங்கு எயில்கோளக் குறித்த உழிஞையும்[1]
குடைநாட் கோளொடு[2] வாணாட் கோளும்[3]
கடைநாள் பௌவத்து அதிர்முரசு உழிஞையும்[4]
பற்றலர் மதில்கொளப் பரந்துஎழு தானையொடு
கொற்றவன் எழுதரு கொற்ற உழிஞையும்[5]
மிகப்படும் ஊக்கம்முதல் வேந்துஉறு தலின்அரண்
அகப்படும் என்ற அரச உழிஞையும்[6]
வண்ண மலர்த்தார் மன்னனைச் சோஎறி
கண்ணன்என்று ஏத்திய கந்தழி உழிஞையும்[7]
இயங்குஅரண் அழித்தனன் இறையும்இது புனைந்துஎன
வயங்கினர் உழிஞையை வழுத்தும்முற்று உழிஞையும்[8]
காந்தள் வேய்ந்தனன் சேந்தனும் போர்க்குஎனின்
வேந்தரில் எவர்பூ விரும்பார் என்றலும்[9]
மறத்துறை மலிந்து மண்டி மாற்றார்
விறற்கொடி மதிலின் புறத்துஒருங்கு இறுத்தலும்[10]
வாஅள் மறவர் வணங்கார் வைகிய
நீஇள் மதிலின் நிலைஎடுத்து இயம்பலும்[11]
வென்றியொடு நெடும்புகழ் விளைக்கும்என்று இறைவன்
தோன்று வந்த தோல்மலிபு உரைத்தலும்[12]
கருதார் காக்கும் கடிமதில் குமரிமேல்
ஒருதான் ஆகி உடன்றகுற் றுழிஞையும்[13]
வளையினம் ஒலிப்ப வயிர்கிளர்ந்து ஆர்ப்ப
மிளைபிறக்கு ஒழிய விரைந்த பக்கமொடு[14]
பாடருந் தோற்படை பீடுசால் மறவர்
ஆடலோடு அடைந்த பக்கமும்[15] அதாஅன்று
விண்தோய் அருமிளை கடந்துகுண்டு அகழிப்
புறத்துவந்து இறுத்தலும்[16] போர்க்குஅருங் கிடங்கின்
பற்றல ரோடுபொரூஉம் பாசி நிலையும்[17]
தோடுகழல் மறவர் துன்னித் துன்னார்

இடுசூட்டு இஞ்சியின் ஏணி சார்த்தலும்[18]
ஆடுதல் ஒல்லா அரண்கா வலவர்
ஈடுஅற ஏணியின் இவர்எயில் பாசியும்[19]
வேஎய் பிணங்கிய மிளைசூழ் அரணம்
பாஅய் புள்ளின் பாய்ந்தமூ துழிஞையும்[20]
முரண்அகத்து அவிய முதுசினம் சிறந்தோன்
அரண் அகத் தோரை அடல்அகத் துழிஞையும்[21]
அருமுரண் அதனுல் அமர்வரவு அறியாச்
செருமதி லோர்சிறப்பு உரைத்த பக்கமும்[22]
அகத்தோன் காலை அதிர்முரசு இயம்பப்
புறத்தோன்வஞ் சினம்புகல் முற்று முதிர்வும்[23]
மேவலர்க் கடந்து வேலற்கு அருங் காவலோடு
யானைகைக் கொண்ட யானைகைக் கோளும்[24]
முற்றுவிட்டு அகல மற்ருெரு வேந்தன்
வெற்றியம் படைவருஉம் வேற்றுப்படை வரவும்[25]
எண்ணூர் ஆர்எயில் கழுதை ஏரின்
உண்ணு வரகுகோள் உழுதுவித் திடுதலும்[26]
புண்ணிய நீரில் புரையோர் ஏத்த
மண்ணுதல் புரிந்த வாள்மங் கலமும்[27]
கோமகன் அடிமலர் குறுகலர் புனைய
மாமதில் குமரியோடு மணந்தமங் கலமும்[28]
தொடர்ந்துஎயில் கொண்டோன் சூழ்மதில் வேந்தன்
மடந்தையை வேண்டிய மகட்பால் இகலும்[29]
தூவடி வேலவன் தோகுத்தநிதி அளந்து
சேவடி வணங்கத் திறைகொண்டு பெயர்தலும்[30]
பேணு மன்னர் பெருமறங் காற்றி
ஆணை போக்கி அடிப்பட இருத்தலும்[31]
எம்மதில் உள்ள இகலுடை வேந்தரும்
அம்மதில் அடியின் அடைந்ததோகை நிலையும்என[32]
முரண்தரு புரிசை முற்றினர் கோடல்
இரண்டுதலை இட்ட முப்பதிற்றுத் துறைத்தே.

இது மேற்கூறிய உழிஞைப்பகுதி இரண்டனுள் முன்னையது இத்துணைத்துறை உடைத்து என்கின்றது.

(இ-ள்) முடிமிசை உழிஞை சூடி ஒன்னார் கொடிநுடங்கு எயில் கொளக் குறித்த உழிஞை முதல் எம்மதில் உள்ள இகலுடை வேந்தரும் அம்மதிலடியின் அடைந்த தொகைநிலை ஈருகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டு துறை உடைத்தாம். மாறுபாட்டை விளைக்கும் மதிலைச் சென்ற வேந்தன் முற்றிக் கோடல் என்றவாறு.

விளக்கம்

1 உழிஞை :

தலையில் உழிஞைப் பூவினைச் சூடிப் பகைவருடைய கொடிகள் அசையும் அரணத்தைக் கொள்ளக் கருதுதல்.

2 குடைநாட்கோள் :

பகைவர் மதிலை முற்றுகையிட்டுக் கைப்பற்றக் கருதிய உழிஞை வேந்தன் நல்ல நாளில் நல்ல நேரத்தில் தன் குடையைப் புறவீடு செய்தல்.

3 வாள்நாட்கோள் :

உழிஞை மன்னன் நல்ல நாளில் நல்ல நேரத்தில் தன் வாளினைப் புறவீடு செய்தல்.

4 முரச உழிஞை :

ஊழி இறுதியின் கடல் வெள்ளம்போல ஒலிக்கும் முரசத்திற்கு உழிஞை சூட்டிச் சிறப்பித்தல்.

5 கொற்ற உழிஞை :

பகைவருடைய மதிலைக் கைப்பற்றப் பரவிஎழும் சேனைகளோடு உழிஞை மன்னன் புறப்படுதல்.

6 அரச உழிஞை :

மேம்பட்ட ஊக்கம் முதலியன உழிஞை வேந்தனிடத்து உள ஆகையால் பகைமன்னனுடைய அரண் அவனால் முற்றிக் கொள்ளப்படும் என்று கூறுதல்.

7 கந்தழி உழிஞை :

பல நிறங்களை உடைய பூக்கள் தொடுத்து அமைக்கப் பட்ட மாலையை அணிந்த உழிஞை மன்னனை வாணாசுர னுடைய சோ என்ற பெயருடைய மதிலை அழித்த கண்ணனுடைய அமிசமாவான் என்று புகழ்தல்.

8 முற்றுழிஞை :

உழிஞைப் பூவினைச் சூடியே, வானத்தில் இயங்கிய மூன்று கோட்டைகளையும் சிவபெருமான் அழித்தான் என்று விளங்கும் பூங்கொத்துக்களை உடைய உழிஞை யைப் புகழ்தல்.

9 காந்தள் :

முருகப்பெருமானும் போருக்குப் புறப்படுமுன் பூக்களில் ஒன்றாகிய காந்தளைச் சூடினன் ஆதலின் அரசருள் பூவினை அணிய விரும்பாதார் ஒருவரும் இரார் என்றல்.

10 புறத்திறை :

வீரத்துறையில் செறிந்து பலராகத் திரண்டு உழிஞை வீரர் பகைவருடைய கொடிகள் கட்டப்பட்ட ஆற்றல் மிக்க கோட்டையின் புறத்து ஒருசேரத் தங்குதல்.

11 மதில்நிலை :

வாளினை ஏந்திய உழிஞை வீரர் பகைவருடைய நீண்ட மதிலின் உயர்வு அகலம் திண்மை முதலியவற்றை

எடுத்துக் கூறுதல். இஃது ஆரெயில் உழிஞை எனவும் படும்.

12 **தோல் மலிபு உரைத்தல் :**

உழிஞை மறவர் வெற்றியோடு புகழ் உண்டாக்கும் என்று தொன்றுதொட்டு வந்த தம் கேடகப் படையின் சிறப்பினை எடுத்து உரைத்தல்.

13 **குற்றுழிஞை :**

பகைவனுடைய அழிவில்லாத மதில்மீது ஏறி உழிஞை வீரன் தான் ஒருவனேயாகி நின்று மாறுபாட்டை மிகுத்தல்.

14 **குற்றுழிஞைப் பக்கம் :**

சங்கினங்கள் ஒலிப்ப ஊதுகொம்புகள் ஆரவாரம் செய்யக் காவற்காடு பின்னிடுமாறு அதனைக் கடத்தல்.

15 **குற்றுழிஞையின் மற்றொரு பக்கம் :**

பெருமை கூறுதற்கு அரிய கிடுகுப்படையினை உடைய உழிஞை மறவர் புறமதிலைக் கடந்து மகிழ்ச்சியால் கூத் தாடிக்கொண்டு உள்நோக்கி வருதல்.

16 **புறத்துழிஞை :**

வானத்தை அளாவிய கடத்தற்கு அரிய காவல் காட் டினைக் கடந்து ஆழமான அகழியின் வெளிக்கரையிலே உழிஞை வீரர் வந்து சேருதல்.

17 **பாசிநிலை :**

போரிடுதற்கு அரிய அகழியிலே பகைவரோடு உழிஞை வீரர் பாசிபோல ஒருகால் நெருங்கியும் ஒருகால் விலகி யும் பொருதல்.

18 ஏணி சாத்தல் :

வீரக்கழல் அணிந்த உழிஞை வீரர் பகைவருடைய அக மதிலை அடைந்து, அம்பு எய்து மறைவதற்கு உரிய உறுப்புகளைக் கொண்ட அம்மதிலின் மீது ஏறுவதற்கு ஏணியைச் சாத்தியமை கூறல்.

19 எயிற்பாசி :

எளிதில் கொலைசெய்தல் இயலாத பேராற்றலராகிய அரண்காவலர் தம்மை எதிர்க்கும் ஆற்றல் இலராக ஏணி மீது ஏறும் செயலைக் கூறுதல். பாசிபோலப் படிந்து ஏறுதலின் எயிற்பாசி ஆயிற்று.

20 முதுழிஞை :

மூங்கில்கள் ஒன்றோடொன்று பிணைந்த காவற்காட்டால் சூழப்பட்ட அரணத்தின் உட்புறம் பரவிக் காணப்படும் பறவை இனங்கள் போலப் பாய்ந்து உட்புகுதல்.

21 அகத்துழிஞை :

வெகுளிமிக்க உழிஞை வீரர் மதிலின் உட்புறம் இருந்த வீரரை அவர் மனத்து மாறுபாடு நீங்குமாறு பொருது வெல்லுதல்.

22 அகத்துழிஞைப் பக்கம் :

மதிலின் உயர்வு அகலம் திண்மை இவற்றை மனத்துக் கொண்டு இம்மதிலை யாரும் கைப்பற்றுதல் இயலாது என்று எண்ணி மதில் முற்றுகைப்போர் நிகழ்தலை அறியாத போர் நிகழும் மதில் அகத்து இருந்தோர் மகிழ்ச்சி குறையாமல் வாழ்ந்துவரும் சிறப்பைக் கூறு தலும் அகத்து உழிஞையாம். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலையைப் பதிப்பித்தோர் முதுழிஞையின் பாற்படுத்திய பொருத்தமின்மையும் உணர்க.

23 முற்று முதிர்வு :

மதிலகத்திருந்த மன்னனுடைய முரசம் காலையில் வழக்கம்போல முழங்க அதுகண்டு பொருத உழிஞை மன்னன் மாலைக்குள் மதிலைக் கைக்கொண்டுவிடுதல் போன்ற வஞ்சினம் உரைத்தல்.

24 யானை கைக்கோள் :

பகைவரை அழித்து வெல்லுதற்கு அரிய காவலையும் யானைப் படையையும் உழிஞை மன்னன் கைப்பற்றுதல்.

25 வேற்றுப்படை வரவு :

உழிஞை மன்னன் முற்றுகையை விடுத்துத் தன்னிடம் போரிடவரும் நிலையை உண்டாக்கி, உள்ளிருந்த மன்னனுக்கு உறவான மற்றொரு வேந்தனுடைய வெற்றியைத் தரும் படை, உதவிக்கு வந்தடைதல்.

26 உழுது வித்திடேல் :

பகைவருடைய கைப்பற்றுதற்கு அரிய மதிலின் உட்புறத்தைக் கழுதை ஏர்கொண்டு உழுது பலகறையினையும் கொள்ளினையும் விதைத்திடுதல்.

27 வாள் மங்கலம் :

உழிஞை மன்னன் சான்றோர் வாழ்த்துக்கூறப் புண்ணிய நதிகளின் நீரினால் தனக்கு வெற்றி வழங்கிய வாளினைக் கழுவுதல்.

28 மணந்த மங்கலம் :

உழிஞை வேந்தன் தன் அடிமலர்களைப் பகைவராயிருந்த மதிலகத்தோர் வணங்க அழித்தற்கரிய மதிலைக் கைப்பற்றி அதனைத் தனதாக்கிக் கோடல். மதிலைக் கைக்

கொண்ட மன்னன் வெற்றி நீராடுதல் குறித்துப் புறப் பொருள் வெண்பாமாலை இதனை மண்ணு மங்கலம் என்னும்.

29 மகட்பால் இகல் :

புறமதில் முதலியவற்றைக் கைப்பற்றிய உழிஞை வேந்தன் அகமதிலின் உள் இருக்கும் மன்னனுடைய மகளைத் தனக்கு மணம் செய்து கொடுக்குமாறு கேட்டல்.

30 திறை கொண்டு பெயர்தல் :

புலால் மணங் கமழும் வடித்து எடுக்கப்பட்ட வேலை ஏந்திய உழிஞை மன்னன், பலவாறு தொகுக்கப்பட்ட திறைப்பொருள்களை அளித்து மதிலகத்து மன்னன் தன் சிவந்த அடிகளை வணங்க, இகல் ஒழிந்து அவன் அளித்த திறைப் பொருள்களோடு மீளுதல்.

31 அடிப்பட இருத்தல் :

தன் தலைமையை ஏற்றுக்கொள்ளாத மதிலகத்து மன்னன் வீரத்தைப் போக்குமாறு தன் வீரருக்கு ஆணை யிட்டுத் தன் பாசறையிலேயே உழிஞை மன்னன் பல நாள் தங்குதல்.

32 தொகை நிலை :

உழிஞை மன்னனோடு பண்டு மாறுபாடு கொண்டிருந்த வேற்று மதில்களை உடைய மன்னரும் உழிஞையான் ஆற்றல் கண்டு அவன் முற்றிக் கைப்பற்றிய மதிலை அடைந்து அவனைத் தலைவனாக ஏற்றுக்கொள்ளுவ தற்குக் கூட்டமாக அமைந்திருத்தல்.

இவ்வாறு உழிஞையின் முற்கூறுகிய மதில் முற்றுதல் முப்பத்திரண்டு துறைகளை உடையது.

எயில் கொளக் குறித்தது

' முடிமிசை உழிஞை சூடி ஒன்னார்
கொடிநுடங்கு ஆரெயில் கொளக்கருதின்று. ' பு. உ. 1

உழிஞை முடிபுனைந்து ஒன்றைப்போர் மன்னர்
விழுமதில் வெல்களிறு பாயக்—கழிமகிழ்வு
எய்தாரும் எய்தி இசைநுவலும் சீர்த்தியனே
கொய்தார மார்பினெங் கோ, பு. உ. 1

[என் மன்னன் உழிஞைப் பூவை முடியிற் சூடிப் பகைவருடைய சிறந்த மதிற் கதவங்களைத் தன் களிறு அழிக்கச் சான்றோரும் களிப்பெய்திப் புகழ் பேசும் மிகுபுகழினன் ஆவான்.

எம்கோ உழிஞை முடிபுனைந்து ஒன்னுமன்னர் விழுமதில் வெல்களிறு பாய இசைநுவலும் சீர்த்தியான் என்பது துறைச்செய்தி]

குடை நாட் கோடல்

' செற்று அடையார் மதில் கருதிக்
கொற்ற வேந்தன் குடைநாள் கொண்டன்று ' பு. உ. 2

நெய்அணிக செவ்வேல் நெடுந்தேர் நிலைபுகுக
கொய்உளைமா கொல்களிறு பண்விடுக—வையகத்து
முற்றக் கடிஅரணம் எல்லாம் முரண் அவிந்த
கொற்றக் குடைநாள் கொள. பு. உ. 2

[நம் அரசன் குடையைப் புறவீடு செய்த அளவில் பகைவர் அரண்கள் முரண் நீங்கின; இனிப் போர் இராது ஆதலின் வேலுக்கு நெய் அணிந்து தேர்களை நிலைபுகுத்தி மாவினையும் களிற்றினையும் போர் ஒப்பனைகளைக் களைக என்றவாறு.

முற்றக் கடியரணம் எல்லாம் முரண் அவிந்த கொற்றக் குடை நாட்கொள என்பது துறைச்செய்தி.]

வாள் நாட் கோடல் :

‘ கலந்துஅடையார் மதில்கருதி
வலந்தருவாள் நாள்கொண்டன்று ’. பு. உ. 3

வாணாள் கொளலும் வழிமொழிந்து வந்தடையாப்
பேணார் பிறைதொடும் பேம்மதில் — பூண்ஆர்
அணிகொள் வனமுலையார் ஆடுஅரங்கம் ஏறிப்
பிணிகொள்பேய் ஆடும் பெயர்த்து. பு உ. 3

[உழிஞைவேந்தன் வாளினைப் புறவீடுசெய்த அளவில் அவனைச் சரணடையாத உயர்ந்த அச்சந்தரும் மதிலகத்து மகளிர்ஆடும் அரங்குகளில் பேய்கள் தீநிமித்தம் காட்டி ஆடத் தொடங்கி விட்டன என்றவாறு.

வாள் நாட் கொளலும் அடையார்மதில் பேய் ஆடும் என்பது துறைச்செய்தி.]

முரச உழிஞை :

‘ பொன்புனை உழிஞை சூடி மறி அருத்தும்
திண்பிணி முரச நிலைஉரைத் தன்று ’. பு. உ. 4

கதிர்ஓடை வெல்களிறு பாயக் கலங்கி
உதிரா மதிலும் உளகொல் — அதிருமால்
பூக்கண் மலிதார்ப் புகழ்வெய்யோன் கோயிலுள்
மாக்கண் முரச மழை. பு. உ. 4

[ஒளிவீசும் நெற்றிப்பட்டம் அணிந்த களிறு பாய்தலினாலே தகராத மதிலும் உண்டோ? உழிஞைவேந்தன் அரண்மனையில் பகைவர் அரணைக் கொள்ளக்கருதி முரசுகள் இடி-போல முழங்கத் தொடங்கி விட்டன என்றவாறு.

புகழ் வெய்யோன் கோயிலுள் முரசம் மழைபோல முழங்கும் என்பது துறைச்செய்தி]

கொற்ற உழிஞை

' அடையாதார் அரண்கொள்ளிய
படையோடு பரந்தெழுந்தன்று ' பு. உ. 5

வெள்வாள் கருங்கழல்கால் வெஞ்சுடர்வேல் தண்ணளியான்
கொள்வான் கொடித்தானை கொண்டெழுந்தான்-நள்ளாதார்
அஞ்சுவரு வாயில் அருமிளைக் குண்டு அகழி
மஞ்சு இவரும் ஞாயில் மதில். பு. உ. 5

[பகைவருடைய அஞ்சத்தக்க வாயில், அரிய காவற்காடு, ஆழ்ந்த அகழி, வானளாவிய, அம்பு எய்து மறையும் இருப்பிடங்கள் இவற்றை உடைய மதிலைக் கைப்பற்ற உழிஞை வேந்தன் கொடியை உயர்த்திய சேனையோடு புறப்பட்டான் என்பது.

தண்ணளியான் நள்ளாதார் மதில் கொள்வான் தானை கொண்டு எழுந்தான் என்பது துறைச்செய்தி.]

அரச உழிஞை

' தொழில் காவல் மலிந்து இயலும்
பொழில் காவலன் புகழ்விளம்பின்று ' பு. உ. 6

ஊக்கம் முரண்மிகுதி ஒன்றிய நற்சூழ்ச்சி
ஆக்கம் அவன்கண் அகலாவால்—வீக்கம்
நகப்படா வென்றி நலமிகு தாராற்கு
அகப்படா இல்லை அரண். பு. உ. 6

[மன எழுச்சியும், மாறுபாட்டின் மிகுதியும், நல்ல ஆராயுந்திறனும் செல்வமும் பெருமையும் வெற்றியும் உடைய உழிஞை வேந்தன் கைப்பற்ற இயலாத கோட்டை எதுவும் இன்று என்றவாறு.

நகப்படா வென்றி நலமிகு தாரார்க்கு அகப்படா இல்லை அரண் என்பது துறைச்செய்தி.]

கந்தழி உழிஞை :

' மாவுடைத்தார் மணிவண்ணன்
சோஉடைத்த மறம்நுவலின்று. ' பு. உ. 7

அன்று எறிந் தானும் இவனால் அரண் வலித்து
இன்று இவன் மாறா எதிர்வார் யார்—என்றும்
மடைஆர் மணிப்பூண் அடையாதார் மார்பில்
சுடர்ஆழி நின்று எரியச் சோ. பு. உ. 7

[பகைவராகிய வாணாசுரன் முதலியோர் மார்பில் தன் சக்கரம் அழலைச் செய்யச் சோ என்ற மதிலை அன்று கண்ணனாக அவதரித்த காலை அழித்தவன் நம் அரசனே ஆதலின் இன்றும் இவனுக்கு மாறாக எதிர்ப்பார் ஒருவரும் இரார்.

அன்று சோ எறிந்தானும் இவனால் என்று மன்னனை மாயோனாகக் கருதிக் கூறியதன்கண் துறைச்செய்தி உள்ளது.]

முற்றுழிஞை :

' ஆடுஇயல் அவிர் சடையான்
சூடியபூச் சிறப்பு உரைத்தன்று. ' பு. உ. 8

மயங்காத தார்ப்பெருமை மற்றறிவார் யாரே
இயங்கு அரணம் மூன்றும் எரித்தான்—தயங்கு இணர்ப்
பூக்கொள் இதழிப் புரிசெஞ் சடையானும்
மாக்கொள் உழிஞை மலைந்து. பு. உ. 8

[மும்மதில்களை அழித்த சிவபெருமானும் உழிஞை மலைந்தே போரிட்டான் ஆதலின் இவ்வுழிஞைப் பூமாலையின் பெருமையை யார் எடுத்துக் கூறுதல் இயலும் என்றவாறு.

இதழிப் புரிசெஞ்சடையானும் உழிஞை மலைந்து அன்று இயங்கு அரணம் மூன்றும் எரித்தான் என்பது துறைச் செய்தி.]

காந்தள் :

‘கருங்கடலுள் மாத்தடிந்தான்
செழுங்காந்தள் சிறப்புஉரைத்தன்று’. பு. உ. 9

குருகு பெயரிய குன்றுஎறிந் தானும்
உருகெழு காந்தள் மலைந்தான் — பொருகழல்
கார்கருதி வார்முரசம் ஆர்க்கும் கடல்தானைப்
போர்கருதி யார்மலையார் பூ. பு. உ. 9

[கிரவுஞ்சமலையை வேலான் இரு கூறுக்கிய முருகனும் பூக்களுள் ஒன்றாகிய காந்தளை அணிந்தே போருக்குப் புறப்பட்டான் ஆதலின் தானைவேந்தர் போர்கருதின் பூ அணியாது செல்லார் என்றவாறு.

குருகு பெயரிய குன்று எறிந்தானும் காந்தள் மலைந்தான் என்பது துறைச்செய்தி.]

புறத்திறை :

‘மறத்துறை மலிந்து மண்டி மாற்றார்
விறற்கோடி மதிலின் புறத்து இறுத்தன்று’. பு. உ. 10

புல்லார் புகலொடு போக்குஒழியப் பொங்கினனாய்ப்
பல்லார் மருளப் படைபரப்பி — ஒல்லார்
நிறத்துஇறுத்த வாள்தானை நேரார் மதிலின்
புறத்துஇறுத்தான் பூங்கழலி னான். பு. உ. 10

[வாட்படையை உடைய பகைவர் மதிலின் புறத்தே அவர்கள் வெளிச் செல்லுதலோ அவர்தமர் உட்புகுதலோ இயலாவகை உழிஞைவேந்தன் படைகளைச் சூழ்வித்துத் தங்கினான் என்றவாறு.

பூங்கழலினுன் படைபரப்பி நேரார் மதிலின் புறத்து இறுத்தான் என்பது துறைச்செய்தி.]

மதில்நிலை இயம்பல் :

> ' வாஅள் மறவர் வணங்காதார்
> நீஇள் மதிலின் நிலை உரைத்தன்று'. பு. உ. 11

மயில் கணத்து அன்னார் மகிழ்தேறல் ஊட்டக்
கயில்கழலார் கண்கனல் பூப்ப—எயில்கண்ணார்
வீயப்போர் செய்தாலும் வென்றி அரிது அரோ
மாயப்போர் மன்னன் மதில். பு. உ. 11

[மகளிர் கள்வார்க்கக் கள்ளுண்ட மதில்புறத்து வீரர் கண்கள் தீப்பொறி கால மதில் அகத்து வீரர் மாயுமாறு போர் செய்தாலும் நொச்சியான் மதிலைக் கைப்பற்றுதல் அரிதாகும், அது உயர்வு அகலம் திண்மை அருமை நான்கும் உடைத்து, ஆதலான்.

மாயப்போர் மன்னன் மதில் வென்றி அரிது என்பது துறைச்செய்தி.]

தோல் மலிபு உரைத்தல் :

> ' வென்றியொடு புகழ் விளைக்கும் எனத்
> தோன்றுவந்த தோல்மிகுத் தன்று.' பு. உ. 12

நின்ற புகழ்ஒழிய நில்லா உயிர்ஓம்பி
இன்றுநாம் வைகல் இழிவாகும் — வென்றுஒளிரும்
பாண்டில் நிரைதோல் பணியார் பகைஅரணம்
வேண்டில் எளிதென்றான் வேந்து. பு. உ. 12

பாண்டில்—கண்ணாடி. தோல் ஈண்டு ஆகுபெயர் .

[பகைவரை வென்று ஒளிவீசும் கண்ணாடி தைக்கப்பட்ட கேடகத்தை உடைய நம்படை பகைவர் அரண் கோடல் எளிது என்று நம் அரசன் நம்மைப் பாராட்டினான் ஆக,

நாம் புகழை விடுத்துப் போர் செய்யாது இன்று மதிலின் வெளியே தங்கியிருத்தல் நமக்கு இழிவாகும் என்று வீரன் ஒருவன் ஏனையாரிடம் சொற்றவாறு.

தோல்—கேடயம்; ஆகுபெயராய்க் கேடயம் ஏந்திய படையை உணர்த்திற்று.

பாண்டில் நிறைதோல் பகைஅரணம் வேண்டின் எளிது என்பது துறைச்செய்தி]

குற்றுழிஞை :

' கருதாதார் மதில்குமரிமேல்
ஒருதானாகி இகல்மிகுத்தன்று'. பு. உ. 13

குளிறு முரசினான் கொண்டான் அரணம்
களிறும் கதவுஇறப் பாய்ந்த — ஒளிறும்
அயில்துப்பு அடைந்த அணிஏழு எல்லாம்
எயிற்றுப் படையால் இடந்து. பு. உ. 13

[கதவங்களின் கணையமரங்களை எல்லாம் தம் தந்தத்தால் நீக்கி யானைகளும் மதில் கதவுகள் ஒடியும்படி பாய்ந்தன. அதிரும் முரசத்தை உடைய உழிஞையான் பகைவர் அரணத்தைக் கைப்பற்றினான்.

குளிறு முரசினான் கொண்டான் அரணம் என்பது துறைச்செய்தி.]

குற்றுழிஞையின் பக்கம் :

' வளைநரல வயிர் ஆர்ப்ப
மிளைகடத்தலும் அத்துறை ஆகும் '. பு. வ. 14

அந்தரம் தோயும் அமைஓங்கு அருமிளை
மைந்தர் மறிய மறங்கடந்து — பைந்தார்
விரைமார்பின் வில்நரல வெங்கணை தூவார்
வரைமார்பின் வைகின வாள். பு. உ. 14

வில் — வில்நாண். தூவுவார் தூவார் என விகாரம் பெற்று நின்றது

[நொச்சியார் புறங்காட்டி ஓட வானளாவிய மூங்கில் படர்ந்த காவற்காட்டை வீரத்தால் கடந்துவந்த உழிஞை வீரர் வாள்கள் வில் நாண் ஒலிக்க அம்பு செலுத்திய நொச்சி வீரர்களுடைய மார்பில் புண்களைச்செய்து தங்கின என்றவாறு.

அமையோங்கு அருமிளை மைந்தர்மறிய மறம்கடந்து என்பது துறைச்செய்தி.]

குற்றுழிஞையின் மற்றொரு பக்கம் :

'பாடுஅருந்தோல் படைமறவர்
ஆடலோடு அடையினும் அத்துறை ஆகும்'. பு. உ. 15

நிரைபொறி வாயில் நெடுமதில் சூழி
வரைபுகு புள்ளினம் மான — விரைபுஅடைந்தார்
வேல்ஏந்து தானை விறலோன் விறல்மறவர்
தோல்ஏந்தி ஆடல் தொடர்ந்து. பு. உ. 15

பொறி-நூற்றுவரைக் கொல்லி முதலிய இயந்திரங்கள்.

[வேற்படையை உடைய உழிஞையான் வீரர்கள் கிடுகுப் படையினை ஏந்தி ஆடிக்கொண்டே பல இயந்திரங்களையும் வாயில்களையும் உடைய மதிலின் உச்சியிலே, மலை உச்சியை அடையும் பறவை இனம்போல, விரைந்து எய்தினர் என்றவாறு.

மறவர் ஆடல் தொடர்ந்து நெடுமதில் சூழி விரைபு அடைந்தார் என்பது துறைச்செய்தி.]

அகழிப்புறத்து வந்து இறுத்தல் :

'விண்தோயும் மிளைகடந்து
குண்டுஅகழிப் புறத்துஇறுத்தன்று'. பு. உ. 16

கோள்வாய் முதலைய குண்டுஅகழி நீராக
வாள்வாய் மறவேந்தன் வந்திறுத்தான் — நீள்வாயில்
ஓங்கல் அரணத்து ஒளிவளையார் வெய்துயிர்ப்ப
ஆம்கொல் அரிய அமர். பு. உ. 16

[முதலையையுடைய ஆழமான அகழி நீரே தமக்குக் குடிநீர் ஆகும்படி உழிஞை வேந்தன் அகழிப்புறத்து வந்து தங்கிவிட்டான் ஆதலின் மதிலகத்துள்ள மகளிர் துயரத்தால் நெடுமூச்சு எறியும்படி அகழியிடத்துப் பெரியபோர் நிகழும் போலும் என்று கண்டோர் சொற்றவாறு.

அகழி நீராக மறவேந்தன் வந்து இறுத்தான் என்பது துறைச்செய்தி.]

பாசிநிலை :

'அடங்காதார் மிடல் சாயக்
கிடங்கிடைப் போர்மலைந்தன்று'. பு. உ. 17

நாவாயும் தோணியும் மேல்கொண்டு நள்ளாதார்
ஓவார் விலங்கி உடலவும் — பூவார்
அகழி பரந்து ஒழுகும் அங்குருதிச் சேற்றுப்
பகழிவாய் வீழ்ந்தார் பலர். பு. உ. 17

பாசிநிலை போல் ஒழிப்பவும் ஒழியாது பொருதலின் பாசிநிலை ஆயிற்று. நாவாய் — ஓடம். தோணி — ஒரு மரத்தான் இயன்றது.

[நாவாயிலும் படகிலும் வந்து நொச்சியார் நீங்காது தாக்குதலாலே அகழியில் குருதி நீர் பரவியது. அச் சேற்றில் நொச்சியார் அம்பினால் பட்டு வீழ்ந்த உழிஞையார் பலராவர்.

அகழிக் குருதிச் சேற்றுப் பகழிவாய் பலர் வீழ்ந்தார் என்பது துறைச்செய்தி.]

ஏணி சார்த்துதல் :

‘ தொடுகழல் மறவர் துன்னித் துன்னார்
இடுசூட்டு இஞ்சியின் ஏணி சாத்தின்று ’.
பு. உ. 18

கற்பொறியும் பாம்பும் கனலும் கடிகுரங்கும்
விற்பொறியும் வேலும் விலக்கவும் — பொற்புடைய
பாணி நடைப்புரவிப் பல்களிற்றூர் சாத்தினார்
ஏணி பலவும் எயில். பு. உ. 18

பாணி நடை— தாளத்திற்கு ஒப்பச் சதிபாய்தல்

[மதில் பொறிகளாகிய கற்பொறி, பாம்பு, கனல், கடி குரங்கு, வில்பொறி, வேல், என்பன விலக்கவும் குதிரை யானை இவற்றை உடைய உழிஞை வீரர் நொச்சியார் மதிலிடத்தே ஏணி பலவும் சாத்தினர்.

பல் களிற்றூர் ஏணி பலவும் எயில் சாத்தினார் என்பது துறைச் செய்தி.]

எயிற்பாசி :

‘ உடல்சினத்தார் கடிஅரணம்
மிடல்சாய மேல்இவர்ந்தன்று ’. பு. உ. 19

சுடுமண் நெடுமதில் சுற்றிப் பிரியார்
கடுமுரண் எஃகம் கழிய — அடுமுரண்
ஆறினார் அன்றி அரவும் உடும்பும்போல்
ஏறினார் ஏணி அவர். பு. உ. 19

எயிலைப் பாசிபோல விடாது பற்றி ஏறுதலின் எயிற்பாசி ஆயிற்று. அடுதல் ஆடுதல் என விகாரமாய் நின்றது.

[மதிலைச் சூழ்ந்து அகலாது பகைவர் வேல் தாக்க மாண்டவர் ஒழிய ஏனையார் பாம்பும் உடும்பும் ஏறுமாறு போல ஒட்டியும் பிடிவிடாதும் ஏணிமேல் ஏறினார் என்றவாறு.

அவர் அரவும் உடும்பும்போல் ஏணி ஏறினர் என்பது துறைச்செய்தி.]

முதுழிஞை :

' வேய்பிணங்கியமிளை அரணம்
பாய்புள்ளின் பரந்து இழிந்தன்று ' பு. உ. 20

கோடுஉயர் வெற்பின் நிலங்கண்டு இரைகருதும்
தோடுகொள் புள்ளின் தொகைஒப்பக்—கூடார்
முரண்அகத்துப் பாற முழவுத்தோள் மள்ளர்
அரண்அகத்துப் பாய்ந்துஇழிந்தார் ஆர்த்து. பு. உ. 20

[உழிஞை வீரர் சிகரங்கள் ஓங்கிய மலையில் இருந்தவாறே நிலத்தே இரைகளைக் கண்ட அளவிலே அவற்றைக் கொள்ளப் பாயும் பறவைக் கூட்டங்களைப் போலத் தம் பகைவர் மனத்தே இகல்கெட நொச்சியாரின் மதிலகத்தே ஆரவாரத்தோடு இறங்கினர் என்றவாறு.

முழவுத்தோள் மள்ளர் அரண் அகத்துப் பாய்ந்து இழிந்தார் என்பது துறைச்செய்தி]

அகத்துழிஞை :

' முரண் அவியச் சினம் சிறந்தோர்
அரண் அகத்தோரை அமர் வென்றன்று ' பு. உ. 22

செங்கண் மறவர் சினம்சொரிவாள் சென்றியங்க
அங்கண் விசும்பின் அணிதிகழும் — திங்கள்
முகத்தார் அலற முகில்உரிஞ்சும் சூழி
அகத்தாரை வென்றார் அமர். பு. உ. 22

[உழிஞை வீரர் வாள்கள் மதில் வீரர்களின் உடலிலே சென்று உலாவ, அவர்தம் உரிமைமகளிர் வாய்விட்டுக் கதற, அரண் அகத்துள்ள நொச்சியாரை வென்றனர் என்றவாறு.

செங்கண் மறவர் அகத்தாரை அமர் வென்றார் என்பது துறைச்செய்தி.]

'அகத்துழிஞைப் பக்கம் :

செருமதிலோர் சிறப்பு உரைத்தலும்
அருமுரணோன் அத்துறை ஆகும்'. பு. உ. 21

அறியார் வயவர் அகத்து இழிந்த பின்னும்
நெறியார் நெடுமதிலுள் நேரார் — மறியாம்
கிளியொடு நேராம் கிளவியார் வாட்கண்
களியுறும் காமம் கலந்து. பு. உ. 21

[சிறப்புற்ற நீண்ட மதிலில் உள்ள பகைவர்தம் கிளியினை ஒத்த பேச்சினை உடைய உரிமைமகளிரின் மான்மறி போன்ற கண்களின் களிப்பினால் மனம் மயங்கி உழிஞை வீரர் மதிலின்உள் இறங்கிய பின்னரும் அறியாது உள்ளனர் என்றவாறு.

நேரார் கிளவியார் காமம் கலந்து வயவர் அகத்து இழிந்த பின்னும் அறியார் என்பது துறைச்செய்தி.]

முற்று முதிர்வு :

'**அகத்தோன் காலை அதிர்முரசு இயம்பப்**
புறத்தோன் வெஞ்சினப் பொலிவு உரைத்தன்று.' பு.உ. 23

காலை முரசம் மதில் இயம்பக் கண்கனன்று
வேலை விறல் வெய்யோன் நோக்குதலும்—மாலை
அடுகம் அடிசிலென்று அம்மதிலுள் இட்டார்
தொடுகழலார் மூழை துடுப்பு. பு. உ. 23

[அகத்தோன் மதிலில் வழக்கம்போலக் காலையில் முரசம் ஒலிக்க அதுபொறுது உழிஞை அரசன் கண்சிவந்து தன் வேற்படையை நோக்கவே, அன்று மாலைக்குள் மதிலைக்

கைப்பற்றி, அங்கு மாலையில் சோறு சமைக்கப்படும் என்று சொல்லி, உழிஞை வீரர் அகப்பைகளையும் துடுப்புகளையும் மதிலகத்தே வீசி எறிந்தனர்.

காலை முரசம் மதில் இயம்பக் கண்கனன்று விறல் வெய்யோன் வேலை நோக்கினான் என்பது துறைச்செய்தி.]

யானை கைக்கோள் :

'மாறுகொண்டார் மதில் அழிய
ஏறும் தோட்டியும் எறிந்து கொண்டன்று.' பு. உ. 24

ஏவல் இகழ்மறவர் வீய இகல் கடந்து
காவலும் யானையும் கைக்கொண்டான்—மாவலான்
வம்புஉடை ஒள்வாள் மறவர் தொழுதேத்த
அம்புஉடை ஞாயில் அரண். பு. உ. 24

[தன் வீரர் தன்னைத் தொழுது ஏத்த ஏப்புழைகளை உடைய மதிலிலே தனக்குப் பணியாது பொருத நொச்சி யாரை அழித்து மாறுபாட்டை நீக்கி உழிஞை மன்னன் அந் நொச்சியாரின் தோட்டியையும் யானையையும் கைப் பற்றினான் என்றவாறு.

அரண் மறவர் வீய இகல் கடந்து மாவலான் காவலும் யானையும் கைக்கொண்டான் என்பது துறைச்செய்தி.]

வேற்றுப்படை வரவு :

'மொய்திகழ் வேலோன் முற்றுவிட்டு அகலப்
பெய்தார் மார்பின் பிறன்வரவு உரைத்தன்று'.

உவன்இன்று உறுதுயரம் உய்யாமை நோக்கி
அவன்என்று உலகேத்தும் ஆண்மை — இவனன்றி
மற்றுயார் செய்வார் மழைதுஞ்சு நீள்அரணம்
முற்றியார் முற்று விட. பு. உ. 25

[நொச்சிமன்னன் முற்றுகைக்கண் பட்ட துயரிலிருந்து மீளாமையை அறிந்து போரில் சிறந்தவன் அவனே என்று சான்றோர் மெச்சும் இவ்வேற்று வேந்தனை அன்றி அரண் முற்றிய உழிஞையார் முற்றுகையை நீத்துத் திரும்புமாறு செய்ய வல்லவர் யாவர் என்று கண்டோர் சொற்றவாறு.

இவன் அன்றி முற்றியார் முற்றுவிடச் செய்வார் மற்று யார் என்பது துறைச்செய்தி.]

உழுது வித்திடுதல் :

' எண்ணார் பல்எயில் கழுதைஏர் உழுவித்து
உண்ணா வரகோடு கொள்வித் தின்று .' பு. உ. 26

எழுது எழில் மாடத்து இடனெலாம் நூறிக்
கருதைஏர் கைஒளிர்வேல் கோலா—உழுதற்பின்
வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதால்
கள்விரவு தாரான் கதம். பு. உ. 26

[அழகிய மாடத்தை இடித்துத் தள்ளிக் கழுதையே ஏராகவும் வேலே ஏர் அடிக்கும் கோலாகவும் கொண்டு உழுத பிறகு கவடியும் கொள்ளும் விதைத்த பிறகும் உழிஞையான் சினம் தணியாது என்றபடி.

மாடம் நூறி கழுதை ஏரால் உழுது வெள்வரகு கொள் வித்தி என்பது துறைச்செய்தி.]

வாள் மங்கலம் :

' புண்ணிய நீரில் புரையோர் ஏத்த
மண்ணிய வாளின் மறங்கிளந் தன்று '. பு. உ. 27

தீர்த்தநீர் பூவொடு பெய்து திசை விளங்கக்
கூர்த்தவாள் மண்ணிக் கொடித்தேரான்—பேர்த்தும்
இடியார் பணைதுவைப்ப இம்மதிலுள் வேட்டான்
புடையார் அறையப் புகழ். பு. உ. 27

[பலரும் புகழ்பரவ முரசம் ஒலிக்கத் தீர்த்த நீரால் வாளைக் கழுவி அதற்குப் பூவிட்டு உழிஞையான் மீண்டும் இவ்வரணின்கண் களவேள்வி செய்தான்.

தொல்காப்பியனார் இத்துறையினை 'வென்ற வாளின் மண்' என்பார். (தொல். பொ. 68)

தீர்த்த நீர் பூவொடு பெய்து கொடித் தேரான் வாள் மண்ணினான் என்பது துறைச்செய்தி.]

மண்ணு மங்கலம் :

'வணங்காதரர் மதில்குமரியோடு
மணம்கூடிய மலிபுஉரைத்தன்று'. பு. உ. 28

எங்கண் மலர எயில்குமரி கூடிய
மங்கல நாள்யாம் மகிழ்ந்தூங்க—கொங்கலர் தார்ச்
செய்சுடர்ப்பூண் மன்னவன் சேவடிக்கீழ் வைகினவே
மொய் சுடர்ப்பூண் மன்னர் முடி. பு உ. 28

[இம் மதிலை மன்னன் கைப்பற்றிய மங்கல நாளிலே எம் கண்கள் களிக்க யாம் மகிழ 'அவன் திருவடிக்கீழ் ஏனைய மன்னர்கள் முடியோடு வந்து பணிந்தனர் என்றவாறு.

எயிற்குமரி கூடிய மங்கல நாள் யாம் மகிழ்தூங்க என்பது துறைச்செய்தி.]

மகட்பால் இகல் :

'மயில்சாயல் மகள்வேண்டிய
கயில் கழலோன் நிலைஉரைத் தன்று'. பு. உ. 29

அந்தழை அல்குலும் ஆடுஅமை மென்தோளும்
பைந்தளிர் மேனியும் பாராட்டித் — தந்தை
புறமதில் வைகும் புலம்பே தருமே
மறமதில் மன்னன் மகள். பு. உ. 29

[வீரம்மிக்க நொச்சி வேந்தன் மகள் அவள் அல்குலினை யும் தோளையும் மேனியையும் பாராட்டியவாறே உழிஞை மன்னன் மதிலின் வெளியே தங்கும் தனிமையையே வழங்கி உள்ளாள்.

மறமதில் மன்னன்மகள் தன்னைப் பாராட்டிப் புறமதில் வைகும் புலம்பேதரும் என்பது துறைச்செய்தி.]

திறைகொண்டு பெயர்தல் :

'அடுதிறல் அரணத்து அரசுவழி மொழியப்
படுதிறை கொண்டு பதிப்பெயர்ந் தன்று' பு. உ. 30

கோடும் வயிரும் இசைப்பக் குழுமிளை
ஓடுஎரி வேய உடன்றுஉலாய்ப் — பாடி
உயர்ந்தோங்கு அரணகத்து ஒன்னார் பணியப்
பெயர்ந்தான் பெருந்தகையி ஞன். பு. உ. 30

[சங்குகளும் ஊதுகொம்புகளும் ஒலிப்பக் காவற் காட்டினைத் தீயிட்ட அளவிலே மதிலகத்துப் பகைமன்னன் பணியவே உழிஞைவேந்தன் பாசறையிலிருந்து தன்னூர் திரும்பினன்.

அரணத்து ஒன்னூர் பணியப் பெருந்தகையினன் பாடி பெயர்ந்தான் என்பது துறைச்செய்தி.]

அடிப்பட இருத்தல் :

'பேணதார் மறங்கால
ஆணை கொண்டு அடிப்பட இருந்தன்று'. பு. உ. 31

ஒன்றி யவர்நாடு ஒருவழித்தாய்க் கூக்கேட்ப
வென்றி விளையா விழுமதிலோர்—என்றும்
பருந்துஆர் செருமலையப் பாடி பெயராது
இருந்தான் இகல்மறவர் ஏறு. பு. உ. 31

[உழிஞைவேந்தன் தன்னால் முன்பு முற்றப்பட்டுத் தனக்குப் பணிந்து தமராகியார் நாடு தன் ஏவலைக் கேட்பவும், வெற்றிபெறுதல் இயலாத, அப்பொழுது தன்னால் நெடிது முற்றப்பட்ட நொச்சியார்களோடு போர் செய்வதற்காகப் பாசறையை விட்டு அகலாது தங்கியிருந்தான் என்றவாறு,

விழுமதிலாரோடு செருமலைய இகல் மறவர் ஏறு பாடி பெயராது இருந்தான் என்பது துறைச்செய்தி.]

தொகை நிலை :

‘ எம்மதிலின் இகல்வேந்தரும்
அம்மதிலின் அடி அடைந்தன்று ’. பு. உ. 32

நாவல் பெயரிய ஞாலத்து அடி அடைந்து
ஏவல் எதிராது இகல் புரிந்த—காவலர்
வில் நின்ற தானை விறல் வெய்யோர்க்கு அம்மதிலின்
முன் நின்று அவிந்தார் முரண். பு உ. 32

[இந்நாவலந்தீவாகிய பரதகண்டத்தில் தன் ஏவலை ஏற்றுக்கொள்ளாது மாறுபட்ட பகைவர் இப்பொழுது விற்படையை உடைய உழிஞை வேந்தனுக்கு அவனால் கைப்பற்றப்பட்ட அரணின் முன்னே நின்று மாறுபாடு நீங்கி நண்பராயினர் என்றவாறு.

இகல் புரிந்த காவலர் விறல் வெய்யோர்க்கு அம்மதிலின் முன் நின்று முரண் அவிந்தார் என்பது துறைச்செய்தி]

ஒத்த நூற்பாக்கள்

‘ கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்
தொல்எயிற்கு இவர்தலும் தோலின் பெருக்கமும்
தொ. பொ. 68

'குடையும் வாளும் நாள்கோள் அன்றி
மடைஅமை ஏணிமிசை மயக்கமும் கடைஇச்
சுற்றமர் ஒழிய வென்றுகைக் கொண்டு
முற்றிய முதிர்வும் அன்றி முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்
நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் அதாஅன்று
ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறமும்
மதில்மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கமும்
இகல்மதில் குடுமிகொண்ட மண்ணுமங் கலமும்
வென்ற வாளின் மண்ணோடு ஒன்றத்
தொகைநிலை என்னும் துறையொடு தொகைஇ
வகைநான்மூன்றேதுறைஎனமொழிப'. தொ.பொ. 69

'உழிஞை ஓங்கிய குடைநாட் கோளே
வாள்நாட் கோளே முரச உழிஞை
கொற்ற உழிஞையோடு அரச உழிஞை
கந்தழி என்று முற்றுழி ஞையே
காந்தள் புறத்திறை ஆரெயில் உழிஞையொடு
கோள்புறத் துழிஞை பாசி நிலையே
ஏணி நிலையே இலங்குஎயிற் பாசி
முதுஉழி ஞையே முந்துஅகத் துழிஞை
முற்று முதிர்வே யானைக் கோளே
வேற்றுப்படை வரவே உழுதுவித் திடுதல்
வாள்மண் ணு நிலையே மண்ணுமங் கலமே
மகட்பால் இகலே திறைகொண்டு பெயர்தல்
அடிப்பட இருத்தல் தொகைநிலை உளப்பட
இழும்என் சீர்த்தி இருபத் தொன்பதும்
உழிஞை என்மனார் உணர்ந்திசி னோரே'. பு. வெ. 6

‘ வேந்தன் சிறப்பு மதிலே றுதல்வென்றி வாட்சிறப்புக்
காந்தும் படைமிகை நாட்கோ ளொடுகாவ லேமுடிகோள்
ஏந்தும் தொகைநிலை கொற்றம்நீர்ப் போர்ச்செல்வம்
ஊர்ச்செருவே
போந்த முதிர்வு குறுமையென் ருமுழி ஞைப்புணர்ப்பே ’.
விர. 103

உழிஞையின் இரண்டாம் பகுதியின் துறைகள்

609 ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்
காப்போர் நொச்சிப் பூப்புனை புகழ்ச்சியும்[1]
துன்னென வரூஉம் தூசு தாங்கி
விண்விருந் தாக விளிந்தமறப் பாசியும்[2]
அருமிளை யொடுகிடங்கு அழியாது இகலி
உருகெழு மறவர் உடன்றஊர்ச் செருவும்[3]
ஆழ்ந்துபடு கிடங்கொடு அருமிளை காத்து
வீழ்ந்த வேலோர் விறல்மேம் படுதலும்[4]
மதிதொடு புரிசை வாமான் கடுப்பிற்கு
எதிரன்மின் என்னும் இவுளி மறமும்[5]
வாள்வடுப் பட்டும் வடுப்படாது அகத்தோர்
தோள்வடுப் படப்பகை தொலைத்தஎயில் போரும்[6]
துணிவுடை அடுபடைத் தொடுகழல் மறவன்
அணிமணி எயில்மிசை அழிந்த நொச்சியும்[7]
இழிபு மேன்மேல் எழுதலும் இகலி
அழிபடை யான்எறிந்து அழிபடை தாங்கலும்[8]
வெம்முர ணன்மகன் வேண்டலும் அதனுக்கு
அம்மதி லோர்மறுத்து உரைத்தலும்[9] எனமுறை
கூறிய ஒன்பதும் குண்டுஅகழ் உடுத்த
வீறுஎயில் காத்தல் விரிஎனப் படுமே.

இது முற்கூறிய உழிஞைப் பகுதி இரண்டனுள் பின்னை யது இத்துணைத் துறை உடைத்து என்கின்றது.

(இ-ள்) ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம் காப்போர் நொச்சிப் பூப்புனை புகழ்ச்சி முதல், வெம்முரணுன் மகள் வேண்டலும் அதனுக்கு அம்மதிலோர் மறுத்து உரைத்தல் ஈருக முறையே கூறிய ஒன்பது துறையும் ஆழ்ந்த அகழியினைப் பொருந்தின ஒப்பிலாத எயில் காத்துக் கோடலின் விரி என்று சொல்லப்படும் என்றவாறு.

1 நொச்சி :

அம்பு எய்து மறைவதற்கு உரிய மதில் உறுப்புகளைக் கொண்ட உயர்வு அகலம் திண்மை முதலியவை உடைய அரணத்தைக் காப்போர் சூடிய பூவினைச் சிறப்பித்துக் கூறும் புகழ்ச்சி.

2 மறப்பாசி :

விரைவாகத் தம்மை நோக்கி வரும் உழிஞையார் படைகளைத் தடுத்துத் தேவர்களுக்கு விருந்தாக வீண் அடைதல்.

3 ஊர்ச்செரு :

அரிய காவற்காட்டோடு அகழியும் அழியாதபடி அஞ்சத்தக்க நொச்சி மறவர் உழிஞையாரோடு மாறுபட்டுப் போரிட்ட செயலைக் கூறுதல்.

4 செருவிடை வீழ்தல் :

ஆழமான அகழியினையும் அரிய காவல் காட்டினையும் பாதுகாத்து உயிர்நீத்த வேற்படை ஏந்திய நொச்சியாரின் பேராற்றலை உயர்த்திக் கூறுதல்.

5 இவுளி மறம் :

சந்திரமண்டலம் அளவும் உயர்ந்த மதில்மீது விரைந்து செல்லும் குதிரையின் வேகத்தைத் தடுத்தல் வேண்டா என்று கூறுதல்.

6 எயிற்போர் :

நொச்சி வீரர் தம்மீது உழிஞையாரின் வாட்படை புண் பல செய்யவும் வீரத்தில் குறையாது அவர்கள் தோள் வலிமையைக் கெடுத்து அவர்களை அழித்தல்.

7 எயில்மிசை அழிந்த நொச்சி :

போரில் தம் வீரத்தை வெளிப்படுத்தும் துணிவு உடைய பகைவரை அழிக்கும் படை ஏந்திய கழல் அணிந்த நொச்சி வீரன் போர்ப் பொறிகளை அணிந்த அழகிய மதில் மீது இருந்து போரிட்டு அழிந்துபட்டசெய்தி கூறல்.

8 அழிபடை தாங்கல் :

தனக்குத் தோல்வி மேலும் மேலும் ஏற்படவும் மாறுபாடுகொண்டு சிதறிப்போகும் படையை உடைய நொச்சி மறவன் பகைவரைத்தாக்கி அழிந்து வந்த தன்படைகளைத் தடுத்துப் பகைவரோடு போரிடுமாறு நிறுத்துதல்.

9 மகள் மறுத்து மொழிதல் :

கொடிய மாறுபாட்டை உடைய உழிஞையான் நொச்சியானிடம் மகட்கொடை வேண்ட அவன் மகள் கொடுத்தலுக்கு மறுத்த பகுதி.

இவ்வொன்பது துறைகளும் நொச்சி எனப்படும் உழிஞையின் இரண்டாம் கூற்றினைச் சார்ந்தன என்பதாம்.

நொச்சிப் பூப்புனை புகழ்ச்சி :

‘ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்
காப்போர் சூடிய பூப்புகழ்ந் தன்று’. பு. நொ. 1

ஆடுஅரவம் பூண்டான் அழல்உணச் சீறிய
கூடுஅரணம் காப்போர் குழாம்புரையச் — சூடினார்
உச்சி மதிவழங்கும் ஓங்கு மதில்காப்பான்
நொச்சி நுதிவே லவர். பு. நொ. 1

[வான் அளாவிய மதிலைக் காப்பதற்கு அரணகத்துள்ளோர் சிவபெருமான் கோபித்தகாலைத் திரிபுரத்தைக் காத்த அவுணர் கூட்டத்தாரைப் போல நொச்சிப் பூவைச் சூடிக் கொண்டார் என்றவாறு.

ஓங்கு மதில் காப்பான் நுதிவேலவர் நொச்சி சூடினர் என்பது துறைச் செய்தி.]

மறப்பாசி :

'மறப்படை மறவேந்தர்
துறக்கத்துச் சேலவு உரைத்தன்று. பு. நொ. 2

பாயினார் மாயும் வகையால் பலகாப்பும்
ஏயினார் ஏய இகல்மறவர் — ஆயினார்
ஒன்றி யவர்அற ஊர்ப்புறத்துத் தார்தாங்கி
வென்றி அமரர் விருந்து. பு. நொ. 2

[நொச்சி மறவர் அழியும் வகையில் உழிஞை வீரர் மதிலைச் சூழ்ந்து கொள்ளவும், பல இடங்களையும் காக்குமாறு தம் படைவீரருக்கு உத்தரவிட்டு உழிஞை மறவரை எதிர்த்து அவர் தூசிப் படையைத் தடுத்துத் தேவர்களுக்கு விருந்தாயினர்.

ஒன்றியவர் அற ஊர்ப்புறத்துத் தார்தாங்கி அமரர் விருந்தாயினர் என்பது துறைச் செய்தி.]

ஊர்ச்செரு :

'அருமிளையோடு கிடங்கு அழியாமைச்
செருமலைந்த சிறப்புஉரைத்தன்று'. பு. உ. 3

வளையும் வயிரும் ஒலிப்பவாள் வீசி
இளையும் கிடங்கும் சிதையத் — தளைபரிந்த
நோனார் படைஇரிய நொச்சி விறல்மறவர்
ஆனார் அமர்விலக்கி ஆர்ப்பு. பு. நொ. 3

[காவற்காடும் கிடங்கும் அழியவே சங்கும் ஊது கொம்பும் ஆர்ப்ப வாள்வீசி உழிஞையார் படை பின்னிட நொச்சிமறவர் போரை விலக்கி ஆரவாரித்தனர் என்றவாறு.

நோனார் படை இரிய நொச்சி மறவர் அமர்விலக்கி ஆர்த்தனர் என்பது துறைச்செய்தி.]

செருவிடை வீழ்தல் :

'ஆழ்ந்துபடு கிடங்கோடு அருமிளைகாத்து
வீழ்ந்த வேலோர் விறல்மிகுத்தன்று'.

ஈண்டு அரில் சூழ்ந்த இளையும் எரிமலர்க்
காண்தகு நீள்கிடங்கும் காப்பாராய் — வேண்டார்
மடங்கல் அனைய மறவேலோர் தத்தம்
உடம்பொடு காவல் உயிர். பு. நொ. 4

[மரங்களும் செடிகொடிகளும் பிணங்கிய காவற்காட்டினையும் கிடங்கினையும் காத்தற்றொழிலில் இயமனை ஒத்த நொச்சி வீரர்கள் தம்உடம்பையும் உயிரையும் காத்தலை வேண்டாராயினர் என்றவாறு.

கிளையும் கிடங்கும் காப்பாராய் வேலோர் உடம்பொடு உயிர்காவல் வேண்டார் என்பது துறைச்செய்தி.]

இவுளி மறம் :

'ஏமாண்ட நெடும்புரிசை
வாமானது வகைஉரைத்தன்று'. பு. நொ. 5

தாங்கன்மின் தாங்கன்மின் தானை விறல்மறவிர்
ஓங்கல் மதிலுள் ஒருதனிமா — ஞாங்கர்
மயிர் அணியப் பொங்கி மழைபோன்று மாற்றார்
உயிர்உணிய ஓடி வரும். பு. நொ. 5

[வீரர்களே! உயர்ந்த மதிலில் ஒரு தனிக்குதிரை கவரியால் அழகு செய்தலைச் சினந்து பகைவர் உயிரைக் கவர மேகம்போல ஓடிவருவதனைத் தடுக்காதீர்கள் என்றவாறு.

ஒரு தனிமா மாற்றார் உயிர்உணிய ஓடிவரும் என்பது துறைச்செய்தி.]

எயிற்போர் :

'அயில்படையின் அரண்காக்கும்
எயில்படைஞர் இகல் மிகுத்தன்று'. பு நொ. 6

மிகத்தாய செங்குருதி மேவரு மார்பின்
உகத்தாம் உயங்கியக் கண்ணும் — அகத்தார்
புறத்திடைப் போதந்து அடல்புரிந்தார் பொங்கி
மறத்திடை மானம்மேற் கொண்டு. பு. நொ. 6

[குருதி பரக்கும் மார்பினராய் உடல் தளர்ந்த வழியும் நொச்சியார் வீரத்தோடு மானம் தூண்ட மனம் பொங்கிப் புறத்தே வந்து போரிட்டனர்.

அகத்தார் மானம் மேற்கொண்டு புறத்திடைப்போதந்து அமர் புரிந்தார் என்பது துறைச்செய்தி.]

எயில்மிசை அழிந்த நொச்சி :

'துணிவுஉடைய தொடுகழலான்
அணிபுரிசை அழிவு உரைத்தன்று'. பு நொ. 7

அகத்தன ஆர்கழல் நோன்தாள் அரணின்
புறத்தன போர்எழில் திண்தோள்—உறத்தழீஇத்

தோட்குஉரிமை பெற்ற துணைவனையார் பாராட்ட
வாள்குரிசில் வானுலகி னான். பு. நொ. 7

[நொச்சி வீரன் மதில்மேல் இருந்து பொருகையில் அவன் தாள்கள் மதிலகத்தும் தோள்கள் மதிற்புறத்தும் வீழத் தன் உரிமை மகளிர் தன் உடலைத் தழுவித் தன் வீரத்தைப் பாராட்ட வீர சுவர்க்கம் அடைந்தான் என்றவாறு.

வாட்குரிசில் நோன்தாள் அரண் அகத்தன; திண் தோள் புறத்தன; அவன் வானுலகினான் என்பது துறைச் செய்தி.]

அழிபடை தாங்கல் :

'இழிபு உடன்று இகல் பெருக
அழிபடை அரண் காத்தன்று'. பு. நொ. 8

பரிசை பலகடந்து பற்றார் எதிர்ந்தார்
எரிசெய் இகல் அரணம் கொண்மார்—புரிசை
அகத்துஅடி உய்யாமை அஞ்சுடர் வாள் ஓச்சி
மிகத் தடிந்தார் மேல்நின் றவர். பு. நொ. 8

[நொச்சி வீரர் தம் கிடுகுப்படை பலவற்றையும் அழித்துப் பகைவர் மதிலைக் கைப்பற்றப் போரிடவும், மதிலுக்குள் அவர்கள் அடிவைத்தல் இயலாதபடி மேலிருந்து வெட்டி வீழ்த்தினர் என்றவாறு.

பற்றார் புரிசை அகத்து அடி உய்யாமை மேல் நின்றவர் வாள் ஓச்சி மிகத் தடிந்தார் என்பது துறைச்செய்தி]

மகள் மறுத்து மொழிதல் :

'வெம்முரணோன் மகள்வேண்ட
அம்மதிலோன் மறுத்துஉரைத்தன்று'. பு. வெ. 9

ஒள்வாள் மறவர் உருத்துஎழுந்து உம்பர்நாள்
கள்வார் நறுங்கோதை காரணமாக் — கொள்வான்
மருங்குஎண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்
கருங்கண்ணி வெண்கட்டில் கால். பு. வெ. 9

[நொச்சியான் மகள் வேண்டி முன்பெருமையால் வெகுண்டு அவள் இடைஅழகை நினைந்து போரிடவந்தவர் பொருதகாலை இறந்துபட்ட அவர்தம் களிறுகளின் கொம்புகளே அவள் கட்டில் கால்களாக அமைந்தன ஆதலின் இவ்வரசன் தானே விரும்பித் தன்மகளை மணம்செய்து கொடுப்பானே அல்லால் இவனைஎதிர்த்து அவளைஅடைதல் இயலாது என்றவாறு.

நறுங்கோதை மருங்குஎண்ணி உருத்துவந்தார் களிற்றின் கோடு அவள் கட்டில்கால் என்பது துறைச்செய்தி.]

ஒத்த நூற்பாக்கள்

'அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும் திறப்பட
ஒருதான் மண்டிய குறுமையும் உடன்றோர்
வருபகை பேணார் ஆரெயில் உளப்பட'. தொ. பொ. 68

'நுவலருங் காப்பின் நொச்சி ஏனை
மறனுடைப் பாசி ஊர்ச்செரு என்று
செருவிடை வீழ்தல் திண்பரி மறனே
எயிலது போரே எயில்தனை அழித்தல்
அழிபடைதாங்கல் மகள்மறுத்து மொழிதல் என
எச்சம் இன்றி எண்ணிய ஒன்பதும்
நொச்சித் திணையும் துறையும் ஆகும்'. பு. வெ. 5

11

தும்பை இலக்கணம்

610 தும்பை தானே நெய்தலது புறனே
மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்கும் சிறப்பிற்று என்ப.

இது தும்பைத் திணை நெய்தல் திணைக்குப் புறன் என்பதூஉம் அதன் பொருளும் கூறுகின்றது.

(இ-ள்) மேற்கூறிய புறத்திணை ஏழனுள் தும்பைத் திணை முற்கூறிய அகத்திணை ஏழனுள் நெய்தல் திணைக்குப் புறனும். அது தனது வலியினை உலகம் மீக்கூறுதலே தனக்குப் பெறும் பொருளாகக் கருதி மேற் சென்ற வேந்தனை அங்ஙனம் மாற்று வேந்தனும் அவன் கருதிய மைந்தே தான் பெறுபொருளாக எதிர் சென்று தலைமையைத் தீர்க்கும் சிறப்பினை உடைத்து என்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

புறத்திணை பலவற்றுள், 'தும்பை தானே நெய்தலது புறனே' என இதனைப் பிரித்து ஓதினர், நெய்தற்கு உரிய பெருமணல் உலகம் போலக் காடும் மலையும் கழனியும் அல்லாத களரும் மணலும் பொருகளமாக வேண்டுதலானும், பெரும்பொழுது வரைவு இன்மையானும், எற்பாடு போர்த் தொழில் முடியும் காலம் ஆதலானும், இரக்கமும் தலைமகட்கே பெரும்பான்மையும் உளதாயவாறுபோல, கணவனை இழந்தார்க்கு அன்றி வீரர்க்கு இரக்கம் இன்மையானும், அவ்வீரக் குறிப்பின் அருள்பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின்கண் இரங்குப ஆகலானும், பிற காரணங்களானும் என்பது. எனவே, தும்பைத்திணை நெய்தல் திணைக்குப் புறன் என்றல் ஆணை கூறல் அன்று ஆயிற்று. இதனை, மைந்து பொருளாகப் பொருதலின், மண் இடையீடாகப் பொரும் வஞ்சிக்கும், மதில் இடையீடாகப் பொரும் உழிஞைக்கும் பிற் கூறினர். 12

விளக்கம்

[தும்பைப் போர் களம் வகுத்து இருதிற வீரரும் நாட் குறித்துத் தும்பைப் பூச் சூடி மலையும் சிறந்த போராகும்.

வீரக்குறிப்பின் அருள்பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின்கண் இரங்குதலாவது.

‘ வீறின்மையின் விலங்காமென மதவேழமும் எறியான்
ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சிலென் றெறியான்
மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையுமெறியான்
ஆறன்மையின் முதியாரையும் எறியான் அயில்உழவன்’
சிந்தா.

என்றாற்போல்வன.

தும்பை நெற்தற்குப் புறனாகியசெய்தி நச்சினார்க்கினியர் தந்துள்ள விளக்கத்தானேயே விளக்கப் பட்டுள்ளது.

இனி, உரையாசிரியர்,

‘தும்பை நெய்தற்குப் புறனாகியவாறு என்னை எனின், இருபெரு வேந்தரும் ஒருகளத்துப் பொருதலின் அதற்கு இடம் காடும் மலையும் கழனியும் ஆகாமையானும், களரும் மணலும் பரந்த வெளி நிலத்துப் பொருதல் வேண்டுத லானும், அந்நிலம் கடல் சார்ந்த வழி அல்லது இன்மை யானும், நெய்தற்கு ஓதிய எற்பாடு போர்த் தொழிற்கு முடிபு ஆதலானும் நெய்தற்குப் புறன் ஆயிற்று’ என்பர்.
தொல். பொ. 70

நெய்தல் போலவே தும்பையும் ஆர்ப்புஅலைப்பு இரங்கல் இவற்றிற்கு இடனாதலானும், நெய்தலின் புலம்புறு தலைவியர் இரங்கல் ஒயத் தலைவர் கார்காலத்தே மீளுதல் போலத் தும்பையில் அமர்ஒய்வு கார்காலத்தாதலானும், நெய்தற்கு உரிய பரந்த மென்னிலவரைப்பு போருக்குச் சிறந்து உரிய தாதலானும் நெய்தலுக்குத் தும்பை புறனாயிற்று
பாரதியார். புற. 14. உரை

தும்பைத் துறைகள்

611 கருங்கழல் வேந்தன் செங்களம் கருதிப்
பசுந்துணர்த் தும்பை வெண்பூச் சூடலும்[1]
சூடிய பின்னர்த் தொடுகழல் வயவர்க்கு
நாடுமுதல் கொடுத்த பீடுபெறும் அரவமும்[2]
தாம்செருப் புரியாத் தன்மையால் அவரை
ஓம்படுத்து உயர்த்திய தானை மறமும்[3]
பூம்பொழில் காவல் பூண்டமன் னவனை
ஓம்படுத்து உரைத்த மற்றதன் பகுதியும்[4]
வண்ணவேல் தானை மறம்மிகுத்து உரையா
எண்ணலர் அழிபினுக்கு இரங்கிய பக்கமும்[5]
யானை மறத்தோடு[6] குதிரை மறமும்[7]
முன்எழு வயப்படை தாங்குவல் யான்என
மன்னவற்கு உரைத்த தூசி நிலையும்[8]
வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்
தான்மீண்டு எறிந்த மற்றதன் பகுதியும்[9]
முறிமலர் நறுந்தார் மொய்கழல் வேந்தன்
செறிமணித் தேர்மறம் சிறந்தமை கூறலும்[10]
மையல் யானை எறிந்துமாய்ந் தோர்க்குக்
கைவல்யாழ்ப் பாணர் கடன்முறை கழித்தலும்[11]
இருவர் தலைவர் தபுதிக் கண்ணும்[12]
பொருபடை அகலாப் போர்புரி நிலையும்
குருதிவேல் ஒருவன் கூழை தாங்கி
இரிபடைப் பின்நின்ற எருமை மறமும்[13]
வேற்படை களிற்றொடு போக்கிமெய் வலியின்
ஏற்றுஉடன்று அடரும் ஏம எருமையும்[14]
நேரலர் பனிப்ப நெஞ்சிடைக் குளித்த
கூர்அயில் பறித்துக் கைக்கொண்ட நூழிலும்[15]
மால்திரு வேந்தன் வயப்படை உடைய
வேல்திரித்து ஆடிய நூழி லாட்டும்[16]
மின்அவிர் கழலார் வேந்தன் வெல்தேர்

முன்னர் ஆடிய முன்தேர்க் குரவையும்[17]
மன்னரோடு விறலியர் ஆண்தகை நெடுந்தேர்ப்
பின்னர் ஆடிய பின்தேர்க் குரவையும்[18]
மன்னன் ஊரும் மறம்மிகு மணித்தேர்
பின்னும் முன்னும் பேயாடு குரவையும்[19]
ஒளிற்றுஎஃகம் படவீழ்ந்தஒண் மருப்பின்
களிற்றுடன் கண்படு களிற்றுடன் நிலையும்[20]
வடிவாள் விதிரா வயவர் மன்னவன்
உடன்ஆட்டு அயர்ந்த ஒள்வாள் அமலையும்[21]
இருபால் படையும் ஏத்த நெடுந்தகை
பொருபோர்ப் பொலிந்த தானை நிலையும்[22]
கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலம் தீண்டா வெருவரு நிலையும்[23]
அருவரை மார்புதம் அலர்முலை குளிப்பத்
தெரிவையர் முயங்கிய சிருங்கார நிலையும்[24]
வாள்வாய்த் திட்ட வடுவாழ் யாக்கைக்
கேள்கண்டு கலுழ்ந்த உவகைக் கலுழ்ச்சியும்[25]
தம்முடை இறைவன் விசும்புஅடைந் தான்என
வெம்முரணன்உயிர் வேள்வி வேட்டலும்[26]
காய்கதிர் நெடுவேல் கணவற் காணிய
ஆயிழை சென்ற பக்கமும்[27] அதாஅன்று
இருபெரு வேந்தர் தரமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலை[28] உளப்படச்
செப்பிய நாலேழ் திறத்தன எல்லாம்
துப்புஅமை தும்பைத் துறைஎனப் படுமே.

இது முற்கூறிய தும்பைத்திணை இத்துணைத் துறை உடைத்து என்கின்றது.

(இ-ள்) கருங்கழல் வேந்தன் செங்களம் கருதிப் பசுந் துணர்த் தும்பை வெண்பூச் சூடல் முதலியனவும், ஈருகக் கிடந்த இரு பெரு வேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும்

ஒழியாத் தொகை நிலையும் கூடச் சொல்லப்பட்ட இருபத்தெட்டு வகையும் வலி அமைந்த தும்பைத் திணையின் துறை என்று சொல்லப்படும் என்றவாறு.

விளக்கம்

1 தும்பை சூடல் :

பெரிய வீரக்கழலை அணிந்த வேந்தன் குருதி பெருக்கெடுத்து ஓடும் போர்க்களத்தைக் கருதிப் பசிய பூங் கொத்துக்களை உடைய வெண்மையான தும்பைப் பூச் சூடுதல்.

2 தும்பை அரவம் :

தும்பைப் •பூவினைச் சூடியபின் அரசன் வீரக் கழல் அணிந்த மறவருக்கு நாடு முதலியவற்றைப் பரிசிலாக நல்கிய காலை ஏற்பட்ட மகிழ்ச்சி ஆரவாரத்தைச் சொல்லுவது.

3 தானை மறம் :

தாம் தம்மை ஒத்த ஆற்றல் உடைய பகைவரோடு அன்றிப் பிறரோடு •பொரும் வழக்கம் இன்மையால் வலியில் குறைந்தவருக்குப் பாதுகாவல் செய்யும் முகத்தான் தம் வீரத்தை எடுத்துக் கூறுவது.

4 தானை மறப் பக்கம் :

அழகிய நில உலகத்தைக் காத்தல் தொழில்பூண்ட அரசனுக்குப் போர்த் துறையில் பாதுகாவலான செய்திகளைக் கூறுவதும் தானை மறத்தின் பாற்படும்.

5 தானைமற மற்றொரு பக்கம் :

அழகிய ·வேற்படையின் ஆற்றலைப் புகழ்ந்து கூறிப் பகைவர் அடையப்போகும் அழிவினை நினைத்து வருந்திக் கூறுதலும் அத்தானைமறத்தின் பகுதி ஆகும்.

6 யானை மறம் :

யானைப் படையின் வீரத்தைக் கூறுவது.

7 குதிரை மறம் :

குதிரைப் படையின் ஆற்றலைச் சொல்லுவது.

8 தூசி நிலை :

போரிலே முன் நோக்கிப் போரிடுதற்கு வரும் வலிமை மிக்க பகைவர் படையினை யான் தடுத்து நிறுத்துவேன் என்று அரசனிடம் மறவன் தன் ஆற்றலைக் குறிப்பிடுவது.

9 தூசி நிலைப் பக்கம் :

வேற்படை மிக்க அரசனைப் பகைவர் பலரும் சூழ்ந்த- வழி வீரன் ஒருவன் தான் போர் செய்துகொண்டிருந்த இடத்தை விடுத்து வந்து பகைவரைச் சிதறி ஓடச் செய்தலும் அதன் பாற்படும். இதனைத் தொல்காப்பியனார் தார்நிலை என்பர்.

10 தேர் மறம் :

தளிரோடு கூடிய மலர்கள் தொடுத்துக் கட்டப்பட்ட நறிய மாலையினையும் செறிந்த வீரக் கழலையும் உடைய அரசனுடைய மணிகள் செறிந்த தேரின் ஆற்றலை எடுத்துக் கூறுவது.

11 பாண்பாட்டு :

மதமயக்கம் பொருந்திய களிறுகளைக் கொன்று போர்க் களத்தில் இறந்த வீரர்களைக் கருதி யாழ் வாசித்தலில் வல்ல பாணர்கள் விளரிப்பண் பாடித் தம் கடமையை முறையே செய்தமை கூறல்.

12 இருவரும் தபுநிலை :

போர்க்களத்தில் இருபக்கத்துத் தலைவரும் போரிட்டு ஒருசேர மடிதல்.

13 எருமை மறம் :

போரிடும் படைகளை விட்டு நீங்காது போர் புரியும் நிலையிலும் குருதிக்கறை படிந்தவேலை ஏந்திய வீரன் ஒருவன் பின் அணிப் படையைத் தடுத்துப் புறமுதுகு இட்டு ஓடும் தன் படைக்குப் பின்னே தான் பெயராது நின்றமை கூறுவது.

14 ஏமஎருமை :

தன் கையில் இருந்த வேற்படையினைத் தன்னை எதிர்க்க வந்த களிற்றின்மேல் செலுத்தி மீண்டும் எதிர்த்து வந்த வீரரைத் தன் உடல்வலி கொண்டே தாக்கிய திறத்தைக் குறிப்பிடுவது.

15 ஞாழில் :

பகைவர் நடுங்குமாறு தன் மார்பகத்தில் தைத்திருந்த கூரிய வேற்படையைப் பறித்து எடுத்துத் தன்கையில் கொண்ட செயலைக் குறிப்பிடுவது.

16 ஞாழிலாட்டு :

செல்வத்தால் மயக்கம் கொண்ட பகை மன்னனின் வலிமை மிக்க படை தோற்று ஓடும்படி வீரன் தன் வேலினைச் சுழற்றி ஆடிய திறம் கூறுவது.

நூழில் நூழிலாட்டு என்பனவற்றிற்கு உரிய கொளுக்களும் வரலாற்றுப் பாடல்களும் புறப்பொருள் வெண்பா-மாலைப் பதிப்புக்களில் மாறிக் காணப்படுகின்றன. அவை பொருத்தம் உடையன அல்ல என்பதனைத் துறைப் பொருள் நோக்கி அறிக.

17 முன் தேர்க் குரவை :

ஒளி வீசும் வீரக்கழல் அணிந்த வீரர் அரசனுடைய வெற்றி தரும் தேரின் முன்னர் ஆடிக்கொண்டு வந்த செயலைக் குறிப்பிடுவது

18 பின் தேர்க் குரவை :

குறுநில மன்னர்களும் விறலியர்களும் பெரு மன்னனுடைய பெரிய தேரின் பின்னர் ஆடிக்கொண்டுவந்த செயலைக் குறிப்பிடுவது.

19 பேய்க் குரவை :

அரசன் ஏறிவரும் வீரம்மிக்க அழகினை உடைய தேரின் பின்னும் முன்னும் பேய் ஆடிய செயலைக் குறிப்பிடுவது.

20 களிற்றுடன் நிலை :

தம்முடைய கூரிய வேல் படுதலால் சாய்ந்த ஒளி பொருந்திய மருப்பினை உடைய களிற்றோடு வீரரும் சாய்ந்து இறந்த செயலைக் குறிப்பிடுவது.

21 ஒள்வாள் அமலை :

காய்ச்சி வடிக்கப்பட்ட வாள்களைச் சுழற்றி வீரர்கள் அரசனுடன் ஆடிய செய்தியைக் கூறுவது.

22 தானை நிலை :

இருதிறத்துப் படை வீரர்களும் தன் ஆற்றலைப் புகழ, வீரன் ஒருவன் போரிடத்துச் சிறந்து விளங்கிய திறத்தைப் புகழ்ந்து கூறுவது.

23 வெருவரு நிலை :

பகைவருடைய அம்புகளும் வேல்களும் ஒன்றன்பக்கல் ஒன்றாகத் தன் உடலில் பாய்கையினாலே, உயிர் சென்ற பின்னும் வீரன் உடல் தரையின்மிசைப் படாத அஞ்சத்தக்க நிலையினைக் கூறுவது.

24 சிருங்கார நிலை :

இறந்து பட்ட வீரரின் அரிய மலைபோன்ற மார்பு தம் வளருகின்ற முலையகத்துப் பதியத் தெரிவைப் பருவத்து மனைவிமார்கள் தத்தம் கணவரைத் தழுவிய நிலையினைக் கூறுவது.

25 உவகைக் கலுழ்ச்சி :

வாள் தவறாது வெட்டுதலினாலே, பல வாள் வடுக்களும் பதிந்த உடலினை உடைய தன் கணவன் உடலைப் போர்க்களத்தில் கண்டு மறக்குல மகள் உவகைக் கண்ணீர் உகுத்தமை கூறுவது.

26 தன்னை வேட்டல் :

தன் அரசன் போரிட்டு வீரசுவர்க்கம் அடைந்தானாகக் கொடிய மாறுபாட்டை உடைய வீரன் தன் உயிரைக் களவேள்வி செய்தமை கூறுவது.

27 தன்னை வேட்டலின் பக்கம் :

பகைவரை அழிக்கும் நெடிய வேற்படையை உடைய தன் கணவனைக் காண்பதற்குத் தலைவி போர்க்களம் நோக்கிச் சென்ற திறத்தைக் கூறுவதும் அத்துறை யாகும்.

28 தொகை நிலை :

போர்க்களம்புக்க இருபெருவேந்தரும் அவருடைய வீரர் களும் ஒருவரும் எஞ்சாது போர்க்களத்து ஒழிந்த செய லைக் கூறுவது.

இவ்வாறு தும்பைத்திணை இருபத்தெட்டுத் துறைகளை உடையது என்பதாம்.]

தும்பை வெண் பூச்சூடல் :

'.செங்களத்து மறம் கருதிப்
பைந்தும்பைத் தலைமலைந்தன்று '. பு. து. 1

கார்கருதி நின்றுஅதிரும் கவ்வை விழுப்பணையான்
சோர்குருதி சூழா நிலம்நனைப்பப்—போர்கருதித்
துப்புஉடைத் தும்பை மலைந்தான் துகள்அறுசீர்
வெப்புஉடைத் தானைஎம் வேந்து. பு. து. 1

[கார்மேகம் போல முழங்கும் ஆரவாரத்தை உடைய சிறந்த முழவம் முழங்க, குற்றம் அற்ற சிறப்பினை உடைய பகைவரை வெருளும் தானையை உடைய எம் அரசன், குருதி வெள்ளம் பரவுமாறு களம் வகுத்துப் போரிடல் கருதி வலிமை தரும் தும்பைப் பூவைத் தலைக்கண் சூடினான் என்றவாறு.

வேந்து போர் கருதித் தும்பை மலைந்தான் என்பது துறைச்செய்தி.]

தும்பை அரவம் :

' பொன்புனைந்த கழல் அடியோன்
தன்படையைத் தலைஅளித்தன்று '. பு. து. 2

வெல்பொறியும் நாடும் விழுப்பொருளும் தண்ணடையும்
கொல்களிறும் மாவும் கொடுத்தளித்தான் — பல்புரவி
நன்மணித் திண்தேர் நயவார் தலைபனிப்பப்
பன்மணிப் பூணான் படைக்கு. பு. து. 2

[பலகுதிரைகளையும் திண்ணிய தேர்களையும் உடைய பகைவர் தலைநடுங்கும்படிக் களம் வகுத்துப் போரிடத் தொடங்கிய அரசன் தன்படை வீரருக்கு வெல்லும் அடையாளமும் நாடும் சீரிய பொருளும் மருதநிலமும் களிறும் மாவும் கொடுத்துத்தண்ணளி செய்தான் என்றவாறு.

பன்மணிப்பூணன் படைக்கு வெல்பொறி முதலிய கொடுத்து அளித்தான் என்பது துறைச்செய்தி.]

தானைமறம் :

‘ தாம்படைத் தலைக்கொள்ளாமை
ஓம்படுத்த உயர்பு கூறின்று.’ பு. து. 3

கழுதுஆர் பறந்தலைக் கண்ணுற்றுத் தம்முள்
இழுதுஆர்வேல் தானை இகலின் — பழுதாம்
செயிர்காவல் பூண்டொழுகும் செங்கோலார் செல்வம்
உயிர்காவல் என்னும் உரை. பு. து. 3

[பேய்கள் சூழும் போர்க்களத்தில் கூடி இருவகைப்படைகளும் மாறுபட்டுப் போர்செய்யின் தீங்கு வாராமல் அரசர்கள் உயிர்களைப் பாதுகாப்பர் என்று பெரியோர் கூறும் மெய்யுரை பொய்யாமே என்று சான்றோர் இரங்கிக் கூறிய வாறு.

பறந்தலையில் இரு தானைகளும் இகலின் செங்கோலார் செல்வம் உயிர்காவல் என்னும் உரை பழுதாம் என்பது துறைச்செய்தி.]

தானைமறத்தின் பக்கம் :

‘ பூம்பொழில் புறங்காவலனை
ஓம்படுத்தற்கும் உரித்துஎனமொழிப ’. பு. து. 4

வயிர்மேல் வளைஞரல வைவேலும் வாளும்
செயிர்மேல் கனல்விழிப்பச் சீறி — உயிர்மேல்
பலகழியு மேனும் பரிமான்தேர் மன்னர்க்கு
உலகுஅழியும் ஓர்த்துச் செயின். பு. து. 4

[சங்கும் கொம்பும் ஒலிக்க வேலும் வாளும் கனல் பொறி பறக்கப் போர் செய்யின் பல உயிர்களும் அழியுமேனும் அரசர்கள் காலம் தாழ்த்துப் போர் செய்யத் தொடங்குவரேல்

நிலம் அழியும்; காலதாமதம் தோல்வியும் உண்டாக்கலாம் என்று அமைச்சர் முதலாயினோர் சொற்றவாறு.

மன்னர் ஓர்த்துச் செயின் உலகு அழியும் என்பது துறைச்செய்தி.]

தானை மறத்தின் மற்றொரு பக்கம் :

'வேல்தானை மறம்கூறி மாற்றாரது அழிபுஇரங்கினும்
ஆற்றின் உணரின் அத்துறை ஆகும்.' பு. து. 5

மின்னார் சினம்சொரிவேல் மீளிக் கடல்தானை
ஒன்னார் நடுங்க உலாய்நிமிரின் — என்னாங்கொல்
ஆழித்தேர் வெல்புரவி அண்ணல் மதயானைப்
பாழித்தோள் மன்னர் படை. பு. து. 5

[இவ்வரசனுடைய கடல்போன்ற வேற்படை பகைவர் நடுங்கப் போருக்குப் புறப்படின் பகைமன்னரின் தேர் புரவி யானை ஆகிய படைகள் என்ன ஆகுமோ என்று சான்றோர் இரங்கிக் கூறியவாறு.

தானை உலாய் நிமிரின் பாழித்தோள் மன்னர் படை என்னாங்கொல் என்பது துறைச்செய்தி.]

யானைமறம் :

'எழும் அரவக் கடல் தானையான்
மழ களிற்றின் மறம் கிளந்தன்று.' பு. து. 3

அடக்கருந் தானை அலங்குதார் மன்னர்
விடக்கும் உயிரும் மிசையக் — கடல்படையுள்
பேயும் எருவையும் கூற்றும்தன் பின்படரக்
காயும் கழலான் களிறு. பு. து. 6

[பகைவரால் அடக்குதற்கு அரிய தானையை உடைய மன்னர்களின் உடல்தசையை உண்ணப் படைநடுவே பேய்

களும் கழுகுகளும் உயிரை உண்ணக் கூற்றும் தன்பின்வரப் போரிடும் மன்னனுடைய களிறு வெகுண்டு பொரும் என்றவாறு.

கழலான் களிறு காயும் என்பது துறைச்செய்தி.]

குதிரை மறம் :

‘ எறிபடையான் இகல்அமருள்
செறிபடைமான் திறங்கிளந்தன்று ’ பு. து. 7

குந்தம் கொடுவில் குருதிவேல் கூடாதார்
வந்த வகைஅறியா வாளமருள் — வெந்திறல்
ஆர்கழல் மன்னன் அலங்குஉளைமா வெஞ்சிலை
வார்கணையின் முந்தி வரும். பு. து 7

[குந்தம் வில் வேல் ஆகியவை ஒன்றோடொன்று கலந்து பொரும் போர்க்களத்தின் மன்னனுடைய குதிரை வில்லில் இருந்து புறப்படும் அம்புபோல விரைந்து வந்து பொரும் என்றவாறு.

மன்னன் அலங்கு உளைமா வெஞ்சிலை வார்கணையின் முந்திவரும் என்பது துறைச்செய்தி.]

தூசி நிலை

‘ முன் எழுதரு படை தாங்குவன்என
மன்னவற்கு மறம் கிளந்தன்று.’ பு. து.8

உறுசுடர் வாளோடு ஒருகால் விலங்கின்
சிறுசுடர்முன் பேரிருளாம் கண்டாய் - எறிசுடர்வேல்
தேன்குலாம் பூந்தெரியல் தேர்வேந்தே நின்னோடு
பாங்குஅலா மன்னர் படை. பு. து. 8

[வேந்தே ! யான் வாளோடு உலாவிச் சினந்து பொரின் உன் பகைமன்னர் படை சிறு சுடரைக் கண்ட அளவில்

பேரிருள் உடைந்து ஒடுவது போலச் சிதறி ஓடும் என்று வீரன் ஒருவன் தன் வீரத்தைப் புகழ்ந்து பேசியவாறு.

வேந்தே! யான் வாளோடு உலாய் நிமிரின் நின்பாங் கலா மன்னர் படை உடையும் என்பது துறைச்செய்தி.]

தூசி நிலையின் பக்கம் :

'ஒருகுடை மன்னனைப் பலகுடை நெருங்கச்
செருவிடைத் தமியன் தாங்கற்கும் உரித்தே', பு. து. 9

காலான் மயங்கிக் கதிர்மறைத்த கார்முகில்போல்
வேலான்கை வேல்பட வீழ்த்தனவே — தோலா
இலைபுனை தண்தார் இறைவன்மேல் வந்த
மலைபுரை யானை மறிந்து. பு. து. 9

[ஞாயிற்றை மறைத்த கார்மேகங்கள் காற்று அடித்த அளவில் சிதறி ஓடுமாறுபோலத் தும்பை மன்னனைச் சூழ்ந்த பகைவர்தம் யானைகள் வீரன் ஒருவனுடைய வேற்படை குளித்த அளவில் பட்டன என்றவாறு.

[இறைவன் மேல் வந்த மலைபுரை யானை வேலான்கை வேல்பட வீழ்ந்தன என்பது துறைச்செய்தி.]

தேர் மறம் :

'முறிமலர்த்தார் வயவேந்தன்
செறிமணித்தேர்ச் சிறப்புஉரைத்தன்று'. பு. து. 10

செருமலி வெங்களத்துச் செங்குருதி வெள்ளம்
அருமுரண் ஆழி தொடர — வரும்அரோ
கட்டார் கமழ்தெரியல் காவலன் காமர்தேர்
ஒட்டார் புறத்தின்மேல் ஊர்ந்து. பு. து. 10

[போர்க்களத்தில் குருதிவெள்ளம் தன் சக்கரங்களைத் தொடரத் தும்பை வேந்தன்தேர் பகைவர் பிணங்களின் முதுகின்மேல் ஊர்ந்து வரும் என்றவாறு.

காவலன் காமர்தேர் குருதி வெள்ளம் ஆழி தோடா ஒட்டார் புறத்தின் மேல் ஊர்ந்து வரும் என்பது துறைச் செய்தி.]

பாண் பாட்டு :

‘ வெண்கோட்ட களிறுஎறிந்து செங்களத்து வீழ்ந்தார்க்கு
கைவல்யாழ்ப் பாணர் கடனிறுத் தன்று ’. பு. து. 11

தளர்இயல் தாய்புதல்வர் தாம்உண ராமைக்
களரிக் கனல்முழங்க மூட்டி — விளரிப்பண்
கண்ணினார் பாணர் களிறுஎறிந்து வீழ்ந்தார்க்கு
விண்ணினார் செய்தார் விருந்து. பு. து. 11

[யானைகளை எதிர்த்து இறந்துபட்ட வீரர்தம் உயிர்களுக்குத் தேவர்கள் விருந்து செய்யவும், வீரர் தம் மனைவியர் தாயர் புதல்வர் ஆகியோர் அவர் பட்டமை உணராமலேயே அவர்தம் உடலங்களை தீயிட்டுப் பாணர்கள் விளரிப்பண் பாடினர் என்றவாறு.

களிறு எறிந்து வீழ்ந்தார்க்குப் பாணர் விளரிப்பண் கண்ணினார் என்பது துறைச்செய்தி.]

இருவரும் தபுநிலை :

‘ பொருபடை களத்துஅவிய
இருபெருவேந்தரும் இகல்அவிந்தன்று ’. பு. து. 12

காய்ந்து கடுங்களிறு கண்கனலக் கைகூடி
வேந்தர் இருவரும் விண்படர — ஏந்து
பொருபடை மின்னப் புறங்கொடா பொங்கி
இருபடையும் நீங்கா இகல். பு. து. 12

[தன்யானைகள் கண்கனல ஒருவரை ஒருவர் எதிர்த்து வேந்தர் இருவரும் இறந்தபின்னும் அவர்தம் படைகள் மாறுபாடு நீங்காமல் படைக்கலன்கள் ஏந்திப் புறங்கொடாது பொருதன என்றவாறு.

கைகூடி வேந்தர் இருவரும் விண்படர இருபடையும் இகல் நீங்கா என்பது துறைச்செய்தி.]

எருமை மறம் :

'வெயர்பொடிப்பச் சினங்கடைஇப்
பெயர்படைக்குப் பின்நின்றன்று'. பு. து. 13

கடுங்கண் மறவன் கனல்விழியாச் சீறி
நெடுங்கைப் பிணத்திடை நின்றான்— நடுங்குஅமருள்
ஆள்வெள்ளம் போகவும் போகான்கை வேல்ஊன்றி
வாள்வெள்ளம் தன்மேல் வர. பு. து. 13

எருமை போலச் சிறக்கணித்து நிற்றலின் எருமைமறம் ஆயிற்று.

[மறவன் போர்க்களத்தில் பகைவர் வெள்ளம் தன்மேல் வர அது கண்டு தன் படைகள் முதுகிட்டு ஓடவும் தான் ஒருவன் மட்டும் முதுகிடாது கைவேல் ஊன்றிச் சீறி யானைப் பிணத்திடையே நின்றான் என்றவாறு.

மறவன் வாள்வெள்ளம் தன்மேல் வரப் போகான் கை வேல் ஊன்றி யானைப் பிணத்திடை நின்றான் என்பது துறைச்செய்தி.]

ஏம எருமை :

'குடைமயங்கிய வாள்அமருள்
படைமயங்கப் பாழிகொண்டன்று பு. து. 14

மருப்புத் தோளாக மழவிடையின் சீறிச்
செருப்புகன்று செங்கண் மறவன் — நெருப்புஇமையாக்
கைக்கொண்ட எஃகம் கடுங்களிற்றின் மேற்போக்கி
மெய்க்கொண்டான் பின்னரும் மீட்டு. பு. து. 14

[மறவன் தீவிழித்துத் தன்வேலை யானைமேல்போக்கித் தன் தோள்களையே கொம்புகளாகக் கொண்டு காளைபோல் சீறித் தன் மெய்வலியால் வெற்றி கொண்டான்.

மருப்புத் தோளாக மழவிடையில் சீறிப் பின்னரும் மறவன் மெய்க்கொண்டான் என்பது துறைச்செய்தி]

நூழில் :

' களம்கழுமிய படைஇரிய
உளம்கிழித்தவேல் பறித்துஒச்சின்று '. பு.து. 16

மொய்அகத்து மன்னர் முரண்இனி என்னுங்கொல்
கைஅகத்துக் கொண்டான் கழல்விடலை — வெய்ய
விடுசுடர் சிந்தி விரைஅகலம் போழ்ந்த
படுசுடர் எஃகம் பறித்து. பு. து. 16

[நூழில்—கொன்றுகுவித்தல். இக் கொளுவினையும் பாடலையும் நூழிலாட்டுக்குக் கோடல் ஏலாது.

ஒளிவீசித் தன் மார்பினைப் பிளந்த வேலினைப் பறித்து வீரன் தன்கையில் கொண்டானைப் போர்க்களத்தில் பகைவர் மாறுபாடு என்ன ஆகுமோ என்று கண்டோர் இரங்கிக் கூறியவாறு.

விடலை தன் அகலம் போழ்ந்த எஃகம் பறித்துக் கையகத்துக் கொண்டான் என்பது துறைச்செய்தி]

நூழில் ஆட்டு :

' கழல் வேந்தர் படை விலங்கி
அழல்வேல் திரித்து ஆட்டமர்ந்தன்று '. பு. து. 15

ஆடல் அமர்ந்தான் அமர்வெய்யோன் வீழ்குடல்
சூடல் மலிந்த சுழல்கண்பேய்—மீடல்
மறந்தவேல் ஞாட்பின் மலைந்தவர் மார்பம்
திறந்தவேல் கையில் திரித்து. பு. து. 15

[உயிர்கொண்டு மீளுதலை மறந்த வேற்போரில் பகைவர் மார்பைப் பிளந்த வேலினைக் கையில் கொண்டு சுழற்றி வீரன் ஆடினனாக, பேய்கள் கீழே கிடந்த குடர்களைச் சூடிக்கொண்டன.

அமர்வெய்யோன் மலைந்தவர் மார்பம் திறந்தவேல் கையில் திரித்து ஆடல் அமர்ந்தான் என்பது துறைச்செய்தி.]

முன்தேர்க் குரவை :

‘ எழூஉறழ் திணிதோள் வேந்தன் வெல்தேர்
முழுவலி வயவர் முன்ஆடின்று.’ பு. து. 17

ஆனா வயவர்முன் ஆட அமர்க்களத்து
வானூர்மின் ஆகி வழிநுடங்கும் — நோனாக்
கழுமணிப் பைம்பூண் கழல்வெய்யோன் ஊரும்
குழுமணித் திண்தேர்க் கொடி. பு. து. 17

[வயவர்கள் முன்னே ஆடிவர, தும்பை மன்னன் செலுத்திய தேரில் உயர்த்திய கொடி போர்க்களத்தில் வானமின் போல அசைந்து வரும் என்றவாறு.

வயவர் முன் ஆடக் கழல் வெய்யோன் தேர்க்கொடி வழி நுடங்கும் என்பது துறைச்செய்தி.]

பின்தேர்க்குரவை :

‘ கருங்கழல் மறவரொடு வெள்வளை விறலியர்
பெருந்தகை தேரின் பின்ஆ டின்று ’. பு. து. 18

இளைஆய்ந்து பண்ணிய கேள்வியாழ்ப் பாணும்
வளையா வயவரும் பின்னாக் — கொளைஆய்ந்து
அசைவிளங்கும் பாடலொடு ஆட வருமே
திசைவிளங்கும் தானையான் தேர். பு. து. 18

[யாழ்ப்பாணரும் வயவரும் பின்னேவர அரசன் தேர் பாடலும் ஆடலும் நிகழப் போர்க்களத்தில் ஊரும் என்றவாறு.

தானையான் தேர் யாழ்ப்பாணும் வயவரும் பின்னு ஆடவரும் என்பது துறைச்செய்தி.]

பேய்க்குரவை :

' மன்னன் ஊரும் மறம்மிகு மணித்தேர்
பின்னும் முன்னும் பேய்ஆ டின்று '. பு. து. 19

முன்னரும் பின்னரும் மூரிக் கடல்தானை
மன்னன் நெடுந்தேர் மறன்ஏத்தி — ஒன்னார்
நிணம்கொள்பேழ் வாய நிழல்போல் நுடங்கிக்
கணம்கொள்பேய் ஆடும் களித்து. பு. து. 19

[மன்னன் தேர் வெற்றியைப் புகழ்ந்து நிணம் கொண்ட வாயினை உடைய பேய்க்கணங்கள் களித்து நிழல்போல அசைந்து தேரின் முன்னரும் பின்னரும் ஆடும் என்றவாறு.

கணங்கொள் பேய் மன்னன் நெடுந்தேர் மறன் ஏத்தி முன்னரும்பின்னரும்களித்து ஆடும் என்பது துறைச்செய்தி.]

களிற்றுஉடன்நிலை :

' ஒளிற்றுஎஃகம் படவீழ்ந்த
களிற்றின்கீழ்க் கண்படுத்தன்று '. பு. து. 20

இறுவரை வீழ இயக்குஅற்று அவிந்த
தறுகண் தகைஅரிமாப் போன்றான் — சிறுகண்
பெருங்கைக் களிறெறிந்து பின்அதன்கீழ்ப் பட்ட
கருங்கழல் செவ்வே லவன். பு. து 20

[யானையை வேலான் எறிந்து அது சாய்ந்து விழுகையினாலே அதன் அடியிலே அகப்பட்டு மாய்ந்த வீரன் மலை

சரிந்து வீழுகையினாலே செயலற்று அதன் அடியில் இறந்த சிங்கம் போன்றான்.

களிறு எறிந்து அதன் கீழ்ப்பட்டான் செவ்வேலவன் என்பது துறைச்செய்தி.]

ஒள்வாள் அமலை :

'வலிகெழுதோள் வாள்வயவர்
ஒலிகழலான் உடன்ஆடின்று'. பு. து. 21

வாளை பிறழும் கயம்கடுப்ப வந்துஅடையார்
ஆன்அமர் வென்றி அடுகளத்துத் — தோள்பெயராக்
காய்ந்துஅடு துப்பின் கழல்மறவர் ஆடினார்
வேந்தொடு வெள்வாள் விதிர்த்து. பு. து 21

[போர்க்களத்தில் கழல்மறவர் தம்அரசனொடு தம் வாளைச் சுழற்றி வாளைமீன் பிறழும் குளத்தைப்போலப் போர்க்களம் காட்சி வழங்குமாறு ஆடினர் என்றவாறு,

கழல்மறவர் வேந்தொடு வெள்வாள் விதிர்த்து ஆடினார் என்பது துறைச்செய்தி.]

தானை நிலை :

'இருபடையும் மறம்பழிச்சப்
பொருகளத்துப் பொலிவுஎய்தின்று'. பு. து. 22

நேரார் படையின் நிலைமை நெடுந்தகை
ஓரான் உறைகழியான் ஒள்வாளும்—தேரார்க்கும்
வெம்பரிமா ஊர்ந்தார்க்கும் வெல்களிற்றின் மேலார்க்கும்
கம்பமா நின்றான் களத்து. பு. து. 22

[பகைவர் நிலையை வீரன் உணரானாய்த் தன் வாளினை யும் உறையினின்றும் கழியானாய்த் தன் படைஞராகிய தேரார்க்கும் குதிரை வீரருக்கும் யானை வீரருக்கும் துன்பம்

துடைத்தூன்றும் தூணாகவும், பகைவரைச் சார்ந்த தேர்-வீரர் குதிரைவீரர் யானைவீரர் ஆகியவருக்கு நடுக்கமாகவும் போர்க்களத்தில் நின்றான் என்றவாறு.

நெடுந்தகை கம்பமா நின்றான் களத்து என்பது துறைச் செய்தி.

கம்பம்—தூண், நடுக்கம்.]

வெருவரு நிலை :

' விலங்குஅமருள் வியல்அகலம் வில்உதைத்த கணைகிழிப்ப
நிலம்தீண்டா வகைப்போலிந்த நெடுந்தகைநிலை உரைத்தன்று '.
பு. து. 23

வெங்கண் முரசுஅதிரும் வேல்அமருள் வில் உதைப்ப
எங்கும் மருமத்து இடைகுளிப்பச்—செங்கண்
புலவாள் நெடுந்தகை பூம்பொழில் ஆகம்
கலவாமல் காத்த கணை. பு. து. 23

[வேற்படை பொரும் போர்க்களத்தில் வில் விடுத்த கணைகள் தன் மார்பு முழுதும் தைத்துக் கிடத்தலானே வீரன் மார்பு நிலத்தைத் தீண்டாமல் அம்புகளே தரையில் குத்திப் பாதுகாத்தன என்றவாறு.

வில் உதைத்த கணை மருமத்தில் குளிப்ப நெடுந்தகை ஆகம் பூம்பொழில் கலவாமல் கணை காத்த என்பது துறைச் செய்தி.]

சிருங்கார நிலை :

' பகைபுகழக் கிடந்தானை
முகைமுறுவலார் முயக்குஅமர்ந்தன்று '. பு. து. 24

எங்கணவன் எங்கணவன் என்பார் இகல்வாடத்
தங்கணவர் தார்தம் முலைமுகப்ப — வெங்கணைசேர்

புண்உடை மார்பம் பொருகளத்துப் புல்லினர்
நுண்ணிடைப் பேரல் குலார். பு து 24

[பண்டு தம் கணவர் என்று பெருமிதம் கூறிய பரத்தையர் இப்பொழுது அவர்மார்பினைத் தீண்டும்உரிமை இலராக வீரர்தம் உரிமைமகளிர் தம்கணவருடைய புண்பட்ட மார்பினைத் தம்மார்போடு சேர்த்துப் போர்க்களத்துத் தழுவிக் கொண்டனர் என்றவாறு.

நுண்ணிடைப் பேரல்குலார் தம்கணவர் தார்தம் முலை முகப்பப் போர்க்களத்து அவர் மார்பம் புல்லினர் என்பது துறைச்செய்தி.]

உவகைக் கலுழ்ச்சி :

' வாள்வாய்த்த வடுஆழ்யாக்கைக்
கேள்கண்டு கலுழ்ந்துவந்தன்று ', பு. து. 25

வெந்தொழில் கூற்றமும் நாணின்று வெங்களத்து
வந்த மறவர்கை வாள்துமிப்பப் — பைந்தொடி
ஆடுஅரிமா அன்னான் கிடப்ப அகத்துஉவகை
ஓடுஅரிக்கண் நீர்பாய் உக. பு. து. 25

[பகைவர்வாள் வெட்டியமையால் அரிமாவை ஒத்தவீரன் கிடந்தமைகண்டு அவன்மனைவி உவகைக்கண்ணீர் உகுக்க அதுகண்டு கொடுந்தொழிற் கூற்றமும் நாணிற்று என்றவாறு.

வாள்துமிப்ப அரிமாஅன்னான் கிடப்ப அவன் பைந்தொடி கண் நீர் பாய்உகக் கூற்றமும் நாணிற்று என்பது துறைச்செய்தி]

தன்உயிர் வேள்வி வேட்டல் :

' தம்இறைவன் விசும்புஅடைந்தென
வெம்முரணோன் உயிர்வேட்டன்று '. பு. து 26

வானம் இறைவன் படர்ந்தென வாள்துடுப்பா
மானமே நெய்யா மறம்விறகாத் — தேன்இமிரும்
கள்அவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாள்அமர்
ஒள்அழலுள் வேட்டான் உயிர். பு. து. 26

[அரசன் வீரசுவர்க்கம் அடைந்தானாக வீரன் போர்க்களம் என்னும் வேள்விக்குண்டத்தில் உயிர் என்ற அவியை வாளையே துடுப்பாகவும் மானத்தையே நெய்யாகவும் வீரத்தையே விறகாகவும் கொண்டு தேவனாகிய தன் அரசனுக்கு வழங்கினான்.

வானம் இறைவன் படர வீரன் வாளமர் ஒள்அழலுள் உயிர் வேட்டான் என்பது துறைச்செய்தி]

தன்உயிர் வேள்விவேட்டலின் பக்கம் :

'காய்கதிர் நெடுவேல் கணவனைக் காணிய
ஆயிழை சேறலும் அத்துறை ஆகும்'. பு. து. 27

கற்பின் விழுமியது இல்லை கடைஇறந்து
இற்பிறப்பும் நாணும் இடைஒழிய — நற்போர்
அணங்கிய வெங்களத்து ஆருயிரைக் காண்பான்
வணங்குஇடை தானே வரும். பு. து. 27

[போர்க்களத்திலே தன் உயிராகிய கணவனைக் காண்பதற்குக் கற்பு ஒன்றே காரணமாக இற்பிறப்பு நாணம் இவற்றை விடுத்து வீட்டு எல்லையைக்கடந்து அவன் மனைவி அவனைக் காணத் தன்னந்தனியே போர்க்களம் வந்தாள் என்றவாறு.

வணங்கிடை வெங்களத்து ஆருயிரைக் காண்பான் கடை இறந்து தானே வரும் என்பது துறைச்செய்தி.]

தொகைநிலை :

'அழிவுஇன்றிப் புகழ்நிறீஇ
ஒழிவுஇன்றிக் களத்துஒழிந்தன்று'. பு. து. 28

மண்டு அமர்த் திண்தோள் மறம்கடை இ மண்புலம்பக்
கண்திரள்வேல் மன்னர் களம்பட்டார் — பெண்டிர்
கடிதுஎழு செந்தீக் கழுமினர் இன்னும்
கொடிதேகாண் ஆர்ந்தின்று கூற்று. பு. து. 28

கண்திரள்வேல் — காம்புகண் திரண்டவேல்.

[நாடுகள் அரசர்கள் இன்றித் தனித்திருப்ப வேலை ஏந்திய இருதிற மன்னரும் போர்க்களத்து இறப்பவே அவர் உரிமைமகளிர் உடன் கட்டை ஏறினர். இன்னும் வயிறு நிரம்பித் திருப்தி அடையாத கூற்று கொடியது.

மன்னர் களம்பட்டார் பெண்டிர் செந்தீக் கழுமினர் என்பது துறைச்செய்தி.]

ஒத்த நூற்பாக்கள்

'கணையும் வேலும் துணைஉற மொய்த்தலின்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலம் தீண்டா அருநிலை வகையோடு
இருபாற் பட்ட ஒருசிறப் பின்றே'. தொ. பொ. 72

தானை யானை குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகை நிலையும்
வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்
தான்மீண்டு எறிந்த தார்நிலை அன்றியும்
இருவர் வேந்தர் தபுதிப் பக்கமும்
ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்
கூழை தாங்கிய எருமையும் படைஅறுத்துப்
பாழி கொண்ட ஏமத் தானும்
களிறெறிந்து எதிர்ந்தோர் பாடும் களிற்றொடு
பட்ட வேந்தனை அட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும் வாள்வாய்த்து
இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்

ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்
செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினைஇ
ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்
பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும் உளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே'.

தொல். பொ. 72

துன்னருங் கடும்போர்த் தும்பை தும்பைஅரவம்
தன்நிகர் இல்லாத் தானை மறமே
யானை மறத்தொடு குதிரை மறமே
தார்நிலை தேர்மறம் பாணது பாட்டே
இருவரும் தபுநிலை எருமை மறமே
ஏம எருமை நூழில் என்று
நூழி லாட்டே முன்தேர்க் குரவை
பின்தேர்க் குரவை பேய்க்கு ரவையே
களிற்றுடன் நிலையே ஒள்வாள் அமலை
தானை நிலையே வெருவரு நிலையே
சிருங்கார நிலையே உவகைக் கலுழ்ச்சி
தன்னை வேட்டல் தொகைநிலை உளப்பட
நன்பொருள் தெரிந்தோர் நாலிரு மூன்றும்
வண்பூந் தும்பை வகைஎன மொழிப.' பு. வெ. மா. 7

நிலைபாழி கோளொடு வாளாட் டுடைபடை நீள்களிற்றின்
தொலையார் மலைவிவை தும்பைவிகற்பங்கள்
தொன்மைமிக்க'. வீர. 105

13

வாகையின் இலக்கணம்

612 வாகை தானே பாலையது புறனே
தாவில் கோள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப,

இது வாகைத்திணை பாலைத்திணைக்குப் புறன் என்பதூஉம் அதன் பொருளும் கூறுகின்றது.

(இ-ள்) மேற்கூறிய புறத்திணை ஏழனுள், வாகைத் திணை, முற்கூறிய அகத்திணை ஏழனுள் பாலைத்திணைக்குப் புறனும். அது கேடில்லாத கோட்பாட்டினை உடைய தத் தமக்கு உள்ள இயல்பை இருவேறுபட மிகுதிப்படுத்தல் என்றவாறு.

புறத்திணை பலவற்றுள், 'வாகை தானே பாலையது புறனே' என இதனைப் பிரித்து ஓதினார், புணர்ச்சியின் நீங்கி இல்லறம் நிகழ்த்திப் புகழ் எய்துதற்குப் பிரியுமாறு போலச் சுற்றத் தொடர்ச்சியின் நீங்கி அறப்போர் செய்து துறக்கம் பெறும் கருத்தினால் சேறலானும், அன்றியும் பாலை இயற்கை வகையான் அன்றிச் செயற்கை வகையான் நால்வகை நிலனும் பற்றி நிலைபெறுமாறு போல, முற்கூறிய புறத்திணை நான்கும் பற்றி வாகைத்திணை நிகழ்தலானும் என்பது. எனவே, வாகைத்திணை பாலைத்திணைக்குப் புறன் என்றல் ஆணைகூறல் அன்று ஆயிற்று. 14

விளக்கம்

வாகை பாலையது புறன் ஆதற்கு இவர் தந்துள்ள விளக்கம் நச்சினார்க்கினியர் வரைந்த விளக்கமே. 'தாவில் கொள்கை' எனவே இரணியனைப் போல வலியானும் வருத் தத்தானும் கோடல் வாகை அன்று என்பதாம் எனவும் நச்சினார்க்கினியர் வரைந்துள்ளனர்.

இனி, உரையாசிரியர், 'வாகை பாலைக்குப் புறனாயவாறு என்னை எனின், பாலையாவது தனக்கு என ஒருநிலம் இன்றி எல்லா நிலத்தினும் காலம் பற்றிப் பிறப்பது போல, இதுவும் எல்லா நிலத்தினும் எல்லாக் குலத்தினும் காலம் பற்றி நிகழ்வது ஆதலினானும், ஒத்தார் இருவர் புணர்ச்சியி னின்றும் புகழ்ச்சி காரணமாகப் பிரியுமாறு போலத் தன்

னோடு ஒத்தாரினின்றும் நீங்கிப் புகழப்படுதலானும் அதற்கு இது புறனாயிற்று' என்றார். தொல். பொ. 73

பாலை, அறக்காதலை வளர்த்து மீட்டும் இன்பத்தை மிகுப்பது போல, வாகை மறக்காதலை வளர்த்து வெற்றி இன்பம் விளைப்பதாலும், பாலைபோல வாகையும் நிலவரைவு இன்றி யாண்டும் நிகழுமாகலானும் பாலைக்கு வாகை புறனாயிற்று. பாரதியார் புற 18] 14

வாகைத் துறைகள்

613 அலைகடல் தானை அரசுஅட்டு இறையோன்
இகல்புனை வாகை சூடலும்[1] இகன்றோர்
வெண்கண்ணி யொடுகருங் கழல்செங் கச்சுஇனிப்
புண்தவிர்ந் தாம்எனப் புனைதரும் அரவமும்[2]
ஐவகை மரபின் அரச வாகையும்[3]
மொய்கழ லான்பதி முரசுநிலை உரைத்தலும்[4]
மன்னனை உழவன்எனும் மறக்கள வழியும்[5]
மன்னவன் அணங்கார் அடுகளம் வேட்டலும்[6]
வென்ற வேந்தன் மீளிஅந் தேர்முன்
நின்றுபேய் ஆடல் நிகழ்த்திய குரவையும்[7]
பெய்கழல் வேந்தன் பிறங்குஒலித் தேர்ப்பின்
மொய்வளை விறலியர் வயவரோடு ஆடலும்[8]
அறுவகைப் பட்ட பார்ப்பன வாகையும்[9]
இருமூன்று மரபின் ஏனோர் வாகையும்[10]
புகழொடு பெருமையும் நோக்கி யாரையும்
இகழேல் என்ற பொருந வாகையும்[11]
முக்கால நிகழ்வு முறையுளி அறியும்
தக்கோன் நிலைபுகல் அறிவன் வாகையும்[12]
நால்இரு வழக்கின் தாபத வாகையும்[13]
கூதிர் வாடை என்றுஇரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய நிலைமையும்[14]
தண்ணளி பெருகத் தரைஅகம் புரக்கும்

அண்ணல்இயல்பு உரைத்த அரச முல்லையும்[15]
நண்புஉறு பொருட்டா நடுவுநிலை அரசற்குப்
பண்புறச் சொல்லும் பார்ப்பன முல்லையும்[16]
எட்டுவகை நுதலிய அவைய முல்லையும்[17]
பனியும் வெயிலும் கூதிரும் அயர்வும்
துனிஇல் கொள்கையொடு நோன்மை எய்தித்
தணிவுஅற்று இகழ்ந்த கணிவன் முல்லையும்[18]
ஏதம்இல் ஆடவர்க்கு அன்றியும் இகல்மறம்
பேதையர்க் கும்புகல் மூதின் முல்லையும்[19]
அருஞ்சமம் வழிவழி ஆற்றிஏறு உண்ட
இருங்குடி மறம்புகல் ஏறாண் முல்லையும்[20]
இல்லும் பதியும் இயல்பும் கூறி
வல்லோனை மிகுத்த வல்லாண் முல்லையும்[21]
தொடுகடல் உலகினைத் துளங்காது இறைதன்
கடன்எனக் காத்த காவல் முல்லையும்[22]
தக்கன பிறபிற சாற்றும்அக் கூற்றொடு[23]
மிக்ககளம் அரசுகொள் பேராண் முல்லையும்[24]
வெள்வாள் வேந்தன் வேண்டியது ஈயவும்
கொள்ளாது மறவன் கொதித்தமற முல்லையும்[25]
குடைபுகழ் முல்லையும்[26] கண்படை நிலையும்[27]
அடல்கெழு மறவர் அவிப்பலி கொடுத்தலும்[28]
வான்தோய் புகழொடு வயங்கும்ஒரு நிலைமைச்
சான்றோர் நெறிபுகல் சால்பு முல்லையும்[29]
மலிவயல் உழவனை வறுமைதீர் பெருவளம்
பொலிகஎனக் கிணைவன் புகழ்ந்த களவழியும்[30]
மெய்இல் வையகத்து விழைவினை அறுத்துப்
பொய்இல் தத்துவம் பொருளொடு புகறலும்[31]
கவ்வைநோய் யாக்கை கழியும்முன் உலகத்து
அவ்வியம் நோக்கி அருளொடு நீங்கலும்[32]
என்றஎண் ணான்கும் இயம்பிய வாகைக்கு
ஒன்றிய துறைஎன உணர்ந்தனர் கொளலே.

இது முற்கூறிய வாகைத்திணை இத்துணைத்துறை உடைத்து என்கின்றது.

(இ-ள்) அலைகடல் தானை அரசு அட்டு இறையோன் இகல் புனைவாகை சூடல் முதலாய், ஈருகிய கவ்வைநோய் யாக்கை கழியுமுன் உலகத்து அவ்வியம் நோக்கி அருளொடு நீங்கலும் என்று சொல்லப்பட்ட முப்பத்திரண்டும், மேற் கூறிய வாகைத் திணைக்குப் பொருந்திய துறை என அறிந்தோர் கொள்க என்றவாறு.

விளக்கம்

1 **வாகை :**

அலையும் கடலைப் போன்ற சேனைகளை உடைய பகை மன்னவனை அழித்து வேந்தன் ஒருவன் இலைகளோடு தொடுக்கப்பட்ட வாகை மாலையைச் சூடிய செயலைக் கூறுவது.

2 **வாகை அரவம் :**

போரில் யாம் வெற்றிபெற்றோம் ஆதலின் விழுப்புண் பட்டமையால் ஏற்படும் நலிவு நீங்கப் பெற்றோம் என்று மாறுபாடு கொண்ட வாகை வீரர் வெண் கண்ணியும் பெருங்கழலும் செங்கச்சும் புனைந்தமை கூறுவது.

3 **அரச வாகை :**

ஓதல் வேட்டல் ஈதல் படைக்கலம்பயிறல் பல்லுயிர் ஓம்பல் என்ற ஐந்து வகைத் தொழில்களை முட்டின்றி முடிக்கும் அரசன் திறம் கூறுவது.

4 **முரச வாகை :**

காலுக்குப் பொருந்திய வீரக்கழலை அணிந்த அரச-னுடைய கோநகரத்தில் ஒலிக்கும் முரசின் சிறப்பினைக் கூறுவது.

5 மறக்களவழி :

அரசனை உழவனோடு ஒப்பிட்டுக் கூறும் விளக்கத்தை விளம்புவது.

6 களவேள்வி :

அரசன் பகைவரை அழித்த போர்க்களத்தில் களவேள்வி செய்த திறத்தைக் கூறுவது.

7 முன்தேர்க் குரவை :

வெற்றி பெற்ற அரசனுடைய வலிய அழகிய தேரின் முன் நின்றுகொண்டு பேய்கள் ஆடுதலைத் தொடங்கிய செய்திகளைக் கூறுவது.

8 பின்தேர்க் குரவை :

வீரக்கழல் அணிந்த வாகை மன்னனுடைய ஒலிமிக்க தேரின்பின் வளையலை அணிந்த விறலியர் வீரரொடு ஆடிய திறத்தைக் கூறுவது.

9 பார்ப்பன வாகை :

ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்ற அறுவகைத் தொழில் புரியும் பார்ப்பாரது இயல்பு கூறுவது.

10 ஏனோர் வாகை :

ஓதல் வேட்டல் ஈதல் உழவு நிரைஓம்பல் வாணிகம் என்ற வணிகர்க்கு உரிய அறு தொழிலும், வேதம் ஒழிந்தன ஓதலும் ஈதலும் உழவும் நிரை ஓம்பலும் வாணிகமும் வழிபாடும் என்ற வேளாளருக்கு உரிய அறு தொழிலும் கூறுவது.

11 பொருந வாகை :

மேம்பட்டவன் தன்புகழ் சிறப்பு இவற்ரோடு பிறர் புகழ் சிறப்பு என்பனவற்றை ஒப்புநோக்கி அவர் தமக்கு ஒவ்வாமையான் அவரை இகழ்தல் தகாது என்று குறிப்பிடுவது.

12 அறிவன் வாகை :

இறப்பு நிகழ்வு எதிர்வு என்ற மூன்று காலத்தும் நிகழும் செயல்களை எல்லாம் முறையாக அறியும் சான்ரோன் நிலையை விளக்கிச் சொல்லுவது.

13 தாபத வாகை :

ஊண் நசைஇன்மை, நீர் நசை இன்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல் இடையிட்டு மொழிதல், வாய் வாளாதிருத்தல்என்று எட்டுப் பகுதிகளை உடைய தவம் செய்வார் இயல்பினைக் கூறுவது.

14 அ. கூதிர்ப் பாசறை :

கூதிர்க்காலத்துப் பாசறைக்கண் போர் வேட்கையோடு இல்லத்துக் காமவேட்கையை விடுத்துப் போரிடத்துக் காதலால் தங்கியிருக்கும் இயல்பினைக் கூறுவது.

14 ஆ. வாடைப் பாசறை :

வாடைக்காற்று நலியவும் இல்லத்துக் காமவேட்கையை மறந்து பாசறைக்கண் போர் வேட்கையோடு தங்கியிருக்கும் இயல்பினைக் கூறுவது.

15 அரச முல்லை :

கருணைபெருக நாட்டைப் பாதுகாக்கும் தலைமையினை உடைய அரசன் இயல்பினைக் கூறுவது.

16 பார்ப்பன முல்லை :

மாறுபாடுகொண்ட வேந்தர் இருவர் பகைமை ஒழிந்து நண்பராதல் பொருட்டாக நடுவுநிலை மனப்பான்மையுடன் சமாதானம் பேசும் பார்ப்பான் இயல்பினைக் கூறுவது.

17 அவைய முல்லை :

குடிப்பிறப்பு கல்வி குணம் வாய்மை தூய்மை நடுவுநிலை, அழுக்காறின்மை, அவா இன்மை என்ற எண் பண்புகளும் ஒருங்கு சேர்ந்த அறங்கூறு அவையத்தார் இயல்பினைக் கூறுவது.

18 கணிவன் முல்லை :

வெறுப்பற்ற கோட்பாட்டோடு அழுத்தமான கலையறிவுறுக் காலக் கூறுபாடுகள் பலவற்றையும் துணிந்து கூறும் ஆற்றலோடு இருந்த கணிவன் இயல்பினைக் கூறுவது.

19 மூதில் முல்லை :

மாறுபாட்டினை உடைய வீரம் குற்றமற்ற ஆடவர்க்கே அன்றி அம்மறக்குடியைச் சார்ந்த மகளிருக்கும் உண்டு என்பது.

20 ஏறு ஆண் முல்லை :

கிடைத்தற்கு அரியபோர் வருங்காலைப் போர்செய்து வடுப்பட்ட சிறந்த குடியின் வீரத்தை வெளிப்படையாகக் கூறுவது.

21 வல்லாண் முல்லை :

பிறந்தஇல், வாழும்பதி, குடிக்கும் பதிக்கும் ஏற்ற குல இயல்பு இவற்றைக்கூறி மிக்கோன் ஒருவனைச் சிறப்பித்து உரைப்பது.

22 காவல் முல்லை :

சகரரால் தோண்டப்பட்ட கடலினை உடைய உலகம் நடுக்கமுறாது காப்பாற்றுதல் தன்னுடைய கடமை எனக் கொண்ட அரசனுடைய காவல் சிறப்பை உரைப்பது.

23 காவல் முல்லைப் பக்கம் :

அரசனுடைய காவல் இயல்புபற்றிச் சான்றோர் கூறுவதும் அத்துறையின் பாற்படும்.

24 பேராண் முல்லை :

பகைவருடைய போர்க்களத்தை அரசன் வெற்றியினால் தனதாக்கிக் கொள்ளும் இயல்பினைக் கூறுவது.

25 மறமுல்லை :

ஒளிபொருந்திய வாளை ஏந்திய மன்னன் வீரனுக்குத் தக்கனவாகிய பரிசில் முதலியவற்றை வழங்க வீரன் தன் கடமைக்கு வெகுமதி வேண்டாது பகைவரிடம் கொண்ட செற்றம் நீங்காது இருத்தலைக் கூறுவது.

26 குடை முல்லை :

அரசனது வெண்குடையைப் புகழ்ந்து கூறுவது.

27 கண்படை நிலை :

வென்று களங்கொண்ட வேந்தன் அமைதியாக உறக்கங்கொண்ட நிலையைப் பாராட்டுவது.

28 அவிப்பலி :

ஆற்றல்மிக்க வீரர்கள் தமது உயிரைப் பலியாகக் கொடுத்ததைக் கூறுவது.

29 சால்பு முல்லை :

வானளாவிய புகழோடு என்றும் மாறாத ஒரே நிலையில் இருக்கும் சான்றோர் வாழும் முறையைக் கூறுவது.

30 களவழி :

மருத நிலத்துக்கு உரிமைஉடைய உழவனை இரவலர் வறுமையைத் தீர்த்தற்குக் காரணமாகிய அவன்செல்வம் நாள்தோறும் சிறப்பதாகுக என்று மருதநிலப்பறை கொட்டும் கிணைவன் புகழ்ந்த செய்தியைக் கூறுவது.

31 பொருளொடு புகறல் :

நிலையாத இயல்பினை உடைய இவ்வுலகப் பற்றுக்களை அறுத்து உண்மையான தத்துவப் பொருளை விளக்கிக் கூறுவது.

32 அருளொடு நீங்கல் :

பழியைச் செய்யும் நோய்க்குப் புகலிடமான இவ்வுடம்பு அழிவதன்முன் உலகத்தினுடைய வஞ்சனையான இயல்பினை உட்கொண்டு எல்லா உயிர்களிடத்தும் அருள் காட்டும் பெருநோக்குடன் உலகப் பற்றுக்களை நீக்கியது.

இம் முப்பத்திரண்டு துறைகளும் வாகைத்திணைக்கு உரியவாம் என்றவாறு.

வாகை சூடல் :

‘ இலைபுனை வாகை சூடி இகல் மலைந்து
அலைகடல் தானை அரசு அட்டு ஆர்த்தன்று ’. பு. வா. 1

சூடினான் வாகைச் சுடர்த்தெரியல் சூடுதலும்
பாடினார் வெல்புகழைப் பல்புலவர்—கூடார்

உடல்வேல் அழுவத்து ஒளிதிகழும் பைம்பூண்
அடல்வேந்தன் அட்டு ஆர்த்து அரசு. பு. வா. 1

[பகைவர் பொருத வேற்போரில் எதிர்த்த வேந்தனை அழித்து வீரத்தால் ஆரவாரம் செய்து அரசன் வாகைமாலை சூடவே, அவன் வெற்றிப் புகழைப் புலவர் பலரும் பாடினர் என்றவாறு.

அடல் வேந்தனை அட்டு அரசு வாகைத் தெரியல் சூடினான் என்பது துறைச்செய்தி.]

வாகை அரவம் :

'வெண் கண்ணியும் கருங்கழலும்
செங்கச்சும் தகை புனைந்தன்று'. பு. வா. 2

அனைய அமருள் அயில்போழ் விழுப்புண்
இனைய இனிக்கவலை இல்லை—புனைக
அழலோடு இமைக்கும் அணங்கு உடைவாள் மைந்தர்
கழலோடு பூங்கண்ணி கச்சு. பு. வா. 2

[அத்தகைய போரில் நமர் பட்டவிழுப்புண் வெற்றி தந்தன ஆதலின் இனிக் கவலை இல்லை; ஆதலின் வீரர்கள் கழலும் கண்ணியும் கச்சும் புனைக என்று தானைத் தலைவர் வீரர்களுக்குக் கூறியவாறு.

வாள்மைந்தர் கழலோடு பூங்கண்ணியும் கச்சும் புனைக என்பது துறைச்செய்தி.]

அரச வாகை :

'பகல் அன்ன வாய்மொழி
இகல் வேந்தன் இயல்பு உரைத்தன்று'. பு. வா. 3

காவல் அமைந்தான் கடல் உலகம் காவலான்
ஓவல் அறியாது உயிர்க்குவகை—மேவருஞ்சீர்

ஐந்தொழில் நான்மறை முத்தீ இருபிறப்பு
வெந்திறல் தண்ணளிஎம் வேந்து. பு. வா. 3

ஐந்தொழில் — ஓதல், வேட்டல், ஈதல், படைகலம் பயிறல், பல்லுயிர் ஓம்பல்.

[ஐந்தொழிலும் செய்து நான்மறை ஓதி முத்தீவேட்டு இருபிறப்பாளனாய் வெந்திறலோடு தண்ணளியும் உடைய அரசன் இவ்வுலகைக் காத்தலால் இங்கு வாழும் உயிர்கள் மகிழ்ச்சி நீங்காது வாழ்கின்றன என்றவாறு.

வேந்து காவல் அமைந்தான் கடல் உலகம் என்பது துறைச்செய்தி.]

முரச வாகை :

' ஒலிகழலான் அகல் நகருள்
பலிபெறு முரசின் பண்பு உரைத்தன்று '. பு.வா. 4

மதிஏர் நெடுங்குடை மன்னர் பணிந்து
புதிய புகழ்மாலை வேய— நிதியம்
வழங்கும் தடக்கையான் வான்தோய் நகருள்
முழங்கும் அதிரும் முரசு. பு. வா. 4

[பகை மன்னர் பணிந்து வாகை சூடிய மன்னனைப் புதிய புகழ் மாலைகள் சூடிப் பரவ அக்கொடை வள்ளலுடைய அரண்மனையில் உள்ள, போர்க்காலத்தில் இடிக்கும் முரசம், இப்பொழுது இனிமையாக முழங்குகின்றது என்றவாறு.

தடக்கையான் வான்தோய் நகருள் அதிரும் முரசு முழங்கும் என்பது துறைச்செய்தி.]

மறக்களவழி :

' முழவுஉறழ் திணிதோளானை
உழவனாக உரைமலிந்தன்று '. பு. வா. 5

அஞ்சுவரு தானை அமர்என்னும் நீள்வயலுள்
வெஞ்சினம் வித்திப் புகழ்விளைக்கும் — செஞ்சுடர்வேல்
பைங்கண் பணைத்தாள் பகட்டுஉழவன் நல்கலான்
எங்கட்கு அடையா இடர். பு. வா. 5

[போர்க்களம் என்ற வயலிலே சினத்தை விதைத்துப் புகழை விளைவிக்கும் யானையேற்றினை உடைய நம்அரசன் காப்பாற்றுதலால் நமக்கு இடர்ஒன்றும் இன்று என்றவாறு.

அமர்என்னும் வயலுள் சினம் வித்திப் புகழ்விளைக்கும் பகட்டு உழவன் என்பது துறைச்செய்தி]

களவேள்வி :

‘ அடுதிறல் அணங்குஆர
விடுதிறலான் களம்வேட்டன்று ’. பு. வா. 6

பிடித்துஆடி அன்ன பிறழ்பல்பேய் ஆரக்
கொடித்தானை மன்னன் கொடுத்தான் — முடித்தலைத்
தோளொடு வீழ்ந்த தொடிக்கை துடுப்பாக
மூளைஅம் சோற்றை முகந்து. பு. வா. 6

பிடித்து ஆடி — பலு.

[பலகறை போன்ற வரிசை மாறிய பற்களை உடைய பேய்கள் வயிறுஆர உண்ணும்படி நம் வாகைவேந்தன் முடித்தலையில் மூளைச்சோற்றை முகந்து தொடிக்கை துடுப்பாக வழங்கினான் என்றவாறு.

பேய் ஆர மன்னன் முடித்தலை மூளைச்சோற்றை முகந்து தொடிக்கை துடுப்பாக வழங்கினான் என்பது துறைச்செய்தி.]

முன்தேர்க் குரவை :

‘ வென்று ஏந்திய விறல் படையோன்
முன்தேர்க்கண் அணங்கு ஆடின்று ’. பு. வா. 7

உலவா வளம்செய்தான் ஊழிவாழ்க என்று
புலவாய புன்தலைப்பேய் ஆடும்—கலவா
அரசு அதிர நூறி அடுகளம் வேட்டான்
முரசு அதிர வென்றதேர் முன். பு. வா. 7

[தன்னோடு நட்புக் கொள்ளாத பகை அரசர் கெடப் பொருது களவேள்வி செய்த வாகை வேந்தனுடைய தேரின் முன் எமக்குக் குறையாத உணவளித்த இம் மன்னன் பல்லாண்டு வாழ்க என்று புலால் நாறும் வாயினையும் சிவந்த தலையினையும் உடைய பேய் ஆடும் என்றவாறு.

அடுகளம் வேட்டான் வென்ற தேர்முன் பேய் ஆடும் என்பது துறைச்செய்தி]

பின் தேர்க் குரவை :

'பேய்கழலான் தேரின்பின்
மொய்வளை விறலியர் வயவரோடு ஆடின்று'. பு.வா. 8

வஞ்சம்இல் கோலானை வாழ்த்தி வயவரும்
அஞ்சொல் விறலியரும் ஆடுபவே—வெஞ்சமரில்
குன்றுஏர் மழகளிறும் கூந்தல் பிடியும்போல்
பின்தேர்க் குரவை பிணைந்து. பு. வா. 8

[போர்க்களத்தில் களிறும் பிடியும் போலத் தேரின்பின் குரவைக் கூத்தில் கைகோத்துக்கொண்டு வீரரும் விறலியரும் அரசன் புகழ் வாழ்த்தி ஆடுவர் என்றவாறு.

வயவரும் விறலியரும் தேர்ப்பின் குரவை பிணைந்து கோலானை வாழ்த்தி ஆடுப என்பது துறைச்செய்தி]

பார்ப்பன வாகை :

'கேள்வியான் சிறப்பெய்தியானை
வேள்வியான் விறல் மிகுத்தன்று'. பு. வா. 9

ஓதம் கரைதவழ்நீர் வேலி உலகினுள்
வேதம் கரைகண்டான் வீற்றிருக்கும்—ஏதம்
சுடுசுடர் தானாகிச் சொல்லவே வீழ்ந்த
விடுசுடர் வேள்வி அகத்து. பு. வா. 9

அறுவகையாவன—ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என இவை.

[கடல் சூழ்ந்த உலகில் வேதத்தைக் கரைகண்ட பார்ப்பனன் காமம் வெகுளி மயக்கங்களைச் சுடும் சுடராய் எல்லோரும் புகழ வேள்விக்களத்து வீற்றிருப்பான் என்றவாறு.

வேதம் துறைகண்டான் ஏதம் சுடு சுடர் தானாகி வேள்வி அகத்து வீற்றிருக்கும் என்பது துறைச்செய்தி.]

வாணிக வாகை :

'செறுதொழிலின் சேண் நீங்கியான்
அறுதொழிலும் எடுத்துரைத்தன்று'. பு. வா. 10

உழுது பயன்கொண்டு ஒலிநிரை ஓம்பிப்
பழுதிலாப் பண்டம் பகர்ந்து—முழுதுணர
ஓதி அழல் வழிப்பட்டு ஓம்பாத ஈகையான்
ஆதி வணிகர்க்கு அரசு. பு. வா. 10

[உழுதுவிளைவித்து ஆநிரை முதலியனவற்றைக் காத்து வாணிகம் செய்து நூல்பலவோதி எரிஓம்பி வணிகர் தலைவன் வள்ளலாய் வீற்றிருப்பான் என்றவாறு.

இப்பாடற் செய்தி முழுதும் இதன் துறைச்செய்தி.

உழவு நிரைஓம்பல் வாணிபம் ஓதல் வேட்டல் ஈதல் என்ற அறுதொழிலினர் வணிகர் என்பது.]

வேளாண் வாகை :

'மேல்மூவரும் மனம்புகல
வாய்மையான் வழிஒழுகின்று', பு. வா. 11

மூவரும் நெஞ்சமர முற்றி அவரவர்
ஏவல் எதிர்கொண்டு மீண்டுரையான் — ஏவல்
வழுவான் வழிநின்று வண்டார் வயலுள்
உழுவான் உலகுக்கு உயிர். பு வா. 11

[அந்தணர் அரசர் வணிகர் என்ற மூவரும் விரும்ப ஒழுக்கத்தால் சிறந்து அவர்தம் ஏவல்களைப் பழுதுறாமல் செய்து முடித்து வண்டுகள் நிறைந்த வயலில் உழுதொழில் செய்யும் வேளாளனே உலகத்தாருக்கு உயிரானவன் என்றவாறு.

மூவர் ஏவல் எதிர்கொண்டு வயலுள் உழுவான் என்பது துறைச்செய்தி.

'வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி'.
தொ. பொ. 635]

பொருந வாகை :

'புகழொடு பெருமை நோக்கி யாரையும்
இகழ்தல் ஓம்புஎன எடுத்து உரைத்தன்று'. பு. வா. 12

வெள்ளம்போல் தானை வியந்து விரவாரை
எள்ளி உணர்தல் இயல்பன்று — தெள்ளியார்
ஆறுமேல் ஆறியபின் அன்றித்தம் கைக்கொள்ளார்
நீறுமேல் பூத்த நெருப்பு. பு. வா. 12

[அறிவாளிகள் நீறுபூத்தநெருப்பு ஆறுவதாயின் அது முழுதும் ஆறியபின்னரே அதனைக் கைக்கொள்வர். தன் படை வலிமையைக் கருதிப் பகைவர் படைவலிமையை முற்ற உணராது அவரை இகழ்ந்து அறிதல் தக்கதன்று. அவர் வலிமை நீறுபூத்த நெருப்பாய் மறைந்தும் இருக்கலாம் என்றவாறு. பொருநுதல் — ஒப்பிடுதல்.

வெள்ளம்போல் தானை வியந்து வீரவாரை எள்ளி உணர்தல் இயல்பு அன்று என்பது துறைச்செய்தி.]

அறிவன் வாகை :

‘புகழ் நுவல முக்காலமும்
நிகழ்பு அறிபவன் இயல்பு உரைத்தன்று’. பு-வா.13

இம்மூ வுலகின் இருள்கடியும் ஆய்கதிர்போல்
அம்மூன்றும் முற்ற அறிதலான்—தம்மின்
உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர்வாய்ச் சொல். பு. வா. 13

உறழா மயங்கி உறழ்தலாவது—பால் புளித்தலும் பகல் இருளுதலும் நால்வேத நெறி தவறுதலும் முதலியனவாம்.

[மூவுலகிலும் இருள் கடிந்து ஒளி பெருக்கும் கதிரவன் போலக் காமம் வெகுளி மயக்கம் ஆகிய மூவிருள் கடிந்து இறப்பு நிகழ்வு எதிர்வுகளில் நிகழ்வன அறியும் ஞானம் உடைய அறிவர் கூறும் சொற்கள் இயற்கைச் சூழ்நிலையே மாறுபடினும் தாம் என்றும் தவறமாட்டா என்றவாறு.

அம்மூன்றும் முற்ற அறிதலான் பெரியோர் வாய்ச் சொல் பிறழா என்பது துறைச்செய்தி.]

தாபத வாகை :

‘தாபத முனிவர் தவத்தோடு முயங்கி
ஓவுதல் அறியா ஒழுக்கு உரைத்தன்று. பு. வா. 14

நீர்பலகால் மூழ்கி நிலத்து அசைஇத் தோல்உடீஇச்
சோர்சடை தாழச், சுடர்ஓம்பி—ஊர்அடையார்
கான்அகத்த கொண்டு கடவுள் விருந்துஓம்பல்
வான்அகத்து உய்க்கும் வழி. பு. வா. 14

[பலகாலும் நீராடி நிலத்தில் கிடந்து தோலை உடுத்துச் சடையைப் புனைந்து தீயை ஓம்பி ஊர்களை அடையாது காட்டிலேயே தங்கி அங்குள்ள காய்கனி கிழங்கு இலைகளையே உணவாகக் கொண்டு இறைவழிபாடாற்றி விருந்தினரை ஓம்புதல் துறக்கத்தே செலுத்தும் நெறியாகும்.

இப்பாடல் முழுதும் துறைச் செய்தியாம். இதனை 'நாலிரு வழக்கின் தாபத பக்கம்' தொல். பொ. 74 என்பர் தொல்காப்பியனார்.]

கூதிர்ப் பாசறை :

'கூற்றுஅனையான் வியன்கட்டூர்க் கூதிர்வான் துளிவழங்க
ஆற்றாமை நனிபெருகவும் அயில்வேலோன் அளிதுறந்தன்று'.
பு. வா. 15

கவலை மறுகில் கடுங்கண் மறவர்
உவலைசெய் கூரை ஒடுங்கத் — துவலைசெய்
கூதிர் நலியவும் உள்ளான் கொடித்தேரான்
மூதில் மடவாள் முயக்கு. பு. வா. 15

உவலை — தழை.

[பிளவுபட்ட வழிகளைஉடைய தெருக்களிலே வீரர்கள் தழைக் குடிலுக்குள் மழை தூறலுக்கு அஞ்சித் தங்கவும் மழைத்துளி உடைய கூதிர்க்காலம் தன்னைத் தனிமையால் வருத்தவும் அரசன் வீட்டிற்குச் சென்று தேவியைத் தழுவுதலைக் கருதான் என்றவாறு.

கூதிர் நலியவும் தேரான் மூதில் மடவாள் முயக்கு உள்ளான் என்பது துறைச்செய்தி.]

வாடைப் பாசறை :

'வேந்திறலான் வியன்பாசறை வேல்வயவர் விதிர்ப்புஎய்த
வந்துஉலாய்த் துயர்செய்யும் வாடையது வலிஉரைத்தன்று'.
பு. வா. 16

வாடை நலிய வடிக்கண்ணாள் தோள்நசை
ஓடை மழகளிற்றான் உள்ளான்கொல் — கோடல்
முகையோடு அலம்வர முற்றுஎரிபோல் பொங்கிப்
பகையொடு பாசறையு ளான். பு. வா. 16

[காந்தள் அரும்போடு சுழலும்படி வளைத்துக் கொண்ட காட்டுத்தீப் போலச் சினந்து பகைவரை ஒழித்தல் கருதிப் பாசறையில் உள்ள அரசன் வாடைக்காற்று வருத்தவும் தன் தலைவியைத் தழுவுதலை நினையானோ என்றவாறு.

வாடை நலியப் பாசறை உளான் வடிக்கண்ணாள் தோள் நசை உள்ளான்கொல் என்பது துறைச்செய்தி.

இவை இரண்டும் காமத்தை மறந்த வீரம் கூறும் வாகையாம்.]

அரச முல்லை :

'செருமுனை உடற்றும் செஞ்சுடர் நெடுவேல்
இருநிலம் காவலன் இயல்பு உரைத்தன்று'. பு வா 17

செயிர்க்கண் நிகழாது செங்கோல் உயரி
மயிர்க்கண் முரசம் முழங்க — உயிர்க்கெல்லாம்
நாவல் அகலிடத்து ஞாயிறு அனையனாய்க்
காவலன் சேறல் கடன். பு. வா. 17

முயற்சியால் பெற்ற வென்றியை வாகை எனவும், இயல்பாகப் பெற்ற வென்றியை முல்லை எனவும் கூறுப ஆகலின் இவரும் வாகை என்றும் முல்லை என்றும் கூறினார்.

[அரசன் தான் குற்றத்தின்கண் செல்லாது செங்கோல் ஓச்சி வெற்றி முரசம் முழங்க உயிர்களுக்கு எல்லாம் இவ்வுலகில் ஞாயிற்றைப்போல வாய்மையும் நடுவு நிலைமையும் குற்றமின்மையும் இருள் கடிதலும் கொண்டு பாதுகாவலாக

இருத்தலே முறைமையாம் என்றவாறு. நாவல் அகலிடத்து ஞாயிறு அனையனும் காவலன் சேறல் கடன் என்பது துறைச்செய்தி.]

பார்ப்பன முல்லை :

'கான்மலியும் நறுந்தேரியல் கழல்வேந்தர் இகல் அவிக்கும்
நான்மறையோர் நலம்பெருகும் நடுவுநிலை உரைத்தன்று'.
பு. வா. 18

ஒல்லொலிநீர் ஞாலத்து உணர்வோர் விழுமிதே
நல்லிசை முச்செந்தீ நான்மறையோன்—செல்லவும்
வென்று அன்றி மீளா விறல்வேந்தர் வெம்பகை
என்றன்றி மீண்டது இலர். பு. வா. 18

[நல்ல புகழும் முத்தீ ஓம்பலும் உடைய நான்மறை அந்தணன் சந்து செய்விக்கச் சென்றானாக, 'முன்பெல்லாம் பகைமேற் சென்றால் வெற்றிபெற்றால் ஒழிய மீளாத பகை மன்னர் இருவரும், பகைஎன்று மேற்சென்ற அளவோடு போர் செய்யாது மீண்டனர் என்பதனை நோக்க இவ்வுலகில் போர் செய்தலைத் தடுக்கும் அறிவின் சிறப்பு உணரப் படுகிறது என்றவாறு.

நான் மறையோன் செல்லவும் விறல்வேந்தர் வெம்பகை என்றன்றி மீண்டது இலர் என்பது துறைச்செய்தி.]

அவைய முல்லை :

'நவை நீங்க நடுவு கூறும்
அவைய மாந்தர் இயல்பு உரைத்தன்று'. பு. வா. 19

தொடைவிடை ஊழாத் தொடைவிடை துன்னித்
தொடைவிடை ஊழ்இவை தோலாத்—தொடைவேட்டு
அழிபடல் ஆற்றல் அறிமுறைஏன்று எட்டின்
வழிபடர்தல் வல்லது அவை. பு. வா. 19

எட்டாவன—

குடிப்பிறப்புக் கல்வி குணம்வாய்மை தூய்மை
நடுச்சொல்லு நல்லணி ஆக்கம் — கெடுக்கும்
அழுக்காறு அவா இன்மை அவ்விரண்டோ டெட்டும்
இழுக்கா அவையின்கண் எட்டு.

[வழக்கிடுவோரை ஆராய்ந்து வினவிப் பின் அவர் விடையையும் ஆராய்ந்து வினவும் விடையும் முறைமையும் இம் மூன்றும் தப்பாத தீர்ப்பு முடிவை விரும்பித் தோல்வியினையும் வெற்றியினையும் பட்டாங்கு அறியும் முறையை மேற்கொண்டு தனக்குரிய எண்வகைப் பண்போடு செல்ல வல்லதே நீதி வழங்கும் அவை ஆகும் என்றவாறு.

குடிப்பிறப்பு கல்வி குணம் வாய்மை தூய்மை நடுவுநிலை அழுக்காறுமை அவாவின்மை என்பன எண்வகைப் பண்புகளாம். அறிமுறை ஏன்று எட்டின் வழிபடர்தல் வல்லது அவை என்பது துறைச்செய்தி

'குடிப்பிறப்பு அடுத்துப் பனுவல் சூடி
விழுப்பேர் ஒழுக்கம் பூண்டு காமுற
வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையிற்
காதல் இன்பத்துத் தூங்கித் தீதுஅறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை அவா வின்மைஎன
இருபெரு நிதியமும் ஒருதாம் ஈட்டும்
தோலா நாவின் மேலோர் பேரவை'

ஆசிரியமாலை

என்னும் பழம்பாடல் எட்டுவகை நுதலிய அவையத்தை விளக்கும்.]

கணிவன் முல்லை :

'துணிபு உணரும் தொல்கேள்விக்
கணிவனது புகழ் கிளந்தன்று.' பு. வா. 20

புரிவின்றி யாக்கைபோல் போற்றுவ போற்றிப்
பரிவின்றிப் பட்டாங்கு அறியத்— திரிவின்றி
விண் இவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாம்
கண்ணி உரைப்பான் கணி. பு வா. 20

[தன் உடலைப் பேணுமாறு கல்வியறிவைத் தவறாது போற்றி மக்கள் வருந்தாது உண்மையை உணரும் வகைத் தவறு எதுவும் இன்றி வானமும் நிலவுலகும் உண்டாக்கும் நிகழ்ச்சிகளை எல்லாம் கருதிக் கூறுபவன் சிறந்த கணி ஆவான் என்றவாறு.

திரிவின்றி, விண் இவ்வுலகம் விளைக்கும் விளைவு எல்லாம் கண்ணி உரைப்பான் கணி என்பது துறைச்செய்தி.]

மூதின் முல்லை :

' அடல்வேல் ஆடவர்க்கு அன்றியும் அவ்வில்
மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று '. பு. வா. 21

வந்த படைநோனாள் வாயில் முலைபறித்து
வெந்திறல் எஃகம் மிறைக்கொளீஇ — முந்தை
முதல்வர்கல் தான்காட்டி மூதில் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு. பு. வா. 21

[எதிர்த்துவந்த படைகண்டு மனம்பொறாது வீட்டுவாசலில் படர்ந்திருந்த முல்லையின் பூவைப் பறித்துக் காவல் முல்லையாகச் சூட்டி, வேலினை வளைவுநீக்கி மகன் கையில் கொடுத்து அவன் பரம்பரை முன்னவருடைய நடுகற்களைக் காட்டி அவனை வீரத்தாய் போர்க்களத்துக்கு அனுப்பினாள்.

முலைபறித்து என்பதற்கு மகன் பாலுண்டு கொண்டிருந்த செயலைநீக்கி என்பாரும் உளர். பாலுண்ணும் குழந்தையைப் போருக்கு அனுப்பினாள் என்பது வியப்பிற்குரியது.

மூதின்மடவாள் புதல்வனைப் போர்க்குச் செல்கென்றாள் என்பது துறைச்செய்தி.]

ஏறு ஆண் முல்லை :

'மாறு இன்று மறம்கனலும்
ஏறுஆண்குடி எடுத்துஉரைத்தன்று'. பு. வா. 22

கல்நின்றான் எந்தை கணவன் களப்பட்டான்
முன்நின்று மொய்அவிந்தார் என்னையர் —பின்நின்று
கைபோய் கணைஉதைப்பக் காவலன் மேல்ஓடி
எய்போல் கிடந்தான்என் ஏறு. பு. வா 22

[வீரத்தாய் 'எந்தை நடுகல் ஆயினான். என் கணவன் போர்க்களத்தில் இறந்தான். என் தமையன்மாரும் போர்க்களத்தில் இறந்தனர். என் புதல்வன் பகைமன்னனை எதிர்த்து உடலெல்லாம் கணைமூழ்க முள்ளம்பன்றிபோல் களத்தில் இறந்து பட்டான்' என்று கூறும் செய்தியை உரைத்தவாறு.

இப்பாடல் முழுதும் துறைச்செய்தி.]

வல்லாண் முல்லை :

'இல்லும் பதியும் இயல்பும் கூறி
நல்லாண் மையை நலம்மிகுத் தன்று'. பு. வ. 23

வில்முன் கணைதெரியும் வேட்டைச் சிறுசிறாஅர்
முன்முன் முயல்உகளும் முன்றிற்றே — மன்முன்
வரைமார்பின் வேல்மூழ்க வாள்அழுவம் தாங்கி
உரைமாலை சூடினான் ஊர். பு. வா. 23

[வாட்போரில் எதிர்த்து மார்பில் வேல் மூழ்கப் புகழ் மாலை சூடிய வீரன் ஊர் வில்லினை ஆராய்வதற்குமுன்னே அம்புகளை ஆராயும் வேட்டையாடும் சிறுவர் முன்னே முயல்கள் தாவித் திரிதற்கு இடமாகிய முன்னிடங்களை உடையது என்றவாறு.

மார்பில் வேல் மூழ்க உரைமாலை சூடினன் ஊர் வேட்டைச் சிறுசிரு அர்முன் முயல் உகளும் முன்றிற்று என்பது துறைச்செய்தி]

காவல் முல்லை :

‘ தவழ்திரை முழங்கும் தண்கடல் வேலிக்
கமழ்தார் மன்னவன் காவல்மிகுத் தன்று ’.
பு ·வா. 24

பெரும்பூண் சிறுதகைப் பெய்மலர்ப் பைந்தார்
கருங்கழல் வெண்குடையான் காவல் — விரும்பான்
ஒருநாள் மடியின் உலகின்மேல் நில்லாது
இருநால் வகையார் இயல்பு. பு. வா. 24

இருநால்வகை—மேற்கூறிய குடிப்பிறப்பு முதலியன.

[அரசன் காவலை விரும்பாது ஒருநாள் சோம்பியிருப்பின் நீதி வழங்கும் சான்றோர் இயல்பு பயன்படாது ஒழியும் என்றவாறு.

வெண்குடையான் காவல் மடியின் இருநால்வகையார் இயல்பு நில்லாது என்பது துறைச்செய்தி]

காவல் முல்லையின் பக்கம் :

‘ தக்காங்குப் பிறர் கூறினும்
அத்துறைக்கு உரித்தாகும் ’. பு. வா. 25

ஊறு இன்று உவகையுள் வைக உயிர் ஓம்பி
ஆறில் ஒன்று ஆனது அளித்துண்டு—மாறின்று
வான்காவல் கொண்டான் வழிநின்று வைகலும்
தான்காவல் கொண்டல் தகும். பு. வா. 25

[அகப்பகையும் புறப்பகையும் செற்று நாட்டு உயிர்களைப் பாதுகாத்து ஆறில் ஒன்று வரிதிரட்டித் தன் தந்தை சென்ற நல்லாற்றிலேயே தானும் ஆளுதலே அரசனுக்கு ஏற்றது என்றவாறு.

ஊறின்றி உயிர் ஓம்பி அளித்து உண்டு அரசன் காவல் கோடலே தகும் என்பது துறைச்செய்தி]

பேராண் முல்லை ;

‘ உளம்புகல மறவேந்தன்
களம்கொண்ட சிறப்பு உரைத்தன்று ’. பு. வா. 26

ஏந்துவாள் தானை இரிய உறைகழித்துப்
போந்துவாள் மின்னும் பொருசமத்து — வேந்தன்
இருங்களி யானை இனம்இரிந்து ஓடக்
கருங்கழலான் கொண்டான் களம். பு. வா 26

[வாட்படை தோற்றோட வாள்வீசி பகைமன்னர் யானைத்திரள் தோற்றோட வீரன் போர்க்களத்தை வென்று தனதாக்கிக் கொண்டான் என்றவாறு.

பகைவர் தானை இரிய யானை ஓடக் கருங்கழலான் களம் கொண்டான் என்பது துறைச்செய்தி.]

மறமுல்லை :

‘ வெள்வாள் வேந்தன் வேண்டியது ஈயவும்
கொள்ளா மறவன் கொதிப்பு உரைத்தன்று’. பு.வா.27

வில்நவில் தோளானும் வேண்டிய கொள்கென்னும்
கல்நவில் திண்தோள் கழலானும் — மன்னன்முன்
ஒன்றான் அழல்விழியா ஒள்வாள் வலன்ஏந்தி
நின்றான் நெடிய மொழிந்து. பு. வா. 27

[வில்பழகிய தோளுடைய மன்னன் வீரன் விரும்பியவற்றைக் கொள்ளுமாறு கூறவும் வீரன் அரசன் கூற்றினை ஏலாது அழல் விழித்து வாள் ஏந்தி வீரவுரை கூறி வெகுளி நீங்காது கொடையினை ஏலாது நின்றான் என்றவாறு.

கழலான் வேண்டிய கொள்க என்னும் மன்னன்முன் ஒன்றான் நெடிய மொழிந்து நின்றான் என்பது துறைச் செய்தி.

இது வீரத்தையன்றிக் கொடையை விரும்பாத வீரன் இயல் கூறியது.]

குடை புகழ் முல்லை :

‘மொய்தாங்கிய முழுவலித்தோள்
கோய்தாரான் குடை புகழ்ந்தன்று.’ பு. வா. 28

வேயுள் விசும்பு விளங்கு கதிர்வட்டம்
தாய புகழான் தனிக்குடைக்குத்—தோயம்
எதிர்வழங்கு கொண்மூ இடைபோழ்ந்த சுற்றுக்
கதிர் வழங்கு மாமலை காம்பு. பு. வா. 28

சுற்று—சுற்றுத்தாமம்.

[அரசன் குடைக்கு வானமே போர்வையாம்; ஞாயிறு மேல் வட்டமாம்; மழைசொரியும் மேகம் சுற்றுத் தாமமாம்; திங்களும் ஞாயிறும் வழங்கும் மேருமலை காம்பாகும்; எனவே அரசன் குடை உலகம் முழுதும் நிழல் செய்வதாம் என்றவாறு.

இப்பாடல் முழுதும் துறைச்செய்தி.]

கண்படை நிலை :

‘மண்கொண்ட மறவேந்தன்
கண்படை நிலை மலிந்தன்று’. பு. வா. 29

கொங்கலர்தார் மன்னரும் கூட்டளப்பக் கூற்றணங்கும்
வெங்கதிர்வேல் தண்தெரியல் வேந்தற்குப்—பொங்கும்
புனல்ஆடை யாளும் புனைகுடைக்கீழ் வைகக்
கனலா துயில்ஏற்ற கண். பு. வா. 29

[நம் அரசனுக்கு முன்னர்த் திறைகொடாத பகை மன்னரும் திறைசெலுத்த அதனால் நிலமகள் தன்குடைக்

கீழ்த் தங்கவே, பகைவர் இலராதலின் சிவவாத அவன் கண்கள் துயில் ஏற்றன என்றவாறு.

வேந்தற்குப் புனல் ஆடையாளும் புனை குடைக்கீழ் வைகக் கனலாக் கண் துயில் ஏற்ற என்பது துறைச்செய்தி.]

அவிப்பலி :

'வெள்வாள் அமருள் செஞ்சோறு அல்லது
உள்ளா மைந்தர் உயிர்ப்பலி கொடுத்தன்று'. பு.வா. 30

சிறந்தது இதுவென்று செஞ்சோறு வாய்ப்ப
மறம்தரு வாள்அமர் என்னும்—பிறங்குஅழலுள்
ஆருயிர் என்னும் அவிவேட்டார் ஆங்குஅஃதால்
வீரியர்எய் தற்பால வீடு. பு. வா. 30

[வீரத்தை வெளிப்படுத்தும் போர்க்களமாகிய நெருப்பிலே உயிர் என்ற அவிப் பொருளைச் செஞ்சோற்றுக் கடன் கழிக்க வீரர்கள் வேட்டு வீர சுவர்க்கம் அடைந்தனர் என்றவாறு.

செஞ்சோறு வாய்ப்ப அமர் அழலுள் வீரியர் உயிர் அவி வேட்டார் என்பது துறைச்செய்தி]

சால்பு முல்லை :

'வான்தோயும் மலைஅன்ன
சான்றோர்தம் சால்புஉரைத்தன்று'. பு. வா. 31

உறைஆர் விசும்பின் உவாமதிப் போல
நிறையா நிலவுதல் அன்றிக் — குறையாத
வங்கம்போழ் முந்நீர் வளம்பெறினும் வேருமோ
சங்கம்போல் வான்மையார் சால்பு. பு. வா. 31

[மழைநிறைந்த வானத்தில் நிரம்பி ஒளிவீசும் முழுமதி போலப் பண்புகளால் நிறைந்து நிலவுவரேயன்றி வலம்புரி-

யன்ன குலம்புரி பிறப்பினராகிய சான்றோர் கடல்போன்ற செல்வம் கிடைப்பதாயினும் தம் பண்பு மாறார் என்றவாறு.

வான்மையார் சால்பு நிறையா நிலவுதல் அன்றி முந்நீர் வளம்பெறினும் வேறுமோ என்பது துறைச்செய்தி.]

கிணைவன் புகழ்ந்த களவழி :

‘ தண்பணை வயல் உழவனைத்
தெண்கிணைவன் திருந்துபுகழ் கிளந்தன்று ’.
பு. வா. 32

பகடுவாழ்க என்று பனிவயலுள் ஆமை
அகடுபோல் அங்கண் தடாரி — துகள்துடைத்துக்
குன்றுபோல் போர்வில் குரிசில் வளம்பாட
இன்றுபோம் எங்கட்கு இடர். பு. வா. 32

[ஆமையின் வயிறுபோன்ற அழகிய அடிக்கும் பக்கத்தை உடைய கிணைப் பறையின் மாசுநீக்கி உழவனுடைய ஏர்வளம் வாழ்க என்று மலைபோன்ற வைக்கோல் போரினை உடைய அவன் வளத்தைப் பாடியஅளவில் எம் வறுமைத் துயரம்தீரும் என்று கிணைவன் சொற்றவாறு.

போர்வு—போர்பு—வைக்கோல் முதலியவற்றின் போர்.

பகடுவாழ்க என்று குரிசில் வளம்பாட எங்கட்கு இடர் போம் என்பது துறைச்செய்தி]

பொருளொடு புகறல் :

‘ வையகத்து விழைவு அறுத்து
மெய்யாய பொருள் நயந்தன்று ’. பு. வா. 33

ஆம்இனி மூப்பும் அகன்றது இளமையும்
தாம்இனி நோயும் தலைவரும்—யாம்இனி
மெய்ஐந்தும் மீதுஊர வைகாது மேல்வந்த
ஐயைந்தும் ஆய்வது அறிவு. பு. வா. 33

ஐயைந்தும் ஆய்தல் புருடன் முதல் நிலன் ஈருகக் கிடந்த இருபத்தைந்து தத்துவங்களையும் ஆராய்தல். அது மூலப்பகுதி ஒன்றில் தோன்றியது அன்மையின் பகுதி யேயாம் எனவும், அதன்கண் தோன்றுவன அதனைநோக்கின் விகுதியாம் எனவும், தன்கண் தோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாம் எனவும், அவற்றின்கண் தோன்றிய மனமும் ஞானேந்திரியங்கள் ஐந்தும, கன்மேந்திரியங்கள் ஐந்தும், பூதங்கள் ஐந்தும் தன்கண் தோன்றுவன இன்மையின் விகுதியேயாம் எனவும், புருடன் ஒன்றில் தோன்ருமையா னும், தன்கண் தோன்றுவன இன்மையானும் அவை இரண் டும் ஆகான் எனவும் தெரிதல்.

[நம் இளமை நீங்கிவிட்டது; இனி முதுமையும் வந்து வீடும். நோயும் பரவி வரும். ஆதலின் யாம் மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற ஐம்பொறிகளும் நம்மைத் துன் புறுத்தும் வகையில் இந்நிலையிலேயே தங்காமல் இப்பிறவிக் குக் காரணமாகி வந்த இருபத்தைந்து தத்துவங்களையும் ஆராய்ந்து உணர்தலே அறிவாகும் என்றவாறு.

ஐயைந்தாவன மெய் முதலிய பொறி ஐந்தும், நிலம் முதலிய பூதம் ஐந்தும், சுவை முதலிய தன்மாத்திரைகள் ஐந்தும், மொழி முதலிய துணைக்கருவிகள் ஐந்தும், மனம் முதலிய உட்பொறிகள் மூன்றும் புருடனும் மூலப்பகுதியும் ஆம்.

மெய் ஐந்தும் மீதூர வைகாது மேல்வந்த ஐயைந்தும் ஆய்வது அறிவு என்பது துறைச்செய்தி]

அருளொடு நீங்கல் :

'ஒலிகடல் வையகத்து
நலிவுகண்டு நயப்புஅவிந்தன்று'. பு. வி. 34

கயக்கிய நோயவாய்க் கைஇகந்து நம்மை
இயக்கிய யாக்கை இருமுன் —மயக்கிய

பண்பு அடா வைகும் பயன்ஞால நீள்வலை
உள்படாம் போதல் உறும். பு. வா. 34

[நம்மைக் கலக்கிய நோய்களுக்கு இருப்பிடமாய் நம் வசப்படாது நம்மை வசப்படுத்தி இயக்கிவரும் இவ்வுடல் அழிவதற்கு முன்பு நம்மைத் தன்வயின் ஈர்த்து மயங்கச் செய்யும் குணங்களை அடுத்துத் தங்கும் பயனாகிய உலகம் என்னும் நெடிய கண்ணியில் அகப்படாது அகன்று போதலே நமக்கு மேம்பட்ட செயலாம் என்றவாறு

யாக்கை இருமுன் ஞால நீள்வலை உட்படாது போதல் உறும் என்பது துறைச்செய்தி.]

ஒத்த நூற்பாக்கள்

'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கின் தாபத பக்கமும்
பாலறி மரபின் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையோடு ஆங்கு எழுவகையின்
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்'.
தொல். பொ. 74

'கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும்
ஏரோர் களவழி அன்றிக் களவழி
தேரோர் தோற்றிய வென்றியும் தேரோர்
வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்
ஒன்றிய மரபின் பின்தேர்க் குரவையும்
பெரும்பகை தாங்கும் வேலி னானும்
அரும்பகை தாங்கும் ஆற்ற லானும்

புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்
ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்து
தொல்உயிர் வழங்கிய அவிப்பலி யானும்
ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கினும்
பகட்டி னானும் மாவி னானும்
துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்
கட்டில் நீத்த பாலி னானும்
எட்டுவகை நுதலிய அவையத் தானும்
கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வன்புகழ்க் கொடைமை யானும்
பிழைத்தோர்த் தாங்கும் காவ லானும்
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த அகற்சி யானும்
காமம் நீத்த பாலி னானும்என்று
இருபால் பட்ட ஒன்பதிற்றுத் துறைத்தே'.

தொ. பொ. 75

'சீர்சால் வாகை வாகை அரவம்
அரச வாகை முரச வாகை
மறக்கள வழியொடு களவேள் வியயே
முன்தேர்க் குரவை பின்தேர்க் குரவை
பார்ப்பன வாகை வாணிக வாகை
வேளாண் வாகை பொருந வாகை
அறிவன் வாகை தாபத வாகை
கூதிர்ப் பாசறை வாடைப் பாசறை
அரச முல்லை பார்ப்பன முல்லை
அவைய முல்லை கணிவன் முல்லை
மூதின் முல்லை ஏருண் முல்லை
வல்லாண் முல்லை காவல் முல்லை
பேராண் முல்லை மறமுல் லையே
குடைமுல் லையொடு கண்படை நிலையே

அவிப்பலி என்று சால்பு முல்லை
கிணைநிலை ஏனைப் பொருளொடு புகறல்
அருளொடு நீங்கல் உளப்படத் தொகைஇ
மூன்றுதலை யிட்ட மூவி ரைந்தும்
வான்தோய் வாகைத் திணையது வகையே'. பு. வெ. 8

'நாற்குலப் பக்கமுக் காலம் களவழி நற்குரவை
ஆற்றல்வல் லாண்வேட்கை யார்பக்கம் மேன்மை
அரும்பொருளே
தோற்றிய காவல் துறவு கொடை படையாளர்பக்கம்
மாற்றிய வேற்றுமையோடு மற்றும்மிவை வாகையிலே.'
வீர - 104

15

காஞ்சியின் இலக்கணம்

614 காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே.

இது காஞ்சித்திணை பெருந்திணைக்குப் புறன் என்பதூஉம், அதன் பொருளும் கூறுகின்றது.

(இ-ள்) இது மேற்கூறிய புறத்திணை ஏழனுள் காஞ்சித்திணை முற்கூறிய அகத்திணை ஏழனுள் பெருந்திணைக்குப் புறனாகும்; அஃது ஒன்றற்கு ஒன்று உரிமை ஆதல் அரிய சிறப்பினால், யாக்கை, செல்வம், இளமை முதலிய பல நெறியானும் நில்லாத உலகியற்கையைப் பொருந்திய நெறியினை உடைத்து என்றவாறு.

புறத்திணை பலவற்றுள், 'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே' என இதனைப் பிரித்து ஓதினர்; எண்வகை மணத்தினும் நான்கு மணம் பெற்ற பெருந்திணை போல இக்காஞ்சியும் அறம் முதலாகிய மும்முதற் பொருளும் அவற்றது நிலையின்மையும் ஆகிய ஆறனுள்ளும் நிலையின்மை மூன்றற்கும்

உரித்தாய் எல்லாத்திணைகட்கும் ஒத்த மரபிற்று ஆகலானும், 'பின்னர் நான்கும் பெருந்திணைபெறும்' தொல். பொ. 105 என்ற நான்கும் சான்றோர் இகழ்ந்தாற்போல அறம் முதலிய வற்றது நிலையின்மை உணர்ந்து அவற்றை அவர் இகழ்த லானும் ஏறிய மடல் திறம் முதலிய நான்கும் பொருந்தாக் காமம் ஆயினவாறு போல உலகியல் நோக்கி நிலையாமை நற்பொருள் அன்று ஆகலானும், உரிப்பொருள் இடம் மயங்கி வருதல் அன்றித் தனக்கு நிலம் இல்லாத பெருந் திணைபோல அறம் பொருள் இன்பம் பற்றி அன்றி வேறு நிலையாமை என்பது ஒரு பொருள் இன்று ஆதல் ஒப்புமை யானும் என்பது. எனவே, காஞ்சித்திணை பெருந்திணைக்குப் புறன் என்றல் ஆணை கூறல் அன்று ஆயிற்று. 16

விளக்கம்

காஞ்சி பெருந்திணைக்குப் புறனாகிய செய்தி நச்சினார்க் கினியர் வரைந்த விளக்கம் கொண்டே விளக்கப்படுகிறது. இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் தனக்குத் துணையில்லாத வீட்டின்பம் ஏதுவாக அறம் பொருள் இன்பமாகிய பொருட் பகுதியானும் அவற்றுப் பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும் இளமையும் முதலியவற்றானும் நிலைபேறு இல் லாத உலக இயற்கையைப் பொருந்திய நன்னெறியினை உடைத்து காஞ்சித்திணை என்றவாறு. எனவே, வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றும் குறிப்பினது காஞ்சி ஆயிற்று. பாங்கு—துணை. (சமம்) என்று உரை வரைந்துள்ளார்.

இனி, உரையாசிரியர், 'காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயவாறு என்னை எனின் ஏறிய மடல்திறம் முதலாகிய நோம் திறக்காமப்பகுதி அகத்திணை ஐந்தற்கும் புறனாயவாறு போல இது புறத்திணை ஐந்தற்கும் புறனாகலானும், இது போல அதுவும் நிலையாமை நோந்திறம் பற்றியும் வருதலா னும் அதற்கு இது புறனாயிற்று' என்பர் தொல். பொ. 76

பொறி அவிக்கும் உரன் இன்றி இன்பம் விழைந்து மேவன செய்வார் காமவகை பெருந்திணையாவது போல, முயற்சி மேற்கொள்ளும் உரன் இன்றி நிலையாமை சொல்லி நெஞ்சு அழிய மனம் மடிவதே காஞ்சியாவதானும், இவ் விரண்டுக்கும் இடம் பொழுது இரண்டும் வரையறை இன்மை யானும் பெருந்திணைக்குக் காஞ்சி புறனாயிற்று.

(பாரதியார்-புற. 22 உரை)

காஞ்சித் துறைகள்

615 வரூபடை நோனன் மடுத்துஎதிர் ஊன்றக்
கருதிவேல் உழவன் காஞ்சி சூடுதலும்[1]
மேல்வரு படைவரல் மிகவும் ஆற்று
வேல்வல் ஆடவர் விறல்மிகுத்து எதிர்தலும்[2]
வந்துபுலத்து இறுத்தோர் வரம்புகட வாமைத்
தந்தம் கடவை தழீஇய தழிஞ்சியும்[3]
வடிசுடர் வேலோன் வாட்குடி யவர்க்குப்
படுசுடர் இமைக்கும் படைபல வழங்கலும்[4]
வழங்கலும் மறவர்அவ் வரிசை ஏத்தித்
தழங்குஒலி முரசில் சாற்றிய பக்கமும்[5]
தாங்குவிறல் மறவர் தத்தம் தோள்வலி
வீங்குபடை நாப்பண் விளைத்தபெருங் காஞ்சியும்[6]
அருமுனை இறுத்தோன் அறைகூ வியபின்
செருமுனைச் செல்கெனச் செப்புவாள் செலவும்[7]
முதுகுடி மறவர் முன்னுறச் சூழக்
கோதிஅழல் வேலோன் குடைமுனைச் சேறலும்[8]
இன்னது பிழைப்பின் இதுவா கியர்எனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினக் காஞ்சியும்[9]
நேர்பொரு மள்ளர் நெடுங்குடை வேந்தன்
போர்எதிர் பூக்கோள் நிலையும்[10] அதாஅன்று
தூசி தாங்கிவீழ் சுழல்விழி மறவன்

ஏசு இல்வான் தலைச்சிறப்பு இயம்புதலைக் காஞ்சியும்[11]
அந்தம்இல் பெருஞ்சிறப்பு அமர்வீழ் அருந்தலை
தந்தவர்க்கு ஈந்த தலைமா ராயமும்[12]
முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு[13] தொகைஇத்
திறங்கொள்வேற்று அரசரும் சென்னி துளங்க
மறங்க டாவிய வயங்குமறக் காஞ்சியும்[14]
பண்புஉற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியும் அத்துறைக் கூற்றும்[15]
ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோன்
பேஎய்ஓம் படுத்த பேஎயோம்[16] புதலும்
ஆஅய களத்தில் அவிந்தவாள் உழவர்க்குப்
பேஎய் அஞ்சிய பேஎய்க் காஞ்சியும்[17]
வியல்மனை விடலை விழுப்புண் காப்பவும்
துயல்முலைப் பேஎய்மகள் தொட்ட காஞ்சியும்[18]
இன்னகை மனைவி பேஎய் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்[19]
இன்னன்என்று இரங்கும் மன்னைக் காஞ்சியும்[20]
மன்னன்மற வர்க்குமட்டு ஈந்தகள் காஞ்சியும்[21]
காதல் கணவனொடு கதழ்எரி மூழ்கும்
மாதர்மலிபு உரைத்த ஆஞ்சிக் காஞ்சியும்[22]
மன்உயிர் நீத்த வேலின் மனையோள்
இன்உயிர் நீத்த அத்துறைப் பகுதியும்[23]
கறுத்தவாள் உழவன்இக் கன்னியைத் தருகஎன
மறுத்துஉரை யாடிய மகட்பால் காஞ்சியும்[24]
மன்னவன் இகல்மறம் மடங்கவேல் இறைவன்
முன்இருந்து அருமனை முரித்தமுன் இருப்பும்[25]
என்றுமுறை நவின்ற எழுமூன்றும் நான்கும்
சென்றுஎதிர் காஞ்சித் திணையது விரியே.

இது, மூற்கூறிய காஞ்சித்திணை இத்துணைத்துறை உடைத்து என்கின்றது.

(இ-ள்) வருபடை நோனான் மடுத்து எதிர் ஊன்றக் கருதி வேல் உழவன் காஞ்சி சூடுதல் முதல், ஈருகிய, மன்னன் இகல்மறம் மடங்க வேல் இறைவன் முன்இருந்து அருமுனை முரித்த முன்னிருப்பும் என முறையே சொல்லப்பட்ட இருபத்தைந்து துறையும் சென்று எதிர் ஊன்றல் ஆகிய காஞ்சித் திணையினது விரியாம் என்றவாறு.

விளக்கம்

1 காஞ்சி சூடுதல்

தன்னை எதிர்த்து வரும் வஞ்சி வேந்தனுடைய படை கண்டு மனம் பொறாது அவனை எதிர் ஊன்றுதற்கு வேலையே கலப்பையாகக் கொண்டு பகைவர் மார்பினை உழும் அரசன் காஞ்சிப் பூவினைச் சூடுதலைக் கூறுவது.

2 காஞ்சி எதிர்வு

தம்மேல் வஞ்சிவேந்தன் படை எதிர்க்க வருதலை மிகவும் பொறாத வேற்போரில் வல்ல வீரருடைய ஆற்றலை மிகவும் சிறப்பித்துக் கூறுவது.

3 தழிஞ்சி

தம் நாட்டின் மீது படையெடுத்தலைக் கருதிப் புறத்தே பாடி வீடு அமைத்துத் தங்கிய வஞ்சியார் தம் நாட்டு எல்லையைக் கடந்து உட்புகாதபடி வழிகள் பலவற்றையும் பாதுகாத்தலைக் கூறுவது.

4 படைவழக்கு

காய்ச்சி வடிக்கப்பட்டு ஒளிவீசும் வேலை ஏந்திய மன்னன் வாள் ஏந்திப் பொரும் மறக்குடியில் பிறந்த வீரருக்கு ஒளி வீசும் படைக்கலன்களை வழங்கியமை கூறுவது

5 படைவழக்கின் பக்கம்

அரசன் படைக்கலன்களைத் தமக்கு வழங்கிய அளவில் வீரர்கள் தமக்கு வழங்கப்பட்ட பாராட்டுதலைப் புகழ்ந்து

ஒலிக்கும் முரசு ஒலியின் இடையே தம் கடமையை எடுத்துக் கூறுவதும் அத்துறையின் பாற்படும்.

6 பெருங்காஞ்சி

பகைவரைத் தடுக்கும் ஆற்றல் பொருந்திய வீரர் தம் தோள்வலிமையை மிகப் பெரிய படை நடுவிலே வெளிப்படுத்திய திறத்தைக் கூறுவது.

7 வாள்செலவு

வஞ்சி வேந்தன் போருக்கு அழைத்தபின் போர்க்களத் திற்கு மாற்றரசன் வாள் நல்ல நேரத்தில் கொண்டு செல்லப்படுவதைக் கூறுவது.

8 குடைசெலவு

பழைய மறக்குடி வீரர் முன்னே கூட்டமாகச் சூழ்ந்து செல்லக் கொதிக்கும் தீப்போன்ற வேலை ஏந்திய காஞ்சி மன்னனுடைய குடை நன்னேரத்தில் போர்க்களம் நோக்கிச் செல்லும் திறம் கூறுவது.

9 வஞ்சினக்காஞ்சி :

யான் இன்ன செயலைச் செய்யேன் ஆயின் எனக்கு இன்ன பழி எய்துவதாகுக என்று கிட்டுதற்கரிய சிறப் பினை உடைய சபதம் செய்வதனைக் கூறுவது.

10 பூக்கோள்நிலை :

பகைவருக்கு நேராகச் சென்று போரிடும் வீரருக்கு நெடிய வெண்குடையினை உடைய அரசன் போருக்கு உரிய காஞ்சிப் பூவினை வழங்கிய திறத்தைச் சொல்லு வது.

11 தலைக்காஞ்சி :

பகைவனுடைய முன்னணிப் படையினைத் தடுத்துப் போர்க்களத்தில் பட்ட சுழலும் விழியினை உடைய

வீரனுடைய குற்றமற்ற மேம்பட்ட தலையின் சிறப்பினை எடுத்துப் புகழ்ந்த திறத்தினைக் கூறுவது.

12 **தலைமாராயம் :**

அழிவில்லாத பெரிய சிறப்பினோடு போரில் அறுபட்ட வீரன் தலையைக் கொண்டு வந்தவருக்கு அரசன் சிறப்புச் செய்தலைக் கூறுவது தலைமாராயம். தம் வீரன் தலை பகைவன் கையில் அகப்படாமல் காத்தல் சிறப்பாகும்.

13 **தலையோடு முடிதல் :**

போர்க்களஞ் சென்று, ஆண்டு இறந்துபட்ட பெருவீரனாகிய தன் கணவன் தலையினைத் தன்மார்போடும் முகத்தோடும் சேர்த்து அணைத்துக்கொண்டு அவன் மனைவி இறந்துபட்ட செய்தியைக் கூறுவது.

மறக்காஞ்சி :

பேராற்றல் கொண்ட வேற்றரசரும் வியப்பினாலும் அச்சத்தாலும் தலை நடுக்கம் உற வீரன் ஒருவன் தன் வீரத்தை வெளிப்படுத்தி விளங்குவதைக் கூறுவது.

15 **மறக்காஞ்சியின் பக்கம் :**

நன்றாகிய குணம் உறுநிலையாகப் பெறுகின்ற பகுதியை ஆராய்ந்து பெறுதற்குப்பட்ட விழுப்புண் தீர்ந்து வாழும் வாழ்க்கை நிலையின்மையின் அதனை வேண்டாது வீரன் தன் புண்களைக் கிழித்துக் கொண்டு இறத்தலும் மறக் காஞ்சியின் பாற்படும்.

16 **பேய் ஓம்புதல் :**

போர்க்களத்தில், இராக்காலத்தில், புண்பட்டுக் குற்றுயிரோடு கிடந்த வீரனைப் பாதுகாத்தலுக்கு உரிய சுற்றம் எதுவும் இன்மையான் அவனைப் பேய்களே பாதுகாத்த திறம் கூறுவது.

17 பேய்க்காஞ்சி :

போர்க்களத்தில் இறந்த வாள்உழவராகிய வீரர்கள் கண்கள் கனன்று விழித்துக் கொண்டிருப்பதனைக் கண்டு பேய்கள் அவர்களை நெருங்குதற்கு அஞ்சிய நிலை கூறுவது.

18 தொட்டகாஞ்சி :

பரந்த வீட்டின் உள்ளார் வீரனுடைய விழுப்புண்ணுக்கு மருந்திட்டுப் பாதுகாவாநிற்கவும், தொங்கும் நகில்களையும் பிளந்த வாயினையும் உடைய பேய் மகள் அவ் வீரன் உடலைத்தொட்ட செயலைக் கூறுவது.

19 தொடாக்காஞ்சி :

இனிய சிரிப்பினை உடைய மனைவி பேய்கள் புண்ணுற்ற வீரனை நெருங்காதவாறு, தடுத்துக் காத்து நிற்கும் திறம் கூறுவது.

20 மன்னைக்காஞ்சி :

இறந்து பட்டவீரன் இப்படி இப்படி எல்லாம் இருந்தான் என்று மற்றவர் இரங்கிப் புலம்பும் செய்திகளைக் கூறுவது.

21 கட்காஞ்சி :

காஞ்சி மன்னன் தன்வீரருக்குப் போரில் களிப்பு மிகு மாறு கள் வழங்கிய திறம் கூறுவது.

22 ஆஞ்சிக் காஞ்சி :

தன் அன்புக்கு எழுமையும் உரிய கணவன் உடலோடு தீக்குளித்த அவன் அன்புக்குரிய மெல்லிய இயல்பினை உடைய மனைவியின் அன்பினைக் கூறுவது.

23 ஆஞ்சிக் காஞ்சியின் பக்கம் :

தன் கணவன் உயிரைப் போக்கிய வேலினைக்கொண்டு மனைவி தன் உயிரைப் போக்கிக் கொள்வதும், அத் துறையின் பாற்படும்.

24 மகட்பால் காஞ்சி :

பகைவரைக் கோபித்த வாளுழவனாகிய வஞ்சி வேந்தன் காஞ்சி மன்னன் மகளைத் தனக்கு மணம் செய்துகொடுக் குமாறு கேட்கவும் காஞ்சி மன்னன் மறுத்து உரைத்த திறம் கூறுவது,

25 முன்னிருப்பு :

தன்னை எதிர்த்து வந்த வஞ்சிவேந்தன் மாறுபட்ட வீரம் குறையுமாறு வேலை ஏந்திய காஞ்சி மன்னன் முன் இருந்து போர் முனையிலிருந்து வஞ்சியானைத் துரத்தித் தங்கிய செயலைக் கூறுவது.

இவ்விருபத்தைந்து துறைகளும் காஞ்சித் திணையின் பால என்பதாம்.

காஞ்சி சூடுதல் :

“ வேஞ்சின மாற்முன் விடுதர வேந்தன்
காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று ”. பு. கா. 1

அருவரை பாய்ந்து இறுது மென்பார் பண்டு இப்
பெருவரைச் சீறூர் கருதிச்—செருவெய்யோன்
காஞ்சி மலையக் கடைக்கணித்து நிற்பதோ
தோஞ்செய் மறவர் தொழில். பு. கா. 1

[போர் செய்ய வாய்ப்பு இன்மையால் உயிர் வாழ விரும்பாத வீரர் அரசன் ஊர்காத்தல் கருதிக் காஞ்சி சூடவும் வாளா இருப்பரோ என்றவாறு.

செருவெய்யோன் காஞ்சி மலைய மறவர் தொழில் கடைக் கணித்து நிற்பதோ என்பது துறைச்செய்தி].

விறல் மிகுத்தது :

‘ மேல்வரும் படைவரல் மிகவும் ஆற்று
வேல்வல் ஆடவன் விறல்மிகுத் தன்று’. பு. கா. 2

மன்மேல் வரும்என நோக்கான் வரைமார்பில்
வென்வேல் முகந்தபுண் வெய்துஉயிர்ப்பத்— தன்வேல்
பிடிக்கலும் ஆற்றுப் பெருந்தகை ஏவத்
துடிக்கண் புலையன் தொடும். பு. கா. 2

[இதனைக் காஞ்சி அதிர்வு என்னும் வெண்பாமாலை நூல்.

தன் மார்பில் முன் போரிட்ட காலை பகைவன் எறிந்த வேல்தந்த புண்ணினால் பெருமூச்சுவிட்டுத் தான் வேல் ஏந்தும் நிலையிலும் இல்லாத காஞ்சி மறவன், இந்நிலையிலும், தன்னைப் பகைவன் எதிர்த்துப் பொருவானே என்பதனைத் தன் வீரத்தால் கருதாது, புலையனை ஏவ அவன் துடி முழக்குவான் என்றவாறு.

பெருந்தகை மன்மேல் வரும் என நோக்கான் ஏவப் புலையன் துடிக்கண் தொடும் என்பது துறைச்செய்தி.]

தழிஞ்சி :

‘ பரந்து எழுதரு படைத்தானை
வரம்பு இகவாமைச் சுரம் காத்தன்று ’.பு. கா. 3

குலாவும் சிலையார் குறும்புகொள வெஃகி
உலாவும் உழப்புஒழிக வேந்தன் — கலாவும்
இனவேங்கை அன்ன இகல்வெய்யோர் காவல்
புனம்வேய் நரலும் புழை. பு. கா. 3

[தம்மிற் கூடிய வேங்கை போன்ற காஞ்சிமறவர் மூங்கில்கள் ஒலிக்கும் வழிகளிலெல்லாம் காத்து நிற்கின்றனர் ஆதலான், மண் நசையால் வந்த வீரர் காஞ்சிமறவர் சிற்றூரைக் கொள்ள மேற்கொள்ளும் செயலை விடுவாராக என்றவாறு.

இகல் வெய்யோர் காவல் புனவேய் நரலும் புழை என்பது துறைச்செய்தி.]

படை வழக்கு :

'முத்து அவிர்பூண் மறவேந்தன்
ஒத்தவர்க்குப் படைவழங்கின்று'. பு. கா. 4

ஐயம் களைந்திட்டு அடல்வெங்கூற்று ஆலிப்ப
ஐஇலை எஃகம் அவைபலவும்—மொய்இடை
ஆள்கடி வெல்களிற்று அண்ணல் கொடுத்தளித்தான்
வாள்குடி வன்கண் ணவர்க்கு. பு. கா. 4

[வாட்குடி வீரருக்கு வேல்கள் பலவற்றையும் பகைவரை அழிக்கும் களிற்றினன் ஆகிய காஞ்சி வேந்தன் ஐயமின்றிக் கூற்றுவன் மகிழ்ச்சியால் ஆரவாரிக்கும்படி வழங்கினன் என்றவாறு.

அண்ணல் வன்கண்ணவர்க்கு எஃகம் பலவும் கொடுத்து அளித்தான் என்பது துறைச்செய்தி.]

படை வழக்கின் பக்கம் :

'கொடுத்த பின்னர்க் கழல் மறவர்
எடுத்து உரைப்பினும் அத்துறை ஆகும்'. பு. கா. 5

துன்னருந் துப்பின் தொடுகழலார் சூழ்ந்திருப்பத்
தன்அமர் ஒள்வாள்என் கைத்தந்தான்—மன்னற்கு
மண்ணகமோ வைகின்று மாலை நெடுங்குடைக்கீழ்
விண்ணகமும் வேண்டுங்கொல் வேந்து. பு. கா. 5

[வீரர் பலரும் சூழ்ந்த சூழலின் தன் கொற்றவாளினை மன்னன் என் கைக் கொடுத்தான் ஆதலின் இவ்வரசன் இந் நிலவுலகம் மட்டுமன்றித் தேவர் உலகத்தையும் கைப்பற்றித் தன் குடை நிழலில் கோடல் இயலும் என்றவாறு.

தன் வாள் என்கைத்தந்த வேந்து மண்ணகமோ விண் ணகமும் தன் குடைக்கீழ் வைக வேண்டும் என்பது துறைச் செய்தி.]

பெருங்காஞ்சி :

‘ தாங்குதிறல் மறவர் தத்தம் ஆற்றல்
வீங்கு பெரும் படையின் வெளிப்படுத் தன்று ’. பு. கா. 6

வில்ஆர் குறும்பிடை வேறுவேறு ஆர்த்தெழுந்த
கல்லா மறவர் கணைமாரி — ஒல்லா
வெருவி மறவேந்தர் வெல்களிறு எல்லாம்
இருவி வரைபோன்ற இன்று. பு. கா. 6

[சிற்றூரிலே ஆரவாரித்து எழுந்த வீரர் அம்பு மழை தாங்காது அஞ்சிப் பகை வேந்தர் களிறுகள் எல்லாம் தினை கொய்த தாள்களை உடைய மலைகள் போலக் காட்சி வழங் கின என்றவாறு.

இருவி — தினை அரிந்த தாள். கல்லாமறவர் — இயற் கையிலேயே வீரமுடையார்.

மறவர் கணைமாரியால் பகைவர் களிறுகள் இருவி வரை போன்ற என்பது துறைச்செய்தி.]

வாள் செலவு :

‘ அருமுனையான் அறைகூவியபின்
செருமுனைமேல் வாள்சென்றன்று ’. பு. கா. 7

உணங்கு புலவுஅறு ஒன்னார் குரம்பை
நுணங்குஅரில் வெம்முனை நோக்கி — அணங்கிய

குந்தம் மலியும் புரவியான் கூடாதார்
வந்தபின் செல்க என்றான் வாள். பு. கா. 7

[பகைவரை வருத்தும் வேல் அணிந்த குதிரைப் படை உடைய காஞ்சி மன்னன், புலால் நாறும் சிறு குடிசைகளை உடைய பாசறையிடத்தே பகைவரை நோக்கி, அவர்கள் போர் செய்ய வந்தபின் தன் வாளைப் புறவீடு செய்க என ஏவினான் என்றவாறு.

புரவியான் கூடாதார் வந்தபின் செல்க என்றான் வாள் என்பது துறைச்செய்தி.]

குடை முனைச்சேறல் :

' முதுகுடி மறவர் முன்னுறச் சூழக்
கோதிஅழல் வேலோன் குடைசென் றன்று ' பு. கா. 8

தெம்முனை தேயத் திறல்விளங்கு தேர்த்தானை
வெம்முனை வெற்றி வீறல்வெய்யோன்—தம்முனை
நாட்டிப் பொறிசெறித்து நண்ணார்மேல் செல்கென்று
கூட்டிநாள் கொண்டான் குடை. பு. கா. 8

[பகைவர் அழியுமாறு திறல் காட்டும் தேர்ப்படையை உடைய வெற்றியை விரும்பும் காஞ்சி மன்னன் பகைவரோடு பொருதற்கு உரிய நாளை உறுதிப்படுத்தித் தன் முத்திரை இட்ட முடங்கலைப் பகைவருக்கு அனுப்பியபின் தன்குடையைப் புறவீடு செய்தான்.

வீறல் வெய்யோன் முனைநாட்டி நள்ளார் மேல் செல்க என்று கூட்டிக் குடைநாட் கொண்டான் என்பது துறைச் செய்தி].

வஞ்சினக் காஞ்சி :

' வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப
வஞ்சினம் கூறிய வகைமொழிந் தன்று '. பு. கா. 9

இன்று பகலோன் இறவாமுன் ஒன்னாரை
வென்று களங்கொள்ளா வேல்உயர்ப்பின்—என்றும்
அரண்அவியப் பாயும் அடையார்முன் நிற்பேன்
முரண் அவிய முன்முன் மொழிந்து. பு. கா. 9

[இன்று கதிரவன் மறைவதற்குள் பகைவரை வென்று வேற்படையால் களத்தைக் கைப்பற்றேனாயின், பகைமையை விடுத்துப் பகைவர் முன் இனி எந்நாளும் பணிமொழி கூறித் தாழ்ந்து நிற்கும் இழிவைப் பெறுவேனாக என வீரன் வஞ்சினம் மொழிந்தவாறு.

இப்பாடல் முழுதும் துறைச்செய்தி.]

பூக்கோள் நிலை :

'கார்எதிரிய கடல்தானை
போர்எதிரிய பூக்கொண்டன்று', பு. கா. 10

பருதிசெல் வானம் பரந்துஉருகி அன்ன
குருதியாறு ஆவதுகொல் குன்றூர் — கருதி
மறத்திறத்தின் மாறா மறவரும் கொண்டார்
புறத்துஇறுத்த வேந்துஇரியப் பூ. பு. கா. 10

[மறவர் வெளியே வந்து தங்கிய அரசர்கள் தோற்றோடுமாறு காஞ்சிப் பூச்சூடினர் ஆதலின் மாலைச் செக்கர் வானம் பரவி உருகினாற்போல மலைநாட்டகத்து இவ்வூர் இரத்த ஆறாக ஓடும் போலும் என்றவாறு.

மறவரும் புறத்து இறுத்த வேந்து இரியப் பூக்கொண்டார் என்பது துறைச்செய்தி]

தலைக்காஞ்சி :

'மைந்துஉயர மறம்கடந்தான்
பைந்தலைச் சிறப்புஉரைத்தன்று'. பு கா. 11

விட்டிடின்என் வேந்தன் விலையிடின்என் இவ்வுலகின்
இட்டுஉரையின் எய்துவது எய்திற்றால்—ஒட்டாதார்
போர்தாங்கி மின்னும் புலவாள் உறைகழியாத்
தார்தாங்கி வீழ்ந்தான் தலை. பு. கா. 11

[பகைவரைப் போர்க்களத்தே எதிர்த்து வாளைப் பணி கொண்டு பகைவர் தூசிப்படையைத் தடுத்து இறந்தவன் தலையை அரசன் தன்னிடம் கொண்டு வரச்செய்யாது போனாலும் இன்றேல் கொணருவாருக்குச் சிறப்புச் செய்தாலும் அவற்றால் மறவனுக்கு இழிவோ உயர்வோ இல்லை. இவ்வுலகில் பெறவேண்டிய புகழை அவன் பெற்றுவிட்டான் என்றவாறு.

தார்தாங்கி வீழ்ந்தான் தலையை வேந்தன் விட்டிடில் என்? விலையிடில் என்? என்பது துறைச்செய்தி.]

தலைமாராயம் :

' தலைகோடு வந்தான் உள்மலியச்
சிலையுடை வேந்தன் சிறப்பு ஈந்தன்று. பு. கா. 12

உவன்தலை என்னும் உறழ்வுஇன்றி ஒன்னார்
இவன்தலை என்றுஏத்த இயலும்—அவன்தலை
தந்தாற்கு நல்கல் வியப்போ கிளர்ந்துஏத்தி
வந்தார்க்கு உவந்து ஈயும் வாழ்வு. பு. கா. 12

[மற்றவரை ஒப்புக்கூற இயலாத வகையில், பகைவராலும் ' இவனே மேம்பட்டவன் ' என்று புகழப்பட்டு, உயிர் நீத்த வீரன் தலையைக் கொணர்ந்தவனுக்குத் தன்னைப் புகழ்ந்து வரும் இரவலருக்குப் பரிசில் வழங்குவதைப்போல அரசன் பரிசில் வழங்குதல் அடாது என்றவாறு.

அவன் தலைதந்தார்க்கு வாழ்வு நல்கல் வியப்போ என்பது துறைச்செய்தி.]

தலையொடு முடிதல் :

'மண்டு அமருள் மாறு மைந்தின்
கொண்டான் தலையொடு கோல்வளை முடிந்தன்று'. பு.கா. 13

கொலை ஆனுக் கூற்றம் கொடிதே கொழுநன்
தலை ஆனுள் தையலாள் கண்டே—முலையால்
முயங்கினுள் வாள்முகம் சேர்த்தினுள் ஆங்கே
உயங்கினுள் ஓங்கிற்று உயிர். பு. கா. 13

[வீரனுடைய மனைவி மனம் அமைதியின்றிப் போர்க்களம் எய்திக் கணவன் தலையைக்கண்டு மார்போடு சேர்த்தி முகத்தோடு பொருத்திச் சிறிது வருந்திய அளவில் உயிர் நீத்தாள் ஆதலின் கொலையால் திருப்தியடையாத கூற்றம் கொடிதே என்றவாறு

கொழுநன் தலையைத் தையலாள் கண்டு உயங்கினுள் உயிர் ஓங்கிற்று என்பது துறைச்செய்தி].

மறக்காஞ்சி :

'இலைப்பொலிதார் இகல்வேந்தன்
மலைப்புஒழிய மறம்கடாயின்று'. பு கா. 14

கருந்தலையும் வெண்ணிணமும் செந்தடியும் ஈராப்
பருந்தோடு எருவை படர — அருந்திறல்
வேறுய மன்னர் வியப்பக் கடாயினுன்
மாறு மறவன் மறம். பு. கா. 14

[போர்க்களத்தில் தலை நிணம் தசை இவற்றை இழுத்துப் பருந்தும் எருவையும் செல்லவும் பகைவரும் தன் வீரம் கண்டு வியப்பவும் வீரன் தன் ஆற்றலை வெளிப்படுத்தினுன் என்றவாறு.

வேறுய மன்னர் வியப்ப மறவன் மறம் கடாயினுன் என்பது துறைச்செய்தி.]

மறக்காஞ்சியின் பக்கம் :

'மண்கெழு மறவன் மாறுநிலை நோனான்
புண்கிழித்து முடியினும் அத்துறை ஆகும்'. பு. கா. 15

நகைஅமர் ஆயம் நடுங்க நடுங்கான்
தொகைஅமர் ஓட்டிய துப்பின் — பகைவர்முன்
நுங்கிச் சினவுதல் நோனான் நுதிவேலான்
பொங்கிப் பரிந்திட்டான் புண். பு. கா. 15

[மகிழ்வோடு புறப்பட்ட தன் வீரர் திரள் நடுங்கவும் தான் நடுங்காது, தமரை விரட்டிய வஞ்சியார் தம் எல்லையைக் கவர்ந்துகொண்டு சினத்தலைப் பொறுனாய்த் தோல்வியோடு வீழுப்புண் ஆறி வாழும் வாழ்க்கையை விரும்பாது வேலால் தன்புண்களைக் கிழித்துக் கொண்டு உயிர்நீத்தான் என்றவாறு.

வீரன் பகைவர் சினவுதல் நோனான் பொங்கிப் பரிந்திட்டான் புண் என்பது துறைச்செய்தி.]

பேய் ஓம்புதல் :

'செரு வேலோன் திறம் நோக்கிப்
பிரிவு இன்றிப் பேய் ஓம்பின்று.' பு. கா. 16

ஆயும் அடுதிறலாற்கு அன்பிலார் இல்போலும்
தோயும் கதழ்குருதி தோள்புடைப்பப்—பேயும்
களம்புகலச் சீறிக் கதிர்வேல்வாய் வீழ்ந்தான்
உளம் புகல ஓம்பல் உறும். பு. கா. 16

[நிலத்தில் படிந்த குருதி தன் தோளினை அலைக்கும்படி பகை வளரச் சீறி வேலால் புண்பட்டு வீழ்ந்தான் மனம் மகிழுமாறு பேயும் அவன் உயிரைக் காத்தலால் இவ்வீரன் போல்வாரிடத்தில் அன்பிலாதார் ஒருவரும் இரார் போலும் என்றவாறு.

கதிர்வேல்வாய் வீழ்ந்தான் உளம்புகலப் பேய் ஓம்பல் உறும் என்பது துறைச்செய்தி].

பேய்க் காஞ்சி :

‘ பிணம் பிறங்கிய களத்து வீழ்ந்தார்க்கு
அணங்கு ஆற்ற அச்சுறீஇ யன்று ’. பு. கா. 17

கொட்கும் நிமிரும் குறுகும் குடர்சூடிப்
பெட்ப நகும்பெயரும் பேய்மகள்—உட்கப்
புனல்அம் குருதிப் புலால்வாய்க் கிடந்து
கனல விழிப்பவர்க் கண்டு. பு. கா. 17

[புலால் நாறும் குருதிப் புனலிலே புண்பட்டு வீழ்ந்து தீப்பொறி பறக்க விழிக்கும் வீரரைப் பார்த்துப் பேய் சுழன்றும் உயர்ந்தும் குறுகியும் குடர்சூடிச் சிரித்தும் அச்சம் விளைவித்தது என்றவாறு.

குருதிவாய் வீழ்ந்து கனல விழிப்பவர் உட்கப் பேய் நகும் பெயரும் என்பது துறைச்செய்தி].

தொட்ட காஞ்சி :

‘ வியன்மனை விடலை புண்காப்பத்
துயல்முலைப் பேழ்வாய்ப் பேய்தொட்டன்று ’. பு. கா. 18

கொன்றுஉருத்த கூர்வே லவற்றுறுகிக் கூர்இருள்வாய்
நின்றுஉருத்து நோக்கி நெருப்புமிழாச் — சென்றொருத்தி
ஒட்டார் படைஇடந்த ஆருப்புண் ஏந்துஅகலம்
தொட்டாள் பெருக துயில். பு. கா. 18

[பகைவரை அழித்து அவர் படைகள் தைத்து ஆறாத புண்களை உடைய வீரனை அணுகி இருளில் அவனைக் கோபித்துத் தீப்பொறிகால நோக்கி அவன் மீளாத்துயில் பெறுமாறு பேய்மகள் அவன் மார்பினைத் தொட்டாள் என்றவாறு.

ஒருத்தி இருள்வாய் வேலவனைக்குறுகி அவன் புண்ணை நந்து அகலத்தைத் துயில் பெருகத் தொட்டாள் என்பது துறைச்செய்தி.]

தொடாக் காஞ்சி :

' அடல் அஞ்சா நெடுந்தகை புண்
தொடல் அஞ்சித் துடித்து நீங்கின்று '. பு. கா. 19

ஐயவி சிந்தி நறைபுகைத்து ஆய்மலர் தூய்க்
கொய்யாக் குறிஞ்சி பலபாடி — மொய்இணர்
பூப்பெய் தெரியல் நெடுந்தகைபுண் யாம்காப்பப்
பேய்ப்பெண் பெயரும் வரும். பு. கா. 19

[வெண்சிறுகடுகு தூவி நறுமணப் பொருள்களைப் புகைத்து மலர் தூவிக் குறிஞ்சிப்பண் பாடி வீரன் புண்பட்ட உடலை யாம் காத்தலினாலே பேய்ப்பெண் அணுகிப் பின் பெயர்ந்து போயினள் என்று தலைவியோடு இருந்த தலைவனைக் காத்த தோழி கூறியவாறு.

நெடுந்தகை புண் யாம் காப்பப் பேய்ப்பெண் வரும் பெயரும் என்பது துறைச்செய்தி]

மன்னைக் காஞ்சி :

' வியல்இடம் மருள விண்படர்ந்தோன்
இயல்புஎத்தி அழிபு இரங்கின்று '. பு. கா. 20

போர்க்குப் புணைமன் புரையோர்க்குத் தாணுமன்
ஊர்க்கும் உலகிற்கும் ஓருயிர்மன்—யார்க்கும்
அறம்திறந்த வாயில் அடைத்ததால் அண்ணல்
நிறம் திறந்த நீள் இலை வேல். பு. கா. 20

[போர்க் கடலில் தெப்பமாகவும், உயர்ந்தோருக்குப் பற்றுக்கோடாகவும் ஊருக்கும் உலகிற்கும் உயிராகவும் இருந்த இவ்வண்ணலில் மார்பைப் பிளந்த வேல் எல்லோருக்கும் அறம் செய்வதற்காகத் திறந்திருந்த வாசலை அடைத்து விட்டது என்று வீரன் ஆகிய வள்ளல் பிரிவு குறித்துப் பலரும் இரங்கியவாறு.

இப்பாடல் முழுதும் துறைச் செய்தி].

சுட்காஞ்சி :

'நற மலியும் நறுந்தாரான்
மறமைந்தர்க்கு மட்டீந்தன்று'. பு. கா 21

ஒன்னு முனையோர்க்கு ஒழிக இனித்துயில்
மன்னன் மறவர் மகிழ்தூங்கா—முன்னே
படலைக் குரம்பைப் பழங்கண் முதியாள்
விடலைக்கு வெங்கள் வீடும். பு. கா. 21

[ஏனை மறவர்கள் உண்டு களிப்பதற்கு முன்னமேயே காஞ்சி மன்னன் குடிசையில் வாழும் மறக்குடி முதியவளின் மகனாகிய வீரனுக்குக் கள் வழங்கி விட்டான் ஆதலின் அவனை எதிர்த்துப் போரிடல் அரிது என்ற எண்ணத்தால் பகைவர் முனையிலுள்ளார் இனி உறங்கார் என்றவாறு.

மன்னன், விடலைக்கு வெங்கள் விடும் என்பது துறைச் செய்தி].

ஆஞ்சிக் காஞ்சி :

'காதல் கணவனொடு கனைஎரி முழுகும்
மாதர் மெல்லியல் மலிபுஉரைத் தன்று'. பு. கா. 22

தாங்கிய கேளொடு தானும் எரிபுகப்
பூங்குழை ஆயம் புலர்கென்னும்—நீங்கா
விலாழிப் பரித்தானை வெந்திறலார் சீறூர்ப்
புலாழித் தலைக்கொண்ட புண். பு. கா. 22

[குதிரைப் படையை உடைய காஞ்சி மறவர் சிற்றூரில் புலால் நாறும் ஆழிப்படையால் விழுப்புண் தாங்கி இறந்த கணவன் உடலோடு தானும் தீப்புக அவன் மனைவி தன் தோழிமாரை அகலப் போகுமாறு கூறினாள் என்றவாறு.

புண் தாங்கிய கேளொடு தானும் பூங்குழை எரிபுகல். என்பது துறைச்செய்தி.

விலாழி—குதிரை வாய் நுரை.
அஞ்சின—என்பது ஆஞ்சி எனத் திரிந்தது].

ஆஞ்சிக் காஞ்சியின் பக்கம் :

'மன்உயிர் நீத்த வேலின் மனையோள்
தன்உயிர் நீப்பினும் அத்துறை ஆகும்'. பு. கா. 23

கவ்வைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன்—அவ்வேலே
அம்பில் பிறழும் தடங்கண் அவன்காதல்
கொம்பிற்கும் ஆயிற்றே கூற்று. பு. கா. 23

[வீரன் வேலாற் புண்பட்டு இறந்தானாக அவ்வேலாலேயே அவன் மனைவியும் தன் உயிரைப் போக்கிக் கொள்ளும் எண்ணத்தைத் தந்த கற்புடைமை மிகவும் கொடிதாகும்.

வெவ்வேல்வாய் வீரன் வீழ அவ்வேலே அவன் கொம்பிற்கும் கூற்றாயிற்று என்பது துறைச்செய்தி].

மகட்பால் காஞ்சி :

'ஏந்துஇழையாள் தருகஎன்னும்
வேந்தனொடு வேறுநின்றன்று'. பு. கா. 24

அளிய கழல்வேந்தர் அம்மா அரிவை
எளியள்என்று எள்ளி உரைப்பின் — குளியாவோ
பண்போல் கிளவிஅப் பல்வளையாள் வாள்முகத்த
கண்போல் பகழி கடிது. பு. கா. 24

[காஞ்சி மன்னன் மகளை மணந்து கோடல் எளிது என்று மண் நசையால் வந்த வேந்தன் எள்ளி உரையாடின் காஞ்சி மன்னன் மகளுடைய கண்களைப் போன்ற அம்புகள் விரைவாக அவன் உடலில் தைக்கும். ஆதலின் மகட் கோடல் போரான் இயலாது என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி]

அருமுனை முரித்த முன்னிருப்பு :

'மன்னர் யாரையும் மறம் காற்றி
முன்இருந்த முனைகடிந்தன்று'. பு. கா, 25

கடிகமழ் வேலிக் கடைதோறும் செல்லக்
கொடிமலி கொல்களிறு ஏவித் — துடிமகிழ
ஆர்த்திட்டு அமருள் அடையாரை அம்முனையில்
பேர்த்திட்டான் பெய்கழலி னுன் பு. கா, 25

[காஞ்சிவேந்தன் துடிமுழக்கித் தன் கொல் களிறுகளைச் செலுத்தி அவற்றுல் தன் ஊரின் புற வாயில்கள்தோறும் பகைமன்னன் படைவீரர்கள் புறங்காட்டி ஓடுமாறுசெய்து அவர்களைப் போர்க்களத்தினின்றும் விரட்டினுன் என்றவாறு.

பெய்கழலினுன் அடையாரை அம்முனையில் பேர்த்திட்டான் என்பது துறைச்செய்தி.]

ஒத்த நூற்பாக்கள்

'பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியும் மறத்தி னுனும்
ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணேற்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்
இன்னன்என்று இரங்கிய மன்னையானும்
இன்னது பிழைப்பின் இதுவா கியரெனத்

துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்
இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோற்
றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்
நீத்த கணவன் தீர்த்த வேலின்
பேஎத்த மனைவி ஆஞ்சி யானும்
நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்
முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
ஈரைந்து ஆகும் என்ப'. தொல். பொ. 79

'காஞ்சி காஞ்சி எதிர்வே தழிஞ்சி
பெரும்படை வழக்கொடு பெருங் காஞ்சியே
வாள்செலவு என்று குடையது செலவே
வஞ்சினக் காஞ்சி பூக்கோள் நிலையே
புகழ்தலைக் காஞ்சி தலைமா ராயம்
தலையொடு முடிதல் மறப்பெயர்க் காஞ்சி
மாற்றரும் பேய்நிலை பேய்க் காஞ் சியியே
தொட்ட காஞ்சி தொடாக்காஞ் சியியே
மன்னைக் காஞ்சி கட்காஞ் சியியே
ஆஞ்சிக் காஞ்சி மகட்பாற் காஞ்சி
முனைகடி முன்னிருப்பு உளப்படத் தொகைஇ
எண்ணிய வகையான் இருபத் திரண்டும்
கண்ணிய காஞ்சித் துறைஎன மொழிப'. பு. வெ. 4

'நிலையாமை வாழ்த்து மயக்க முதுமை நிலையினொடும்
தொலையா மகிழ்ச்சி பெருமைதீப் பாய்தல் சுரத்திடைத்தன்
தலையார் கணவன் தனைஇழத் தல்தனி யேஇரங்கல்
கலையார் மனைவி பெய் சூளுறல் என்றிவை காஞ்சியென்னே'.
வீர. 102

17

பாடாண்திணை இலக்கணம்

616 பாடாண் திணையே கைக்கிளைப் புறனே
பாடுதற்கு உரிய ஆடவன் தனது
பாடுஅமை ஒழுக்கம் பாடும்அந் நெறித்தே.

இது பாடாண்திணை கைக்கிளைத் திணைக்குப் புறன் என்பதூஉம் அதன் பொருளும் கூறுகின்றது

(இ-ள்) மேற்கூறிய புறத்திணை ஏழனுள், பாடாண் திணை முற்கூறிய அகத்திணை ஏழனுள் கைக்கிளைத்திணைக்குப் புறனும்; அதுதான் பாடுதற்கு உரிய ஆண்மகனது பெருமை பொருந்திய ஒழுக்கத்தைப் பாடுகின்ற அம்முறையினை உடைத்து என்றவாறு.

புறத்திணை பலவற்றுள், 'பாடாண் திணையே கைக் கிளைப்புறனே' என இதனைப் பிரித்து ஓதினார், ஒரு தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட ஒரு புலவன் வீடுபேறு முதலிய பரிசில் வேண்டலின், அவை தம்மின் வேறாகிய ஒரு தலைக்காமம் ஆகிய கைக்கிளையோடு ஒத்தலான் என்பது. 18

விளக்கம்

பாடாண் கைக்கிளைக்குப் புறனாயதன் விளக்கம் நச்சினார்க்கினியர் தந்த விளக்கமேயாம். பரிசுகளுக்குள் சிறந்த பரிசு வீடுபேறு ஆதலின் வீடுபேறு முதலிய பரிசில் என்றார். அது பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பாலைக்கோதமனுக்குப் பத்துப் பெருவேள்வி வேட்பித்து வீடுபேறு வழங்கியது போல்வது.

'நான்மறை யாளன் செய்யுட் கொண்டு
மேனிலை உலகம் விடுத்தோன்'

என்ற சிலம்படிகள் இவ்வரலாற்றைச் சாற்றும்.

இனி, உரையாசிரியர் 'பாடாண்திணை கைக்கிளைக்குப் புறனாயவாறு என்னை எனின், கைக்கிளை ஆவது ஒரு நிலத் திற்கு உரித்தன்றி ஒரு தலைக்காமமாகி வரும் அன்றே; அது

போல இதுவும் ஒரு பாற்கு உரித்தன்று. ஒருவனை ஒருவன் யாதானும் ஒரு பயன் கருதியவழி மொழிந்து நிற்பது ஆக லானும், கைக்கிளையாகிய காமப் பகுதிக்கண் மெய்ப்பெயர் பற்றிக் கூறுதலானும், கைக்கிளைபோலச் செந்திறத்தால் கூறுதலானும் அதற்கு இது புறனாயிற்று. நோந்திறமாவது கழிபேரிரக்கம்; செந்திறமாவதுஅஃது அல்லாதன ' என்றார்.

தொ. பொ. 78 •

கைக்கிளையில் காமச்சிறப்பு ஒருவர்க்கேயாவதுபோலப் பாடாண் சிறப்பும் பொதுமையின்றித் தகவுடையார் ஒருவ ருக்கே உரித்தாக வருதலானும், கைக்கிளையில் காதல்கூற்று பாராட்டும் தலைமகன் மாட்டு ஆவது போல, 'பாடாண் கூற்றும் புகழ்வோர் தம் பக்கலிலே அமைதலானும், இரண் டினுக்கும் நிலம் பொழுது வரையறை இன்மையானும், 'கைக் கிளையில் இருக்கு நீக்கித் தருக்கியலே சொல்லி இன்புறுதல் போலப் பாடாணில் பழி தழுவாப் புகழ்மை ஒன்றே பயில்வ தானும், இழுதிணையும் ஒரு தலையாச் செந்திறமாய் அமைத லானும், பாடாண் கைக்கிளைக்குப் புறன் ஆயிற்று,

(பாரதியார்-புற-25-சூத்திர உரை)

18

பாடாண் துறைகள்

617 ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்
அளியும் என்றுஇவை ஆய்ந்துஇனிது உரைத்தலும்[1]
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க்கு உரைத்த கடைநிலை யானும்[2]
காவல் கண்ணிய கழலோன் கைதொழும்
மூவரில் ஒருவனை முறையுளி வாழ்த்தலும்[3]
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்[4]
ஒருவனை அலனொடும் ஒழிந்தவா னவரோடும்

பொருவினன் புகழ்ந்த மற்றதன் பகுதியும்[5]
மண்ணகம் காவல் மன்னவன் முன்னர்
எண்ணிய பரிசில் இதுஎன உரைத்தலும்[6]
இன்னோர் இன்னவை கொடுத்தனர் நீயும்
அன்னோர்போல் அருள்கெனும் இயன்மொழி வாழ்த்தும்[7]
மயல்அறு சீர்த்தி மான்தேர் மன்னன்
இயல்பினை மொழியும் அத்துறைப் பகுதியும்[8]
நெடுந்தேர்த் தானை நீறுபட நடக்கும்
கடுந்தேர் மன்னவன் கண்படை நிலையும்[9]
அயில்வேல் மன்னனை அருளிய எழுகஎனத்
துயில்இடை எடுப்பிய துயில்எடை நிலையும்[10]
கங்குல் கனைதுயில் எழுந்தோன் முன்னர்
மங்கலம் கூறிய மங்கல நிலையும்[11]
மன்னிய சிறப்பின் மங்கல மரபின்
துன்னினன் என்ற அத்துறைப் பகுதியும்[12]
துளக்கம்இல் அரசன் வெற்றி காட்டும்
விளக்குநிலை விளம்பிய விளக்கு நிலையும்[13]
அடர்அவிர் பைம்பூண் அரசன் தன்னைச்
சுடரொடு பொரூஉம் அத்துறைப் பகுதியும்[14]
உவகையொடு வேந்தன் ஒலிமறை யவர்க்குக்
கபிலை ஈந்த கபிலை நிலையும்[15]
அந்தம்இல் புகழான் அமரர்அவி முகப்ப
வெந்தீ வேட்ட வேள்வி நிலையும்[16]
மண்மிசைக் கோண்மூ மழைவளம் தரும்என
விண்மிசைத் தோற்றிய வெள்ளி நிலையும்[17]
தாள்தாழ் தடக்கைத் தாம மார்பன்
நாட்டுவளன் உரைத்த நாடு வாழ்த்தும்[18]
வாழ்மனை புகீஇ வைகறை முழக்கிய
கேழ்கிளர் கிணைவன் கிளந்த கிணைநிலையும்[19]
செங்களத்து ஈட்டிய செல்வம்வெண் துறையாழ்
மங்கலப் பாணர் மறுத்த களவழியும்[20]
கூற்றுஇருந்து ஆலும் கொலைவேல் மன்னவன்

வீற்றினிது இருந்த பெருமங் கலமும்[21]
நெடுமதில் எறிந்த நிறைதார் மன்னவன்
குடுமி களைந்த புகழ்சாற்று நிலையும்[22]
இகல்அடு தடந்தோள் எறிவேல் இறைவன்
மகளிரொடு மணந்த மணமங் கலமும்[23]
கதம்மிக்கு எழுபடைக் காவல் வேந்தன்
புதல்வற் பயந்த பொலிவுமங் கலமும்[24]
வாள்படைத் தானை மன்னவன் பிறந்த
நாள்சிறப்பு உரைத்த நாள்மங் கலமும்[25]
விரைந்துகொடை பெற்றும் விடைபெறாது இரவலன்
பரிந்துகடைக் கூட்டிய பரிசில் நிலையும்[26]
வண்புகழ் அறைந்தோர்க்கு மன்னவன் உதவிப்
பண்புஉற விடுத்த பரிசில் விடையும்[27]
நிறைவினை முற்றிய நீள்கழ லோன்மனை
அறன்மலிபு உரைத்த ஆள்வினை வேள்வியும்[28]
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றுஇடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுஎதிரத் தெரித்த ஆற்றுப் படையும்[29]
மொழியும்எம் கடுஞ்சொல் முறையுளி நிற்பின்
வழிபயன் படூஉம்எனும் வாயுறை வாழ்த்தும்[30]
புரையோர் நாப்பண் அவிதல் கடன்எனப்
பெரியோர் பேணிய செவிஅறி வுறூஉவும்
காற்பெருக் திசையும் நன்குஇனிது கவித்த
கோக்குடை பழிச்சும் குடைமங் கலமும்[32]
காய்வார்க் காயக் கண்கனல் வேந்தன்
வாய்வாள் ஏத்திய வாள்மங் கலமும்[33]
எண்ணருஞ் சீர்த்தி இறையோன் எய்தி
மண்ணுதல் புரிந்த மண்ணுமங் கலமும்[34]
அறிவோர் வேந்தனுக்கு ஆய்ந்துஇவை செய்கஎன

உறுதி கூறிய ஓம்படை நிலையும்[35]
வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தும்[36]
மூவர் கொடியுளும் ஒன்றொடு பொரீஇ
மேவர உரைத்த வியன்கொடி நிலையும்[37]
சோவினை அழித்த துளவுஅணி மாயோன்
மேவரு விறலினை வியந்தகந் தழியும்[38]
எறிசுடர் வேலற்கு இளகிய உள்ளத்து
அரிமலர்க் கண்ணியர் ஆடிய வள்ளியும்[39]
விரும்பிய தரூஉம் விண்ணவர் தம்முழை
அரும்பெறல் புலவரை ஆற்றுப் படுத்தலும்[40]
வீற்றதுஒன்று எய்துகம் வியல்நிலத்து யாம்என
போற்றரும் இறைக்குஎதிர் புகழ்ந்தனர் பரவலும்[41]
விடுசுடர் எறிக்கும் மேனிவா னவனைப்
படுபயன் கருதிப் பழிச்சினர்ப் பணிதலும்[42]
மருமலர்க் கோதை மடவரல் தலைவனை
விரிமலர்த் தாமம் விழைந்த கைக்கிளையும்[43]
அல்லிடை விரும்பா தவன்முயக்கு அமர்ந்து
செல்பவள் செய்வகை தெரிந்தபெருந் திணையும்[44]
வில்லேர் நுதலி விறலோன் மார்பம்
புல்லேம் யாம்எனப் புலந்த புலவியும்[45]
படிமிசை இயங்காப் பணிமொழி மகளிர்
கடவுளை நயந்த கடவுள் பக்கமும்[46]
பூதலத்து அரிவையர் பொருவில் வானவரைக்
காதலித்து உரைத்த கடவுள் பக்கமும்[47]
இழைஅணி மங்கையர் ஈறில காமம்
குழவி மருங்கின் கூறிய பகுதியும்[48]
நீங்காக் காதல் மைந்தரும் மகளிரும்
பாங்குஉறக் கூடும் பதிநிலை உரைத்தலும்[49]
எனமுறை தொகுத்த ஏழேழ் துறையும்
வினவிய பாடாண் திணையது விரியே.

இது முற்கூறிய பாடாண் திணை இத்துணைத்துறை உடைத்து என்கின்றது.

(இ-ள்) ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும் அளியும் என்று இவை ஆய்ந்து இனிது உரைத்தல் முதலாக, நீங்காக் காதல் மைந்தரும் மகளிரும் பாங்குறக்கூடும் பதிநிலை உரைத்தல் ஈறாக முறையே தொகுத்த நாற்பத்தொன்பது துறையும் மேல் சொல்லப்பட்ட பாடாண் திணையது விரியாம் என்றவாறு.

விளக்கம்

1 பாடாண் பாட்டு :

புரவலன் தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றும் ஒளி, அவனுடைய ஆற்றல், அவன் தனக்குஎன்று எதனையும் வைத்துக் கொள்ளாது பிறருக்கே வழங்கும் ஈகை, அவனுடைய கருணை ஆகியவற்றை ஆராய்ந்து சொல்லுவது.

2 கடை நிலை :

வெகு தொலைவிலிருந்து வந்திருக்கும் தன் வருத்தம் தீருமாறு தன் வருகையினைப் புரவலனுக்கு உணர்த்த வேண்டும் என்று வாயில் கடைத்தலையில் நின்று, இரவலன், வாயில் காவலனிடம் உணர்த்தியதனைக் கூறுவது. இதனை வெண்பா மாலை வாயில் நிலை என்று கூறும்.

3 கடவுள் வாழ்த்து :

நாடு காவலைக் கருதிய வீரக் கழலினை உடைய அரசன் வழிபடும் முப்பெருந் தெய்வங்களுள் ஒன்றனை முறைப்படி வாழ்த்துவதனைக் கூறுவது.

4 பூவை நிலை :

மாயவனாகிய திருமால் விரும்பிய மேம்பட்ட சிறப்பினை உடைய கெடாத மேம்பட்ட புகழினை உடைய பூவைப் பூவினைப் புகழ்வது.

5 பூவைநிலைப் பக்கம் :

அரசன் ஒருவனைத் திருமாலோடும் ஏனைய கடவுளர்களோடும் ஒப்பிட்டுப் புகழ்ந்து பாடுவதும் பூவைநிலையாம்.

6 பரிசில்துறை :

நாடு காத்தலைச் செய்யும் அரசன் முன் சென்று வெளிப்படையாக வேண்டுவதனைக் கூறுவது.

7 இயல்மொழி வாழ்த்து :

இன்னார் இன்னார்க்கு இன்ன இன்ன பரிசில் வழங்கினர். அவர்களைப்போல நீயும் எனக்குக் கொடுத்தல் வேண்டும் என்று வாழ்த்தி வேண்டுவதனைக் கூறுவது.

8 இயல்மொழி வாழ்த்துப் பக்கம் :

குற்றமற்ற சிறப்பினையும் குதிரைகள் கட்டப்பட்ட தேரினையும் உடைய அரசனுடைய இயல்பைக் கூறலும் இயல்மொழி வாழ்த்தாம்.

9 கண்படை நிலை :

பகைவருடைய நெடிய தேர்ப்படை தூளாகுமாறு போரிட்டு வென்று புகழ் எய்திய மன்னன் உறங்குதலைச் சொல்லுவது.

10 துயில்எடை நிலை :

கூரிய வேலை ஏந்திய அரசனை எல்லோருக்கும் அருள் புரிவதற்காகத் துயில் நீங்குக என்று பள்ளி எழுச்சி பாடுவதனைக் கூறுவது.

11 மங்கல நிலை :

இரவில் செறிந்த துயிலில் இருந்து விழித்துக் கொண்ட அரசன் முன் மங்கலமான செய்திகளைக் கூறுவது.

12 மங்கலநிலைப் பக்கம் :

அரசன் உறங்கி விழித்தபின் நிலைபெற்ற சிறப்பினை உடைய மங்கலங்களை நுகர்ந்தான் என்று கூறுவதும் மங்கல நிலையாம்.

13 விளக்கு நிலை :

மன நடுக்கம் இல்லாத அரசனுடைய வெற்றியினை எடுத்துக்காட்டும் விளக்கின் நிலையினைக் கூறுவது.

14 விளக்குநிலைப் பக்கம் :

தகட்டுப் பொன்னால் செய்யப்பட்ட விளங்குகின்ற பசிய அணிகலன்களை அணிந்த அரசனைச் சூரியனோடு ஒப் பிட்டுக் கூறுவதும் விளக்கு நிலையாம்.

15 கபிலை நிலை :

வேதம் ஓதும் அந்தணருக்கு மகிழ்வோடு அரசன் கபிலைப் பசுக்களைத் தானம் அளித்த திறம் கூறுவது.

16 வேள்வி நிலை :

அழிவில்லாத புகழை உடைய அரசன் தேவர் அவி உணவினைக் கொள்ளுமாறு எரி ஓம்பியதனைத் தெரிவிக் கும் நிகழ்ச்சியினைக் கூறுவது.

17 வெள்ளி நிலை :

இந்நிலவுலகில் மேகங்கள் மழை வளத்தை மாறாது கொடுக்கும் என்று ஆகாயத்தில் தோற்றம் அளிக்கும் வெள்ளி என்ற கிரகத்தின் நிலையைப் புகழ்ந்து கூறு வது.

18 நாடு வாழ்த்து :

முழந்தாள் அளவும் நீண்ட முன்கையினை உடைய மாலை யணிந்த மார்பினனாகிய அரசனுடைய வளம் மிக்க நாட்டை வாழ்த்துவது.

19 கிணை நிலை :

நல்வாழ்வு சிறக்கும் மனையின் கடைத்தலை வந்து வைகறை நேரத்தில் ஒளி விளங்கும் கிணைப் பறையினை முழக்கி வாழ்த்திய கிணைவன் திறம் கூறுவது.

20 களவழி :

குருதி பரக்கும் போர்க்களத்தில் கவர்ந்த செல்வத்தை இசைத்துறையில் வல்ல மங்கலப் பாடல் பாடும் பாண ருக்கு வழங்க அவர்கள் தம்மிடம் செல்வம் பண்டே மிகவும் வழங்கப்பட்டமையால் வேண்டா என்று மறுத் துக் கூறும் திறத்தைக் கூறுவது.

21 பெருமங்கலம் :

கூற்றுவன் தங்கிக் கூத்தாடும் கொலைத் தொழிலைச் செய்யும் அரசன் கவலையின்றி இருந்த வெற்றிச் சிறப் பைக் கூறுவது.

22 குடுமிகளைந்த புகழ் சாற்றுநிலை :

பகைவருடைய நீண்ட மதிலை அழித்த வரிசையான படைகளை உடைய அரசன் தன் மதில் வெற்றிக்குப் பின் தன் குடுமியைக் கூட்டி முடித்த புகழ்ச் செயலைக் கூறுவது.

குடுமி களைதல் என்ற தொடருக்கு மயிர் களை-தல் என்றும் பகைவனுடைய முடியினைப் பறித்துக் கைக்கோடல் என்றும் பொருள் செய்வாரும் உளர்.

23 மணமங்கலம் :

பகைவரை அழிக்கும் பெரிய தோள்களை உடைய, பகைவர் மேல் எறியப்படும் வேலை ஏந்திய அரசன் தன் உரிமை மகளிரோடு கூடிய நன்மையைக் கூறுவது.

24 போலிவு மங்கலம் :

வெகுளி மிக்குப் பகை மேற் செல்லும் படையை உடைய நாடு காத்தலைச் செய்யும் அரசன் புதல்வனைப் பயந்த பொலிவினைக் கூறுவது.

25 நாள் மங்கலம் :

வாட்படையை ஏந்திய சேனையை உடைய அரசனுடைய பிறந்த நாள் கொண்டாடப்படும் சிறப்பை எடுத்து உரைப்பது.

26 பரிசில் நிலை :

விரைவாகத் தனக்குக் கொடைகள் வழங்கப்பட்டும் மீண்டும் தன் ஊர் செல்வதற்கு விடை அளிக்கப்பெறாத இரவலன் தன் கடும்பினது இடும்பை கூறித் தான் ஊர் மீளுதலுக்கு இசைவு வேண்டிய திறம் கூறுவது.

27 பரிசில் விடை :

தன்னுடைய கொடைப் புகழை எடுத்துப் பாராட்டியவருக்கு அரசன் பல பரிசில்களும் அளித்துப் பண்போடு அனுப்பிவைத்த திறம் கூறுவது.

28 ஆள்வினை வேள்வி :

தான் எடுத்துக் கொண்ட செயலைச் சிறப்பாக நிறைவேற்றிய வீரக்கழலை அணிந்த தலைவனுடைய இல்லத்தில் இல்லறம் சிறப்பாக நடந்து விருந்தோம்புதல் நிகழ்த்தப்பட்ட திறம் கூறுவது.

29 அ கூத்தர் ஆற்றுப்படை :

வள்ளலிடம் பரிசில் பெற்று மீளும் கூத்தன் தான் மீண்டு வரும் வழியில் கண்ட காட்சி மாறுபடத் தோன்றுகையினாலே, தான் பெற்ற பரிசில் பற்றிய விவரங்களைத் தான் கண்ட ஏழைக் கூத்தனுக்கு அறிவுறுத்தித் தனக்கு வழங்கிய வள்ளளிடம் சென்று அவனும் பரிசில் பெறுமாறு வழியிடைப் படுத்ததைக் கூறுவது.

,, ஆ பாணாற்றுப் படை :

வள்ளலிடம் செல்வம் பெற்று மீளும் பாணன் வழியிற் கண்ட வறுமைப் பாணனை வள்ளலிடம் அனுப்பிய செய்தியைக் கூறுவது.

,, இ பொருநர் ஆற்றுப்படை :

வள்ளலிடம் செல்வம் பெற்று மீளும் பொருநன் வழியிற் கண்ட வறுமைப் பொருநனை வள்ளலிடம் அனுப்பிய செய்தியைக் கூறுவது.

,, ஈ விறலியாற்றுப்படை :

வள்ளலிடம் செல்வம் பெற்று மீளும் விறலி வழியிற் கண்ட, வறுமையால் நலியும் விறலியை, வள்ளலிடம் அனுப்பிய செய்தியைக் கூறுவது.

30 வாயுறை வாழ்த்து :

யாம் கூறும் கேள்விக்குக் கடியவாகிய சொற்களை ஏற்று அவை கூறும் முறைப்படி நடப்பின் தொடர்ந்து நல்ல பயனே ஏற்படும் என்று சான்றோர் கூறும் உபதேசத்தைக் கூறுவது.

31 செவியறிவுறூஉ :

சான்றோர் இடையே அடங்கி நடத்தல் வேண்டும் என்று பெரியோர் விரும்பிச் சொல்லிய செய்தியைக் கூறுவது.

மன்னனுக்கு நிலைபெற்ற கருத்தினைச் சான்றோர் கூறுவது என்பது வெண்பாமாலை கூறும் செய்தி.

32 குடைமங்கலம் :

உலகில் நான்கு திசைகளையும் கவித்து நிழலைச் செய்யும் அரசனுடைய வெண்குடையின் சிறப்பைக் கூறுவது.

33 வாள்மங்கலம் :

பகைவரை அழிப்பதற்குக் கண் சிவக்கும் அரசன் தப்பாத வாளினைக் கையில் எடுக்கும் சிறப்பைக் கூறுவது.

34 மண்ணுமங்கலம் :

கணக்கிட முடியாத பெரும்புகழினை உடைய அரசன் புண்ணிய நீரில் நீராடிய சிறப்பினைக் கூறுவது.

35 ஓம்படை :

'இவற்றை ஆராய்ந்து செய்க' என்று அரசனுக்குப் பாதுகாவலாகச் சான்றோர் கூறுவனவற்றைக் கூறுவது.

36 புறநிலை வாழ்த்து :

'நீ வழிபடும் தெய்வம் உன்னைப் பாதுகாத்தலால் நீ பொலிவாயாக' என்று சான்றோர் வள்ளலை வாழ்த்திக் கூறுவது.

37 கொடிநிலை :

அரசன் கொடியினை முத்தேவர் கொடியுள்ளும் ஒன்றனோடு ஒப்பிட்டுச் சிறப்பித்துக் கூறுவது.

38 கந்தழி :

சோ என்ற மதிலை அழித்த திருத்துழாய் அணிந்த திருமாலுடைய, பிறர் செய்தற்கரிய செயலை வியந்து கூறுவது.

39 வள்ளி :

இளகிய மனத்தினையும் செவ்வரி கருவரி பரவிய மலரைப் போன்ற கண்களையும் உடைய பெண்கள் முருகப் பெருமானைக் குறித்து ஆடிய கூத்தினைப் புகழ்ந்து கூறுவது.

40 புலவர் ஆற்றுப்படை :

விரும்பிய பொருள்களைத் தரும் தேவர்களிடம், கிடைத்தற்கு அரிய ஞானம் மிக்க அடியவரை ஆற்றுப்படுத்த திறம் கூறுவது.

41 புகழ்ந்தனர் பரவல் :

மேம்பட்ட வீடுபேற்றை எய்தும் விருப்பால, சான்றோர் சொல்லால் புகழ்தல் இயலாத, ஒளி பரவும் மேனியினை உடைய இறைவனைப் புகழ்ந்து பணியும் செய்தியைக் கூறுவது.

42 பழிச்சினர் பணிதல் :

ஒளி வீசும் திருமேனியை உடைய இறைவனை ஒரு பயன் கருதிப் புகழ்ந்து வணங்கும் செய்தியைக் கூறுவது.

43 கைக்கிளை :

நறுமணங் கமழும் மலர்மாலையை அணிந்த தலைவி தலைவனுடைய மணமலர்மாலையை விரும்பிய செய்தியைக் கூறுவது.

44 பெருந்திணை :

தன்னை உள்ளன்போடு விரும்பாத தலைவனைத் தழுவுதலை விரும்பி, இரவில் அவன் இருப்பிடம் நோக்கிச் செல்லும் தலைவியின் செயல்பற்றிக் கூறுவது.

45 புலவி :

வில்லினை ஒத்த நெற்றியினை உடைய தலைவி ஆற்றல் மிக்க தலைவன் மார்பினைத் தான் தழுவாது ஊடல் கொண்ட திறத்தினைச் சொல்லுவது.

46 கடவுள்மகளிர் நயந்த கடவுட் பக்கம் :

நிலத்தில் கால் தோய்தல் அறியாத தணிந்த மொழியினை உடைய தெய்வப் பெண்கள் தேவர்களை விரும்பும் செய்தியைக் கூறுவது.

47 மானிட மகளிர் நயந்த கடவுட் பக்கம் :

இந்நிலவுலகப் பெண்டிர் ஒப்பற்ற தேவர்களை விரும்பிக் கூறிய செய்தியைச் சொல்லுவது.

48 குழவிப் பகுதி :

அணிகலன்கள் அணிந்த மகளிர் குழந்தைகளிடம் அன்பு செலுத்திய இயல்பினைக் கூறுவது.

49 பதிநிலை :

அழிவில்லாத அன்பினை உடைய ஆடவரும் அவர்தம் உரிமை மகளிரும் ஒருவருக்கு ஒருவர் துணையாகக் கூடி இன்பமாக வாழும் ஊரின் திறத்தைக் கூறுவது.

இவ்வாறு பாடாண்திணை நாற்பத்தொன்பது துறைகளை உடையது என்றவாறு.

பாடாண்பாட்டு :

'ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்
அளியும் என்றுஇவை ஆய்ந்துஉரைத் தன்று'. பு. பா. 1

மன்னர் மடங்கல் மறையவர் சொல்மாலை
அன்ன நடையினர்க்கு ஆரமுதம் — துன்னும்
பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப் பைந்தார்
எரிசினவேல் தானைஎங் கோ. பு பா. 1

[பைந்தாரும் வேல்தானையும் உடைய எம் அரசன் பகைமன்னருக்குக் கூற்றமாகவும், மறையவருக்கு அவர்தம் புகழ்மாலை சூடுவோனாகவும், உரிமை மகளிருக்கு அமுதமா கவும், பரிசிலருக்குக் கார்மேகமாகவும் உள்ளான் என்றவாறு.

இப்பாடல் முழுதும் துறைச்செய்தி.]

கடைநிலை :

‘ புரவலன் கடைநிலை குறுகிய என்நிலை
கரவுஇன்று உரைஎனக் காவலற்கு உரைத்தன்று ’.
பு. பா. 2

நாட்டிய வாய்மொழி நாப்புலவர் நல்லிசை
ஈட்டிய சொல்லான் இவன்என்று—காட்டிய
காவல்ஓங்கு எஃகுஇமைக்கும் கண்ணார் கொடிமதில்
வாயிலோய் வாயில் இசை. பு. பா. 2

[“ தக்க புலவர்தம் இசை மாலையைச் சூடியவன் இம் மன்னன் என்று, போர்த்தொழிலால் சிறந்த வேல் திகழும் கொடிகள் கட்டிய மதிலின் வாயில் காவலனே! என் வரவினை அரசனுக்குச் சொல்வாயாக ” என்று புலவன் வாயில் காவல னிடம் சொற்றவாறு.

கொடிமதில் வாயிலோய்! வாயில் இசை என்பது துறைப்பொருள். இத்துறை வாயில்நிலை என்று வெண்பா மாலையில் கூறப்படும்].

முறையுளி வாழ்த்து :

‘ **காவல் கண்ணிய கழலோன் கைதொழும்**
மூவரில் ஒருவனை எடுத்துஉரைத் தன்று’. பு. பா. 3

வைய மகளை அடிப்படுத்தாய் வையகத்தார்
உய்ய உருவம் வெளிப்படுத்தாய் — செய்ய

அடுந்திறல் ஆழி அரவணையாய் என்றும்
நெடுந்தகை நின்னையே யாம். பு. பா. 3

[நெடுந்தகையாகிய திருமாலே! நின்னை எளியேமாகிய யாம் 'நிலவுலகைத் திருவடியால் அளந்து அடக்கினை, உலகோர் உய்ய அவதாரங்கள் எடுத்துஅருளினை, திறல்மிக்க ஆழிப்படையினையும் பாம்புப் படுக்கையினையும் உடையை' என்று போற்றுகிறோம் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

பூவை நிலை :

'கறவை காவலன் நிறனொடு பொரீஇப்
புறவுஅலர் பூவைப் பூப்புகழ்ந் தன்று'. பு பா. 4

பூவை விரியும் புதுமலரில் பூங்கழலோய்
யாவை விழுமிய யாம்உணரேம்—மேவார்
மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை
நிறத்தொடு நேர்தருத லான். பு. பா. 4

[பூவைமலர், பகைவர் வீரத்தை அழித்து மல்லர்களை வென்ற கண்ணபிரானுடைய நிறத்தை ஒத்த நிறத்தது ஆதலின், அரசே! அதனினும் மேம்பட்ட பூ பிறிது ஒன்றும் இல்லை என்றவாறு.

பூவைப்புதுமலர் மல்லர் மறங்கடந்த காளை நிறத்தொடு நேர்தருதலான் சாலவும் விழுமிய என்பது துறைச் செய்தி]

பூவை நிலையின் பக்கம் :

ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்,
கடல்வளர் புரிவளை புரையும் மேனி
அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடி யோனும்,

மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்உயர் புள்கொடி விறல்வெய் யோனும்,
மணிமயில் உயரிய மாறு வென்றிப்
பிணிமுக ஊர்திஒண் செய்யோ னும்மென,
ஞாலம் காக்கும் கால முன்பின்
தோலா நல்லிசை நால்வர் உள்ளும்,
கூற்றுஒத் தீயே மாற்றருஞ் சீற்றம்;
வலிஒத் தீயே வாலி யோனை;
புகழ்ஒத் தீயே இகழுநர் அடுநனை;
முருகுஒத் தீயே முன்னியது முடித்தலின்;
ஆங்காங்கு அவர் அவர் ஒத்தலின்
யாங்கும் அரியவும் உளவோ நினக்கே. புறநா. 56

[' இடபக்கொடி உயர்த்துச் செக்கர் சடையினன் ஆகி முத்தலைச் சூலமேந்திய நீலகண்டனும், கடலில் தோன்றும் வலம்புரிச் சங்கினை ஒத்த வெண்ணிறத்தனுய்ப் பகைவரை அழிக்கும் கொடிய கலப்பைப் படையை உடைய பனைக் கொடியை உயர்த்திய பலதேவனும், சாணையிடப்பட்ட நீல மணியை ஒத்த நிறத்தினனுய் விண்ணில் உயரப் பறக்கும் கருடக் கொடியை உயர்த்திய ஆற்றலை விரும்பும் திருமாலும், மயில்கொடியை உயர்த்திய தவருத வெற்றியினை உடைய யானையை ஊர்ந்து வரும் சேயோனுகிய முருகனும் ஆகிய இவ்வுலகைக் காக்கும், இயமனை ஒத்த வலிமையையும் கெடாத நல்ல புகழையும் உடைய பெருந்தேவர் நால்வருள்-ளும், நீ சினத்தினுல் சிவபெருமானை ஒத்துள்ளாய்; வலிமையால் பலதேவனை ஒத்துள்ளாய்; புகழினுல் பகைவரை அழிக்கும் திருமாலை ஒத்துள்ளாய்; நினைத்த செயலைத் தக்காங்கு முடிக்கும் செயலில் முருகனை ஒத்துள்ளாய்; அவ்வந்நிலையில் அவ்வக்கடவுளரை ஒத்துள்ளாய் ஆதலின், நினக்குச் செயற்கு அரியது என்பது ஒன்றில்லை ' என்று நக்கீரனுர் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைக் கடவுளரோடு ஒப்பிட்டமை பூவை நிலையின் பக்கமாம்.]

ஒன்றென முடித்தலால், இங்ஙனம் அன்றி,

குருந்தம் ஒசித்தஞான்று உண்டால் அதனைக்
கரந்த படிஎமக்குக் காட்டாய் —மரம்பெரு
போரில் குருகுஉறங்கும் பூம்புனல் நீர்நாட
மார்பில் கிடந்த மறு. தொல். பொ. 60 ந.

[தங்குதற்கு அணிமையில் மரம் இன்மையின், வைக்கோல் போரில் நாரைகள் தங்கி உறங்கும் மருதநில மன்னனே! நீ கண்ணனுய்க் குருந்த மரத்தைக் கோவியர் மறைவதற்காக வளைத்துத் தாழ்த்தியபோது உன் மார்பில் இருந்த ஸ்ரீவத்சம் என்ற மச்சத்தை மறைத்த காரணத்தை எமக்கு அறிவிப்பாயாக, என்று சோழமன்னனைத் திருமாலின் அமிசமாகக் கூறியதும் பூவை நிலையின் பாற்படும்]

ஏற்றூர்தி யானும் இகல்வெம்போர் வானவனும்
ஆற்றலும் ஆள்வினையும் ஒத்தொன்றின் ஒவ்வாரே
கூற்றக் கணிச்சியோன் கண்மூன்று இரண்டேயாம்
ஆற்றல்சால் வானவன் கண். தொல். பொ. 60 ந.

[சிவபெருமானும் போரில்வல்ல சேரனும் ஆற்றலாலும் முயற்சியாலும் ஒப்பினும், சிவபெருமான் முக்கண்ணன் ஆதலும் சேரன் இரண்டே கண்ணுடையன் ஆதலும் நோக்க, வடிவினுல் இருவரும் ஒவ்வார் என்று கூறும் வாயிலாகச் சிவபெருமானை ஒத்த ஆற்றலும் முயற்சியும் சேரன் உடையன் என்று ஒப்பிடுவதும் பூவைநிலைப் பக்கமாம்]

இந்திரன் என்னின் இரண்டேகண் ஏறுஊர்ந்த
அந்தரத்தான் என்னின் பிறையில்லை —அந்தரத்தில்
கோழியான் என்னின் முகன்ஒன்றே கோதையை
ஆழியான் என்றுணரற் பாற்று. தொல். பொ. 60 ந.

எனவும், சிறிது வேறுபட வருவன எல்லாம் அதன்பால் படுத்துக.

[சேரன் கண் இரண்டே உடையன் ஆதலின் இந்திரன் அல்லன்; பிறை சூடவில்லை ஆதலின் சிவபெருமான் அல்லன்; கோழிக்கொடியானைப் போலன்றி ஒரே முகத்தன் ஆதலின் அவனும் அல்லன்; எனவே, அவனைத் திருமால் என்றே கொள்ளுதல் வேண்டும் எனச் சேரனைத் தேவர்பலரோடும் ஒப்பிட்டதும் பூவைநிலைப் பக்கமாம்.]

பரிசில்துறை :

'மண்ணகம் காவல் மன்னன் முன்னர்
எண்ணிய பரிசில் இதுஎன உரைத்தன்று'. பு பா. 5

வரிசை கருதாது வான்போல் தடக்கைக்
குரிசில்நீ நல்கயாம் கொள்ளும் — பரிசில்
அடுகளம் ஆர்ப்ப அமர்ஓட்டித் தந்த
படுகளி நால்வாய்ப் பகடு. பு பா. 5

[மழைத்தடக்கை மன்னனே ! எம் தகுதியைக் கருதாது நீ எமக்கு அளிக்கவேண்டிய பரிசில், போர்க்களத்தில் பகைவரை வெருட்டிக் கைப்பற்றிக் கொணர்ந்த களிறேயாம் என்றவாறு.

'குரிசில் ! நீ நல்க யாம் கொள்ளும் பரிசில் நால்வாய்ப் பகடு' என்பது துறைச்செய்தி]

இயன்மொழி வாழ்த்து :

'இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும்
அன்னோர் போல அவைஎமக்கு ஈஎன
என்னோரும் அறிய எடுத்துரைத் தன்று'. பு. பா. 6

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத்து இசைவிளங்கத் — தொல்லை
இரவாமல் ஈந்த இறைவர்போல் நீயும்
கரவாமல் ஈகை கடன். பு. பா. 6

[முல்லைக்குத் தேர் ஈந்த பாரியும் மயிலுக்குப் போர்வை ஈந்த பேகனும், அவை இரவாமலேயே ஈந்து அழியாப் புகழ் பெற்றனர். அவர் போல, நீயும் யாம் இரவாமலேயே, உள்ளதை மறைத்து வைத்துக் கொள்ளாமல் எமக்கு வழங்குவதே ஏற்றது என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி]

இயன்மொழி வாழ்த்துப் பக்கம் :

‘ மயல்அறு சீர்த்தி மான்தேர் மன்னவன்
இயல்பே மொழியினும் அத்துறை ஆகும் ’. பு. பா. 7

ஒள்வாள் அமருள் உயிர்ஓம்பான் தான்ஈயக்
கொள்வார் நடுவண் கொடைஓம்பான் — வெள்வாள்
கழியாமே மன்னர் கதம்காற்றும் வேலோன்
ஒழியாமே ஓம்பும் உலகு. பு. பா. 7

[வாளை உறையிலிருந்து நீக்காமலேயே பகைமன்னர் சினத்தைப்போக்கும் நம் மன்னன், போர் ஏற்படின் உயிரைப் பற்றிக் கவலைப்படாமலும் கொடைத்தொழிலைச் செய்யும் போது எப்பொருளையும் வழங்குதலைத் தவிராமலும், அறநெறி தவறாமல் உலகைப் பாதுகாப்பான் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

கண்படை நிலை :

‘ நெடுந்தேர்த் தானை நீறுபட நடக்கும்
கடுந்தேர் மன்னவன் கண்படை மலிந்தன்று’.
பு. பா. 8

மேலார் இறைஅமருள் மின்னார் சினம்சொரியும்
வேலான் விறல்முனை வென்றுஅடக்கிக்—கோலால்

கொடிய உலகில் குறுகாமை எங்கோன்
கடியத் துயிலேற்ற கண். பு பா. 8

[வீரர் தங்கும் போரிலே தன் வேற்படையானே பகைவரை வென்றடக்கித் தன் செங்கோலினாலே நாட்டில் தவறு நிகழாமல் அவற்றைப் போக்கிவிடுகையினாலே, அமைதியாக அரசன் கண்கள் உறக்கத்தை மேற்கொண்டன என்றவாறு.

எங்கோன் பகைவரை வென்றடக்கிக் கோலால் கொடிய கடிய அவன் கண் துயிலேற்ற என்பது துறைச்செய்தி]

துயிலெடை நிலை :

'அடுதிறல் மன்னரை அருளிய எழுகளனத்
தொடுகழல் மன்னனைத் துயில்எடுப் பின்று'. பு. பா. 9

அளந்த திறையார் அகல்இடத்து மன்னர்
வளந்தரு வேலோய் வணங்க்க் — களம்தயங்கப்
பூமலர்மேல் புள்ஒலிக்கும் பொய்கைசூழ் தாமரைத்
தூமலர்க்கண் ஏற்க துயில். பு பா. 9

[வேலோய்! வண்டுகள் ஒலிக்கும் பொய்கையிடத்த தாமரை போன்ற நின் கண்கள், இவ்வுலக மன்னர்கள் திறைப் பொருளை வழங்கி நின்னை வணங்கும் வாய்ப்பினைப் பெறுவதற்காக உறக்கம் நீங்கி எழுக என்றவாறு.

வேலோய்! மன்னர் வணங்க நின் மலர்க்கண் துயில் ஏற்க என்பது துறைச்செய்தி.]

மங்கல நிலை :

'கங்குல் கனைதுயில் எழுந்தோன் முன்னர்
மங்கலம் கூறிய மலிவுஉரைத் தன்று.' பு. பா. 10

விண்வேண்டின் வேருதல் மங்கலம் வேந்தர்க்கு
மண்வேண்டின் கைகூப்பல் மங்கலம் — பெண்வேண்டின்

துன்னல் மடவார்க்கு மங்கலம் தோலாப்போர்
மன்னன் வரைபுரையும் மார்பு. பு. பா. 10

[மன்னர்கள், வீரசுவர்க்கம் வேண்டின் எம் மன்னனோடு பகைத்தல் மங்கலமாம்; தம் நாட்டாட்சி நிலைபெறல் வேண்டின் அவனை அணங்குதல் மங்கலமாம்; மகளிர், பெண்மையின் இன்பநலன் வேண்டின் அவனது மலையை ஒத்த மார்பினைத் தழுவுதல் மங்கலமாம் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

மங்கல நிலைப்பக்கம் :

' மன்னிய சிறப்பின் மங்கலம் மரபின்
துன்னினன் என்றலும் அத்துறை ஆகும் '. பு. பா. 11

தீண்டியும் கண்டும் பயிற்றியும் தன்செவியால்
வேண்டியும் கங்குல் விடியலும் — ஈண்டிய
மங்கலம் ஆய நுகர்ந்தான் மறமன்னர்
வெங்களத்து வேல்உயர்த்த வேந்து. பு. பா. 11

[பொழுது விடியும் வரை மெய் கண் வாய் செவி இவற்றிற்கும், மூக்கிற்கும் உரிய ஐம்பொறி இன்பங்களை நுகர்ந்து, போர்க்களத்தில் வேலை ஓச்சி வீரம் காட்டிய வேந்தன், அந்தப்புரத்தே காமவின்பத்தில் மங்கலமான வகையில் திளைத்தான் என்றவாறு.

கங்குல் விடியலும் மங்கலமாய நுகர்ந்தான் வேந்து என்பது துறைச்செய்தி. விடியலும் — விடிவளவும்.]

விளக்கு நிலை :

' அளப்பரும் கடல்தானையான்
விளக்குநிலை விரித்துஉரைத்தன்று '. / பு. பா. 12

வளிதுரந்தக் கண்ணும் வலந்திரியாப் பொங்கி
ஒளிசிறந்து ஓங்கி வரலான் — அளிசிறந்து

நன்னெறியே காட்டும் நயம்தெரி கோலாற்கு
வெல்நெறியே காட்டும் விளக்கு. பு. பா. 12

[மக்கள் நலன் நாடி அரசாளும் செங்கோல் வேந்தனுக்கு அவன் திருவிளக்கு, காற்று வேகமாக அடித்தபோதும் வலப்பக்கமாகச் சுழன்று எழுந்து ஒளிமிக்கு உயர்ந்து வருதலின், வெல்லும் நெறியையே காட்டும் என்றவாறு.

விளக்கு ஓங்கி வரலான் கோலாற்கு வெல்நெறியே காட்டும் என்பது துறைச்செய்தி.]

விளக்குநிலையின் பக்கம் :

'அடல்அவிர் பைம்பூண் வேந்தன் தன்னைச்
சுடரொடு பொருவினும் அத்துறை ஆகும்'. பு. பா. 13

வெய்யோன் கதிர்விரிய விண்மேல் ஒளிஎல்லாம்
மையாந்து ஒடுங்கி மறைந்தாங்கு — வையகத்துக்
கூத்துஅவை ஏத்தும் கொடித்தேரான் கூடியபின்
வேத்துஅவையுள் மையாக்கும் வேந்து. பு. பா. 13

[கதிரவன் கதிர்விரியத் தோன்றும் அளவில் வானத்திலுள்ள ஒளிகள் பிறயாவும் பொலிவு இழந்து மறைந்தாற் போல, கூத்தர்குழாம் புகழும் நம்கொடித்தேர் மன்னவன் வேந்தர்அவையை எய்தின், ஏனைவேந்தர் பொலிவு இழப்பர் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

கபிலை நிலை :

'அண்ணல் நான்மறை அந்தணாளர்க்குக்
கண்ணிய கபிலை நிலைஉரைத் தன்று'. பு. பா. 14

பருக்காழும் செம்பொன்னும் பார்ப்பார் முகப்பக்
குருக்கண் கபிலை கொடுத்தான் — செருக்கோடு

இடிமுரசத் தானை இகல்இரிய எங்கோன்
கடிமுரசம் காலைச் செய புு. பா. 14

[செருக்கோடு முரசார்த்துவந்த பகைப்படை மாறுபாடு கெட்டு ஓட, காலையிலே தன் காவல் முரசம் முழங்காநிற்க, எங்கோன், நன்னிறமுடைய கண்களை உடைய பசுக்களைப் பெரிய மணிகளோடும் செம்பொன்னோடும் பார்ப்பாருக்குத் தானம் ஈந்தான்.

எங்கோன் பார்ப்பார் முகப்பக் கபிலை கொடுத்தான் என்பது துறைச்செய்தி.

இது வரையா ஈகை அன்றி இன்னலுற்றால் கொடுக்க எனப் பெரியோர் கூறு நாட்காலையிலே கொடுப்பதாகும் என்பர் நச்சினார்க்கினியர்.]

வேள்வி நிலை :

'அந்தமில் புகழான் அமரரும் மகிழச்
செந்தீ வேட்ட சிறப்புஉரைத் தன்று'. பு. பா. 15

கேள்வி மறையோர் கிளைமகிழ்தல் என்வியப்பாம்
வேள்வி விறல்வெய்யோன் தான்வேட்ப — நீள்விசும்பின்
ஈர்ந்தார் இமையோரும் எய்தி அழல்வாயால்
ஆர்ந்தார் முறையால் அவி. பு. பா. 15

[ஆற்றலை விரும்பும் நம் அரசன் வேள்வி செய்ய, வானத்து இமையோரும் வந்து தீ ஆகிய தம் வாயினால் தத்தமக்கு உரிய அவியினை நுகர்ந்தார் ஆதலின், இவ் வேள்வி கருதி நிலஉலகத் தேவராகிய மறையோர்இனம் மகிழ்வதில் வியப்பு ஒன்றும் இல்லை என்றவாறு.

விறல் வெய்யோன் வேள்வி வேட்ப இமையோரும் அவி ஆர்ந்தார் என்பது துறைச்செய்தி.]

வெள்ளிநிலை :

‘ துயர்தீரப் புயல்தரும்என
உயர்வெள்ளி நிலைஉரைத்தன்று ’. பு பா. 16

சூழ்கதிர் வான்விளக்கும் வெள்ளி சுடர்விரியத்
தாழ்புயல் வெள்ளம் தரும்அரோ — சூழ்புரவித்
தேர்வில்தார் தாங்கித் திகழ்ந்திலங்கு வேலோய்நின்
மார்வில்தார் கோலி மழை பு. பா. 16

[பகைவருடைய தேர் புரவி வில்ஏந்தியதார் ஆகிய படைகளைத் தடுத்து விளங்கும் வேலோய் ! கதிர்கள் சூழும் வானத்தில் வெள்ளியின் ஒளி நன்னிலையில் தங்கிப் பரவுதலால், நின் மார்பில் உள்ள மாலையைப்போல நீர்த்தாரைகளை மேகங்கள் பெய்து மழைவளம் சுரக்கும் என்றவாறு.

வெள்ளி சுடர் விரியப் புயல் மழை தரும் என்பது துறைச்செய்தி.]

நாடு வாழ்த்து :

‘ தாள்தாழ் தடக்கையான்
நாட்டது வளம்உரைத்தன்று ’. பு. பா. 17

எண்ணின் இடர்எட்டும் இன்றி வயல்செந்நெல்
கண்ணின் மலரக் கருநீலம் — விண்ணின்
வகைத்தாய் வளனொடு வைகின்று வென்வேல்
நகைத்தாரான் தான்விரும்பும் நாடு. பு. பா. 17

இடர் எட்டாவன :

விட்டில் கிளிநால்வாய் வேற்றரசு தன்னரசு
நட்டம் பெரும்பெயல்காற்று எட்டு

என இவை,

[நம் மன்னன் விரும்பி ஆளும் நாடு எண்வகை இடரும் இன்றி, வயலிலே நீலமலர்கள் செந்நெல் இடையே கண்

போல மலர, வளமிகுதியால் தேவர்உலகு போலக் காட்சி வழங்குகிறது என்றவாறு

நகைத்தாரான் விரும்பும் நாடு விண்ணின் வகைத்தாய் வளனொடு வைகின்று என்பது துறைச்செய்தி.]

கிணை நிலை :

' திருக்கிளரும் அகன்கோயில்
அரிக்கிணைவன் வளம்உரைத்தன்று '. பு. பா. 18

வெள்ளி முளைத்த விடியல் வயல்ஆமை
அள்அகட்டு அன்ன அரிக்கிணை — வள்ளியோன்
முன்கடை தட்டிப் பகடுவாழ்க என்னுமுன்
என்கடை நீங்கிற்று இடர். பு. பா. 18

[வள்ளலாகிய மன்னன் வாயிலில் வெள்ளி தோன்றும் வைகறை நேரத்தில் கிணைப்பறையைக் கொட்டி, அவன் யானைப்படை வாழ்க என்று வாழ்த்திய அளவில், எங்கள் வறுமைத்துயரம் நீங்கிற்று என்றவாறு.

வள்ளியோன் முன்கடை விடியல் கிணை தட்டிப் பகடு வாழ்கஎன என்இடர் நீங்கிற்று என்பது துறைச்செய்தி.]

களவழி :

' செங்களத்துச் செழுஞ்செல்வம்
வெண்துறையாழ்ப் பாணர்விளம்பின்று '. பு. பா. 19

ஈண்டி எருவை இறகுஉளரும் வெங்களத்து
வேண்டியாம் கொண்ட விறல்வேழம் — வேண்டாள்
வளைகள் வயிர்இயம்பும் வாள்தானை வேந்தே
விளைகள் பகர்வாள் விலை. பு. பா. 19

[வேந்தே ! பருந்துகள் தம் இறகுகளைக் கோதும் போர்க் களத்தில் யாம் நின்னிடம் பெற்ற வேழத்தைக் கள்விலை யாட்டி எம்மிடம் இப்பொழுது கள்விலையாகக் கொள்ள

மறுக்கிருள்; நீ வழங்கிய வேழம் பலவும் கள்விலையாக முன்னரே பலரிடம் பெற்றுள்ளாள் ஆதலின், வேழத்தின் மதிப்பைக் குறைத்துக் காண்கிருள் என்று பாணர் வேந்தனிடம் சொற்றது.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

வீற்றினிதிருந்த பெருமங்கலம் :

'கூற்றுஇருந்த கோலவேலான்
வீற்றிருந்த விறல்மிகுத்தன்று'. பு. பா. 20

அழல்அவிர் பைங்கண் அரிமான் அமளி
நிழல்அவிர்பூண் மன்னர்நின்று ஏத்தக் — கழல்புனைந்து
வீமலிதார் மன்னவனுய் வீற்றிருந்தான் வீங்குஒலிநீர்ப்
பூமலி நாவல் பொழிற்கு. பு. பா. 20

[அரிமான் அமளியிலே ஏனை மன்னர் நின்று தன்னைப் புகழக் கழல் புனைந்து, நாவலந்தீவாகிய பரதகண்டத்திற்கே, நம் அரசன் மலர்மாலை அணிந்து மன்னர்மன்னனுய் வீற்றிருந்தான் என்றவாறு.

அரிமான்அமளி மன்னர் ஏத்த நாவல்பொழிற்கு மன்னவனுய் வீற்றிருந்தான் என்பது துறைச்செய்தி.]

குடுமி களைந்த புகழ்சாற்றுநிலை :

'நெடுமதில் எறிந்து நிரைதார் மன்னன்
குடுமி களைந்த மலிவுஉரைத் தன்று'. பு. பா. 21

பூந்தா மரையில் பொடித்துப் புகல்விசும்பின்
வேந்தனை வென்றுன் விறல்முருகன் — ஏந்தும்
நெடுமதில் கொண்டு நிலமிசையோர் ஏத்தக்
குடுமி களைந்தான்எங் கோ. பு. பா. 21

குடுமி களைதல்—மயிர்ச்சிகையைக் கூட்டி முடித்தல்.

[சரவணப் பொய்கையில் தாமரைப் பூவில் பிறந்து இந்திரனை வென்றான், ஆற்றல் சான்ற முருகப்பெருமான். எம் அரசனோ பகைவர் மதிலைக் கைக்கொண்டு, மக்கள் துதிக்க, ' அரண் கொள்ளாது முடியேன் ' என்று விரித் திருந்த மயிர்ச்சிகையைக் கூட்டி முடித்தான் என்றவாறு.

குடுமிகளைதல் — பகைவர் மணிமுடியை நீக்கலுமாம். நெடு மதில்கொண்டு எங்கோ குடுமி களைந்தான் என்பது துறைச்செய்தி.]

மணமங்கலம் :

' இகல் அடுதோள் எறிவேல் மன்னன்
மகளிரோடு மணந்த மங்கலம் கூறின்று '. பு. பா. 22

அணைக்கருந் தானையான் அல்லியந்தார் தோய்ந்தோள்
மணக்கோல மங்கலம்யாம் பாட — வணக்கருஞ்சீர்
ஆர்எயில் மன்னன் மடமகள் அம்பணைத்தோள்
கூர்எயிற்றுச் செவ்வாய்க் கொடி. பு. பா. 22

[தாழ்த்தமுடியாத சிறப்பினையும் அரிய அரணினையும் உடைய மன்னனின் செவ்வாய்க்கொடி போன்ற மடமகள் யாங்கள் மணக்கோலத்தைப் பாடும்படி பகைவர் வருத்துதற் கரிய தானையை உடைய எம் மன்னனை மணந்தாள் என்ற வாறு.

எயில்மன்னன் மடமகள் மணக்கோலம் யாம் பாட எம் மன்னன் தார்தோய்ந்தாள் என்பது துறைச்செய்தி]

பொலிவு மங்கலம் :

' வேல் வேந்தன் உள் மகிழப்
பாலன் பிறப்பப் பலர்புகழ்ந் தன்று '. பு. பா. 23

கருங்கழல் வெண்குடைக் காவலற்குச் செவ்வாய்ப்
பெருங்கண் புதல்வன் பிறப்பப் — பெரும்பெயர்

விண்ணோர் மகிழ்ந்தார் வியல்இடத்தார் ஏத்தினர்
எண்ணார் அவிந்தார் இகல். பு. பா. 23

[மன்னனுக்குப் புதல்வன் பிறந்தானாக விண்ணோர் மகிழ மண்ணோர் வாழ்த்தப் பகைவர் மாறுபாடு ஒழிந்தனர்.

காவலற்குப் புதல்வன் பிறப்ப வியலிடத்தார் ஏத்தினர் என்பது துறைச்செய்தி.]

நாள் மங்கலம் :

‘ அறந்தரு செங்கோல் அருள்வெய்யோன்
பிறந்தநாள் சிறப்புரைத் தன்று ’. பு. பா. 24

கரும்பகடும் செம்பொன்னும் வெள்ளணிநாள் பெற்றார்
விரும்பி மகிழ்தல் வியப்போ — சுரும்புஇமிர்தார்
வெம்முரண் வேந்தரும் வெள்வளையார் தோள்விழைந்து
தம்மதில் தாம்திறப்பர் தாள். பு. பா. 24

[அரசன் மங்கலமான வெள்ளணி அணிந்திருக்கும் அவன் பிறந்தநாள்விழாவில் பரிசிலர் யானையும் பொன்னும் பெற்று மகிழ்ந்ததில் வியப்பு இல்லை. பகைவரும் தம் உரிமை மகளிரொடு காமம் நுகர்ந்து மதில் கதவுகளைத் திறந்து மகிழ்வோடு இருப்பர் என்றவாறு; அரசன் பிறந்த நாளை ஒட்டிப் பகைவரையும் நலியான் ஆதலின். இப் பாடலே துறைச்செய்தி.

‘ சிறந்த நாள்அணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள் வயின் பெருமங்கலம் ’

என்பார் தொல்காப்பியனார்]. தொல். பொ. 91

பரிசில் நிலை :

‘ புரவலன் மகிழ்தூங்க
இரவலன் கடைக்கூடின்று ’. பு. பா 25

வெல்புரவி பூண்ட விளங்கு மணித்திண்டேர்
நல்கிய பின்னும் நனிநீடப் — பல்போர்

விலங்கும் கடல்தானை வேற்றார் முனைபோல்
கலங்கும் அளித்துஎன் கடும்பு. பு. பா25.

புரவி பூட்டிய திண்டேரைப் பரிசிலாக நல்கிய பின்னும் அரசன் பரிசிலனுக்கு விடை நல்கக் காலம் தாழ்க்கவே அவன் அரசனிடம் பகைவர் நாடு கலங்குவது போலத் தன் சுற்றம் வறுமையால் கலங்கிக் கொண்டிருக்கும் எனக் கூறி விடை வேண்டினான் என்றவாறு.

திண்டேர் நல்கிய பின்னும் நனி நீட, என் கடும்பு கலங்கும் என்றான் என்பது துறைச்செய்தி.]

பரிசில் விடை :

'வேந்தன்உள் மகிழ வெல்புகழ் அறைந்தோர்க்கு
ஈந்து பரிசில் இன்புற விடுத்தன்று'. பு. பா. 26

படைநவின்ற பல்களிறும் பண்அமைந்த தேரும்
நடைநவின்ற பாய்மாவும் நல்கிக்—கடைஇறந்து
முன்வந்த மன்னர் முடிவணங்கும் சேவடியால்
பின்வந்தான் பேர்அருளி னான். பு. பா. 20

[பேரருளினனாகிய மன்னன் களிறும் தேரும் பாய் மாவும் நல்கி, மன்னர் வணங்கும் தன் கால்களால் நடந்து வந்து ஏழடி தொடர்ந்து வழி அனுப்பினான் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

ஆள்வினை வேள்வி :

'வினைமுற்றிய கனைகழலோன்
மனைவேள்வி மலிபுஉரைத்தன்று'. பு. பா. 27

நின்ற புகழொடு நீடுவாழ்க இவ்வுலகில்
ஒன்ற உயிர்களிப்ப ஓம்பலால்—வென்று அமருள்
வாள்வினை நீக்கி வருக விருந்துஎன்னும்
ஆள்வினை வேள்வி அவன். பு. பா. 27

[விருந்து ஓம்புதலாகிய ஆள்வினை வேள்வி செய்யும் அரசன் உயிர்கள் களிப்பப் பாதுகாத்தலால் இம்மையில் போரில் வெற்றி பெறுக; இறந்த பின்னும் நிலைபெற்ற புகழு டலால் இவ்வுலகில் நீடு வாழ்க என்று சான்றோர் ஏத்திய வாறு.

ஆள்வினை வேள்வியவன் உயிர் ஓம்பலால் வாள்வினை நீக்கி வருக; நின்ற புகழொடு நீடு வாழ்க என்பது துறைச் செய்தி].

பாணாற்றுப்படை :

'சேண் ஓங்கிய வரைஅதரில்
பாணனை ஆற்றுப்படுத்தன்று'. பு. பா. 28

இன்தொடை நல்லிசை யாழ்ப்பாண எம்மைப்போல்
கன்றுஉடை வேழத்த கான்கடந்து-சென்றுஅடையின்
காமரு சாயலாள் கேள்வன் கயம்மலராத்
தாமரை சென்னி தரும். பு. பா. 28

[பாண! எம்மைப்போல் களிறு பரந்த கான் கடந்து விரும்புதல் வரும் மென்மையை உடையாள் கணவனாகிய வள்ளலைச் சென்று அடையின் அவன் பொற்றாமரைப் பூக் களைச் சென்னியில் சூடுதற்கு வழங்குவான் என்றவாறு.

பாண! எம்மைப்போல் சென்றடையின் கேள்வன் கயம்மலராத் தாமரை தரும் என்பது துறைச்செய்தி]

கூத்தர் ஆற்றுப்படை :

'ஏத்திச்சென்ற இரவலன்
கூத்தரை ஆற்றுப்படுத்தன்று'. பு. பா. 29

கொலைவில் புருவத்துக் கொம்புஅன்னார் கூத்தின்
தலைவ தவிராது சேறி—சிலைகுலாம்
காரினை வென்ற கவிகையான் கைவளம்
வாரினை கொண்டு வரற்கு. பு. பா. 29

[மகளிர் கூத்தின் தலைவ! கார்மேகத்தை வென்ற கொடைக்கையான் தரும் வளத்தை வாரி வரத் தவிராது செல்க என்பது துறைச்செய்தி.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

பொருநர் ஆற்றுப்படை :

' பெருநல்லான் உழையீர் ஆகஎனப்
பொருநனை ஆற்றுப்படுத்தன்று '. பு. பா. 30

தெருவில் அலமரும் தெண்கண் தடாரிப்
பொருவுஇல் பொருநநீ சேறின்—செருவில்
அடும்தடக்கை நோன்தாள் அமர்வெய்யோன் ஈயும்
நெடுந்தடக்கை யானை நிரை. பு. பா. 30

[தெருவில் சுற்றித்திரியும் தடாரி அடிக்கும் பொருந! நீ சென்று வேண்டின் போரை விரும்பும் வள்ளல் நிளக்கு யானை நிரைகளையே வழங்குவான்.

பொருந! நீ சேறின் அமர்வெய்யோன் யானை நிரை ஈயும் என்பது துறைச்செய்தி]

விறலி ஆற்றுப்படை :

' திறல்வேந்தன் புகழ்பாடும்
விறலியை ஆற்றுப்படுத்தன்று .' பு. பா. 31

சில்வளைக்கைச் செவ்வாய் விறலி செருப்படையான்
பல்புகழ் பாடிப் படர்தியேல் — நல்அவையோர்
ஏத்த இழைஅணிந்து இன்னே வருதியால்
பூத்த கொடிபோல் பொலிந்து. பு. பா. 31

[விறலி! நீ படை மன்னன் புகழ் பாடிச் செல்லின் பூத்த கொடியைப் போலப் பொலிந்து அவையோர் புகழ அணிகலன் பல அணிந்து வரும் வாய்ப்பினைப் பெறுவாய் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

வாயுறை வாழ்த்து :

‘ பிற்பயக்கும் எம்சொல்என
முற்படர்ந்த மொழிமிகுத்தன்று ’. பு. பா. 32

எம்சொல் எதிர்கொண்டு இகழான் வழிநிற்பின்
குஞ்சர வெல்படையான் கொள்ளானோ — எஞ்சும்
இகல்இடன் இன்றி எறிமுந்நீர் சூழ்ந்த
அகல்இடம் அங்கை அகத்து. பு. பா. 32

[எம் சொல்லை ஏற்றுப் பிறழாது பின்பற்றினால் யானைப் படையை உடைய மன்னன் பகைவர் நாடு என்பதே இன்றி கடல் சூழ்ந்த உலகம் முழுதும் கைப்பற்றுவான் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

செவியறிவுறூஉ :

‘ மறம்திரிவு இல்லா மன்பெருஞ் சூழச்சி
அறம்தெரி கோலாற்கு அறிய உரைத்தன்று’. பு. பா. 33

அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தைதாய் என்றிவர்க்குத் தார்வேந்தே—முந்தை
வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழி நின்று கேட்டல் முறை. பு. பா. 33

[அந்தணர் சான்றோர் தவர் தமையன்மார் தந்தை தாய் இவர்களிடம் நெறி தவறாது நடந்து பின் உலகத்து மொழிகளை நின்று கேட்டலே வழக்காகும் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.

‘ செவியுறைதானே,
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல்கடன் எனச் செவியுறுத் தற்றே ’
என்றார் தொல்காப்பியனார்] தொல் பொ. 426

குடைமங்கலம் :

'நால்திசையும் புகழ் பெருக
வீற்றிருந்தான் குடைபுகழ்ந் தன்று'. பு. பா. 34

தன்நிழலோர் எல்லோர்க்கும் தண்கதிராம் தற்சேரா
வெந்திறலோர் எல்லோர்க்கும் வெங்கதிராம்-இன்னிழல்வேல்
மூவா விழுப்புகழ் முல்லைத்தார்ச் செம்பியன்
கோவாய் உயர்த்த குடை. பு. பா. 34

கோவாய்—அரசு தொழிற்கு அமைந்ததாய்.

[கெடாத நற்புகழான் ஆகிய சோழனுடைய அரசுத் தொழிலுக்கு அமைந்த குடை தமருக்கு மதிபோலக் குளிர்ந்து பகைவருக்குக் கதிரவன்போல அழல் செய்வதாம்.

செம்பியன் குடை தன் நிழலோர்க்குத் தண்கதிராய், தற்சேரார்க்கு வெங்கதிராம் என்பது துறைச்செய்தி.]

வாள்மங்கலம் :

'கடக்கஅருங் கடல்தானை
வயக்களிற்றான் வாள்புகழ்ந்தன்று'. பு. பா. 35

கொங்குஅவிழ் ஐம்பால் மடவார் வியன்கோயில்
மங்கலம் கூற மறம்கனலும் — செங்கோல்
நிலம்தரியச் செல்லும் நிரைதண் தார்ச் சேரன்
வலம்தரிய ஏந்திய வாள். பு பா. 35

[மகளிர் அரண்மனையில் மங்கலம் கூற, பகைவரது நிலத்தைக் கைப்பற்றச் செல்லும் சேரன் வெற்றி பெறுதற்கு ஏந்திய வாள் வீரத்தை வெளிப்படுத்தும் என்றவாறு.

சேரன் ஏந்திய வாள் மடவார் வியன்கோயில் மங்கலம் கூற மறம் கனலும் என்பது துறைச்செய்தி.]

மண்ணுமங்கலம் :

'எண்அருஞ் சீர்த்தி இறைவன் எய்தி
மண்ணும் மங்கல மலிவு உரைத்தன்று'. பு பா. 36

கொங்குஅலர் கோதைக் குமரி மடநல்லாள்
மங்கலம் கூற மலிவுஎய்திக் — கங்கையாள்
பூம்புனல் ஆகம் செழீஇயினன் போர்அடுதோள்
வேம்புஆர் தெரியல்எம் வேந்து. பு. பா. 36

[குமரியாகிய பெண் தனக்கு மங்கலம் கூறச் சிறப்பு எய்தி, வேப்பமாலையை அணிந்த போர்அடுதோள் பாண்டியன் கங்கையாளுடைய பொலிவுடைய நீராகிய மார்பினைத் தழுவினன் என்றவாறு.

குமரி மங்கலம் கூற வேம்புஆர் தெரியல் எம் வேந்து கங்கையாள் ஆகம் செழீஇயினன் என்பது துறைச்செய்தி]

ஓம்படை :

'இன்னது செய்தல் இயல்புஎன இறைவன்
முன்நின்று அறிவன் மொழிதொடர்ந் தன்று'. பு. பா. 37

ஒன்றின் இரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
வென்று களங்கொண்ட வேல்வேந்தே—சென்றுஉலாம்
ஆழ்கடல்சூழ் வையகத்து ஐந்துவென்று ஆறுஅடக்கி
ஏழ்கடிந்து இன்புற்று இரு. பு. பா. 37

ஒன்று--ஞானம்; ஆன்மா என்றுமாம். இரண்டு — காரணகாரியங்கள்; புண்ணியம் பாவம் என்றுமாம். மூன்று- நட்புப்பகை நொதுமல்; உச்சாகசத்தி பிரபுசத்தி மந்திரசத்தி என்றுமாம். நான்கு—யானை தேர் குதிரை காலாள்; சாம தான பேத தண்டம் என்றுமாம். ஐந்து—செவி மெய் கண் மூக்கு வாய் எனப் பெயரிய பொறிகள். ஆறும் ஏழும்

நாடிய நட்புப் பகைசெலவு நல்லிருக்கை
கூடி னரைப்பிரித்தல் கூட்டல்ஆறு—ஈடிலா
வேட்டம் கடுஞ்சொல் மிகுதண்டம் சூதுபொருள்
ஈட்டம்கள் காமம்இவை ஏழ்.

என முறையே இவையாம்

[ஞானத்தினுல் நன்மை தீமைகளை ஆராய்ந்து, பகை நொதுமல் நட்பு என்ற மூன்றினையும் உளத்தில் அடக்கி, தானை யானை குதிரை தேர் என்ற நால்வகைப் படையாலும் வென்று போர்க்களத்தைக் கைப்பற்றிய வேல் வேந்தே! கடல் சூழ்ந்த இவ்வுலகில், மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற ஐம்புலன்களையும் அறிவால் அடக்கி, படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்ற ஆறு உறுப்புகளையும் பெருக்கி, வேட்டம் கடுஞ்சொல் மிகுதண்டம் சூது பொருளீட்டம் கள் காமம் என்ற ஏழையும் நீக்கி இன்புற்று இருப்பாயாக என்றவாறு. பிறவாறும் உரைப்ப.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

புறநிலை வாழ்த்து :

'வழிபடு தெய்வம் நிற்புறம் கரப்ப
வழிவழி சிறக்கஎன வாய்மொழிந்தன்று'. பு. பா. 38

கொடிபடு முத்தலைவேல் கூற்றக் கணிச்சிக்
கடிபடு கொன்றையான் காப்ப — நெடிதுஉலகில்
பூமலி நாவல் பொழில்அகத்துப் போய்நின்ற
மாமலைபோல் மன்னுக நீ. பு. பா. 38

[முத்தலை வேலினையும் கூற்றத்தை ஒத்த குந்தாலிப் படையினையும் கைக்கொண்டு கொன்றைமாலை அணிந்த சிவபெருமான் காப்பாற்றுதலால், பூமியின் நடுவைப்

பிளந்துபோய் நிலத்து நிற்கும் மேருமலையைப் போல, நீ இவ்வுலகில் நெடிது வாழ்க என்றவாறு.

கொன்றையான் காப்ப நெடிது உலகில் நீ மன்னுக என்பது துறைச்செய்தி]

கொடி நிலை :

‘ மூவர்கோடி உள்ளும் ஒன்றொடு பொரீஇ
மேவரு மன்னவன் கொடிபுகழ்ந் தன்று ’. பு. பா. 39

பூங்கண் நெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
பாம்புஉண் பறவைக் கொடிபோல — ஓங்குக
பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி. பு. பா. 39

[தாமரைக்கண்ணனுய்ப் பூவைப்பூ நிறத்தினனுய் நெடுமுடி சூடிய திருமாலினது பாம்பை உண்ணும் கருடக்கொடியினைப்போல, நம்மன்னன் கொடி பல மன்னரும் பணிய ஓங்குவதாகுக என்றவாறு.

மன்னன்கொடி மன்னர் பணியப் பறவைக்கொடிபோல ஓங்குக என்பது துறைச்செய்தி.]

கந்தழி :

‘ சூழநேமியான் சோஎறிந்த
வீழாச்சீர் விறல்மிகுத்தன்று ’. பு. பா. 40

மாயவன் மாயம் அதுவால் மணிநிரையுள்
ஆயனு எண்ணல் அவன்அருளால் — காயக்
கழல்அவிழக் கண்கனலக் கைவளையார் சோரச்
சுழல்அழலுள் வைகின்று சோ. பு. பா. 40

[திருமாலை மாடுமேய்க்கும் ஆயனுக்க் கருதாதே. அவன் வெகுண்டஅளவில், அசுரர்கள் வீரக்கழல் நெகிழவும், கண்கள் சிவக்கவும் மகளிர் மயங்கவும் வாணுசுரனுடைய சோ

என்ற அரணம் தீக்கு இரையாயிற்று. மறைத்து வெளிப் படுத்தும் அத்திருமாலினது ஆற்றல் அத்தகையது என்ற வாறு.

மாயவன் காயச் சோ சுடர்அழலுள் வைகின்று என்பது துறைச்செய்தி.]

வள்ளி :

'பூண்முலையார் மனம் உருக
வேல்முருகற்கு வெறியா டின்று'. பு. பா. 41

வேண்டுதியால் நீயும் விழைவோ விழுமிதே
ஈண்டுஇயம் விம்ம இனவளையார் — பூண்தயங்கச்
சூலமொடு ஆடும் சுடர்ச்சடையோன் காதலற்கு
வேலனொடு ஆடும் வெறி. பு. பா. 41

[ஒலிக்கருவிகள் ஒலிக்க, மகளிர் அணிகலன்கள் ஒளிவீச, சூலத்தோடு ஆடும் சிவபெருமான் மகனாகிய முருகப்பெருமா னுக்கு வேலனோடு ஆடும் வெறியாட்டுக் கூத்தினை நீயும் விரும்புக. அவ்விருப்பம் மேதக்கது என்றவாறு.

இனவளையார் காதலற்கு வேலனொடு வெறியாடுவர் என்பது துறைச்செய்தி]

புலவர் ஆற்றுப்படை :

'இருங்கண்வானத்து இமையோருழைப்
பெரும்புலவனை ஆற்றுப்படுத்தன்று'. பு. பா. 42

வெறிகொள் அறைஅருவி வேங்கடத்துச் செல்லின்
நெறிகொள் படிவத்தோய் நீயும் — பொறிகட்கு
இருள்ஈயும் ஞாலத்து இடர்எல்லாம் நீங்க
அருள்ஈயும் ஆழி யவன். பு. பா. 42

[மணங்கமழும் அருவியை உடைய வேங்கடமலைக்குச் சென்றால், முறையாக அமைந்த விரத ஒழுக்கத்தினை உடைய

நீயும் ஐம்பொறிகளுக்கும் மயக்கம் தரும் இவ்வுலகத் துயர் நீங்க, திருமால் அருள் ஈவாள் என்றவாறு.

வேங்கடத்துச் செல்லின் இடர்நீங்க ஆழியவன் அருள் ஈயும் என்பது துறைச்செய்தி.]

புகழ்ந்தனர் பரவல் :

'இன்னதுஒன்று எய்துதும் இருநிலத்து யாம்என
துன்னருங் கடவுள் தொடுகழல் தொழுதன்று'. பு. பா. 43

சூடிய வான்பிறையோய் சூழ்சுடலை நீற்றுஅரங்கத்து
ஆடி அசையா அடிஇரண்டும் — பாடி
உரவுநீர் ஞாலத்து உயப்போக என்று
பரவுதும் பல்கால் பணிந்து. பு. பா. 43

[பிறை சூடிய பெருமானே! பேய் சூழும் சாம்பல்அரங்கம் ஆகிய சுடுகாட்டில் ஆடித் தளராத நின்திருவடிகளைப் பாடி உலகஇடரினின்றும் விடுபடுவதற்கு நின்னைப் பணிந்து பல காலும் துதிக்கின்றோம் என்றவாறு.

வான் பிறையோய்! ஞாலத்து உயப்போக நின்அடி இரண்டும் பாடிப் பல்கால் பணிந்து பரவுதும் என்பது துறைச்செய்தி.]

பழிச்சினர் பணிதல் :

'வயங்கியபுகழ் வானவனைப்
பயன்கருதிப் பழிச்சினர்பணிந்தன்று'. பு. பா. 44

ஆடல் அமர்ந்தான் அடிஅடைந்தார் என்பெறுர்
ஓடிஅரி உண்கண் உமைஒருபால் — கூடிய
சீர்கால் அகலத்தைச் செங்கண் அழல்நாகம்
தாராய்த் தழுவப் பெறும். பு. பா. 44

[பார்வதியை இடப்பாகமாகக்கொண்ட சிவபெருமானது மார்பினைப் பாம்பு மாலையாகத் தழுவும் பேற்றினைப்

பெற்றுள்ளது ஆதலின், கூத்தப்பிரான் அடியை அடைந்தவர் பெற இயலாதபேறு ஒன்றும் இன்று என்றவாறு.

ஆடல்அமர்ந்தான் அடி அடைந்தார் என்பெறுர் என்பது துறைச்செய்தி]

கைக்கிளை :

‘ தண்டாக் காதல் தளர்இயல் தலைவன்
வண்தார் விரும்பிய வகைஉரைத் தன்று ’. பு. பா. 45

மங்குல் மனம்கவர மால்மாலை நின்றேற்குப்
பொங்கும் அருவிப் புனல்நாடன் — கங்குல்
வருவான்கொல் வந்துஎன் வனமுலைமேல் வைகித்
தருவான்கொல் மார்புஅணிந்த தார். பு. பா. 45

[முகில்கள் நெஞ்சைக் கவர மயக்கந்தரும் மாலைக்காலத்துத் தடுமாறி நிற்கும் எனக்கு, சோழமன்னன் இரவில் வந்து என்னைத் தழுவித் தான் மார்பில் அணிந்த மாலையைத் தருவானு ? எனக் கைக்கிளைத் தலைவி பாட்டுடைத்தலைவனை நினைந்து கூறியவாறு. புனல்நாடன்—சோழன்.

மால்மாலை நின்றேற்குப் புனல் நாடன் மார்பு அணிந்த தார் தருவான்கொல் என்பது துறைச்செய்தி.]

பெருந்திணை :

‘ பெய்கழல் பெருந்தகை பேணுமுயக்கு இவர்ந்து
மல்குஇருள் செல்வோள் வகைஉரைத் தன்று ’. பு. பா. 46

வயங்குஉளைமான் தென்னன் வரைஅகலம் தோய
இயங்கா இருளிடைச் செல்வேன் — மயங்காமை
ஓடுஅரிக் கண்ணாய் உறைகழிவாள் மின்னிற்றால்
மாடம் மறுகின் மழை. பு. பா. 46

[தோழீ ! பாண்டியனுடைய மலையை ஒத்தமார்பினைத் தழுவ மக்கள் நடமாட்டம் இல்லாத இருளிடைச் செல்லும்

எனக்கு, மாடம் நிறைந்த தெருவில் மேகம் வாள்போல மின்னி ஒளி தருகின்றது என்றவாறு.

தென்னன் அகலம் தோய இருளிடைச் செல்வேன் எனப் பெருந்திணைத் தலைவி சொற்றது துறைச்செய்தி.

தென்னன் எனப் பாட்டுடைத் தலைவன் பெயர் கூறலின், இஃது அகமாகாது புறமாயிற்று; கைக்கிளையும் அது.]

புலவிப் பாடாண் பாட்டு :

'வில்லேர் நுதலி விறலோன் மார்பம்
புல்லேம் யாம்எனப் புலந்துஉரைத் தன்று'. பு. பா. 47

மலைபடு சாந்தம் மலர்மார்ப யாம்நின்
பலர்படி செல்வம் படியேம் — புலர்விடியல்
வண்டினம்கூட் டுண்ணும் வயல்சூழ் திருநகரில்
கண்டனம் காண்டற்கு இனிது. பு. பா. 47

இம்மூன்றும் பாட்டுடைத் தலைவனையே கிளவித்தலைவனாகக் கூறலின், அகமாகாது புறமாயின.

[சந்தனம் அணிந்த பரந்த மார்பனே! நாள்வெயிற் காலையிலே வயல்சூழ்ந்த அழகிய நகரில், நின்மெய்க்கண் பரத்தையர் செய்த குறிகளைக் கண்டேம் ஆதலின், நின் பரத்தையர் பலரும் தோயும் நின்மார்பினைத் தழுவோம் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

கடவுள் மகளிர் கடவுளை நயந்த பக்கம் :

'இமையா நாட்டகத்து இலங்குஇழை மகளிர்
அமையாக் காதல் அமரரை மகிழ்ந்தன்று'. பு பா. 48

நல்குளனின் நாமிசையாள் நோம்என்னும் சேவடிமேல்
ஒல்குரனின் உச்சியாள் நோம்என்னும் — மல்குஇருள்

ஆடல் அமர்ந்தாற்கு அரிதால் உமையாளை
ஊடல் உணர்த்துவது ஓர் ஆறு. பு. பா. 48

[கூத்தப்பிரான் உமாதேவியின் ஊடலைப்போக்குதற்கு, அவளை நோக்கி 'அருள்வாயாக' என வேண்டின், அவனது நாவில் இருக்கும் கலைமடந்தை மனம் நோவாள்; அவள் அடியில் வணங்குவோம் என்றால், தலையில்உள்ள கங்கை மனம் நோவாள்; ஆதலின் உமையின் ஊடலைப் போக்குதல் சிவபெருமானுக்கு அரிதாய் உள்ளது என்றவாறு.

சிவபெருமான் நாவில் கலைமடந்தை உள்ளாள் என்ற கருத்தும் உண்டுபோலும். பாடல் முழுதும் துறைச்செய்தி.]

பூதலத்து அரிவையர் நயந்த கடவுட்பக்கம் :

'முக்கண்ணன் முயக்கம் வேட்ட
மக்கட்பெண்டிர் மலிவுஉரைத்தன்று'. பு. பா. 49

அரிகொண்ட கண்சிவப்ப அல்லிலான் ஆகம்
புரிகொண்ட நூல்வடுவாப் புல்லி — வரிவண்டு
பண்நலம்கூட் டுண்ணும் பணிமலர்ப் பாதூர்என்
உள்நலம் கூட்டுண்டான் ஊர். பு. பா. 49

[வண்டுகள் பண்போலப்பாடும் குளிர்ந்த மலர்களை உடைய பாதூரே, இரவில் என் கண் சிவக்குமாறும் தன் பூணூல் என் மார்பில் வடு உண்டாக்குமாறும் என்னைத் தழுவி என் நலன் நுகர்ந்தான் ஊராகும். (ஈண்டு நுகர்ந்தவன் தேவனுவான்.)

பாதூரே என் உள்நலம் கூட்டுண்டான் ஊர் என்பது துறைச்செய்தி.]

குழவி மருங்கின் கூறிய பகுதி ;

'இளமைந்தர் நலம்வேட்ட
வளமங்கையர் வகைஉரைத்தன்று'. பு. பா. 50

வரிப்பந்து கொண்டொளித்தாய் வாள்வேந்தன் மைந்தா
அரிக்கண்ணி அஞ்சி அலற — எரிக்கதிர்வேல்
செங்கோலன் நுங்கோச் சினக்களிற்றின் மேல்வரினும்
எம்கோலம் தீண்டல் இனி. பு. பா. 50

[வேந்தன் மைந்தனே! இச் சிறுமி அஞ்சி அலறுமாறு அவள் பந்தினை எடுத்துச் சென்று ஒளித்துவைத்துவிட்டாய். உம் தந்தையாகிய அரசனே யானை மீது இவர்ந்து வந்து நினக்காகப் பரிந்து பேசினும், யாம் ஏலேம்; எம் அணியினை இப்பொழுது தீண்டாதே என மங்கையர் சிறுவனிடம் கூறியவாறு.

வாள்வேந்தன் மைந்தா எம்கோலம் தீண்டல் என்பது துறைச்செய்தி]

பதிநிலை உரைத்தல் :

‘ நீங்காக் காதல் மைந்தரும் மகளிரும்
பாங்குஉறக் கூடும் பதிஉரைத் தன்று ’. பு. பா. 51

ஊடிய ஊடல் அகல உளம்நெகிழ்ந்து
வாடிய மென்தோள் வலைஒலிப்பக் — கூடியபின்
யாமம்நீடு ஆகஎன்ன யாழ்மொழியார் கைதொழூஉம்
ஏமநீர்க் கச்சிஎம் ஊர். பு. பா. 51

[ஊடல் நீங்க மனன் நெகிழ்ந்து தோள்வளை ஒலிப்பக் கணவரோடு கூடிய இன்சொல் மங்கையர் ‘ இராப்பொழுது நீள்வதாகுக ’ என இறைவனை வணங்கி வேண்டும் பாது காவலையும் நீர்வளத்தையும் உடைய காஞ்சியே எம் ஊரா கும் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

ஒத்த நூற்பாக்கள்

'அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப'. தொல். பொ. 81

'வழங்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்
முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின்று ஆங்கே'. 82

'காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்'. ,, 83

'குழவி மருங்கினும் கிழவது ஆகும்'. 84

'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப'. 85

'வழக்கொடு சிவணிய வகைமை யான'. 86

'மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே'. 87

'கொடிநிலை கந்தழி வள்ளி என்னும்
வடுநீங்கு சிறப்பின முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'. 88

'கொற்ற வள்ளை ஓரிடத் தான'. 89

அடுத்தூர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்தும்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க்கு உரைத்த கடைநிலை யானும்
கண்படை கண்ணிய கண்படை நிலையும்
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்
வேலின் ஒக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்தும் செவியறி வுறூஉம்
ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்

கைக்கிளை வகையோடு உளப்படத் தொகைஇத்
தொக்க நான்கும் உளஎன மொழிப'. தொ. பொ. 90

'தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயில்எடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்
சிறந்த நாளணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்
நடைமிகுத் தேத்திய குடைநிழல் மரபும்
மாணார்ச் சுட்டிய வாள்மங் கலமும்
மன்னெயில் அழித்த மண்ணுமங் கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயின் தோன்றும் இருவகை விடையும்
அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலம் கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே'. தொ. பொ. 91

பாடாண் பாட்டே வாயில் நிலையே
கடவுள் வாழ்த்தொடு பூவை நிலையே
பரிசில் துறையே இயன்மொழி வாழ்த்தே
கண்படை நிலையே துயில்எடை நிலையே
மங்கல நிலையே விளக்கு நிலையே
கபிலை கண்ணிய புண்ணிய நிலையே
வேள்வி நிலையொடு வெள்ளி நிலையே
நாடு வாழ்த்தொடு கிணையது நிலையே

களவழி வாழ்த்தே,
வீற்றினிது இருந்த பெருமங் கலமே
குடுமி களைந்த புகழ்சாற்று நிலையே
மணமங் கலமே பொலிவுமங் கலமே
நாள்மங் கலமே பரிசில் நிலையே
பரிசில் விடையே ஆள்வினை வேள்வி
பாணாற்றுப் படையே கூத்தர் ஆற்றுப் படையே
பொருநராற்றுப்படையொடுவிறலியாற்றுப்படையே
வாயுறை வாழ்த்தே செவியறி வுறூஉக்
குடைமங் கலமொடு வாள்மங் கலமே
மண்ணுமங் கலமே ஓம்படை ஏனைப்
புறநிலை வாழ்த்தும் உளப்படத் தொகைஇ
அமரர்கண் முடியும் அறுவகை ஆகிய
கொடிநிலை கந்தழி வள்ளி குணஞ்சால்
புலவரை அவர்வயின் புகழ்ந்தாற்றுப் படுத்தல்
புகழ்ந்தனர் பரவல் பழிச்சினர் பணிதல்
நிகழ்ந்த காமப் பகுதியுள் தோன்றிய
கைக்கிளை வகையும் பெருந்திணை வகையும்
நற்றுனி நவின்ற பாடாண் பாட்டும்
கடவுள் பக்கத்தும் ஏனோர் பக்கத்தும்
மடவரல் மகளிர் மகிழ்ந்த பக்கமும்
மாதர் மகிழ்ந்த குழவியும் ஊரின்
கண்ணே தோன்றிய காமப் பகுதியொடு
ஆங்க ஆறெண் பகுதிப் பொருளும்
பாங்குற உரைப்பது பாடாண் பாட்டே'. பு. வெ. 9

'புகட்சி பரவல் குறிப்புக் கொடிநிலை கந்தழியே
இகட்சி மலிவள்ளி என்றிவை ஆறும் நெறிமுறையில்
திகட்சி மலைதரு பாடாண் பகுதிசெப் பாதனவும்
இகட்சியுண்டாகா வகைதேர்ந்தறிதல் இயல்புடைத்தே.'

வீர. 106

19

ஒழிபு கூறுவன

618 சாற்றுது ஒழிந்தவும் சாற்றிய திணையின்
ஏற்றன பொதுவும் எனஇரு திறனும்
ஓதிய புறப்பொருள் ஒழிபுஎனப் படுமே.

இது புறப்பொருள் ஒழிபு இவை என்கின்றது.

(இ-ள்) மேற்கூறுது ஒழிந்தவும், மேற் கூறிப்போந்த திணைகளின் இடத்து இயைவனவாகிய பொதுவும் என்ற இருகூற்றுத் துறைகளும், முற்கூறிய புறப்பொருள் ஒழிபு என்று சொல்லப்படும் என்றவாறு

அங்ஙனம் இருவகைத்தாதல் மேற்கூறும் துறைகளானும் அவற்றிற்குக் காட்டும் உதாரணங்களானும் உய்த்து உணர்ந்துகொள்க. 20

விளக்கம்

[புறப்பொருள்வெண்பாமாலையின் பொதுவியற் படலச் செய்தியை, இவ்வாசிரியர் பொதுவியல் என ஓர் இயல் அமைத்தல் கூடாது என்ற கருத்தான், ஒழிபு என்ற பெயரில் கொண்டுள்ளார். இவ்வொழிபில், கூறுதுஒழிந்தனவும் புறத்திணை ஏழற்கும் பொதுவாய் அமைந்தனவும் ஆகிய இரு திறத் துறைகளும் விளக்கப் பெற்றுள்ளன.] 20

ஒழிபின் துறைகள்

619 வேந்துஇடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆர்என வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்[1]
துன்னருந் துப்பின் தொடுகழல் மன்னனை
உன்னம் சேர்த்திய உன்ன நிலையும்[2]
ஏழகம் ஊரினும் இன்னன் என்றுஅவன்
தாழ்வுஇல் ஊக்கத்து ஏழக நிலையும்[3]

ஏந்துபுகழ் இறைமகன் இளமை நோக்கான்
வேந்துஇயல் பூண்ட மற்றதன் பகுதியும்[4]
துளக்கம்இல் வயவன் தொடுகழல் புனைதலும்[5]
களத்திடை வீழ்ந்தோர்க்குக் கல்கண் டிடுதலும்[6]
கற்கோள் நிலையும்[7] கல்நீர்ப் படுத்தலும்[8]
மற்றவை நிரைத்த அத்துறைப் பகுதியும்[9]
கல்நாட் டுதலும்[10] கல்முறை பழிச்சலும்[11]
பொன்னூர் இல்கொடு புகுதலும்[12] அதாஅன்று
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபாலை யானும்[13]
வாகை வேலவன் வழங்கஅருஞ் சுரத்திடைத்
தோகையை இழந்து துளங்குசுர நடையும்[14]
மனைவியை இழந்து மனைவயின் இருந்தோன்
தனிநிலை உரைத்த தபுதார நிலையும்[15]
இவர்பூண் மொய்ம்பன் இறந்தபின் மனையோள்
தவம்மேற் கொண்ட தாபத நிலையும்[16]
மாய்பெருஞ் சிறப்பின் சிறுவற் பயந்த
தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்[17]
பல்இதழ் மழைக்கண் பாலகன் மாய்ந்தெனப்
புல்லிய பெருங்கிளைப் பூசல் மயக்கமும்[18]
வேந்தன் மாய்ந்தென வியல்இடம் புலம்பிய
ஆய்ந்த அத்துறைப் பகுதியும்[19] ஈமத்து
நல்லோள் கணவனொடு நனிஅழல் புகீஇச்
சொல்இடை யிட்ட மாலை நிலையும்[20]
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய முதா னந்தமும்[21]
கொடியான் கூர்ங்கணை குளிப்பத் தன்தோழில்
முடியான் அவிந்த அத்துறைப் பகுதியும்[22]
ஆடுஅமைத் தோளி விரிச்சியும் சோகியும்
வேறுபடல் அஞ்சிய விதுப்பு ஆனந்தமும்[23]
தவப்பெரியதோர் வெஞ்சமம் குறுகும்

அவற்குஇ ரங்கிய அத்துறைப் பகுதியும்[24]
தலைவன்விண் புகஉயிர் தாங்கினன் என்றுஅணங்கு
அலமரல் எய்திய ஆனந்தப் பையுளும்[25]
கொடித்தேர் மன்னவன் மாய்ந்தெனக் குறைவுற்று
அடுத்தோர் புலம்பிய கையறு நிலையோடு[26]
கழிந்தோன் தன்புகழ் காதலித்து உரைத்த
மொழிந்த மற்றதன் பகுதியும்[27] அதாஅன்று
ஏதம்இல் அறம்முதல் இயல்புஇவை என்னும்
மூதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சியும்
மாற்றஅருங் கூற்றம் வரும்முனம் தீதுஒரீஇப்
போற்றுமின் நன்றுஎனப் புகல்பெருங் காஞ்சியும்
மேதகு முனிவர் விளம்பிய நெறிமுறை
போதக என்ற பொருள்மொழிக் காஞ்சியும்[30]
நிலம்மிசை உலகின் நெறிமை கூறிய
புலவர் ஏத்தும் புத்தேள் நாடும்[31]
தலைவரும் பொருளைத் தக்காங்கு உணர்த்தி
நிலையாமை உரைத்த நீள்முது காஞ்சியும்[32]
மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு[36]
துவர்வாய்ப் பேதையைத் தோய்ந்து காதலன்
கவலையி லேம்எனக் கழறிய முல்லையும்[34]
ஏர்ஆர் கட்டூர் எய்திய காதலன்
வாரா முன்கார் வந்தகார் முல்லையும்[35]
வார்கழல் பகைஞரை வணக்கிய மன்னவன்
தேர்வரவு உரைத்த தேஎர் முல்லையும்[36]
ஆண்தகை அகல அணங்குஅழி இல்வயின்
நாண்துணை யாஉறாஉம் நாஅண் முல்லையும்[37]
புல்வளம் பழித்துப் புரவலற் புகழ்ந்துதம்
இல்வளம் மிகுத்த இல்ஆண் முல்லையும்[38]
வயல்உழு பகட்டோடு மணாளனை மனையாள்
பயிலுறப் போரீஇய பகட்டு முல்லையும்[39]

மாலை மார்பன் மடந்தையைப் புணர்த்த
பாலை வாழ்த்திய பாஅல் முல்லையும்[40]
ஆர்அமு தத்தினும் அன்பன் நல்கிய
கார்அடகு இனிதுஎனும் கற்பு முல்லையும்[41]
மேவரு கணவன் தணப்பத் தன்இறைக்
காவல் கூறலும்[42] கடிநகர் அடைந்தவள்
அன்னவன் பெருவளன் ஏத்தலும்[43] ஆகிய
முன்னதன் பகுதிஓர் இரண்டும் அதாஅன்று
கோடுப்போர் ஏத்திக் கோடாஅர்ப் பழித்தலும்[44]
விடுத்தல் அறியா விறல்புரி வாகையுள்
வாணிகன் வென்றியும்[45] உழவன் வென்றியும்[46]
கோள்நெறி பிழையா மல்ல வென்றியும்[47]
இகல்புரி ஏறேறு[48] கோழியும்[49] எதிர்வன்
தகருடன்[50] யானை[51] தணப்புஇல்வெண் பூழோடு[52]
சிவல்[53] கிளி[54] பூவை[55] செழும்பரி[56] தேரோடு
இவர்தரும் சூது[58] யாழ் பாடல்[60] ஆடல்[61]
பிடிஎன[62] நின்ற பெரும்பெயர் வென்றியோடு
அடைவுறக் கிடந்த அறுபதிற் றிரண்டும்
இன்னன பிறவும் எழுவகைத் திணையுள்
துன்னிய ஒழிபுஎனத் தூக்கினர் கொளலே.

இது முற்கூறிய ஒழிபு இத்துணைத் துறை உடைத்து என்கின்றது.

(இ-ள்) வேந்து இடை தெரிதல் வேண்டி ஏந்து புகழ்ப் போந்தை வேம்பே ஆர்என வரூஉம் மாபெருந் தானையர் மலைந்தபூ முதல், ஈருகிய பிடி என நின்ற பெரும் பெயர் வென்றியும் எனப் பொருத்தம் உறக் கிடந்த அறுபத் திரண்டு துறையும், இவை போல்வன பிறவும், வெட்சி முத லாக மேற்கூறிய எழு வகைத் திணையுள்ளும் செறிந்த ஒழிபு என்று ஆராய்ந்துகொள்க என்றவாறு.

விளக்கம்

1 மலைந்த பூ :

உற்ற பகைக்கண் வேந்தர்கள் தம்மிடையே வேறுபாடு உணர்தல் வேண்டிச் சேரனும் பாண்டியனும் சோழனும் ஆகிய மூவகை மன்னர்களின் தானையின் உள்ளாரும் முறையே சூடிய பனை வேம்பு ஆத்தி என்ற பூக்களாகிய அடையாளப் பூக்களைப் புகழ்ந்து கூறுவது.

2 உன்னநிலை :

பகைவர் கிட்டுதற்கு அரிய சிறப்பினையும் அணிந்த வீரக்கழலையும் உடைய அரசனை நிமித்தம் பார்க்கும் உன்னமரத்தோடு சேர்த்தி உரைக்கும் திறத்தைக் கூறுவது.

3 ஏழக நிலை :

ஆட்டுக்கிடாய்மேல் இவர்ந்து சென்றாலும், அரசன் இத்தகைய ஆற்றல் உடையவன் என்று அவனுடைய குறைவு இல்லாத ஊக்கத்தைக் குறிப்பிடுவது.

4 ஏழகநிலைப் பக்கம் :

மிக்க புகழை உடைய அரசன், தான் சிறுவன் என்பதைக் கருதாது, சிறுபிராயத்திலேயே ஆட்சியை மேற்கொள்ளும் செய்தியைக் கூறுவதும் ஏழகநிலையாம்.

5 கழல் நிலை :

போர்க்களத்தில் நடுக்கம் இல்லாத வீரன் வீரக்கழல் புனைந்த திறத்தைக் கூறுவது.

6 கற்காண்டல் :

போர்க்களத்தில் இறந்துபட்ட வீரனுக்குக் கல் நடுவதற்கு நல்ல கல்லைத் தேர்ந்து எடுத்தலைக் கூறுவது.

7 கல்நீர்ப்படுத்தல் :

அங்ஙனம் தேர்ந்துஎடுத்த கல்லினைப் புண்ணிய நீரால் அபிடேகம் செய்த செயலைக் கூறுவது.

8 கல்நீர்ப்படுத்தலின் பக்கம் :

கல் நடும் இடத்திற்கு அதனைக்கொண்டு சேறல் அதன் பகுதியாம்.

9 கற்கோள்நிலை :

அங்ஙனம் தேர்ந்த கல்லை எடுத்து வருஞ் சிறப்பைக் கூறுவது.

10 கல்நாட்டல் :

கல்லிலே வீரனுடைய பெயரும் பீடும் பொறித்து, அதன்கண் வீரனைப் பிரதிட்டை செய்வதைக் கூறுவது.

11 கல்முறை பழிச்சுதல் :

அக்கல்லிற்குச் சிறப்புச் செய்து, அதனை வீரர்கள் முறையாகப் பாராட்டி வழிபடுதலைக் கூறுவது.

12 இற்கொண்டு புகுதல் :

அழகான கோயில் ஒன்றை அக்கல்லினை நட்ட இடத்தில் அமைத்தலைக் கூறுவது.

13 முதுபாலை :

வெப்பம் மிகுதி மிக்க பாலைநிலத்திலே தன் உடன் வந்த கணவனை எதிர்பாராத வகையில் இழந்து தனியள் ஆகிய தலைவி புலம்பிய வருத்தத்தை விளக்கிக் கூறுவது.

14 சுரநடை :

வாகைமாலையை அணிந்த வேலை உடைய வீரன், மக்கள் போக்குவரத்து இல்லாத பாலைநிலத்திலே மயில் போன்ற சாயலை உடைய தன் மனைவியை இழந்து, மனம் தடுமாறிய செய்தியை விரித்துக் கூறுவது.

15 தபுதார நிலை :

மனைவியைச் சாவுக்கு இரையாகக் கொடுத்து வீட்டில் தங்கி இருந்த கணவனுடைய தனிப்படர் மிகுதியை எடுத்து விளக்கிக் கூறுவது.

16 தாபத நிலை :

கணவன் இறந்துபட்டானாக, தலைவி கைம்மைநோன்பு நோற்று உயிர்வாழ்தலைக் கூறுவது.

17 தலைப்பெயல் நிலை :

ஆராய்ந்து கூறத்தக்க பெருஞ்சிறப்பினை உடைய ஆண்மகனைப் பெற்றெடுத்த தாய், சின்னாள்களில் உயிர் நீத்த செய்தியை விரித்துக் கூறுவது.

இதனை, வீரமகனைப் பெற்ற தாய் மகிழ்ச்சியால் உயிர் துறக்கப் போர்க்களத்தில் அவனைச் சென்று சேருதலாகவும், கோழைமகனைப் பெற்ற தாய் வருத்தத்தால் உயிர் துறக்கப் போர்க்களத்தில் அவனைச் சென்று சேருதலாகவும் விளக்கிப் பொருள் கொள்ளுமாறு குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியனார்

18 பூசல்மயக்கம் :

பூப்போன்ற குளிர்ந்த கண்களை உடைய சிறுவன் இறந்து பட்டானாக, அவனைச் சேர்ந்த பெரிய சுற்றத்தார் பலரும் வருந்திப் புலம்புவனவற்றைக் கூறுவது.

19 பூசல் மயக்கத்தின் பக்கம் :

அரசன் இறந்துபட்டானாக, அந்நிலத்திலுள்ளார் புலம்பியவாற்றைக் கூறுதலும் பூசல் மயக்கத்தின்பாற்படும்.

20 மாலைநிலை :

உயர்ந்த பண்பினளாகிய மனைவி, இறந்த தன் கணவனோடு ஈமத்தீயில் புகுதலைத் தடுத்தாரிடம் நிகழ்த்திய உரையினை விளக்கிக் கூறுவது. இதனை நச்சினார்க்கினியர் பாலைநிலை என்பர்.

21 மூதானந்தம் :

தலைவன் இறந்துபட்ட அளவில் மனைவியும் உடன் இறந்தது கேட்டு, வழிச்செல்வார் வியந்து சொற்றவற்றைக் கூறுவது.

22 மூதானந்தத்தின் பக்கம் :

வீரன் ஒருவன், பகைவருடைய கூர்மையான அம்புகள் தன்மீது பாய்தலால், தன்செயலை முடித்து வெற்றியைக் காணாது இறந்ததனைக் கூறுவதும் மூதானந்தமாகும்.

23 விதுப்பு ஆனந்தம் :

புண்பட்ட கணவனைக் காத்து வருவாள் ஆகிய தலைவி, நல்வாய்ப்புள்ளும் சகுனமும் தமக்குத் தீயனவாய் இருத்தலை நோக்கிக் கணவன் உயிர்க்கு ஏதம் நிகழுமோ என்று நடுங்குதலைக் கூறுவது. ஆனந்தம்—சாக்காடு. விதுப்பு—நடுக்கம்.

24 விதுப்பு ஆனந்தத்தின் பக்கம் :

மிகப்பெரிய போர்க்களம் ஒன்றனைப் போரிடக் கருதிச் சென்றடையும் கணவன் செயல்கண்டு தலைவி இரங்கிக் கூறுதல் விதுப்பு ஆனந்தத்தின் பகுதியாம்.

25 ஆனந்தப்பையுள் :

கணவன் போரிட்டு வீரசுவர்க்கம் அடைந்த பின்னும் அவனோடு சென்று சேராத தன்உயிரை நினைத்துத் தலைவி மனம் தடுமாறிய நிலையைக் கூறுவது.

26 கையறுநிலை :

கொடிகள் கட்டப்பட்ட தேரினை உடைய அரசன் இறந்தானாக, உள்ளஎழுச்சி குறைந்து அவனை அடுத்து வாழ்ந்தவர்கள் தனிப்படர் உழந்த செய்தியைக் கூறுவது.

27 கையறுநிலையின் பக்கம் :

இறந்துபட்டவன் புகழ்ச்செய்திகளை விரும்பிக்கூறிப் புலம்புதலும் அதன்பாற்படும்.

28 முதுமொழிக்காஞ்சி :

குற்றம்அற்ற அறம் முதலாகிய மும்முதற்பொருள்களின் இயல்பு இவை என்று சான்றோர் கூறிய பழையசெய்திகளை விளக்கிக் கூறுவது.

29 பெருங்காஞ்சி :

நீக்குதற்கு அரிய கூற்றுவன் உயிர்கோடற்கு வரும் முன்னர்த் தீயன்வற்றை நீக்கி அவற்றில் மீண்டும் செல்லாதபடி மனத்தைப் பாதுகாத்துக்கொள்ளுமாறு உபதேசம் செய்வதனைக் கூறுவது.

30 பொருள்மொழிக் காஞ்சி :

மேம்பட்ட முனிவர்கள் சொல்லிய நெறிமுறையில் வாழ்க்கையைச் செலுத்துக என்று உறுதி கூறுவது.

31 புத்தேள்நாடு :

இவ்வுலகிற்கும் தேவர் உலகிற்கும் அப்பாற்பட்ட வீட்டுலகத்தின் இயல்பினைக் கூறுவது.

32 முதுகாஞ்சி :

மேம்பட்டதாகி வரும் உறுதிப்பொருளைத் தக்கவாறு உணர்த்தி நிலையாமையை விளக்கிக் கூறுவது.

33 காடுவாழ்த்து :

பரந்த இடத்தையுடைய இவ்வுலகின் மரபினை நன்றாக அறியுமாறு, உலகில் தோன்றியவர் பலரும் மாயவும், தான்மட்டும் அழிவின்றி இருக்கும் புறங்காடு பற்றிக் கூறுவது.

34 முல்லை :

சிவந்த இதழினை உடைய மனைவியைக் கூடித் தலைவன் 'இனி வாழ்க்கையில் எந்தவிதக் கவலையும் எமக்குக் இல்லை' என்று வெளிப்படையாகக் கூறுவது.

35 கார்முல்லை :

அழகிய பாசறையை அடைந்த தலைவன் மீண்டுவரும் முன் கார்காலம் வந்த விரைவைக் கூறுவது.

36 தேர்முல்லை ;

பெரிய வீரக்கழலைக்கட்டிய பகைவரைத் தோற்றுஓடச் செய்த மன்னவன் தேரின்மேல் இவர்ந்து வெற்றி வீரனாய் வரும் காட்சியைப் புகழ்ந்து கூறுவது.

37 நாண்முல்லை :

ஆண்களுக்குள் மேதக்கனாகிய தலைவன் பிரிந்துசென்ற காலை, அவன் தலைவி, அவன் இல்லாமல் பொலிவுஇழந்த தன்வீட்டில் நாணமே தனக்குத் துணையாக வாழ்ந்த நிலையினைச் சிறப்பித்துக் கூறுவது.

38 இல்லாண்முல்லை :

மற்றவர் அடையும் வளங்களைக் குறைத்துக் கூறித் தன் கணவனைப் புகழ்ந்து கூறித் தன்கணவனுடைய இல்லற வளத்தைத் தலைவி உயர்த்திக் கூறுவது.

39 பகட்டுமுல்லை :

வயலிலே உழுதொழிலைச் செய்யும் காளையோடு கணவனை மனைவி ஒப்பிட்டுச் சிறப்பித்துக் கூறுவது.

40 பால்முல்லை :

மாலையை அணிந்த மார்பினைஉடைய தலைவன் தன் மனைவியைத் தனக்கு வகுத்துத்தந்த நல்லூழினைப் புகழ்ந்து வாழ்த்துக் கூறுவது.

41 கற்பு முல்லை :

பிறந்த வீட்டில் அமுதம் உண்பதனைவிடக் கணவன் அன்போடு ஈட்டித்தந்த கரிய இலைஉணவு உண்டற்கு இனிது என்று மனைவி மனத்துக்கொள்வதனைக் கூறுவது.

42 கற்புமுல்லையின் பக்கம் :

விரும்புதல் வரும் கணவன் பிரிந்த காலையும், மனைவி மறை பிறர் அறியாமல் தன்நெஞ்சினை நிறுத்தற்குஆம் நிறையே தனக்குக் காவலாக வாழ்வதனைக் கூறுவது கற்புமுல்லையின்பாற்படும்.

43 கற்புமுல்லையின் மற்றொரு பக்கம் :

விளக்கம்பொருந்திய புக்ககம்புக்க தலைவி கணவனுடைய பெரிய செல்வத்தைப் புகழ்ந்து கூறுதலும் கற்பு முல்லையாம்.

44 **கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல் :**

புலவர்கள் 'மற்றவராதல் நல்வாழ்வு வாழ்தல் வேண்டும்' என்ற நல்லெண்ணத்தால், வள்ளல்களைப் புகழ்ந்து உலோபியர்களைப் பழித்துக் கூறும் செய்தியைக் கூறுவது.

இவற்றுடன் வணிகன் வெற்றி முதலியவற்றைக்கூட்ட அமையும் அறுபத்திரண்டு துறையும், இவைபோல்வன வாகிய கைக்கிளை பெருந்திணைத் துறைகளும் ஒழிபின்பாற் படுவன. அவை பின்வருமாறு.

45 **வாணிகன் வென்றி :**

காடுகளைக் கடந்தும் கடலைக்கடந்தும் வேற்று நாடுகளுக்குச் சென்று நேரிய முறையில் வாணிபம் செய்து பொருள் ஈட்டி அதனை அறத்தாற்றில் வாணிகன் செலவிடுதலைக் கூறுவது.

46 **உழவன் வென்றி :**

மண்வளம் நோக்கி ஆழ உழுது தக்க விதைகளை விதைத்து எருவிட்டு நீர்பாய்ச்சிப் பயிரைப்பாதுகாத்து விளைவித்து உழவன் மக்களுக்கு வழங்கும் சிறப்பைக் கூறுவது.

47 **மல் வென்றி :**

மல்லன் தன் தோள்களைக் கொட்டி ஆர்த்துப் பகைத்து வந்த மல்லனை வானத்தை நோக்கி வீசி, வென்ற வெற்றியைக் கூறுவது.

48 **ஏறுகோள் வென்றி :**

ஆயர் குலத்தலைவன் தொழுவத்தில் விடப்பட்ட அஞ்சத்தக்க ஏற்றினை அடக்கி அதன்மீது இவர்ந்துவரும் சிறப்பினைக் கூறுவது.

49 **கோழி வென்றி :**

போரிடுவதற்கென்றே பழக்கப்பட்ட உத்தமஇலக்கணத்தை உடைய கோழி தன்னை எதிர்த்துப் பொரவந்த கோழியோடு பாய்ந்தும் எறிந்தும் படிந்தும் காய்ந்தும் அலகினால் தாக்கியும் பொருது வென்ற சிறப்பைக் கூறுவது.

50 **தகர் வென்றி :**

போரிடுவதற்கென்றே பழக்கப்பட்ட உத்தம இலக்கணத்தை உடைய ஆட்டுக்கிடாய் தன்னொடு பொரவந்த கிடாயிடம் அகலாதும் அணுகாதும் நின்று அப்பகைக் கிடாய் மயங்கி விழுமாறு கொம்பும் தலையும் கொண்டு பொருது வென்ற சிறப்பைக் கூறுவது.

51 **யானை வென்றி ;**

மதத்தால் கதஞ்சிறந்து, பகைத்து வந்த யானையை வீழ்த்திய வேழம் தன்நிழலையும் காயும் சினத்தது என்று அதன் வெற்றி கூறுவது.

52 **பூழ் வென்றி :**

குறும்பூழாளிகளால் முறைப்படி மறைமொழி கூறி ஆற்றல் மிகுவிக்கப்பட்ட குறும்பூழ்ப்பறவைகள் அவ்வாய்ப்பு இல்லாத ஏனைய குறும்பூழ்களை வெல்லும் சிறப்பைக் கூறுவது.

53 **சிவல் வென்றி :**

நன்கு பழக்கப்பட்ட சிவல் என்றபறவை தன் பெருமிதமுடைய பார்வையினாலேயே பகைச்சிவல் தோற்றோடச் செய்யும் என்ற அதன் சிறப்பைக் கூறுவது.

54 **கிளி வென்றி :**

நன்கு பழக்கப்பட்ட கிளி, நாகணவாய்ப் பறவையும் தோற்குமாறு பாடும் ஆற்றலைப் பெறும் அதன் சிறப்பைக் கூறுவது.

55 பூவை வென்றி :

நன்கு பழக்கப்பட்ட நாகணவாய்ப்பறவை, பழக்கத்தால் சொற்களைச் சேர்த்துப் பேசுவதில் கிளியையும் வெல்லும் ஆற்றலைக் கூறுவது.

56 குதிரைவென்றி :

ஐவகைச் செலவும், பதினெட்டுவகைச் சுற்றுவரவும் கற்ற குதிரை தன் சேவகன் விருப்பப்படி பணி செய்து பகைவரை வென்ற திறம் கூறுவது.

57 தேர்வென்றி :

தேர் தன்னிடைப் பூட்டப்பட்ட குதிரைகள் ஐவகைச் செலவும் பதினெட்டுவகைச் சுற்றுவரவும் தன்னை இயக்குவோன் விரும்பியாங்குச் செல்வதற்கேற்றதாய் அமைந்து வெற்றிக்கு உதவும் திறம் கூறுவது.

58 சூதுவென்றி :

சூதாடும் இடத்து இயல்பு, சூதாடு காய்கள் இயல்பு இவற்றை நன்கு உணர்ந்து நினைத்தபடி தாயம் இட்டுச் சூதில் வெல்லும் திறம் கூறுவது.

59 யாழ்வென்றி :

பாலை முதலிய பண்களையும் பண்ணியங்களையும் இலக்கண முறைப்படி அறிந்து அவற்றை யாழ் நரம்பில் ஒலிப்பித்துச் சிறப்புறும் செய்தி கூறுவது.

60 பாடல்வென்றி :

இலக்கண முறை வழுவாமல், பண்களையும் திறங்களையும், யாழ் ஒலிக்கும் மிடற்றொலிக்கும் வேறுபாடு காண

டல் இயலாத வகையில் இசை பாடி இப் பாடும் சிறப்பைக் கூறுவது.

61 ஆடல்வென்றி :

கை, கால், புருவம், கண் இவற்றால், தாளத்தையும், இசையையும் நன்கு கருதிக்கொண்டு, விறல்பட ஆடும் சிறப்பைக் கூறுவது.

62 பிடிவென்றி :

பிடி என்பது பெண்யானை போல அசைந்தாடும் கூத்து. இக்கூத்தினைத் தாளமும் இசையும் இயக்கமும் தப்பாமல் ஆடும் சிறப்பைக் கூறுவது.

44 முதல் 62 ஈறாகிய செய்திகள் புறப்பொருள் வெண்பா மாலையில் வென்றிப்பெருந்திணை என்ற தனித்த நூற்பாவில் (18) கூறப்பட்டுள்ளன. அதுவே அந்நூலின் இறுதி நூற்பாவாகும்.

இனி, அகத்திணை ஒழிபாய், பொருட்பகுதிகளாகிய அகம் புறம் என்ற இரண்டற்கும் இறுதியாகக் கூறப்படும் கைக்கிளை பெருந்திணை என்பன 'இன்னன பிறவும்' என்பதனால் இவ்வொழிபில் கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றுள் ஆண்பால் கூற்றுக் கைக்கிளை ஒன்பது துறைகளையும் பெண்பால் கூற்றுக் கைக்கிளை பன்னிரண்டு துறைகளையும், பெண்பால் கூற்றுப் பெருந்திணை பத்தொன்பது துறைகளையும், இருபால் பெருந்திணை பதினெட்டுத் துறைகளையும் உடையன. எனவே இவை ஐம்பத்தெட்டாகும்.

ஆண்பால் கூற்றுக் கைக்கிளை :

1 காட்சி :

பூம்பொழிலில் சுடர்வேற்காளை பெருங்கண்ணினளாகிய தலைவியைக்கண்டு விரும்பியது. 1

2 ஐயம் :

வலிய தோளினனாகிய காளை அவளை இன்ன உலகத்தவள் என்று அறுதியிட முடியாமல் ஐய முற்றது. 2

3 துணிவு :

தான்கண்ட மலர் சூடிய நங்கை நிலஉலக மாதே என்று துணிந்தது. 3

4 உட்கோள் :

'இம் மலர் சூடிய மாது என் உள்ளத்தில் இடம் பெற்றும் என் உள்ளத்தை உணராமல் இருக்கி ருளே' என்று கருதியது. 4

5 பயந்தோர்ப் பழிச்சல் :

இந்நங்கையைப் பெற்று வளர்த்த இருமுதுகுரவர் நீடு வாழ்க என்று அவளுடைய பெற்றோரை வாழ்த்தியது. 5

6 நலம் பாராட்டல் :

காமநோயால் துயர் கூரவும், அந்நங்கையின் பேரழகை அவன் பாராட்டியது. 6

7 நயப்புற்று இரங்கல் :

அவள் கூட்டத்தைப் பெரிதும் விரும்பிய காளை அவளை எய்துதல் அரிதாதலின் அவளைப் பெரிதும் புகழ்ந்து மனம் தளர்ந்தது. 7

8 புணராஇரக்கம் :

அவள் உள்ளக்கிடக்கையை அறிந்தாலன்றி அவ ளைத் தீண்டுதல் அரிதாகலின், அவளை அடையாமை யால் ஏற்பட்ட தளர்ச்சியோடு தனித்துத் தங்கி யிருப்பது. 8

9 வெளிப்படஇரத்தல் ;

தலைவியின் கூட்டம் பெருமையால் ஏற்பட்ட துயர் மிகுகையினாலே, தன்நிறை அழிந்து அவனைத் தன்கருத்துக்கு இசையுமாறு இரக்கத் துணிவது. 9

பெண்பால்கூற்றுக் கைக்கிளை :

10 காண்டல் :

மாலை மார்பனை வேயுறுதோளி தானே கண்டு அவள் தொடர்பை விழைந்து மனம் மெலிந்தது. 1

11 நயத்தல் ;

வலிய தோளினனாகிய காளையைக் கண்ட அரிவை அவன்மாட்டுக் கொண்ட விருப்பத்தைக் குறிப்பிடுவது. 2

12 உட்கோள் :

வண்டு அமரும் சிகையினனாகிய காளையை விரும்பிய அரிவை உள்ளத்துக்கொண்ட காமநோயின் திறத்தைக் குறிப்பிடுவது. 3

13 மெலிதல் :

கௌவை நோயுற்றவர் கூறும் பழிச்சொல்லுக்கு அஞ்சித் தலைவி தன்கருத்தை வெளியிடமுடியாமல் உடல் மெலிவது. 4

14 மெலிவொடுவைகல் ;

வளை நெகிழ வனப்புஅழிய, தலைவி தளரும் தளர்ச்சியின் மிகுதியைக் குறிப்பிடுவது. 5

15 காண்டல் வலித்தல் :

தன் வளைகள் கழலுதலினால் மலைநாட்டுத் தலைவனை
அம்மடந்தை நேரில்சென்று காணவேண்டுமென்ற
உறுதியைக் கொள்வது. 6

16 பகல்முனிவு உரைத்தல் :

வளை நெகிழத் தனித்து வருந்திய தலைவி வருத்
தத்தால் பகற்பொழுதை வெறுப்பது. 7

17 இரவு நீடுபருவரல் :

தனிமைத்துயரால் வருந்தும் தலைவி இரவில் தான்
பெரிதும் கலங்கும் நிலையை வருந்தி உரைப்பது. 8

18 கனவின் அரற்றல் :

தலைவி அஞ்சத்தக்க இருளில் தலைவனைக் கனவில்
கண்டு கண் விழித்துப் பின் அவன் காணப்பெறு
மையால் வாய்விட்டுப் புலம்புவது. 9

19 கனவின் அரற்றலின் பக்கம் :

தலைவி, தலைவனுடைய தொடர்பு ஏற்பட்டால்தான்
இரவில் உயிர் பிழைத்திருத்தல் கூடும் எனக் கூறு
வது. 10

20 நெஞ்சோடு மெலிதல் :

இன்சொல் நங்கை இருள் செறிந்த இரவில் தலைவன்
இருப்பிடத்துக்குச் செல்லக் கருதி மனத்தோடு
உரையாடுவது. 11

21 நெஞ்சோடு மெலிதலின் பக்கம் :

தன் வளையலை நெகிழ்த்த தலைவனுடைய இருக்கைக்
குத் தான் செல்லத் துணிந்ததை மகளிர் எல்லாரும்
அறிக என்று தலைவி கூறுவது. 12

பெண்பால் கூற்றுப் பெருந்திணை

22 வேட்கை முந்துறுத்தல் :

தலைவன் மாட்டுத்தான் கொண்ட காமம் மிகுதை யினாலே, அவன் தன் வேட்கையைக் கூறும் முன்ன மேயே தலைவி தான் அவன்பால் கொண்ட வேட்கையைக் குறிப்பிடுவது. 1

23 பின்னிலை முயறல் :

தலைவி தலைவனால் தான் முன்பு இழந்த அழகை மீண்டும் பெறுதலை விரும்பித் தலைவன் பின் இரந்து நிற்றலை மேற்கொள்வது. 2

24 பிரிவிடை ஆற்றல் :

தன்வளை நெகிழத் தன் துயருக்கு வருந்தி, ஊரவர் கூறும் அலரையும் பொறுத்துக்கொண்டு, தலைவன் பிரிந்தவழித் தலைவி ஆற்றியிருப்பது. 3

25 வரவு எதிர்ந்திருத்தல் :

முல்லைமுகையை ஒத்த முறுவலாளாகிய தலைவி தன் வளமனைக்கண் தலைவனுடைய வருகையை எதிர்நோக்கி இருப்பது. 4

26 வாராமைக்கு அழிதல் :

வேயுறுதோளியாகிய தலைவி தீய நிமித்தம் கண்டு தலைவன் தன்னிடம் வருவான் அல்லன் என்று மனம் வருந்துவது. 5

27 இரவுத்தலைச்சேறல் :

மேம்பட்ட மென்மையை உடையாள் தலைவனைக் காணும் வேட்கையால் செறிந்த இருளுடைய நடு இரவில் தன் வீட்டிற்கு வெளியே புறப்படுவது. 6

28 இல்லவைநகுதல் :

தலைவி வளவயலூரனாய தலைவன் செய்யாதவற்றைச் செய்தனவாகக் கூறி முன் ஊடிப் பின் மகிழ்ந்து கூடுவது. 7

29 புலவியுள்புலம்பல் :

நல்வளை மடந்தை ஊடல் காரணத்தால் தலைவன் அணிந்த மாலையை அறுத்து மீண்டும் ஊடல் தணியாது தனித்திருப்பது. 8

30 பொழுதுகண்டுஇரங்கல் :

அமைதியின்றிப் பெருமூச்செறிந்து மனம் சுழலும் தலைவி மாலைப் பொழுதுகண்டு வருந்துவது. 9

31 பரத்தையைஏசல் :

தலைவனோடு நீர் விளையாட்டினை விரும்பிய தலைவி, அவ்வாய்ப்பினைத் தலைவனோடு அப்பொழுது பெறும் வாய்ப்பினை இழந்த பரத்தையரை இகழ்ந்து கூறுவது. 10

32 கண்டுகண்சிவத்தல் :

பரத்தையர் சேரியினின்றும் அவரால் அணிவிக்கப் பட்ட மாலையோடு இல்லிற்கு மீண்டு வந்த தலைவனுடைய மாலையை வெறுப்போடு தலைவி பார்த்துக் கோபத்தால் கண் சிவப்பது. 11

33 காதலின்களித்தல் :

குறிஞ்சி நிலமன்னனாகிய தலைவனுடைய மார்பைப் பொருந்தி, நீக்கமில்லாத காமத்தாலே தலைவி மகிழ்வது. 12

34 கொண்டு அகம்புகுதல் :

காதல் மிகுகையினாலே தலைவி தன் கணவனைக் கண்ட அளவில் அவனை மாலையால் கட்டித் தன் வசப்படுத்தி வீட்டிற்குள் அழைத்துச்செல்வது. 13

35 கூட்டத்துக் குழைதல் :

மாலையை அணிந்த தலைவனைப் பிரிதலைப் பொறாத தலைவி அவனோடு கூடியிருந்தபொழுதும் அவன் இனிப் பிரிவானோ என்று நினைந்து மனம் நெகிழ்வது. 14

36 ஊடலுள் நெகிழ்தல் :

ஒளிமிக்க வளையலணிந்த தலைவி தன்மனம் தலைவனிடத்துக் கொண்ட ஊடலை, இருள்செறிந்த மாலையில் காமம் தன்னை நலிகையினாலே கைவிடுவது. 15

37 உரைகேட்டு நயத்தல் :

தலைவனைப் பிரிந்த துயரத்தோடு தங்கியிருந்த தலைவி, குறிஞ்சி நாடனாகிய தலைவனுடைய சொற்களைக் கேட்ட அளவில் பழைய துயரை மறந்து மனம் தளிர்ப்பது. 16

38 பாடகச் சீறடிபணிந்தபின் இரங்கல் :

மலைநாடனாகிய தலைவன் கைகள் கூப்பிப் பாடகம் என்ற காலணியை அணிந்துள்ள தலைவியின் சிறிய அடிகளைப் பணிந்து தன் தவறுகளைப் பொறுக்குமாறு வேண்டியபின் தலைவி அவனிடத்து நெஞ்சு நெகிழ்வது. 17

39 பள்ளிமிசைத் தொடர்தல் :

செறிந்த இருளிலே, தலைவி தான் தனித்துப் படுத்திருந்த படுக்கையில் உறங்குதலை விடுத்து,

மலைநாடனாகிய தலைவனுடைய படுக்கையை அணுகி அவன் வெளியே புறப்பட்டபோது அவனைப் பற்றிக் கொள்வது. 18

40 செல்கஎனவிடுத்தல் :

செறிந்த இருளில் கணவன் பிறள் ஒருத்தியை நினைத்து வெளியே புறப்படுதலைக் கண்டு தலைவி நீ நின் விருப்பம் போலப் புறத்தொழுக்கிற்குச் செல்க என்று விடுப்பது. 19

இருபால் பெருந்திணை :

41 செலவுஅழுங்குதல் :

வேலனாகிய தலைவன் தலைவியைப் பிரிந்து மூங்கில் செறிந்த கான் வழியே சேறத்துணிந்து பின் அச் செலவினைத் தவிர்வது. 1

42 மடல்ஊர்தல் :

தலைவியைப் பற்றிப் பித்தரைப் போலப் பல செய்திகளைப்பாடி ஊர்ப் பொதுவிடத்திலே தலைவன் மடல்மாவைச் செலுத்துவது. 2

43 தூதுஇடையாடல் :

ஊழிக்காலம் போல நீண்டு துயர்தரும் மாலைக் காலத்தில் தலைவியின் மிக்க துன்பத்தை நோக்கித் தோழி, தலைவியைப் பிரிந்து, துன்புறுத்திய தலைவன்பால் தூதாகச் செல்வது. 3

44 துயர்அவற்குஉரைத்தல் :

மயங்கும் மாலைக் காலத்தில், மயில் போன்ற சாயலை உடைய தலைவி பிரிதலாற்றுளாய் வருந்திய துயரத்தைத் தோழி தலைவனிடம் கூறுவது. 4

45 கண்டுகைசோர்தல் :

மலர்சூடிய கூந்தலையும், பொன்னாலாகிய தொடி என்ற வளையலையும் உடைய தலைவியின் காமம் மிகுதல்கண்டு தோழி செயலறவு படுவது. 5

46 பருவம்மயங்கல் :

அழகிய வளையலணிந்த தலைவி உடலும் உள்ளமும் வாடியமைகண்டு, தோழி தலைவன் மீண்டு வருவதாகக் கூறிய பருவம் அப்பொழுது வந்து விட்டதோ என்று ஐயுற்றுத் துன்பம் உறுவது. 6

47 பருவம்மயங்கலின்பக்கம் :

மணங்கமழும் மாலையை அணிந்த தலைவி தலைவன் கூறிய பருவம் இன்னும் வரவில்லை என்று துணிவது பருவம் மயங்கலின் பக்கமாம். 7

48 ஆண்பாற்கிளவி :

தலைவியை விழைந்த காமம் மிகுகையினாலே மனம் ஏங்கி மயக்கமுற்றிருந்த தலைவன் கூறுவது. 8

49 பெண்பாற் கிளவி :

என் வளையல்களைச் நெகிழச்செய்து பின் என்னை மறந்த தலைவனை இவ்வூரவர் கண்டாரிலரோ என்று தலைவி கூறுவது. 9

50 வெறியாட்டு :

தலைவி தனக்குத் தலைவன் தவறாது அருள்செய்தலைக் கருதித் தன்தாய்க்குக் கூடப் புலனாகாத வகையில் வேங்கை மரங்கள் செறிந்த மலைநாட்டுக் கடவுளாகிய முருகனுக்கு வெறியாடல் நிகழ்த்துவது. 10

51 பாண்வரவுஉரைத்தல் :

தலைவனைப் பிரிந்து இல்லிலிருக்கும் தலைவிக்குத் தோழி தலைவனுடைய பாணன் வாயில்வேண்டி வந்திருக்கும் செய்தியைக் குறிப்பிடுவது. 11

52 பரத்தைகூறல் :

பக்கலில் உள்ளவர் செவிமடுக்குமாறு, பரத்தை, மலைநாடனாகிய தலைவனுடைய மாலையைத் தான் எளிதில் பெறக்கூடிய செய்தியைக் கூறுவது. 12

53 விறலிகேட்பத்தோழிகூறல் :

தலைவனுக்கு ஆண்டில் மூத்த பரத்தையருடைய கூட்டம் சிறந்த அமுதமாகும் என்று தோழி பாணனுடைய மனைவியாகிய விறலிக்குக் கூறுவது. 13

54 விறலிதோழிக்குவிளம்பல் :

பரத்தையருக்குத் தலைவனுடைய மூப்பு மிக்க களிப்பைத் தருமாற்றை விறலி பாங்கி செவிமடுக்குமாறு கூறுவது. 14

55 பரத்தைவாயில் பாங்கிகண்டுஉரைத்தல் :

சேரிப்பரத்தையின்தோழி ' உன் தலைவி கூறிய சொல் பொய்க்குமாறு எம் வீட்டிற்குத் தலைவன் பாகனோடும் தேரோடும் வருவான் ' என்று இற்பரத்தையின் தோழியிடம் கூறுவது. 15

56 பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல் :

பரத்தையர் சேரியில் தலைவன் தங்கியிருந்த செயலை விறலி தலைவிக்கு எடுத்துக் கூறுவது. 16

57 குற்றிசை :

தன் பொன்மாலை அணிந்த மார்பினை முறைப்படி மணந்து நுகரும் தலைவியருக்குத் தலைவன் இறுதி வரை தண்ணளி செய்யாது இடையிலே அவரைக் கைவிட்ட செய்தியைக் கூறுவது. 17

58 குறுங்கலி :

தலைவன் தலைவியைக் கைவிட்டு நாறு இருங்கூந்தல் பரத்தையரை விரும்புமாறு அவன் மனத்து ஏற்பட்ட கடைப்பட்ட காமம் கெடுமாறு சான்றோர் அவற்கு நல்லுரை கூறுவது. 18]

அடையாளப்பூ—போந்தை :

' கலவா மன்னர் கண்ணுறு ஞாட்பின்
புலவேல் வானவன் பூப்புகழ்ந் தன்று ', பு. பொ. 1

குடைஅலர் காந்தள்தன் கொல்லிச் சுனைவாய்த்
தொடைஅவிழ் தண்குவளை சூடான் — புடைதிகழும்
தேர்அதிரப் பொங்கும் திருந்துவேல் வானவன்
போர்எதிரின் போந்தையாம் பூ. பு. பொ. 1

[தேர்ப்படை நடுங்கச் சினக்கும் வேற்படையை உடைய சேரன் போருக்குப் புறப்படும்போது காந்தள்மலரும், தன் கொல்லி மலையின் சுனையிடத்து மலரும் குவளைப்பூவும் சூடானாய்ப் பனம்பூவையே அடையாளப்பூவாகச் சூடுவான் என்றவாறு.

வானவன் போர் எதிரின் பூப் போந்தையாம் என்பது துறைச்செய்தி.]

அடையாளப்பூ — வேம்பு :

' விரும்பார் அமரிடை வேல்போர் வழுதி
சுரும்புஆர் முடிமிசைப் பூப்புகழ்ந் தன்று '. பு. பொ. 2

தொடிமணித்தோள் ஆடவர் தும்பை புனையக்
கொடிமணித்தேர் கூட்டணங்கும் பொழுதின்– முடிஅணியும்
காத்தல்சால் செங்கோல் கடுமான் நெடுவழுதி
ஏத்தல்சால் வேம்பின் இணர். பு. பொ. 2

[வீரர் தும்பைப்பூவினைச்சூட, தேர்ப்படைகள் தொகுதியாகப் பகைவரை வருத்தச் செல்லும்போது, செங்கோலினையும் விரைந்து செல்லும் தேரினையும் உடைய பாண்டியன் புகழப்படும். வேப்பம் பூவினையே அடையாளப் பூவாகச் சூடுவான் என்றவாறு.

ஆடவர் தும்பை புனையும் பொழுதில் வழுதி ஏத்தல்சால் வேம்பின் இணர் முடிபுனையும் என்பது துறைச்செய்தி.]

அடையாளப் பூ — ஆர்

'விறல்படை மறவர் வெஞ்சமம் காணின்
மறப்போர்ச் செம்பியன் மலைபூ உரைத்தன்று'. பு. பொ. 3

கொல்களிறு ஊர்வர் கொலைமலி வாள்மறவர்
வெல்கழல் வீக்குவர் வேல்இளையர் — மல்கும்
கலங்கல் ஒலிபுனல் காவிரி நாடன்
அலங்கல் அமர்அழுவத்து ஆர். பு. பொ. 3

[வாள்மறவர் களிறு ஊர சிலைவீரர் கழல் அணிய, காவிரிநாடனாகிய சோழன் பகைவரைத் தாக்கும் போர்க்களத்தில் ஆத்திப்பூமாலையை அடையாளமாகச் சூடுவான் என்றவாறு.

அமர்அழுவத்துக் காவிரிநாடன் அலங்கல் ஆர் என்பது துறைச்செய்தி.]

உன்ன நிலை :

'துன்னருந்துப்பின் தொடுகழல் மன்னனை
உன்னம் சேர்த்தி உறுபுகழ் மலிந்தன்று'. பு. பொ. 4

துன்னருந் தானைத் தொடுகழலான் துப்புஎதிர்ந்து
முன்னர் வணங்கார் முரண்முருங்க — மன்னரும்
ஈடுஎலாம் தாங்கி இகல்அவிந்தார் நீயும்நின்
கோடுஎலாம் உன்னம் குழை பு. பொ. 4

[உன்னமரமே! அரசனுடைய வலிமையை எதிர்த்து முன் வணங்காத பகைவர் மாறுபாடு கெடப் பொருகையினாலே, அரசரும் எதிர்த்து மாறுபாடு நீங்கி, இவ்வரசனுக்கு வழிமொழிந்தனர். ஆதலின், நாட்டில் நலன் நிகழுங்கால் நீ நிகழ்த்தும் வழக்கம் போல நின் கிளைகள் தழைப்பனவாக என்றவாறு.

உன்னம்! பகைமன்னர் ஈடு அழிந்தார் ஆதலின் நின் கோடெல்லாம் குழை என்பது துறைச்செய்தி]

ஏழக நிலை :

'ஏழகம் ஊரினும் இன்னன் என்றுஅவன்
தாழ்வுஇல் ஊக்கமொடு தகைபுகழ்ந் தன்று'. பு. பொ. 5

எம்மனை யாம்மகிழ ஏழகம் மேற்கொளினும்
தம்மதில் தாழ்வீழ்த்து இருக்குமே — தெம்முனையுள்
மாவொடு தோன்றி மறலுங்கால் ஏழகத்
தாவொடு நேராம் அரசு. பு. பொ. 5

[பகைவர் போர்க்களத்தில் குதிரைமீது ஏறிப் பொருங்கால், எம் அரசன் தன் ஆட்டுக்கிடாயைச் செலுத்துபவனோடு பகைவரைக் கிட்டிப்பொரும் ஆற்றலன். எம் அரசன் ஆட்டுக்கிடாய்மேல் ஏறிப்புறப்படுதலைக் காண்டலும், அச்சத்தால் தம் அரண்கதவங்களைப் பகைவர், யாம் செய்திகேட்டு மகிழுமாறு, தாழிட்டு அஞ்சி இருப்பர் என்றவாறு.

அரசு ஏழகம் மேற்கொளினும் தெவ் மதில்தாழ் வீழ்த்திருக்கும் என்பது துறைச்செய்தி.]

ஏழகநிலைப் பக்கம் :

'ஏந்துபுகழ் உலகில் இளமை நோக்கான்
வேந்து நிற்றலும் ஏழக நிலையே'. பு. பொ 6

வேண்டார் பெரியர் விறல்வேலோன் தான்இளையன்
பூண்டான் பொழில்காவல் என்றுரையாம் — ஈண்டு
மருளன்மின் கோள்கருதும் மால்வரை ஆளிக்
குருளையும் கொல்களிற்றின் கோடு. பு. பொ. 6

['அரசன் இளமையிலேயே நாடுகாவலை மேற்கொண்டு விட்டானே; அவன் பகைவரோ பெரியவர்களாக உள்ளாரே' என்று கருதற்க; மலையில் சிங்கக்குட்டியும் களிற்றின்கொம்பினைக் கொள்ள நினையாநிற்கும் என்பது அறிக என்றவாறு.

வேலோன் இளையன், பொழில்காவல் பூண்டான், வேண்டார் பெரியர் என்று உரையாம் என்பது துறைச்செய்தி.]

தொடுகழல் புனைதல் :

'அடுமுரண் அகற்றும் ஆள்உகு ஞாட்பின்
கடுமுரண் வயவன் கழல்புனைந் தன்று'. பு. பொ. 7

வாள்அமரின் முன்விலக்கி வான்படர்வார் யார்கொலோ
கேள்அலார் நீக்கிய கிண்கிணிக்கால் — காளை
கலங்குஅழல் வாயில் கடுத்தீற்றி யற்றால்
பொலங்கழல் கால்மேல் புனைவு. பு. பொ 7

[சதங்கை அணிந்த இளம்பருவத்து அரசன் தன் பகைவரை அழிப்பதற்கு வீரக்கழலையும் தன் காலில் அணியும் செயல், நெருப்பில் நஞ்சுதடவுதற்கு நேராகும். இனிப் போரில் அவனை முன்நின்று தடுத்து வீரசுவர்க்கம் அடையும் பகைவர்கள் யார்தாமோ? என்றவாறு.

காளை கிண்கிணிக்கால் கேள்அலார் நீக்கிய கழல் புனைந்தான் என்பது துறைச்செய்தி.]

கல் கண்டிடுதல் :

‘ ஆறு வென்றி அமரில் வீழ்ந்தோற்குக்
கானம் நீளிடைக் கல்கண் டன்று ’. பு. பொ. 8

மிகைஅணங்கு மெய்ந்நிறீஇ மீளி மறவர்
புகைஅணங்கப் பூமாரி சிந்திப் — பகைஅணங்கும்
வீளைக் கடுங்கணையால் வேறுகி விண்படர்ந்த
காளைக்குக் கண்டு அமைத்தார் கல். பு. பொ. 8

[பகைவரை அழிக்கும் ஆற்றலுடைய அம்பினுலே உடலில் இருந்த உயிர் நீங்கி வீரசுவர்க்கம் அடைந்த வீரனுக்குத் தெய்வத்தை உடலில் நிறுத்தி நறும் புகை காட்டிப் பூமாரி பொழிந்து நிறுத்துவதற்குரிய நல்ல கல்லினை உறுதிப்படுத்தினுர்கள் என்றவாறு.

கடுங்கணையால் வேறுகி விண்படர்ந்த காளைக்கு மீளி மறவர் கண்டு கல் அமைத்தார் என்பது துறைச்செய்தி.]

கல்கோள் நிலை :

‘ மண்மருளத் துடிகறங்க
விண்மேயாற்குக் கல்கோண்டன்று ’. பு. பொ 9

பூவொடு நீர்தூவிப் பொங்க விரைபுகைத்து
நாஉடை நன்மணி நன்குஇயம்ப — மேவார்
அழல்மறம் காற்றி அவிந்தாற்குஎன்று ஏத்திக்
கழல்மறவர் கைக்கொண்டார் கல். பு. பொ. 9

[பகைவர் வீரத்தை அழித்து இறந்த வீரனுக்கு, மறவர் பூவும நீரும் தூவி நறும்புகை புகைத்து மணி ஓசையோடு நடுதற்குரிய கல்லைக் கைக்கொண்டனர் என்றவாறு.

மேவார் அழல் மறம் காற்றி அவிந்தாற்குக் கழல்மறவர் கல் கைக்கொண்டார் என்பது துறைச்செய்தி.]

கல் நீர்ப்படுத்தல் :

' வண்டுசூழ் தாமம் புடையே அலம்வரக்
கண்டு கொண்ட கல்நீர்ப் படுத்தன்று '. பு. பொ. 10

காடு கனலக் கனலோன் சினம்சொரியக்
கூடிய வெம்மை குளிர்கொள்ளப் — பாடி
நயத்தக மண்ணி நறுவிரைகொண்டு ஆட்டிக்
கயத்து அகத்து உய்த்திட்டார் கல். பு. பொ. 10

[காடு வெம்மை உறும்படி, கதிரவன் காலும் வெப்பம் நீங்கிக் குளிரும்படி, கல்லினைக் கழுவி மணம் கமழ்ந்த நீரால் நீராட்டிக் குளத்தில் கொண்டுபோய் இட்டார்கள் என்றவாறு.

கல் மண்ணி ஆட்டிக் கயத்தகத்து உய்த்திட்டார் என்பது துறைச்செய்தி.]

கல் நீர்ப்படுத்தலின் பக்கம் :

' ஓங்கியகல் உய்த்துஒழுக்கல்
ஆங்குஎண்ணினும் அத்துறைஆகும்'. பு. பொ. 11

கணன் ஆர்ந்து உவப்பக் கடுங்கண் மறவர்
பிணன் ஆர்ந்து பேய்வழங்கும் ஞாட்பின் — நிணன் ஆர்
விழுக்கினுல் வேய்ந்த விறல்வேலோர் கல்லை
ஒழுக்கினுர் ஒன்றுஒருவர் முன். பு. பொ. 11

[பேய்கள் பிணத்தைத்தின்று வழங்கும் போர்க்களத்தில் பகைவர்தம் கொழுப்பு நிறைந்த மார்பின் தசையால் மூடப் பட்ட இறந்துபோன வீரருக்குக் கண்ட கற்களைக் கல் நடுவோர்முன் வீரர்குழாத்தினர் மகிழ்வோடு நிறுத்தினர் என்றவாறு.

மறவர் வேலோர்கற்களை ஒன்று ஒருவர்முன் ஒழுக்கினர் என்பது துறைச்செய்தி]

கல்நாட்டுதல்.

'அவன் பெயர்கல் மிசைப்பொறித்துக்
கவின்பெறக் கல்நாட்டின்று'. பு. பொ. 12

மாலை துயல மணிஎறிந்து மட்டுஉகுத்துப்
பீலி அணிந்து பெயர்பொறித்து—வேல்அமருள்
ஆண்தக நின்ற அமர்வெய்யோற்கு ஆகஎன்று
காண்தக நாட்டினர் கல். பு. பொ. 12

[வேற்போரில் ஆண்மைமிக எதிர்த்து இறந்த வீரனுக்கு ஆவதாக என்று, கல்லினை மாலை சூட்டி மணி ஒலித்துக் கள்ளினைத் தெளித்துப் பீலி அணிவித்துப் பெயர் பொறித்து அழகாக நட்டனர் என்றவாறு.

அமர்வெய்யோற்கு ஆக என்று கல் காண்தக நாட்டினர் என்பது துறைச்செய்தி.]

கல்முறை பழிச்சல் :

'நிழல்அவிர் எழில்மணிப்பூண்
கழல்வெய்யோன் கல்வாழ்த்தின்று'. பு. பொ. 13

அடும்புகழ் பாடி அழுதழுது நோனாது
இடும்பையுள் வைகிற்று இருந்த — கடும்பொடு
கைவண் குரிசில்கல் கைதொழூஉச் செல்பாண
தெய்வமாய் நின்றான் திசைக்கு. பு. பொ. 13

கடும்பு — குடும்பம்.

[பாண ! குரிசில் இப்பொழுது கல்லிடைத் தெய்வமாய் நிலைபெற்றான் ஆதலின், அவன் புகழ்பாடி அழுது மனம் தாங்காது வருந்திஇருக்கும் அவன் உறவினரோடு நீயும் அக்கல்லினைத் தொழுது செல்வாயாக என்றவாறு.

பாண! திசைக்குத் தெய்வமாய் நின்றான் கல்லினைக் கைதொழூஉச் செல் என்பது துறைச்செய்தி.]

இல்கொடு புகுதல் :

'வேத்து அமருள் விளிந்தோன் கல்என
ஏத்தினர் துவன்றி இல்கொண்டு புக்கன்று'. பு.பொ. 14

வாள்புகா ஊட்டி வடிமணி நின்றியம்பக்
கோள்புலி அன்ன குரிசில்கல் — ஆள்கடிந்து
வில்கொண்ட வென்றி விறல்மறவர் எல்லோரும்
இல்கொண்டு புக்கார் இயைந்து. பு. பொ. 14

[பகைவரை வென்று வில்வெற்றி கொண்ட மறவர் எல்லோரும் வீரனுக்குக் கோயில் எடுத்து, கொற்றவாளுக்கு உணவு இட்டு, மணி ஒலிப்ப, அக்கல்லினை அக்கோயிலில் கொண்டு சென்று நாட்டினர் என்றவாறு.

குரிசில்கல் விறல்மறவர் இயைந்து இல்கொண்டு புக்கார் என்பது துறைச்செய்தி]

முதுபாலை :

'காம்புஉயர் கடத்திடைக் கணவனை இழந்த
பூங்கொடி மடந்தை புலம்புஉரைத் தன்று'. பு. சி. 1

நீர்மலி கண்ணொடு நின்றேன் நிலைநோக்காய்
தார்மலி மார்பன் தகைஅகலம் —சூர்மகளே
வெள்ளில் விளைவுதிரும் வேய்ஓங்கும் வெஞ்சுரத்துக்
கொள்ளல்நீ கோடல் கொடிது. பு. சி. 1

[விளமரத்தின் பழம் உதிரும் மூங்கில்மிக்க இக்காட்டிலே, சூர்மகளே! கண்ணீர் உகுத்து நிற்கும் என்நிலையை நோக்காது, தலைவன் பரந்த மார்பினை நீ கோடல் அடாது அதனைக் கொள்ளுதலை நீக்குவாயாக என்றவாறு

வெஞ்சுரத்தில் சூர்மகளே என்நிலை நோக்காய் மார்பன் அகலம் கோடல் கொடிது என்பது துறைச்செய்தி.]

சுரநடை.

'முதுஅரில் நிவந்த முதுகழை ஆர்இடைக்
காதலி இழந்த கணவன்நிலை உரைத்தன்று'. பு. சி. 2

உரவுஎரி வேய்ந்த உருப்புஅவிர் கானுள்
வரவுஎதிரின் வைவேல்வாய் வீழ்வாய் — கரவினால்
பேதையைப் பெண்ணியலைப் பெய்வளையை என்மார்பின்
கோதையைக் கொண்டொளித்த கூற்று. பு. சி. 2

[நெருப்பு மூடிய வெய்ய இக்காட்டில் என்மார்பின் மாலைபோல்வாளாகிய என் தலைவி உயிரைக்கொண்டு மறைந்த கூற்றமே! நீ என்கண்முன்வரின், என்கூரிய வேலின் வாயில் பட்டுமடிவாய் என்றவாறு.

கானுள் என் கோதையைக்கொண்டு ஒளித்த கூற்றே! நீ வரவு எதிரின் என்வைவேல்வாய் வீழ்வாய் என்பது துறைச்செய்தி.]

தபுதாரநிலை:

'புனைஇழை இழந்தபின் புலம்பொடு வைகி
மனைஅகத்து உறையும் மைந்தன்நிலை உரைத்தன்று'.
பு. சி. 3

பைந்தொடி மேல்உலகம் எய்தப் படர்உழந்த
மைந்தன் குரிசில் மழைவள்ளல் — எந்தை
தபுதாரத்து ஆழ்ந்த தனிநிலைமை கேளாச்
செவிடாய் ஒழிகஎன் செவி. பு. சி. 3

[தலைவி இறந்தாளாக வருந்திய தலைவன் தலைவியை இழந்து வருந்தும் துயரச் செய்தியைக் கேளாது என் செவிகள் செவிடுபடுவனவாக என்று பாங்கன் கூறியவாறு.]

எந்தை தபுதாரத்து ஆழ்ந்த தனிநிலைமை என்பது துறைச்செய்தி.

'காதலி இழந்த தபுதாரநிலை' என்ற தொல்காப்பிய நூற்பாச் சொற்றொடருக்கு நச்சினார்க்கினியர்—"தபுதார நிலை—தாரம் இழந்த நிலை; தன் காதலியை இழந்தபின் வழி முறைத்தாரம் வேண்டின் அது காஞ்சிக்குறிப்பு அன்று என்பதற்கும், எஞ்ஞான்றும் மனைவி இல்லாதானும் தபுதார நிலைக்கு உரியன் ஆயினும் அது காஞ்சி ஆகாது என்றற்கும், தபுதார நிலை என்றே பெயர் பெறுதல் மரபு என்றற்கும், 'காதலி இழந்த நிலையும்' என்றே ஒழியாது பின்னும் 'தபுதாரநிலையும்' என்றார். இது யாக்கையும் இன்பமும் ஒருங்கு நிலையின்மையாம்' என்று விளக்கம் கூறியுள்ளார்.
(தொல். பொ. 79)

தாபதநிலை :

'குருந்துஅலர் கண்ணிக் கொழுநன் மாய்ந்தெனக்
கருந்தடங் கண்ணி கைம்மை கூறின்று.' பு. சி. 4

கலந்தவனைக் கூற்றம் கரப்பக் கழியாது
அலைந்து இனையும் அவ்வளைத் தோளி புலந்தவன்
தாரொடு பொங்கி நிலன்அசைஇத் தான்மிசையும்
கார்அடகின் மேல்வைத்தாள் கை பு. சி. 4

[கணவன் இறந்துபடத் தானும் இறவாது நொந்து வருந்தும் பண்டு வளையல் அணிந்த தலைவி, அவன் அணி வித்த மாலையைப் பறித்து வீசி, வறுநிலத்தில் தங்கிக் கரிய இலைஉணவு உண்டு வாழும் நிலையள் ஆயினள் என்றவாறு.

கலந்தவனைக் கூற்றம் கரப்ப வளைத்தோளி ஒழியாது நிலத்து அசைஇக் காரடகின்மேல் வைத்தாள் கை என்பது துறைச்செய்தி.]

தலைப்பெயல் நிலை :

'இன்கதிர் முறுவல் பாலகன் என்னும்
தன்கடன் இறுத்ததாய் தபுநிலை உரைத்தன்று'. பு. சி 5

இடம்படு ஞாலத்து இயல்போ கொடிதே
தடம்பெருங்கண் பாலகன் என்னும் — கடன்கழித்து
முள்எயிற்றுப் பேதையாள் புக்காள் முரண்அவியா
வள்எயிற்றுக் கூற்றத்தின் வாய். புு. சி. 5

[பாலகனைப் பெறுதல் என்ற மனைவியின் கடமையைக் கழித்தபிறகு, பேதைமையளாகிய தாய், கொடிய கூற்றத்தின் வாயில் அகப்பட்டாள் ஆதலின், உலக இயல்பு கொடிதாய் உள்ளது என்றவாறு.

பேதையாள் பாலகன் என்னும் கடன்கழித்துக் கூற்றத்தின் வாய்ப்புக்காள் என்பது துறைச்செய்தி.

தலைப்பெயல் நிலைக்கு நச்சினார்க்கினியர்—பொருகளத்துப் பொருது மாயும் சிறப்பில் தீர்ந்து தன்மகன் புறங்கொடுத்துப் போந்தானாக, அதுகேட்டுத் தாய் சாக்காடு துணிந்து சென்று மகனைக் கூடும் கூட்டம் எனவும், இனி அவன் பிறர் சிறப்பு மாய்தற்குக் காரணமாகிய பெருஞ்சிறப்பொடு களப்பட்டுத் துறக்கத்துப்போயவழி அவனொடு இறந்துபட வரும் தாயது தலைப்பெயல் நிலைமை எனவும் பொருள் கூறுவார். தொல். பொ. 89

பூசல் மயக்கு :

'பல்இதழ் மழைக்கண் பாலகன் மாய்ந்தெனப்
புல்லிய பெருங்கிளைப் பூசல் கூறின்று'. பு. சி. 6

அலர்முலை அஞ்சொல் அவள்ஒழிய அவ்வில்
குலமுதலைக் கொண்டொளித்தல் அன்றி — நிலம்உறப்
புல்லிய பல்கிளைப் பூசல் பரியுமோ
கொல்லிய வந்துஒழியாக் கூற்று. பு. சி. 6

[தாய் உயிர்கொண்டிருக்கவும் அக்குடும்பக் குலமுதலைக் கொண்டு ஒளித்தலைச் செய்வானேஅன்றி, உறவினர்பலரும்

புலம்பும் குரல்கேட்டு, கொல்லவந்த கூற்றுவன் இரக்கம் கொண்டு அச்சிறுவன் உயிரை விடுத்துச் செல்வானோ என்றவாறு.

கூற்று குலமுதலைக்கொண்டு ஒளித்தல் அன்றிக் கிளைப் பூசல் பரியுமோ என்பது துறைச்செய்தி.

‘ பேரிசைமாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
ஆய்ந்த பூசல் மயக்கம் ’. தொ. பொ 89

என இதனை வீரனுடைய சாக்காட்டிற்குக் கொள்வர் தொல்காப்பியனார்.

பூசல் மயக்கின் பக்கம் :

‘ வேந்தன் மாய்ந்தென வியல்இடம் புலம்பினும்
ஆய்ந்த புலவர் அதுஎன மொழிப ’ பு சி. 7

எண்ணின் இகல்புரிந்தோர் எய்தாதது இல்போலும்
கண்ணின்ஒளிர் வேலான் கரந்தபின்—அண்ணல்
புகழொடு பூசல் மயங்கிற்றால் பொங்கும்
அகழ்கடல் வேலி அகத்து. பு. சி. 7

[வேலான் ஆகிய மன்னன் இறந்தபிறகு உலகு முழுதும் அவன் புகழ் ஆரவாரத்தோடு பேசப்பட்டதனை நோக்க, போரினை விரும்பிய வீரர் அடைய முடியாத பேறு ஒன்றும் இன்று என்பது புலனாகும் என்றவாறு.

வேலான் கரந்தபின் உலகத்து அவன் புகழொடு பூசல் மயங்கிற்று என்பது துறைச்செய்தி.]

மாலை நிலை :

‘ கதிர்வேல் கணவனொடு கனைஎரி முழுக
மதிஏர் நுதலி மாலைநின் றன்று.’ பு. சி. 8

சோலை மயிலன்னாள் தன்கணவன் சொல்லியசொல்
மாலை நினையா மனம் கடைஇக்—காலைப்
புகைஅழல் வேலோன் புணர்ப்பாகி நின்றாள்
அகைஅழல் ஈமத்து அகத்து பு. சி. 8

இதனைப் பாலைநிலை என்று பாடம் ஓதுவாரும் உளர். (நச்சினார்க்கினியர்); அது பாடம்அன்மை உரையாசிரியர் உரையானும் மாலையீடு என்னும் வழக்கானும் உணர்க.

[மயில் அனைய தலைவி, தன் கணவன் தன்னிடம் கூறிய சொற்களை மாலைப்பொழுதில் நினைத்துத் தன்மனத்தை முடுக்கி மறுநாட் காலை அவனை எரிவித்த ஈமத்தீயில் அவனோடு கூடி உயிர் நீத்தாள் என்றவாறு.

மயில் அன்னாள் தன் கணவன் ஈமத்துஅகத்துப் புணர்ப்பாகி நின்றாள் என்பது துறைச்செய்தி.]

முதானந்தம் :

'கயல்ஏர் கண்ணி கணவனொடு முடிய
வியல்நெறிச் செல்வோர் வியந்துஉரைத் தன்று'
பு. சி. 9

ஓர்உயி ராக உணர்க உடன்கலந்தார்க்கு
ஈர்உயிர் என்பர் இடைதெரியார்—போரில்
விடன்ஏந்தும் வேலோற்கும் வெள்வளையி னாட்கும்
உடனே உலந்தது உயிர். பு. சி. 9

[போரில் விடம் பூசிய வேலைஏந்திய வீரனுக்கும் அவன் தலைவிக்கும் உயிர் ஒருங்கே பிரிந்துவிட்டது ஆதலின், வீரனுக்கும் அவன் மனைவிக்கும் உயிர் ஒன்றே என்பது அறிக; இரண்டு உயிர்கள் வெவ்வேறாக உள்ளன என்பார் உண்மையை ஆராய்ந்து உணரும் ஆற்றல் அற்றவரே என்றவாறு.

இப்பாடல் முழுதும் துறைச்செய்தி.]

மூதானந்தத்தின் பக்கம் :

'கொடியான் கூர்ங்கணை குளிப்பத் தன்தோழில்
முடியான் அவிதலும் மூதா னந்தம்.' பு. சி. 10

முந்தத்தான் மாவொடு புக்கு முனைஅமருள்
சிந்தத்தான் வந்தார் செருவிலக்கிக்—குந்தத்தால்
செல்கணை மாற்றிக் குரிசில் சிறைநின்றான்
கொல்கணைவாய் வீழ்தல் கொடிது. பு. சி. 10

[தான் குதிரைமீது ஏறிப் பகைப்புலத்தை முன்நோக்கிச் சென்று, போரில் வந்தாரை ஓட்டி, தன் கையிலிருந்த சவளப் படையால் பகைவர் எய்த அம்புகளைத் தடுத்து, வெள்ளத்தைத் தடுக்கும் அணைபோலத் தான் ஒருவனே நின்று, பகைவர் அம்பினால் குரிசில் இறந்த செய்தி கேட்பதற்குக் கொடியதாய் உள்ளது என்றவாறு.

சிறை நின்றானாகிய குரிசில் கொல்கணைவாய் வீழ்தல் கொடிது என்பது துறைச்செய்தி.]

விதுப்பு ஆனந்தம் :

'ஆடுஅமைத் தோளி விரிச்சியும் சோகினமும்
வேறுபட அஞ்சி விதுப்புஉற் றன்று.' பு. சி. 11

வேந்துஆர்ப்ப வெஞ்சமத்து வேல்அழுவம் தாங்கினான்
சாந்துஆர் அகலத்துத் தாழ்வடுப்புண்—தாம்தணியா
மன்னு சொகினம் மயங்கின வாய்ப்புளும்
என்னாங்கொல் பேதை இனி. பு. சி. 11

[அரசன் மகிழ்ந்து ஆரவாரிக்கும்படி வேற்போர் செய்து விழுப்புண்பட்ட வீரனுடைய புண்கள் இன்னும் ஆறவில்லை; சகுனமும் பொருந்தவில்லை; நற்சொல்லும் ஏற்றனவாயில்லை;

அவன் இறந்து படுதல் உறுதி ஆதலின், அவன் மனைவியின் மனநிலை யாதாக இருக்குமோ ? என்று பக்கலில் உள்ளார் சொற்றவாறு.

வீரன் விழுப்புண் தணியா, சொகினம் மன்னு, வாய்ப் புள்ளும் மயங்கின, பேதை என்னுங்கொல் என்பது துறைச் செய்தி]

விதுப்பானந்தப் பக்கம் :

' தவப்பெரிய வெஞ்சமம்குறுகும்
அவற்குஇரங்கினும் அத்துறைஆகும்.' பு. சி. 12

இன்னு சொகினம் இசையா விரிச்சியும்
அன்னு அலம்வரும்என் ஆர்உயிரும்—என்னுங்கொல்
தொக்கார் மறமன்னர் தோலாத் துடிகறங்கப்
புக்கான் விடலையும் போர்க்கு. பு. சி. பொ. 12

[அன்னையே ! சகுனமும் பொருந்தவில்லை; நல்வாய்ப் புள்ளும் ஏற்றதாக இல்லை; பகை மன்னர்கள் போர்க்களத்தில் கூடிவிட்டனர்; நம் தலைவனும் துடி ஒலிக்கப் போருக்குப் போய்விட்டான்; முடிவு யாதாகுமோ என்று என் உயிர் சுழலுகிறது என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

ஆனந்தப்பையுள் :

' விழுமம் கூர வேய்த்தோள் அரிவை
கொழுநன் வீயக் குழைந்து உயங் கின்று .' பு. சி. 13

புகழ்ஒழிய வையகத்துப் பூங்கழல் காளை
திகழ்ஒளிய மாவிசும்பு சேர—இகழ்வார்முன்
கண்டே கழிகாதல் இல்லையால் கைசோர்ந்தும்
உண்டே அளித்ததுஎன் உயிர். பு. சி. 13

[உலகில் புகழை நிறுத்திக் காளைப்பருவத்தானாகிய என் தலைவன் ஒளிமிக்க வானுலகம் சேரவும், என்னை இகழ்ந்து பேசுவாருக்கு வாய்ப்புத் தாராமல் என் கணவனோடு இறந்து படும் ஆழ்ந்த அன்பைப்பெறாதாகி, இரங்கத்தக்க என் உயிர் இன்னும் உளதே என்று தலைவி இரங்கியவாறு.

காளை விசும்பு சேரக் கழிகாதல் இன்றி என் உயிர் உண்டே என்பது துறைச்செய்தி.]

கையறுநிலை :

'செய்கழல் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர்
கையற உரைத்துக் கைசோர்ந் தன்று.' பு. சி. 14

தாய்அன்னான் தார்விலங்கி வீழத் தளர்வொடு
நீஎன்னாய் நின்றாய்என் நெஞ்சுஅளியை — சான்றோர்க்கு
இல்என்றல் தேற்றா இகல்வெய்யோன் விண்படரப்
புல்என்ற நாப்புலவர் போன்று. பு. சி. 14

[இறந்தவர்க்கு இல்லை என்று கூறி அறியாத போரில் வல்ல தலைவன் விண்படர, பொலிவு இழந்த புலவர் போன்று நிற்கும் என் நெஞ்சே! தாயை ஒத்த நம் தலைவன் பகைவர் படையை விலக்கி இறந்து படவும், இரங்கத்தக்க நீ என்ன எண்ணத்தால் இன்னும் உயிரோடு இருக்கின்றாய்! என நெஞ்சை நோக்கி வருந்திப் புலம்பியவாறு.

தாய் அன்னான் வீழத் தளர்வோடு நீ என்னாய் நின்றாய் என்பது துறைச்செய்தி]

என்னாய் — எத்தன்மை உடையையாய்.

கையறுநிலையின் பக்கம் :

'கழிந்தோன் தன்புகழ் காதலித்து உரைப்பினும்
மொழிந்தனர் புலவர் அத்துறை என்ன.' பு. சி. 15

நின்று நிலமிசையோர் ஏத்த நெடுவிசும்பில்
சென்று கழிந்தான் செருவெய்யோன்—என்றும்
அழலும் கதிர்வேல் அவன்புகழ் பாடி
உழலும் உலகத்து உயிர். பு. சி. 15

[உலகவர் புகழப் போரை விரும்பும் நம்தலைவன் வானுலகு அடைந்தான். வேல் ஏந்திய அவன் புகழைப் பாடி உலகத்து உயிர்கள் என்றும் இனி வருந்தும் போலும் என்றவாறு.

செருவெய்யோன் கழிந்தான்; உலகத்து உயிர் அவன் புகழ்பாடி உழலும் என்பது துறைச்செய்தி.]

முதுமொழிக் காஞ்சி :

'பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்
உலகியல் பொருள்முடிபு உணரக் கூறின்று.'
பு. கா. பொ. 1

ஆற்றின் உணரின் அருள்அறமாம் ஆற்றார்க்குப்
போற்றார் வழங்கின் பொருள்பொருளாம்—மாற்றிப்
புகலாது ஒழுகும் புரிவளையார் மென்தோள்
அகலாது அளித்துஒழுகல் அன்பு. பு. கா. பொ. 1

[நுல்நெறியான் ஆராய்ந்து உணருமிடத்து, அருளே அறமாகும்; தன் பொருளை இவறாது ஏழைகளுக்கு வழங்கும் பொருளே உண்மைப் பொருளாம்; கணவனை அன்றிப் பிறரை விரும்பாது வாழும் உரிமைமகளிர் தோள்மருவி, அவர்களுக்குத் தண்ணளி செய்து வாழ்தலே இன்பமாகும் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

பெருங்காஞ்சி :

'மலையோங்கிய மாநிலத்து
நிலையாமை நெறி உரைத்தன்று'. பு. கா. பொ. 2

ஆயாது அறிவயர்ந்து அல்லாந்து அகல் இடத்து
மாயா நிதியம் மனைச்செறீஇ — ஈயாது
இறுகப் பொதியன்மின் இன்றொடு நாளைக்
குறுக வரும்அரோ கூற்று. பு. கா. பொ. 2

[மறுமையை ஆராயாது அறிவு தளர்ந்து மனம் மறுகி, கெடாத பொருளை வீட்டில் சேமித்து வறியாருக்கு ஈயாது இறுகக் கட்டிவைக்காதீர்கள்; இன்றோ நாளையோ கூற்றுவன் வரின், நும் செல்வம் நும் உயிருடன் வாராது என்றவாறு.

தன்னை உடையார் கெடுதல் அன்றித் தான் கெடுதல் இல்லாத செல்வம் ஆதலின், 'வீதல் அறியா விழுச்செல்வம்' மாயா நிதியம் எனப்பட்டது.

இப்பாடல் முழுதும் துறைச்செய்தி.]

பொருள்மொழிக் காஞ்சி :

'எரிந்து இலங்கு சடை முனிவர்
புரிந்துகண்ட பொருள் மொழிக் தன்று'. பு. கா. பொ. 3

ஆய பெருமை அவிர்சடையோர் ஆய்ந்துஉணர்ந்த,
பாய நெறிமேல் படர்ந்துஒடுங்கித் — தீய
இருளொடு வைகாது இடம்படு ஞாலத்து
அருளொடு வைகி அகல். பு. கா. பொ. 3

[மேதக்க பெருமையினராகிய சடைமுடி தரித்த முனிவர் ஆய்ந்து குறிப்பிட்ட வழியில் வாழ்நாளைக்கழித்து மன அடக்கத்தோடு மனமயக்கம் நீத்து அருளோடு வாழ்ந்து பிறப்பை அறுப்பாயாக என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

புலவர் ஏத்தும் புத்தேள் நாடு :

‘ நுழைபுலம் படர்ந்த நோய்அறு காட்சி
விழைபுலம் கடந்தோர் வீடு உரைத்தன்று.’
புு. கா. பொ. 4

பொய்இல் புலவர் புரிந்துஉறையும் மேல்உலகம்
ஐயம்ஒன் றுஇன் றி அறிந்துரைப்பின்—வெய்ய
பகல்இன்று இரவுஇன் று பற்றுஇன் று துற்றுஇன் று
இகல்இன் று இளிவரவும் இன் று. பு. கா. பொ. 4

[ஞானிகள் விரும்பித் தங்கும் வீட்டுலக இயல்பினை அறிந்து உரைப்பின், அவ்வுலகில் பகலோ இரவோ பாசமோ வினை நுகர்ச்சியோ மாறுபாடோ தாழ்வுமனப்பான்மையோ ஒன் றும் இன் று என்பது உணரப்படும் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி]

முதுகாஞ்சி :

‘ தலைவரும் பொருளைத் தக்காங்கு உணர்த்தி
நிலைநிலை யாமை நெறிப்பட உரைத்தன்று.’
பு. கா. பொ. 5

இளமை நிலைதளர மூப்போடு இறைஞ்சி
உளமை உணராது ஒடுங்கி—வளமை
வியப்புழவல் இல்லா வியல்இடத்து வெஃகாது
உயப்போகல் எண்ணின் உறும். பு. கா. பொ. 5

[இளமை நிலைதளர முதுமையால் உடல்வளைய உண்மையை அறியாது ஒடுங்கிச் செல்வத்தின் மருட்கை நீங்காது அமைவது இவ்வுலகம்; இவ்வுலகத்தில் ஒன் றனையும் விரும்பாமல் உயிர் பிழைத்துப் போதலே ஏற்றது என்றவாறு.

வியலிடத்து வெஃகாது உயப்போகல் உறும் என்பது துறைச்செய்தி]

காடு வாழ்த்து :

'பல்லவர்க்கு இரங்கும் பாடுஇமிழ் நெய்தல்
கல்என ஒலிக்கும் காடுவாழ்த் தின்று.' பு. கா. பொ. 6

'முன்புறம் தான்காணும் இவ்வுலகை இவ்வுலகில்
தன்புறம் கண்டறிவார் தாம்இல்லை—அன்பின்
அழுதார்கண் நீர்விடுத்த ஆறுஆடிக் கூகை
கழுது ஆர்ந்து இரவழங்கும் காடு.' பு. கா. பொ. 6

[அன்பினால் பிரிந்தோரை நினைத்து அழுதவர் வடித்த கண்ணீர்ஆற்றில் மூழ்கிக் கோட்டான் பேய்களோடு இராப் பொழுதில் திரியும் சுடுகாடு, இவ்வுலகின் முதுகினைத் தான் காணும் வாய்ப்புப் பெற்றதே அன்றி, அதன் முதுகினைக் கண்டு அறிவார் ஒருவரும் இரார் என்றவாறு.

'மலர்தலை உலகத்து; மரபுநன்கு அறியப்
பலர்செலச் செல்லாக் காடுவாழ்த்து' தொ. பொ. 79

என்றார் தொல்காப்பியனார்.

காடு பிறர்புறம் தான் காணும்; அதன் புறம் கண்டறி வார் இலர் என்பது துறைச்செய்தி.]

முல்லை :

'தடவரை மார்பன் தன்அமர் காதல்
மடவரற் புணர்ந்த மகிழ்ச்சிநிலை உரைத்தன்று.'
பு. மு. பொ. 1

ஊதை உளர ஒசிந்து மணம்கமழும்
கோதைபோல் முல்லைக் கொடிமருங்குல்—பேதை
குவைஇ இணைந்த குவிமுலை ஆகம்
கவைஇக் கவலை இலம். பு. மு. பொ. 1

[காற்று அடித்தலானே தளர்ந்து மணம் வீசும் முல்லைக் கொடி போன்ற இடையாள் ஆகிய இத்தலைவியின் திரண்டு இணைந்த மார்பினைத்தழுவிக் கவலையற்று வாழ்கிறேன் என்று இல்லறம் நடத்தும் தலைவன் சொற்றவாறு.

பேதை ஆகம் கவைஇக் கவலை இலம் என்று தலைவன் சொற்றவாறு.

இதனை இவ்வாசிரியர் புறத்திணை ஒழிபில் சேர்த்தமை ஆராயத்தக்கது. ஏனைய இம்முல்லைப்பாடல்களும் அனைய. அகத்தில் கூற இடமின்மையின், பொருட்பகுதியின் ஈற்றில் வைத்தார் போலும்.]

கார்முல்லை :

'அருந்திறல் கட்டு ரவர்வா ராமுன்
கருங்கடல் முகந்து கார்வந் தன்று'. பு. மு, பொ. 2

புனையும் பொலம்படைப் பொங்குஉளைமான் திண்தேர்
துனையும் துனைபடைத் துன்னார் — முனையுள்
அடல்முகந்த தானை யவர்வாரா முன்னம்
கடல்முகந்து வந்தன்று கார். பு. மு. பொ. 2

[பரிபூட்டிய தேர், விரைந்து செல்லும் வீரர்படை இவற் றோடு பகைவர் வலிமையைக்கெடுத்த தானையை உடைய தலைவர் மீண்டு வரும் முன், கடல்நீரை முகந்து கார்மேகம் வந்துவிட்டது என்றவாறு.

தானையவர் வாராமுன் கார் வந்தது என்பது துறைச் செய்தி.]

தேர்முல்லை :

'உருத்துஎழு மன்னர் ஒன்னார் தம்நிலை
திருத்திய காதலர் தேர்வரவு உரைத்தன்று'. பு. மு. பொ. 3

தீர்ந்து வணங்கித் திறைஅளப்பத் தெம்முனையுள்
ஊர்ந்துநம் கேள்வர் உழைவந்தார் — சார்ந்து
பரிகோட்டம் இன்றிப் பதவு ஆர்ந்து உகளும்
திரிகோட்ட மா இரியத் தேர். பு. மு. பொ. 3

[பகை தீர்ந்து வணங்கிப் பகைவர் திறையளக்குமாறு பகைவரை வென்று, நம் தலைவர், அறுகம்புல்லை மேயும் மான்கள் தேர்கண்டு அப்பால்தாவி ஓடும்படி, தம்தேர்ப் பரிகளை நெடுஞ்செலவில் செலுத்தி நம்பக்கல் வந்துவிட்டார் என்றவாறு.

நம் கேள்வர் தேர் ஊர்ந்து சார்ந்து உழைவந்தார் என்பது துறைச்செய்தி.]

நாண் முல்லை :

'செறுநர் நாணச் சேயிழை அரிவை
வறுமனை வைகித் தற்காத் தன்று.' பு. மு. பொ. 4

கொய்தார மார்பின் கொழுநன் தணந்தபின்
பெய்வளை யாட்குப் பிறிதில்லை—வெய்ய
வளிமறையும் இன்றி வழக்குஒழியா வாயில்
நளிமனைக்கு நல்துணை நாண். பு. மு. பொ. 4

[மாலை மார்பணிகிய தலைவன் பிரிந்துசென்றகாலை, போக்குவரத்து நீங்காத தெருவில் கதவுகூட இல்லாத வீட்டில் அவன் வரவு நினைந்து தங்கியிருக்கும் தலைவிக்கு நாணம் அன்றிப் பிறிது ஒருதுணை இல்லை.

கொழுநன் தணந்தபின் பெய்வளையாட்கு நற்றுணை நாண் என்பது துறைச்செய்தி.]

இல்லாள் முல்லை :

'கழமிய காதல் கணவனைப் பழிச்சி
இழும்என் சீர்த்தி இல்மலிபு உரைத்தன்று.' பு.மு. பொ. 5

கல்என் நீர் வேலிக் கணவன் கழல்வாழ்த்தி
ஒல்லும் வகையால் விருந்தோம்பிச்—செல்லும்தம்
இல்செல்வம் அன்றி இரந்தவர்க்கு ஈகல்லா
புன்செல்வம் பூவா புகழ். பு. மு. பொ. 5

[உலகில் மனைவி, கணவனுடைய அடிகளை வாழ்த்தி இயன்றவாறு விருந்தோம்பி நடத்தும் இல்லறமே அன்றி, ஏழைகளுக்கு வழங்காது இவறி வைக்கும் அற்பமான செல்வம் புகழைத் தாராது என்றவாறு.

கணவனை வாழ்த்தி விருந்தோம்பிச் செல்லும் இற்செல்வமே புகழ் என்பது துறைச்செய்தி.]

பகட்டுமுல்லை :

'வயல்மிகு சிறப்பின் வருத்தமும் நோன்மையும்
வியன்மனைக் கிழவனைப் பகட்டொடு பொரீஇயன்று'.
பு. மு. பொ. 6

உய்த்தல் பொறுத்தல் ஒழிவின்று ஒலிவயலுள்
எய்த்தல் அறியாது இடையின்றி — வைத்த
படுநுகம் பூண்ட பகட்டொடு மானும்
நெடுமொழி என்கணவன் நேர். மு. மு. பொ. 6

[வீரவுரை பேசும் என் கணவன், வயலில் நுகத்தைப் பூண்டு அதனைத் தளர்ச்சி இன்றிப் பொறுத்துச் செலுத்தும் ஆற்றல் வல்ல பகட்டினை ஒப்ப, இல்லறத்தின்கண் நிகழும் இடுக்கண்களுக்குத் தளராது நலஞ் பயப்பான் என்றவாறு.

என் கணவன் படுநுகம் பூண்ட பகட்டொடு மானும் என்பது துறைச்செய்தி.]

'மடுத்த வாயெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடுடைத்து'. (குறள் — 624)

என்ற குறட் கருத்தை நோக்குக.

பால்முல்லை :

' அரிபாய் உண்கண் ஆயிழைப் புணர்ந்தோன்
பரிவுஆகல் உள்ளமொடு பால் வாழ்த் தின்று '.

புு. மு. பொ. 7

திங்கள் விளங்கும் திகழ்ந்திலங்கு பேரொளி
அங்கண் விசும்பின் அகத்துஉறைக — செங்கண்
குயில்அனைய தேமொழிக் கூர்எயிற்றுச் செவ்வாய்
பயில்வளையை நல்கிய பால். புு. மு. பொ. 7

குயில் போன்ற இனிய மொழியினையும் கூரிய பற்களை யும் சிவந்த வாயினையும் உடைய இவளை மனைவியாகக் கூட்டுவித்த நல்வினை, மதியம் வழங்கும் பேரொளியை உடைய அகன்ற விசும்பில் நீடுவாழ்க என்று தலைவன் விதியை வாழ்த்தியவாறு

பயில்வளையை நல்கிய பால் விசும்பின் அகத்து உறைக என்பது துறைச்செய்தி.

கற்பு முல்லை :

' பொன்திகழ் சுணங்கின் பூங்கண் அரிவை
நன்றுஅறி கொழுநனை நலம்மிகுத் தன்று.'

பு. மு. பொ. 8

நெய்கொள் நிணம்தூ நிறைய அமைத்திட்ட
குய்கொள் அடிசில் பிறர்நுகர்க—வைகலும்
அங்குழைக் கீரை அடகு மிசையினும்
எங்கணவன் நல்கல் இனிது. பு. மு. பொ. 8

[நெய்யோடு கொழுப்பும் இட்டுத்தாளிப்போடு அமைத்த நல்லுணவைப் பிறர் நுகர்ந்து மகிழ்க. தளிராகிய கீரையை

யே உணவாகக் கொள்ளும் எளிமையினும், என் கணவன் தாள்ஆற்றித்தந்த அவ்வுணவே எனக்கு இனிது எனக் கற்புடையாள் சொற்றது.

கீரை மிசையினும் என் கணவன் நல்கல் இனிது என்பது துறைப்பொருள்.

'தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினிய தில்' குறள் 1065

என்ற குறட் கருத்தை நோக்குக.]

கற்பு முல்லையின் பக்கம் :

'மேவரு கணவன் தணப்பத் தன்வயின்
காவல் கூறினும் அத்துறை ஆகும்.' பு. மு. பொ. 9

மௌவல் விரியும் மணம்கமழ் மால்மாலைத்
தௌவல் முதுகுரம்பைத் தான்தனியள்—செவ்வன்
இறைகாக்கும் இவ்வுலகின் இல்பிறந்த நல்லாள்
நிறைகாப்ப வைகும் நிறை, பு. மு. பொ. 9

[முல்லை மலரும் மயக்கந்தரும் மாலையில் அழிந்த பழங்கூரைவீட்டில் தனியளாய், அரசாட்சி சிறக்கும் இவ்வுலகில், நல்ல குடிப்பிறந்தாள் நிறையே தன்னைக் காப்பத் தங்கியுள்ளாள் என்றவாறு.

தனியள் நிறைகாப்ப வைகும் என்பது துறைச்செய்தி.

'மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் இன்றும்'
மணிமே. 22-208-9

ஆதலின் இறை காக்கும் வையகம் எனப்பட்டது.]

கற்புமுல்லையின் மற்றொரு பக்கம் :

'திருவளர் நல்நகர் அடைந்த கொழுநன்
பெருவளம் ஏத்தினும் அத்துறை ஆகும்' பு. மு. பொ. 10

ஊழிதோறு ஊழி தொழப்பட்டு உலைவுஇன்றி
ஆழிசூழ் வையத்து அகம்மலிய—வாழி
கருவரை மார்பின்எம் காதலன் நல்க
வருவிருந்து ஓம்பும் வளம். பு. மு. பொ. 10

[மலை ஒத்த மார்பினனாகிய என் கணவன் தேடித்தந்த செல்வத்தால் விருந்து ஓம்பும் நலன் பல்லூழிக் காலம் இவ்வுலகில் நிலைபெறுக என்றவாறு.

காதலன் நல்க விருந்து ஓம்பும் வளன் வாழி என்பது துறைச்செய்தி]

44 கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல் :

சீர்மிகு நல்இசை பாடிச் செலவுஅயர்தும்
கார்முகில் அன்னார் கடைத்தலை — போர்மிகு
மண்கொண்ட வேல்மற மன்னரே ஆயினும்
வெண்கொண்டல் அன்னாரை வீட்டு. பு. ஒ. 1

[பகைவர் நாட்டைக் கைப்பற்றிய வேலில் வல்ல வீரரே ஆயினும், வெண்மேகம் போன்று கொடைத்தொழில் கல்லாதாரை வீடுத்து, கார்மேகம் போல்வார் வீட்டுமுகப்பிற்கே அவர்தம் நல்லிசை பாடிச் செல்லுதலை மேற்கொள்வோம் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி. வெற்றிகள் பற்றிய பாடல்களும் முழுதும் துறைச்செய்தியே]

45 வாணிக வென்றி

காடும் கடுந்திரை நீர்ச்சுழியும் கண்அஞ்சான்
சாடும் கலனும் பலஇயக்கி — நீடும்
பலிசையால் பண்டம் பகர்வான் பரியான்
கலிகையால் நீக்கல் கடன். பு. ஒ. 2

[காடுகளில் வண்டிகள் பலவும் செலுத்தியும் கடிய அலைகளை உடைய நீர்ச்சுழிகளிலும் அஞ்சாது மரக்கலம் செலுத்தியும் சென்று ஊதியம் கருதிப் பலபண்டங்களையும் விற்கும் வாணிகன் பொருளை இவறுதல் செய்யாது தன் கையால் வழங்கிப் பிறர் வறுமையைப் போக்குதல் அவனுக்கு உரிய கடமையாகும் என்றவாறு.

46 உழவன் வென்றி :

மண்பதம் நோக்கி மலிவயலும் புன்செய்யும்
கண்பட ஏர்பூட்டிக் காலத்தால்—எண்பதனும்
தத்துநீர் ஆர்க்கும் கடல்வேலித் தாயர்போல்
வித்தித் தருவான் விளைவு. பு. ஒ. 3

எண்பதம்—நெல் வரகு முதலிய எட்டு உணவு.

[மண் வளத்தைப் பார்த்து நன்செய்யிலும் புன்செய்யிலும் ஏர் பூட்டி உழுது தக்க பருவத்தில் விதைத்துக் கடல் சூழ் உலகத்தாருக்குத் தாயர் போலக் கருணையோடு எண் வகை உணவுகளையும் உழவன் விளைவித்துத் தருவான் என்றவாறு.]

'நெல் வரகு சாமை தினைஇறுங்கு கேழ்வரகு
கொள்ளுழுந்தோடு எண்விளைவுஆகும்.']

47 மல்வென்றி :

கண்டான் மலைந்தான் கதிர்வானம் காட்டியே
கொண்டான் பதாகை மறமல்லன் — வண்டார்க்கும்
மாலை துயலும் அருவிய மாமலை
போலும் திரள்தோள் புடைத்து. பு. ஒ. 4

[வீரமல்லன் தன் எதிரியைக் கண்ட அளவில் அருவி ஓடிவரும் மலைபோன்ற தன் தோள்களைத் தட்டிக்கொண்டு

அவனோடு போர் செய்து அவனை உயர வீசி வானத்தைக் காணும்படி செய்து வெற்றிக் கொடியைக் கைக்கொண்டான் என்றவாறு.]

48 ஏறுகோள் வென்றி :

குடவரை ஏந்திய நம் கோவலனே கொண்டான்
அடைஅவிழ் பூங்கோதை அஞ்சல்—விடைஅரவம்
மன்றம் கறங்க மயங்கப் பறைபடுத்து
இன்று நமர்விட்ட ஏறு. பு. ஒ. 5

[இலைகள் இடையிடையே விரிந்த பூமாலையை அணிந்த தலைவியே ! ஊர்ப்பொதுவிடத்தில் ஆரவாரம் முழங்க மக்கள் மயங்கப் பறைஒலியை எழுப்பி இன்று நமர் விடுத்த காளைகளை, மலையைக் குடையாக ஏந்திய திருமால் மரபினனாகிய நம் ஆயனே அடக்கிக் கைக்கொண்டான் ஆதலின், அவனை நீ வரைதல் நிகழுமோ நிகழாதோ என்று அஞ்சாதே என்றவாறு.]

49 கோழிவென்றி :

பாய்ந்தும் எறிந்தும் படிந்தும் பலகாலும்
காய்ந்தும்வாய்க் கொண்டும் கடுஞ்சொல்லார்—ஆய்ந்து
நிறம்கண்டு வித்தகர் நேர்விட்ட கோழிப்
புறங்கண்டும் தான்வருமே போர்க்கு. பு. ஒ. 6

[கடிய ஒலியை உடைய சதுரப்பாடுடையார் ஆராய்ந்து நிறப்பொருத்தம் பார்த்து விட்ட கோழியை, சேவல், மேல் எழப்பாய்ந்தும் கால் முள்ளால் அடித்தும் தலைகுனிந்தும் பலகாலும் வெகுண்டு சிறகரால் தாக்கியும் அலகினால் கொத்தியும் புறங்கண்ட பின்னரும், சினம் மாறாமல் 'மீண்டும் பொருதற்காம் கோழி உளதோ ?' என்று கருதி வரும் என்றவாறு]

50 தகர்வென்றி :

அருகுஓடி நீங்காது அணைதலும் இன்றித்
திரிகோட்ட மாஇரியச் சீறிப் — பொருகளம்
புக்கு மயங்கப் பொருது புறவாயை
நக்குமாம் நல்ல தகர். பு. ஒ. 7

[பெரிய ஆட்டுக்கிடாய், தன் பகைக்கிடாயின் அருகே ஓடி அகலாதும் அணுகாதும் நின்று, முறுக்கிய கொம்புடைய பகைத்தகர் கெட்டோடச் சினந்து அது மயங்கும்படி பொருகளத்தில் சினந்து தாக்கி வென்று, தன் புறவாயினை நாவினால் நக்கிக் கொண்டிருக்கும் என்றவாறு.]

51 யானை வென்றி :

கஞ்சுகம் வாய்த்த கவளம்தன் கைக்கொண்ட
குஞ்சரம் வென்ற கொலைவேழம் — துஞ்சாது
உழலையும் பாய்ந்திறுத்து ஓடாது தான்தன்
நிழலையும் தான்சுளிக்கும் நின்று. பு. ஒ. 8

கஞ்சுகம் — அட்டிமதுரம்.

[அதிமதுரம் இட்டு அமைத்த கவளத்தை மதம் மிகுவதற்கு உட்கொள்வதற்காகத் தன் துதிக்கையில் கொண்ட யானையை வென்ற கொலையானை, அச்சினம் மாறாமையால் உறக்கமும் கொள்ளாது, கணைய மரத்தை முறித்து, அவ்விடத்திலிருந்து நீங்குதலையும் செய்யாது, தன் நிழலைக் கண்டு வெகுண்டு அதனைத் துகைக்கும் என்றவாறு]

52 பூழ்வென்றி :

சொல்லும் சுவட்டவர் சொல்லுக சொல்லுங்கால்
சொல்லும் பலஉள சொன்னபின் — வெல்லும்
நலம்வர நாடி நடுங்காது நூற்கண்
புலவரால் ஆய்ந்தமைத்த பூழ். பு. ஒ. 9

சொல்லும் சுவட்டவர் — குறும்பூழாளிகள். சொல்லும் பலஉள என்பது, தீற்றும் அரிசி மந்திரம், பச்சிலை பிசைந்து தடவும் மந்திரம், செவியுள் உறுத்தும் மந்திரம் முதலியவாம்.

[பழக்கமில்லாத குறும்பூழ் ஆளிகள் தாம்விரும்பியவற்றைச் சொல்லுக. சொல்லவேண்டிய மந்திரச் சொற்கள் பலஉள. அம்மந்திரங்களை முறையாக ஓதின், நன்கு நூல்களை ஆய்ந்து நூலில்வல்ல புலவர் தேர்ந்து அமைத்த குறும்பூழே வெல்லும் என்றவாறு. தீற்றுதல்—உண்பித்தல்.]

53 சிவல்வென்றி :

ஒட்டியார் எல்லாம் உணரார் புடைத்தபின்
விட்டோட வேண்டுமோ தண்ணுமை—வீட்ட
சுவடுஏற்கும் ஆயின் சுடர்இழாய் சோர்ந்து
கவடுஏற்க ஓடும் களத்து. பு. ஒ. 10

[நம் சிவலோடு போட்டியிட வந்தவர் உண்மைநிலை உணராதவராவர். தண்ணுமையைப் புடைத்துப் போர் தொடங்கிய பின்னர், அவர்கள் தம் தண்ணுமையை வீட்டு ஓடுதல் வேண்டா; நம் சிவலைப் பார்த்த அளவிலேயே போரை நிறுத்திச் செல்க. இவர்கள் விட்ட சிவல் நம்சிவலை எதிர்க்குமாயின், போர்க்களத்தில் சோர்ந்து நம் சிவலின் கவட்டுள் புகுந்து ஓடிவிடும் என்றவாறு]

54 கிளிவென்றி :

இலநாம் உரைப்பதன்கண் எல்வளை நாணப்
பலநாள் பணிபதமும் கூறிச்—சிலநாளுள்
பொங்குஅரி உண்கணுள் பூவைக்கு மாறாகப்
பைங்கிளியைக் கற்பித்தாள் பாட்டு. பு ஒ. 11

[உண்கண்ணாளாகிய தலைவி பலநாளும் கற்பிக்க வேண்டிய செய்திகளைச் சிலநாளில் பயிற்றுவித்து, எல்வளையாளாகிய நீ நாணும்படி, நம் நாணவாய்ப் புள்ளுக்குப் போட்டியாகக் கிளிக்குக் கற்பித்துள்ள பாட்டில் குறை ஏதும் காண்டற்கு இன்று என்றவாறு. இது தமர் கூற்று.]

55 பூவை வென்றி :

புரிவொடு நாவினால் பூவை புணர்த்துப்
பெரிய அரியவை பேசும்—தெரிவளை
வெள்எயிற்றுச் செவ்வாய் வரிஉண்கண் ணாள்வளர்த்த
கிள்ளை கிளந்தவைகீண்டு இட்டு. பு. ஒ. 12

[நாகணவாய்ப்புள் விருப்பத்தோடு பெரிய அரிய சொற்களைச் சேர்த்துப் பேசி உண்கண்ணாள் வளர்த்த கிளியைச் சொற்போரில் கீழ்ப்படச் செய்யும் என்றவாறு.]

56 குதிரை வென்றி :

ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியையும்
கந்தும் மறமும் கறங்குஉளைமா—முந்துஉற
மேல்கொண் டவைசெலீஇ வென்வேலான் மேம்பட்டான்
வேல்கொண்ட கண்ணாளை மீட்டு. பு. ஒ. 13

கதி—தாரை. சாரியை—சுற்றுவரவு.

[வென்வேலான், ஐவகைச் செலவும் பதினெட்டு வகைச் சுற்றுவரவும் கழியப்பாய்தலும் வெகுளுதலும் தன்னால் கற்பிக்கப்பட்ட குதிரையை மேற்கொண்டு, பகைவரை அழித்துத் தான் பண்டு இழந்த வீரமகளை மீட்டு மேம்பட்டான் என்றவாறு.]

57 தேர்வென்றி :

ஒலிமணித் திண்தேர் உடையாரை வெல்லும்
கலிமணித் திண்தேரால் காளை—கலிமாப்

பலஉடன் பூட்டிப் படர்சிறந்து ஐந்து
செலவொடு மண்டிலம் சென்று. பு. ஒ. 14

[இக்காளை, மணி ஒலிக்கும் திண்தேரிலே குதிரை பல பூட்டி, செல்லுதலில் மேம்பட்டு ஐவகைச்செலவும் பதினெட்டு வகைச் சுற்றுவரவும் சென்று, ஒலி மணித்திண்டேர்ப் பகைவரை வெல்லுவான் என்றவாறு.]

58 சூதுவென்றி :

கழகத்து இயலும் கவற்றின் நிலையும்
அளகத் திருநுதலாள் ஆய்ந்து — புழகத்துப்
பாய வகையால் பணிதம் பலவென்றாள்
ஆய வகையும் அறிந்து. பு. ஒ. 16

பணிதம் — ஒட்டம்.

[அளகத்தை உடைய இத்திருநுதலாள், புகழை உடைய தன் மனையிடத்துச் சூதின் இயல்பையும் சூதாடுகாய்கள் இயல்பையும் ஆராய்ந்து, முறைப்படி அறிந்து வெல்லும் உபாயத்தால் பலபந்தயப் பொருள்களையும் வென்றாள் என்றவாறு.

புகழகத்து என்பது புழகத்து என விகாரப்பட்டது. பாயம் உபாயம் என்பதன் முதற்குறை.]

59 யாழ்வென்றி :

பாலை படுமலை பண்ணி அதன்கூட்டம்
கோலம்செய் சீறியாழ் கொண்டபின் — வேலைச்
சுவைஎலாம் தோன்ற எழீஇயினாள் சூழ்ந்த
அவையெலாம் ஆக்கி அணங்கு. பு. ஒ. 15

[இவ்வணங்கு, படுமலைப்பாலையையும் அதன் இனமாகிய ஏனைப் பாலைகளையும் ஆக்கி அழகிய யாழைத் தன் கையில் கொண்டவுடன், சுற்றியிருந்த அவையத்தார் தன் இசை

யில் ஈடுபடும்படி, அமுதம் போன்ற சுவை தோன்ற, தான் கூட்டி வைத்த பாலைப்பண்ணினை எழுப்பினாள் என்றவாறு.]

60 பாடல் வென்றி :

வண்டுஉறையும் கூந்தல் வடிக்கண்ணாள் பாடினாள்
வெண்டுறையும்செந்துறையும்வேற்றுமையாக்—கண்டறியக்
கின்னரம் போலக் கிளைஅமைந்த தீந்தொடையாழ்
அந்நரம்பும் அச்சுவையும் ஆய்ந்து. பு. ஒ. 18

[வடிக்கண்ணாள் ஆகிய பாடினி கின்னரத்தின் ஒலி போன்ற இனிய நரப்புக்கட்டினை உடைய யாழின் நரம்புகளையும் சுவைகளையும் ஆராய்ந்து, செந்துறை வெண்டுறை என்ற இசைப்பாவகைகளை, அவற்றின் வேற்றுமையை அவையோர் அறியுமாறு, யாழ் ஒலிக்கும் மிடற்றொலிக்கும் வேறுபாடு தோன்றாத வகையில் பாடினாள் என்றவாறு.]

61 ஆடல் வென்றி :

கைகால் புருவம்கண் பாணி நடைதூக்குக்
கொய்பூங் கொம்பன்னாள் குறிக்கொண்டு —பெய்பூப்
படுகளிவண்டு ஆர்ப்பப் பயில்வளை நின்று ஆடும்
தொடுகழல் மன்னன் துடி. பு. ஒ. 17

[பூங்கொம்பு அன்னாளாகிய வளையலை அணிந்த இவ் விறலி, தான் அணிவிக்கப்பட்ட மாலைக்கண் வண்டுகள் ஒலிப்ப, மன்னன் ஆணையிட்ட துடிக்கூத்தினை, கைகால் புருவம் கண் இவற்றால் தாளத்தையும் செலவையும் இசையையும் கருதிக்கொண்டு ஏற்ப ஆடுகிறாள் என்றவாறு.]

62 பிடிவென்றி :

குவளை நெடுந்தடங்கண் கூர்எயிற்றுச் செவ்வாய்
அவளொடு மாமைஒப் பான—இவளொடு

பாணியும் தூக்கும் நடையும் பெயராமைப்
பேணிப் பெயர்ந்தாள் பிடி. பு. ஒ. 19

பிடிபோலப் பெயர்ந்து ஆடலின் பிடிவென்றி ஆயிற்று.

[குவளைத்தடங்கண் கூர்எயிற்றுச் செவ்வாய் இவற்றை உடைய திருமகளோடு நிறத்தானும் ஒத்த கூத்தி, இக்கூத்தியுடன் தாளமும் இசையும் இயக்கமும் தப்பாதபடி பிடிக் கூத்தினை ஆடினாள் என்றவாறு.

பிடிபோல அசைந்து ஆடுதலின், பிடிக்கூத்திற்குப் 'பிடி' என்பது ஆகுபெயர்.]

ஆண்பால் கூற்றுக் கைக்கிளை

காட்சி[1] ஐயம்[2] துணிவே[3] உட்கோள்[4]
பயந்தோர்ப் பழிச்சல்[5] நலம்பா ராட்டல்[6]
நயப்புற்று இரங்கல்[7] புணரா இரக்கம்[8]
வெளிப்பட இரத்தல்[9] என்றுஇவ் வொன்பதும்
ஆண்பால் கூற்றுக் கைக்கிளை ஆகும். பு. வெ. சூ. 14

[கைக்கிளை பெருந்திணை இரண்டனையும் அகத்திணையாகவே கோடல் வேண்டும் என்று கூறும் இவ்வாசிரியர், இவற்றைப் புறத்திணைஒழிபாகக் கொண்டு, புறப்பொருள் வெண்பாமாலையை ஒட்டியே கூறுவது பிறன்கோட் கூறலாகவே கொள்ளுதல் தக்கது அகத்திணையியலில் விளக்கப் பெறாத கைக்கிளை பெருந்திணைத்துறைகள், இவ்வாசிரியரால், அகம் புறம் ஆகிய பொருள் இறுதிக்கண் அகத்திணைப் பகுதியாக உரைக்கப்பட்டன எனினும் ஆம்.]

காட்சி :

' சுரும்புஇவர் பூம்பொழில் சுடர்வேல் காளை
கருந்தடங் கண்ணியைக் கண்டு நயந் தன்று '. பு. கை. ஆ. 1

கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய்த் தளிரா
அரும்புஇவர் மென்முலை தொத்தாப் — பெரும்பணைத்தோள்
பெண்தகைப் பொலிந்த பூங்கொடி
கண்டேம் காண்டலும் களித்தாம் கண்ணே. பு. கை. ஆ. 1

[கண்ணே வண்டாகவும் வாயே தளிராகவும் முலையே பூங்கொத்தாகவும், பணைத்தோளும் பெண்தகையும் கொண்டு பொலிந்த பூங்கொடியினைக் காண்டலும் எம் கண்கள் களித்தன என்றவாறு.

பெண்தகைப் பூங்கொடி கண்டேம் என்பது துறைச் செய்தி.]

ஐயம் :

'கல்நவில் தோளான் கண்டபின் அவளை
இன்னள்என்று உணரான் ஐயம்உற் றன்று'. பு. கை. ஆ. 2

தாமரைமேல் வைகிய தையல்கொல் தாழ்தளிரின்
காமருவும் வானோர்கள் காதலிகொல் — தேமொழி
மைஅமர் உண்கண் மடந்தைகண்
ஐயம் ஒழியாது ஆழும்என் நெஞ்சே. பு. கை. ஆ 2

[தாமரையில் தங்கிய திருமகளோ, கற்பகச் சோலையில் வைகும் வானோர் காதலியோ, இனியமொழியினையும் உண் கண்ணினையும் உடைய இம்மடந்தைதிறத்து ஐயம் நீங்காது என் நெஞ்சம் வருந்தும் என்றவாறு.

மடந்தைகண் என் நெஞ்சு ஒழியாது ஆழும் என்பது துறைச்செய்தி]

துணிவு :

' மாநிலத்து இயலும் மாத ராம்எனத்
தூமலர்க் கோதையைத் துணிந்துஉரைத் தன்று '
பு. கை. ஆ. 3

திருநுதல் வேர்அரும்பும் தேங்கோதை வாடும்
இருநிலம் சேவடியும் தோயும்—அரிபரந்த
போகுஇதழ் உண்கணும் இமைக்கும்
ஆகும் மற்றுஇவள் அகல்இடத்து அணங்கே
பு. கை. ஆ. 3

[நுதலில் வியர்வை துளிக்க, சூடியமாலை வாடச் சிவந்த அடிகள் நிலம் தோய உண்கண் இமைத்தலின், இவள் இந் நிலவுலக மகளேயாவாள் என்று தெளிந்தவாறு.

இவள் அகல்இடத்து அணங்கே ஆகும் என்பது துறைச் செய்தி.]

உட்கோள் :

'இணர்ஆர் கோதைஎன் நெஞ்சத்து இருந்தும்
உணராள் என்னைஎன உட்கொண் டன்று.'
பு. கை. ஆ. 4

கவ்வை பெருகக் கரந்துஎன் மனத்திருந்தும்
செவ்வாய்ப் பெருந்தோள் திருநுதலாள்—அவ்வாயில்
அஞ்சொல் மாரிபெய்து அவியாள்
நெஞ்சம் பொத்தி நிறைசுடும் நெருப்பே. பு.கை.ஆ.4

எனக்குத் துன்பம் மிகுமாறு, என் மனத்தகத்து இடம் பெற்றும், இத்திருநுதலாள் தன் சொல்மாரியால் என் நெஞ் சத்தில் மூண்டு என் அடக்கத்தைச் சுட்டு எரிக்கும் காமத்தீ யை அவித்தலைச்செய்யாது உள்ளாளே என்றவாறு.

திருநுதலாள் தன் சொல்மாரியால் என் நெஞ்சம் பொத் திய நெருப்பு அவியாள் என்பது துறைச்செய்தி.]

பயந்தோர்ப் பழிச்சல் :

'இவட்பயந்து எடுத்தோர் வாழியர் நெடிதுஎன
அவட்பயந் தோரை ஆனாது புகழ்ந்தன்று'
பு. கை. ஆ. 5

கல்அருவி ஆடிக் கருங்களிறு கார்அதிரும்
மல்லல்அம் சாரல் மயில்அன்ன—சில்வளைப்
பலஒலி கூந்தலைப் பயந்தோர்
நிலவரை மலிய நீடுவா ழியரே. பு. கை. ஆ. 5

[கல்லிலிருந்து வீழும் அருவியில் நீராடிக் களிறுகள் கார்மேகம் போலப் பிளிறும் மலைப்பக்கத்து மயிலை ஒத்த இச்சிலவளையல்களையும் ஐம்பாலாகிய கூந்தலையும் உடைய தலைவியைப் பயந்தோர் இவ்வுலகில் சிறப்பொடு நீடுவாழ்க என வாழ்த்தியவாறு.

மயிலைப் பயந்தோர் நிலவரை மலிய நீடு வாழியர் என்பது துறைச்செய்தி.]

நலம் பாராட்டல் :

'அழிபடர் எவ்வம் கூர ஆயிழை
பழிதீர் நன்னலம் பாராட் டின்று.' பு. கை. ஆ. 6

அம்மென் கிளவி கிளிபயில ஆயிழை
கொம்மை வரிமுலை கோங்கரும்ப—இம்மலை
நறும்பூஞ் சாரல் ஆங்கண்
குறுஞ்சுனை மலர்ந்தன தடம்பெருங் கண்ணே.

பு. கை. ஆ 6

[இவள் இனிய சொற்களைக் கிளிகள் பயில்கின்றன. இவள் திரண்ட தேமல் படர்ந்த முலை போலக் கோங்குகள் அரும்புகின்றன. நறிய பூக்களை உடைய மலைச்சாரலில் உள்ள சுனைகள், இவள் கண்களைப் போலக் குவளைப் பூக்கள் மலரும் இடமாய் உள்ளன என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

நயப்புற்று இரங்கல் :

'கொய்தழை அல்குல் கூட்டம் வேண்டி
எய்துதல் அருமையின் இறப்பப் புகழ்ந்தன்று.' பு. கை. ஆ. 7

பெருமட நோக்கின் சிறுநுதல் செவ்வாய்க்
கருமழைக்கண் வெண்முறுவல் பேதை — திருமுலை
புல்லும் பொறியி லேனுழை
நில்லாது ஓடும்என் நிறைஇல் நெஞ்சே. பு. கை. ஆ. 7

[மடநோக்கம் சிறுநுதல் செவ்வாய் மழைக்கண் வெண் பற்கள் இவற்றை உடைய தலைவியின் மார்பினைப் புல்லும் நல்வினை இலேனாகிய என்னை விடுத்து என் நெஞ்சம் அவள் பக்கமே ஓடா நிற்கின்றது எனத் தலைவன் இரங்கியவாறு.

பேதையைப் புல்லும் பொறியிலேன் நெஞ்சு நில்லாது ஓடும் என்பது துறைச்செய்தி.]

புணரா இரக்கம் :

'உணரா எவ்வம் பெருக ஒளிஇழைப்
புணரா இரக்கமொடு புலம்புதர வைகின்று', பு. கை. ஆ. 8

இணர்ஆர் நறுங்கோதை எல்வளையாள் கூட்டம்
புணராமல் பூசல் தரவும் — உணராது
தண்டா விழுப்படர் நலியவும்
உண்டால் என்உயிர் ஓம்புதற்கு அரிதே. பு. கை. ஆ 8

[பூங்கொத்துக்களாலாகிய நறிய மாலையை அணிந்த ஒளி பொருந்திய வளையினை உடைய தலைவி, தொடர்புகொள்ளாமல் துன்பம் தரவும், அவள் அருமை உணராது கெடாத நினைப்பு என்னைத் துன்புறுத்தவும், என் உயிரைத் தளராமல் பாதுகாத்தல் அரியதாயுள்ளது என்று தலைவன் இரங்கிய வாறு.

புணராப் படர் நலிய என் உயிர் ஓம்புதற்கரிது என்பது துறைச்செய்தி.]

வெளிப்பட இரத்தல் :

‘ அந்தழை அல்குல் அணிநலம் புணரா
வெந்துயர் பெருக வெளிப்பட இரந்தன்று.’
பு. கை. ஆ. 9

உரவுஒலி முந்நீர் உலாய்நிமிர்ந் தன்ன
கரவுஅரு காமம் கனற்ற—இரவுஎதிர
முள்எயிறு இலங்கு முகிழ்நகை
வெள்வளை நல்காள் விடும்என் உயிரே. பு.கை. ஆ. 9

[கடலே பொங்கி எழுந்தாற் போல மறைத்தற்கு அரிய காமநோய் வெதுப்புகையினாலே யான் தனது அருளினை வேண்டி இரக்கவும், இம்முள்எயிற்று வெள்வளையாள் என்னை விரும்பாதவளாய் இருத்தலின், என் உயிர் நீங்குதல் ஒருதலை என்று தலைவன் கூறியவாறு.

வெள்வளை இரவு எதிரவும் நல்காள் என்பது துறைச் செய்தி. நல்குதல்—விரும்புதல்.]

பெண்பால் கூற்றுக் கைக்கிளை

காண்டல்[1] நயத்தல்[2] உட்கோள்[3] மெலிதல்[4]
மெலிவொடு வைகல்[5] காண்டல் வலித்தல்[6]
பகல்முனிவு உரைத்தல்[7] இரவுநீடு பருவரல்[8]
கனவின் அரற்றல்[9] நெஞ்சொடு மெலிதல்[10]
பெண்பால் கூற்றுக் கைக்கிளை ஆகும். பு. வெ. சூ. 15

[இப்பத்துத் துறைகளும் பெண்பாற்கூற்றுக் கைக்கிளைத் துறைகளாம். கைக்கிளைக்கு மருட்பா சிறந்தது ஆதலின், உதாரணச் செய்யுட்கள் மருட்பாவாய் யாக்கப்பட்டுள்ளன.]

காண்டல் :

‘ தேன்பாய் தெரியல் விடலையைத் திருநுதல்
காம்புஏர் தோளி கண்டுசோர்ந் தன்று ’. பு. கை. பெ, 1

கடைநின்று காமம் நலியக் கலங்கி
இடைநின்ற ஊர்அலர் தூற்றப் — புடைநின்ற
எற்கண் டிலன்நம் நெடுந்தகை
தற்கண் டனன்யான் கண்ட வாறே. பு. கை. பெ. 1

[நம் நெடுந்தகை, என்பால் காமம் நலியக் கலங்கி, ஊரவர் பழிமொழி கூறவும் அதனையும் பொருட்படுத்தாது, தன் பக்கலில் நின்ற என்னைக் கண்டானல்லன். யானே அவனைக் கண்டேன் என்றவாறு.

நெடுந்தகை எற்கண்டிலன்; யானே தற்கண்டனன் என்பது துறைச்செய்தி.]

நயத்தல் :

'கல்நவில் திணிதோள் காளையைக் கண்ட
நன்னுதல் அரிவை நயப்புஉரைத் தன்று.' பு. கை. பெ. 2

கல்நவில் தோளானைக் காண்டலும் கார்க்குவளை
அன்னஎன் கண்ணுக்கு அமுதமாம் — என்னை
மலைமலிந் தன்ன மார்பம்
முலைமலிந்து ஊழ்ஊழ் முயங்குங் காலே. பு. கை பெ. 2

[மலையை ஒத்த தோள்களை உடைய தலைவனைக் காண்பதும் குவளை அன்ன என் கண்களுக்கு அமுதமாகும். அவன் மலையை ஒத்த மார்பத்தை யான் முறையே தழுவுங்கால் எத்தகைய இன்பம் கிட்டும் ? என்றவாறு.

தோளானைக் காண்டலும் அமுதமாம்; அவன் மார்பம் முயங்குங்கால் யாதாம் என்பது துறைச்செய்தி.]

உட்கோள் :

'வண்டுஅமர் குஞ்சி மைந்தனை நயந்த
ஒண்தொடி அரிவை உட்கோண் டன்று.'

பு. கை. பெ. 3

உள்ளம் உருக ஒளிவளையும் கைந்நில்லா
கள்அவிழ் தாரானும் கைக்குஅணையான்—எள்ளிச்
சிறுபுன் மாலை தலைவரின்
உறுதுயர் அவலத்து உயலோ அரிதே. பு.கை.பெ, 3

[உள்ளம்உருக, வளைகள் கழலவும், தலைவன் என்கைக்குக் கிடைப்பான் அல்லன். சிறு புன்மாலைவரின் ஏற்படும் மிக்க துயரத்திலிருந்து பிழைத்தல் அரிதாம் என்றவாறு.

தோளான் கைக்குஅணையான் ஆதலின் மாலை அவலத்து உய்தல் அரிது என்பது துறைச்செய்தி.]

மெலிதல் :

'ஒன்றார் கூறும் உறுபழி நாணி
மென்தோள் அரிவை மெலிவொடு வைகின்று'
பு. கை. பெ. 4

குரும்பை வரிமுலைமேல் கோல நெடுங்கண்
அரும்பிய வெண்முத்து உகுப்பக்—கரும்புஉடைத்தோள்
காதல் செய் காமம் கனற்ற
ஏதிலாளற்கு இழந்தனென் எழிலே. பு. கை. பெ. 4

[குரும்பையைப் போன்ற தேமல் படர்ந்த மார்பில் கண்கள் உகுத்த கண்ணீர்த்துளிகள் சிதறி வீழ, தோள்களைக் காமம் சுட்டு மெலிவிக்க, என் மாட்டு அயன்மையை உடைய தலைவன் நினைவால் என் அழகினை இழந்தேன் எனத் தலைவி வருந்தியவாறு.

கண்முத்து உகுப்பத் தோளைக் காமம் கனற்ற ஏதிலாளற்கு என் நலன் இழந்தேன் என்பது துறைச்செய்தி.]

மெலிவொடு வைகல் :

'மணிவளை நெகிழ மாண்நலம் தொலைய
அணிஇழை மெலிவின் ஆற்றல் கூறின்று.' பு. கை. பெ. 5

பிறைபுரை வாள்நுதல் பீர்அரும்ப மென்தோள்
இறைபுனை எல்வளை ஏக—நிறைபுணையா
யாம நெடுங்கடல் நீந்துவேன்
காம ஒள்எரி கனன்றுஅகம் சுடுமே. பு. கை. பெ. 5

[பிறைநுதல் ஒளிஇழந்து பசலைபாய, தோளில் புனைந்த ஒளியுடைய வளைகள் கழல, என் அடக்கத்தையே தெப்பமாகக்கொண்டு இரவாகிய கடலைக் கடக்கும் என் நெஞ்சத்தைக் கொடிய காமத்தீயானது சுட்டெரிக்கிறது என்றவாறு.

நுதல் பீர் அரும்ப வளை ஏகக் காமம் நெஞ்சு சுட யாமம் நீந்துவேன் என்பது துறைச்செய்தி.]

காண்டல் வலித்தல் :

'மைவரை நாடனை மடந்தை பின்னரும்
கைவளை சோரக் காண்டல் வலித்தன்று.'
பு. கை. பெ. 6

வேட்டவை எய்தி விழைவுஒழிதல் பொய்போலும்
மீட்டும் மிடைமணிப் பூணுனைக்—காட்டுஎன்று
மாமை பொன்நிறம் பசப்பத்
தூமலர் நெடுங்கண் துயில்துறந் தனவே.
பு கை பெ. 6

[பண்டு கண்ட தலைவனை மீண்டும் காணவேண்டும் என்று, என் அழகில் பசலை பாய, என் நெடுங்கண் துயில் துறந்து வற்புறுத்தலால், 'விரும்பிய பொருளை ஒருகால் பெற்றால் விருப்பம் தீரும்' என்ற முதுமொழி என் அளவில் பொய் போலும் என்றவாறு.

பூணுனைக்காட்டு என்று கண் துயில் துறந்தன என்பது துறைச்செய்தி.]

பகல் முனிவு உரைத்தல் :

' புரிவளை நெகிழப் புலம்பொடு நின்றோள்
பருவரல் உள்ளமொடு பகல்முனிவு உரைத்தன்று .'
பு. கை பெ. 7

தன்கண் அளிஅவாய் நின்றேற்குத் தார்விடலை
வன்கண்ணன் நல்கான் எனவாடும் — என்கண்
இடரினும் பெரிதால் எவ்வம்
படரினும் பெரிதால் பாவிஇப் பகலே. பு. கை. பெ. 7

[தன் அருளை நாடி நிற்கும் எனக்குக் கல்நெஞ்சன் ஆகிய தலைவன் கருணை செய்யவில்லையே என்று வாடும் வாட்டத்தினும், அயலார் பழிச்சொல் பெரிதாயிற்று. என் நினைப்பை விட இப் பகற்காலம் நீண்டுள்ளது.

படரினும் பெரிதால் பாவி இப்பகலே என்பது துறைச் செய்தி.]

இரவு நீடு பருவரல் :

' புலம்பொடு வைகும் பூங்குழை கங்குல்
கலங்கினேன் பெரிதுஎனக் கசிந்து உரைத்தன்று '.
பு. கை. பெ. 8

பெண்மேல் நலிவு பிழைஎன்னாய் பேதுஉறீஇ
விண்மேல் இயங்கும் மதிவிலக்கி — மண்மேல்
நினக்கே செய்பகை எவன்கொல்
எனக்கே நெடியை வாழியர் இரவே. பு. கை. பெ. 8

[இரவே ! பெண்களைத் துன்புறுத்துதல் தவறு என்று நீ கருதாயோ ? வானத்தில் இயங்கும் திங்களைச் செல்லாமல் தடுத்து, எனக்கே நீ நீண்டு துயர் செய்வதற்கு, யான் நினக்கு என்ன தீங்கு செய்துள்ளேன் ? என்றவாறு.
வாழியர் — குறிப்புமொழி.

'எனக்கே நெடியை வாழியர் இரவே' என்பது துறைச் செய்தி.]

கனவின் அரற்றல் :

'ஒண்தொடி மடந்தை உருகெழு கங்குலில்
கண்டவன் கரப்பக் கனவின் அரற்றின்று.'

பு. கை. பொ. 9

அயர்வொடு நின்றேன் அரும்படர்நோய் தீர
நயம்வரும் பள்ளிமேல் நல்கிக்—கயவா
நனவுஇடைத் தமியேன் வைகக்
கனவுஇடைத் தோன்றிக் கரத்தல்நீ கொடிதே.

பு. கை. பொ. 9

[கயவனே ! மனத்தளர்வோடு நின்ற என் காமநோய் தீர விருப்பம் தரும் படுக்கையில் என்னோடு விரும்பித்தங்கி, பின்கனவு நீங்கிய அளவில் நனவிலே நான் தனியளாய் இருக்குமாறு, நீ கனவில் வந்து நனவில் மறைதல் கொடிய செயலாகும் என்றவாறு.

கயவா ! கனவிடைத் தோன்றிக் கரத்தல் கொடிதே என்பது துறைச்செய்தி.]

கனவின் அரற்றலின் பக்கம் ;

'பெய்வளை அவனொடு பேணிய கங்குல்
உய்குவன் வரின்என உரைப்பினும் அதுவே.'

பு. கை. பொ. 10

தோடுஅலர்தார் யானும் தொடர அவனும்எம்
பாடகச் சீறடியின் மேல்பணிய—நாடகமா
வைகிய கங்குல் தலைவரின்
உய்குவன் உலகத்து அளியேன் யானே.

பு. கை. பொ. 10

[அவன் மாலை செவ்வி அழிந்தமை குறித்து யானும் ஊடிநிற்ப அவனும் என் ஊடல் தீர்ப்பப் பாடகம் அணிந்த என்சிறிய அடிகளில்பணிய, சுவையாகக் கனவு காணும் இரவுப்பொழுது வரின், இரங்கத்தக்க யான் உயிர் பிழைத்தல் கூடும் என்றவாறு.

நாடகமா வைகிய கங்குல்வரின் உய்குவன் யானே என்பது துறைச்செய்தி]

நெஞ்சொடு மெலிதல் :

' அம்சோல் வஞ்சி அல்இருள் சேலீஇய
நெஞ்சொடு புகன்ற நிலைஉரைத் தன்று '. பு. கை. பெ. 11

மல்ஆடு தோளான் அளிஅவாய் மால்இருட்கண்
செல்லாம் ஒழிக செலவுஎன்பாய் — நில்லாப்
புனை இழை இழந்த பூசல்
நினையினும் நினைதியோ வாழிஎன் நெஞ்சே.
பு. கை. பெ. 11

[நெஞ்சே ! ' தலைவனது தண்ணளியை விரும்பி மயக்கந்தரும் இருளில் மகளிராகிய யாம் செல்லக் கடவேம் அல்லேம் ஆதலின், நீ செல்லுதல் வேண்டா ' என்று எனக்குக் கூறி, நீ மாத்திரம் சென்று விடுகிறாய். நான் அவனால் அணிகலன்களை இழந்த ஆரவாரத்தை நீ நினைத்தலைச் செய்தாயோ ? நீ மாத்திரம் வாழி ! என்றவாறு.

நெஞ்சொடு மெலிதலின் பக்கம் :

' வரிவளை நெகிழ்த்தோன் முன்சேல வலித்தேன்
அரிவையர் அறிகஎன உரைப்பினும் அதுவே '. பு. கை. பெ. 12

நல்வளை ஏக நலம்தொலைவு காட்டிய
செல்லல் வலித்தேன்அச் செம்மல்முன்பு — இல்லாத
வம்ப உரையொடு மயங்கிய
அம்பல் பெண்டிரும் அறைகஎம் அலரே. பு. கை. பெ. 12

[வளைகழலுமாறு என் வனப்புக்கெட்ட கேட்டினை என் தலைவனுக்குக் காட்டுதற்குப் புறப்படத் துணிந்துவிட்டேன். இல்லாததையும் பழிதூற்றும் பழிபேசும்பண்பினை உடைய பெண்கள் தடையின்றிப் பழி கூறுக என்றவாறு.

செம்மல் முன் செல்லல் வலித்தேன்; அம்பல் பெண்டிர் அறைக என் அலரே என்பது துறைச்செய்தி.]

இங்குள்ள பெருந்திணை, பெண்பாற்கூற்று, இருபாற் கூற்று என இருவகைத்து.

பெண்பால் கூற்றுப் பெருந்திணை

வேட்கைமுந் துறுத்தல்[1] பின்னிலை முயறல்[2]
பிரிவிடை ஆற்றல்[3] வரவுஎதிர்ந்து இருத்தல்[4]
வாராமைக்கு அழிதல்[5] இரவுத்தலைச் சேறல்[6]
இல்லவை நகுதல்[7] புலவியுள் புலம்பல்[8]
பொழுதுகண்டு இரங்கல்[9] பாத்தை ஏசல்[10]
கண்டுகண் சிவத்தல்[11] காதலில் களித்தல்[12]
கொண்டுஅகம் புகுதல்[13] கூட்டத்துக் குழைதல்[14]
ஊடலுள் நெகிழ்தல்[15] உரைகேட்டு நயத்தல்[16]
பாடகச் சீறடி பணிந்தபின் இரங்கல்[17]
பள்ளிமிசைத் தொடர்தல்[18] செல்கஎன விடுத்தல்என[19]
ஒன்பதிற்று இரட்டியோடு ஒன்றும் உளப்படப்
பெண்பால் கூற்றுப் பெருந்திணைப் பால. பு. வெ. சூ. 16

[வேட்கை முந்துறுத்தல் முதலாகச் செல்க என விடுத்தல் ஈறுகக் கூறப்பட்ட பத்தொன்பதும் பெருந்திணைக்கு உரிய பெண்பாற்கிளவிகளாம்.

இவற்றைக் கூறுதற்கு அகத்திணைக்கண் இடம் இன்மையின், பொருட் கூற்றின் இறுதியில் இவற்றை ஒழிபாகச் சேர்த்தார் என்பது.]

வேட்கை முந்துறுத்தல் :

'கைஒளிர் வேலவன் கடவக் காமம்
மெய்வளைத் தோளி முந்துற மொழிந்தன்று.'
பு. பெ. பெ. 1

எழுதுஎழில் மார்பம் எனக்குஉரித் தாகவென்று
அழுதழுது வைகலும் ஆற்றேன்—தொழுதுஇரப்பல்
வல்லியம் அன்ன வயவேலோய் ! வாழ்கான
அல்லியந்தார் நல்கல் அறம். பு. பெ. பெ. 1

['புலியை ஒத்த வலிய வேலோனே! நின்மார்பம் எனக்கு உரியதாகுக' என்று அழுதுஅழுது ஆற்றாமை மிக்க யான் தொழுது இரப்ப, யான் வாழ்வதற்குத் தலைவன் தன் மாலையை நல்குதலே அறமாகும் என்றவாறு.

வேலோய் ! நின்மார்பம் எனக்கு உரித்தாக நின்தாரினை நல்கல் அறமாகும் என்பது துறைச்செய்தி.]

பின்னிலை முயறல் :

'முன்இழந்த நலன்நசைஇப்
பின்னிலை மலைந் தன்று.' பு. பெ. பெ. 2

மற்கொண்ட திண்தோள் மறவேல் நெடுந்தகை
தற்கண்டு மாமைத் தகைஇழந்த—எற்காணப்
பெய்களி யானைப் பிணரெருத்தில் கண்டுயான்
கைதொழுதேன் தான்கண் டிலன். பு. பெ. பெ. 2

[வலிய தோளினை உடைய நெடுந்தகையாகிய தன்னைக் கண்டு மாமை அழகிழந்த என்னைக் காண்பான் என்று யானைஎருத்தின் மேலானாய் வந்த தலைவனைக் கண்டு யான் கைதொழவும், அவன் என்னைக் கண்டான்அல்லன் என்றவாறு.

நெடுந்தகையை ஒருகால் கண்டு மாமை இழந்து மீண்டும் கண்டு கைதொழவும் தான் கண்டிலன் என்பது துறைச் செய்தி]

பிரிவிடை ஆற்றல் :

' இறைவளை நெகிழ இன்னாது இரங்கிப்
பிறைநுதல் மடந்தை பிரிவிடை ஆற்றின்று.' பு. பெ. பெ. 3

ஓடுக கோல்வளையும் ஊரும் அலர்அறைக
தோடுஅவிழ் தாழை துறைகமழக்— கோடுஉடையும்
பூங்கானல் சேர்ப்பன் புலம்புகொள் மால்மாலை
நீங்கான்என் நெஞ்சத்துள் நின்று. பு. பெ. பெ. 3

[தாழை கடற்கரையில் சங்கு போல மலரும் கடற்கரைத் தலைவன் தனிமைத் துயர்தரும் மாலையில் என் மனத்தினின்றும் நீங்கான் ஆதலின், வளைநெகிழ்ச்சியும் ஊரார் தூற்றும் அலரும் பற்றி யான் கவலேன் என்றவாறு.

வளை நெகிழவும் ஊர் அலர் தூற்றவும் மாலையில் இறை நெஞ்சத்துள் நின்று நீங்கான் ஆதலின் ஆற்றுவல் என்பது துறைச்செய்தி.]

வரவு எதிர்ந்து இருத்தல் :

' முகைபுரை முறுவல் முள்எயிற்று அரிவை
வகைபுனை வளமனை வரவுஎதிர்ந் தன்று'. பு. பெ. பெ. 4

காம நெடுங்கடல் நீந்துங்கால் கைபுனைந்த
பூமலி சேக்கைப் புணைவேண்டி — நீமலிந்து
செல்லாய் சிலம்பன் வருதற்குச் சிந்தியாய்
எல்லாக நெஞ்சம் எதிர் பு. பெ. பெ. 4

[நெஞ்சே! பூக்கள் மலிந்த சேக்கையிலே யான் காமக் கடலை நீந்துதற்குத் தெப்பமாகச் சிலம்பன் வருதற்கு நீ சிந்தியாய் என்பது துறைச்செய்தி.]

வாராமைக்கு அழிதல் :

‘ நெடுவேய்த் தோளி நிமித்தம் வேறுபட
வடிவேல் அண்ணல் வாராமைக்கு அழிந்தன்று ’
பு. வெ. வெ. 5

நுடங்குஅருவி ஆர்த்திழியும் நோக்கருஞ் சாரல்
இடங்கழி மால்மாலை எல்லைத்—தடம்பெருங்கண்
தார்ஆர மார்பன் தமியேன் உயிர்தளர
வாரான்கொல் ஆடும் வலம். பு. வெ. வெ. 5

[என் வலக்கண் தீ நிமித்தமாகத் துடிக்கிறது. அருவி ஆர்த்து இழியும் அழகிய மலைப்பக்கத்திலே மயக்கம் தரும் இம்மாலைப்பொழுதில் தார்மார்பன் என் உயிர் தளருமாறு வாராது விடுவான்போலும்.

தடம் பெருங்கண் வலம் ஆடும்; மார்பன் என் உயிர் தளர வாரான்கொல் என்பது துறைச்செய்தி.]

இரவுத் தலைச்சேறல் :

‘ காண்டல் வேட்கையொடு கனைஇருள் நடுநாள்
மாண்ட சாயல் மனைஇறந் தன்று’. பு. வெ. வெ. 6

பணையாய் அறைமுழங்கும் பாய்அருவி நாடன்
பிணைஆர மார்பம் பிணையத்—துணையாய்க்
கழிகாமம் உய்ப்பக் கனைஇருட்கண் செல்வேன்
வழிகாண மின்னுக வான். பு. வெ. வெ. 6

[அருவிநாடனுடைய ஆரம் சூடிய மார்பினைத் தழுவுவதற்குத் துணையாகக் காமம் என்னைச் செலுத்தி வர, யான் இருட்கண் செல்லுதற்கு வழி காண, வானம் மின்னுவதாக என்றவாறு.

நாடன் மார்பம் பிணைய இருட்கண் யான் செல்ல வான் மின்னுக என்பது துறைச்செய்தி.]

இல்லவை நகுதல் :

' இல்லவை சொல்லி இலங்குஎயிற்று அரிவை
நல்வயல் ஊரனை நகைமிகுத் தன்று '. பு. வெ. வெ. 7

முற்று முலையார் முயங்க இதழ்குழைந்த
நற்றார் அகலம் நகைதரலின் — நற்றார்
கலவேம்'எனநேர்ந்தும் காஞ்சிநல் லூர
புலவேம் பொறுத்தல் அரிது பு. வெ. வெ. 7

[பரத்தையர் முயக்கத்தால் இதழ் வாடிய நின் மாலையை அணிந்த மார்பு எமக்குச் சிரிப்பைத் தருதலின் நின் மார்பினைத் தழுவேம் என நினைத்தாலும், ஊரனே ! எமக்குக் காம நோயைப் பொறுத்தல் அரிதாகலின், நின்னோடு ஊடேம் என்றவாறு.

பரத்தையர் முயங்கக் குழைந்த நின் நற்றார் நகைதரும் என்பது துறைச்செய்தி.]

புலவியுள் புலம்பல் :

' கலவளை மடந்தை நற்றார் பரிந்து
புலவி ஆற்றாள் புலம்புற் றன்று '. பு. வெ. வெ. 8

ஓங்கிய வேலான் பணியவும் ஒள்ளிழை
தாங்காள் வரைமார்பின் தார்பரிந்து — ஆங்கே
அரும்படர் மூழ்கி அமைமென்தோள் வாட
நெடும்பெருங்கண் நீந்தின நீர். பு. வெ. வெ. 8

[தலைவன் பணியவும், தலைவி வெகுளியால் அவன் மார்பின் மாலையை அறுத்துத் துயரத்தில் அழுந்தி, தோள் வாடக் கண்ணீர் உகுத்தாள் என்பது துறைச்செய்தி]

பொழுதுகண்டு இரங்கல் :

' நிற்றல் ஆற்றாள் நெடிதுஉயிர்த்து அலமரும்
பொற்றொடி அரிவை பொழுதுகண்டு இரங்கின்று.'
பு. வெ. வெ. 9

இறையே இறந்தன எல்வளை உண்கண்
உறையே பொழிதலும் ஓவா — நிறையைப்
பருகாப் பகல்கரந்த பையுள்கூர் மாலை
உருகா உயங்கும் உயிர். பு. வெ. வெ. 9

[வளைநெகிழக் கண் நீர்பெருக்குதலை நீங்காவாயின. என் நிறையைக் குடித்துக் கதிரவனை மறைத்த துயரம் தரும் மாலை நேரத்தில் என் உயிர் உருகி அழியும் என்றவாறு.

மாலை நிறையைப் பருகி உயிரை உண்ணும் என்பது துறைச்செய்தி.]

பரத்தையை ஏசல் :

'அணிவயல் ஊரனொடு அப்புவிழ அமரும்
பணிமொழி அரிவை பரத்தையை ஏசின்று.'
பு. வெ. வெ. 10

யாம்உயங்கும் மென்முலையால் யாணர் வயல்ஊரன்
தேன்முயங்கு பைந்தார் திரைமுயங்க—யாம்முயங்க
எவ்வையர் சேரி இரவும் இமைபொருந்தாக்
கவ்வை கருதின் கடை. பு. வெ. வெ. 10

[யாம் பொறை ஆற்றாது தளர்தற்குக் காரணமான முலைகளால் ஊரனுடைய மாலையை அலைகளின் நடுவே தழுவ, பரத்தையர்சேரியில் இரவும் பகலும் உறக்கம் இன்றி ஆரவாரம் மிக்குள்ளது என்று தலைவி கூறியவாறு.

யாம் முலையால் ஊரன் தாரினைத் திரை நடுவண் முயங்குகிறோம் என்பது துறைச்செய்தி.]

கண்டு கண் சிவத்தல் :

'உறுவரை மார்பன் ஒள்இணர் நறுந்தார்
கறுவொடு மயங்கிக் கண்சிவந் தன்று'. பு. வெ. வெ. 11

கூடிய கொண்கன் குறுகக் கொடிமார்பின்
ஆடிய சாந்தின் அணிதொடர்ந்து — வாடிய
தார்க்குவளை கண்டு தரியா இவள்முகத்த
கார்க்குவளை காலும் கனல். பு. வெ. வெ. 11

[தலைவன் தலைவியை அணுகவும், அவள் அவனது மார்பில் அணிந்த சந்தனம் அழிந்து அணிந்த குவளைமாலை வாடியது கண்டு, மனம் தாங்காது கண் சிவந்தாள் என்றவாறு.

கொண்கன் ஆடிய சாந்தின் அணி தொடர்ந்து வாடிய குவளை கண்டு தரியாது கண் சிவந்தாள் என்பது துறைச் செய்தி.

அணிதொடர்தல் — பரத்தையர் அணிகலச்சுவடுதோய்தல்.]

காதலின் களித்தல் :

'மைவரை மார்பன் மார்பகம் பொருந்திக்
கைவிடல் அறியாக் காதலின் களித்தன்று'. பு. வெ. வெ. 12

காதல் பெருகிக் களிசெய்ய அக்களியால்
கோதையும் தாரும் இடைகுழைய — மாதர்
கலந்தாள் கலந்து கடைக்கண்ணால் கங்குல்
புலந்தாள் புலரியம் போது. பு. வெ. வெ. 12

[காதல் களி செய்ய அக்களியால் தலைவி மாலையும் தலைவன் மாலையும் குழையத் தலைவி தலைவனைக் கூடி, வைகறைப் பொழுதில், விரைவில் கழிந்துவிட்ட இராக்காலத்தை வெறுத்தாள் என்றவாறு.

கோதை — மகளிர் மார்பில் அணியும் மாலை.
தார் — ஆடவர் மார்பில் அணியும் மாலை.

மாதர் கணவனைக் காதல் பெருகிக் கலந்து புலரியில் கங்குலைப் புலந்தாள் என்பது துறைச்செய்தி]

கொண்டு அகம்புகுதல் :

'காதல் பெருகக் கணவனைக் கண்ணுற்றுக்
கோதையால் பிணித்துக் கொண்டுஅகம் புக்கன்று.'
பு. வெ. வெ. 13

கண்டு களித்துக் கயல்உண்கண் நீர்மல்கக்
கொண்டுஅகம் புக்காள் கொடிஅன்னாள்—வண்டினம்
காலையாழ் செய்யும் கருவரை நாடனை
மாலையான் மார்பம் பிணித்து. பு. வெ. வெ. 13

[வண்டினம் காலையில் யாழ்போல ஒலிக்கும் மலை நாடனைக் கண்டுகளித்து ஆனந்தக்கண்ணீர் உகுத்து அவனை மாலையால் பிணித்துக் கொண்டு தலைவி இல்லத்தினுள் புகுந்தாள் என்றவாறு.

கருவரை நாடனைக் கண்டு களித்துக் கொடியன்னாள் கோதையால் பிணித்து அகம்புக்காள் என்பது துறைச் செய்தி]

கூட்டத்துக் குழைதல் :

'பெய்தார் அகலம் பிரிதல் ஆற்றாக்
கோய்தழை அல்குல் கூட்டத்துக் குழைந்தன்று.'
பு. வெ. வெ. 14

மயங்கி மகிழ்பெருக மால்வரை மார்பின்
தயங்கு புனலூரன் தண்தார்—முயங்கியும்
பேதை புலம்பப் பிரிதியோ நீஎன்னும்
கோதைசூழ் கொம்பின் குழைந்து. பு. வெ. வெ. 14

[காமஇன்பத்தால் மயங்கி மகிழ்ச்சி பெருகப் புனல் ஊரனின் தாரினை முயங்கி, மாலை சுற்றிய பூங்கொடிபோலத் தளர்ந்து, தலைவி 'யான் தனித்திருக்குமாறு என்றாவது பிரிவாயா ?' என்று வினவுவாள் என்றவாறு.

பேதை மகிழ் பெருக ஊரன்தார் முயங்கிக் கொம்பின் குழைந்து பிரிதியோ என்னும் என்பது துறைச்செய்தி.

இன்பத்துக்கு இடையூறுகும் பிரிவினது நினைவு வரத் தலைவி ' பிரிதியோ? ' என்று வினவத் தொடங்கினாள்.]

ஊடலுள் நெகிழ்தல் :

' நள்ளிருள் மாலை நடுங்குஅஞர் நலிய
ஒள்வளைத் தோளி ஊடலுள் நெகிழ்ந்தன்று'. பு. வெ. வெ. 5

தெரிவின்றி ஊடத் தெரிந்துநம் கேள்வர்
பிரிவின்றி நல்கினும் பேணாய் — திரிவின்றித்
துஞ்சேம் எனமொழிதி தூங்கிருள் மால்மாலை
நெஞ்சே உடையை நிறை. பு. வெ. வெ. 15

[நெஞ்சே ! காரணம் இன்றி யாம் ஊடவும், அதனை உணர்ந்து தலைவன் ஊடல் உணர்த்தவும் ஏலாது, மாலை வந்தவுடன் ' இரவு கவலையற்று உறங்கமாட்டேம் ' என்று கூறும் நீ நிறை உடையையாய் உள்ளாய் என நெஞ்சினைத் தலைவி இகழ்ந்தவாறு. நிறை அழிந்து கூறும் நெஞ்சினை நிறை உடைய என்பது இகழ்ச்சிக்குறிப்பு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

உரைகேட்டு நயத்தல் :

' துயரொடு வைகிய சூழ்வளைத் தோளி
உயர்வரை நாடன் உரைகேட்டு நயந்தன்று '. பு. வெ. வெ. 16

ஆழ விடுமோ அலரொடு வைகினும்
தாழ்குரல் ஏனல் தலைக்கொண்ட — நூழில்
விரையால் கமழும் விறல்மலை நாடன்
உரையால் தளிர்க்கும் உயிர். பு. வெ. வெ. 16

[திணையில் படர்ந்த நூழிற்கொடியின் மணம் கமழும் மலைநாடனது மொழி கேட்கும் மாத்திரையானே உற்சாகம்

அடையும் உயிர், பிறர் பழி கூறினும் என்னைத் துயர்க்கடலில் ஆழவிடாது என்று தலைவி சொற்றவாறு.

மலைநாடன் உரையால் உயிர்தளிக்கும் என்பது துறைச் செய்தி.]

பாடகச் சீறடி பணிந்தபின் இரங்கல் :

'கோடுஉயர் வெற்பன் கூப்பிய கையொடு
பாடகச் சீறடி பணிந்தபின் இரங்கின்று.' பு. பெ. பெ. 17

அணிவரும் பூஞ்சிலம்பு ஆர்க்கும் அடிமேல்
மணிவரை மார்பன் மயங்கிப்—பணியவும்
வற்கென்ற நெஞ்சம் வணங்காய் சிறுவரை
நிற்கென்றி வாழியர் நீ. பு. பெ. பெ. 17

[வலியமனனே! சிலம்புஒலிக்கும் அடிமேல் மலைபோன்ற மார்பினனாகிய தலைவன் பணியவும், நீ அவனை ஏலாது 'சிறிது நேரம் அவன் பணிவைப் பொருட்படுத்தாது நிற்கின்றேன்' என்கிறாய்; நீ வாழி என்று தலைவி சொற்றது. வாழி—இகழ்ச்சிக்குறிப்பு.

அடிமேல் வரைமார்பன் பணிய, நெஞ்சே! வணங்கல் வேண்டும் என்பது துறைச்செய்தி.]

பள்ளிமிசைத் தொடர்தல் :

'மாயிருங் கங்குல் மால்வரை நாடனைப்
பாயல் நீவிப் பள்ளிமிசைத் தொடர்ந்தன்று.'
பு. பெ. பெ. 18

யானை தொடரும் கொடிபோல யான்உன்னைத்
தானை தொடரவும் போதியோ—மானை
மயக்கரிய உண்கண் மடந்தைதோள் உள்ளி
இயக்கருஞ் சோலை இரா. பு. பெ. பெ. 18

[யானையைப் பிணிக்கும் கொடியைப்போல யான் நின் ஆடையைப்பற்றி ஈர்க்கவும், இவ்விராவிலே மக்கள் போக்கு வரவு அற்ற சோலை வழியிலே மான் நோக்கினளாகிய பரத்தை தோள்களைத் தழுவுதலை நினைத்துப் போதியோ ? என்று தலைவி தலைவனை வினவியவாறு.

யான் நின் தானை தொடரவும் மடந்தை தோள் உள்ளி இராவில் சோலைவழிப் போதியோ என்பது துறைச்செய்தி.]

செல்க என விடுத்தல் :

'பாயிருள் கணவனைப் படர்ச்சி நோக்கிச்
சேயிழை அரிவை செல்கஎன விடுத்தன்று'. பு. வெ. வெ. 19

விலங்குநர் ஈங்கில்லை வென்வேலோய் சென்றி
இலங்கிழை எவ்வம் நலியக் — கலங்கிக்
குறியுள் வருந்தாமைக் குன்றுசூழ் சோலை
நெறியுள் விரிக நிலா. பு. வெ. வெ. 19

[வென்றிதரும் வேலோய் ! நின் புதிய தலைவி துயரம் மிகக் கலங்கி இரவுக்குறியில் நின்று வருத்தாதபடி, சோலை வழியே நீ செல்ல நிலவு ஒளி செய்வதாகுக; உன்னைத்தடுப்பார் ஒருவரும் இவ்வீட்டில் இல்லை என்றவாறு.

வேலோய் ! இலங்கிழை வருந்தாமைச் சோலை வழியே செல்க; விலங்குநர் ஈங்கில்லை என்பது துறைச்செய்தி.]

இருபால் பெருந்திணை :

சீர்செலவு அழுங்கல்[1] செழுமடல் ஊர்தல்[2]
தூதுஇடை யாடல்[3] துயர்அவற்கு உரைத்தல்[4]
கண்டுகை சோர்தல்[5] பருவம் மயங்கல்[6]
ஆண்பால் கிளவி[7] பெண்பால் கிளவி[8]
தேங்கமழ் கூந்தல் தெரிவை வெறியாட்டு[9]

அரிவைக்கு அவள்துணை பாண்வரவு உரைத்தல்[10]
பரிபுரச் சீறடிப் பரத்தை கூறல்[11]
விறலி கேட்பத் தோழி கூறல்[12]
வெள்வளை விறலி தோழிக்கு விளம்பல்[13]
பரத்தை வாயில் பாங்கிகண்டு உரைத்தல்[14]
பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல்[15]
குற்றிசை[16] ஏனைக் குறுங்கலி[17] உளப்பட
ஒத்த பண்பின் ஒன்றுதலை யிட்ட
ஈரேண் கிளவியும் பெருந்திணைப் பால. பு வெ சூ 17

[செலவு அழுங்கல் முதலாகக் குறுங்கலி ஈறுகக் கூறப்பட்ட பதினேழ் துறைகளும் இருபாலாருக்கும் உரிய பெருந்திணைத் துறைகளாம் என்பது.]

செலவு அழுங்கல் :

'நிலவுவேல் நெடுந்தகை நீள்கழை ஆற்றிடைச்
செலவுமுன் வலித்துச் செலவுஅழுங் கின்று'
பு. இ. பெ. 1

நடுங்கி நறுநுதலாள் நன்னலம்பீர் பூப்ப
ஒடுங்கி உயங்கல் ஒழியக—கடுங்கணை
வில்ஏர் உழவர் விடர்ஓங்கு மாமலைச்
செல்லேம் ஒழிக செலவு. பு. இ பெ. 1

[என் மனைவி என் பிரிவினால் தன் அழகு கெட்டுப்பசலை பாய ஒடுங்கி வாடுதலைத் தவிர்க்க, ஆறலைகள்வர் வில்லோடு தங்கும் பிளப்பிடங்களை உடைய மலைகளைக் கடந்து செல்லும் பிரிவை மேற்கொள்ளேன். இனி என்றும் என் செலவு நீங்குவதாகுக என்றவாறு.

நறுநுதலாள் உயங்கச் செல்லேம்; செலவு ஒழிக என்பது துறைச்செய்தி]

மடல் ஊர்தல் :

'ஒன்றல்ல பலபாடி
மன்றிடை மடல்ஊர்ந்தன்று.' பு. இ. பெ. 2

இன்றுஇப் படரொடு யான்உழப்ப ஐங்கணையான்
வென்றிப் பதாகை எடுத்தான் ஆம்—மன்றில்
தனிமட மான்நோக்கி தகைநலம்பா ராட்டிக்
குனிமடல்மாப் பண்ணிமேல் கொண்டு. பு. இ. பெ. 2

[மன்றத்தில் என் மான்நோக்கி யாகிய தலைவியின் நலம் பாராட்டி வளைந்த பனைமடலால் ஆன குதிரைமீது ஏறி இந்நினைவோடு யான் பழகும்படி, மன்மதன் வெற்றிக் கொடியை உயர்த்தி விட்டான்; தலைவியின்மாட்டு யான் கொண்ட கடல் அன்ன காமம் என்னை மடலேறச் செய்துவிட்டது என்றவாறு.

படரொடு உழக்கும் யான் மான் நோக்கி நலம் பாராட்டி மடல்மாப் பண்ணி வருவேன் என்பது துறைச் செய்தி.]

தூதிடை ஆடல் :

'ஊழி மாலை உறுதுயர் நோக்கித்
தோழி நீங்காள் தூதிடை ஆடின்று'. பு. இ. பெ. 3

வள்வுஆய்ந்து பண்ணுக திண்தேர் வடிக்கண்ணாள்
ஒள்வாள்போல் மாலை உயல்வேண்டும் — கள்வாய
தாதொடு வண்டுஇமிரும் தாம வரைமார்ப
தூதொடு வந்தேன் தொழ. பு. இ. பெ. 3

வண்டு மகரந்தத்தில் ஒலிக்கும் மாலை மார்பனே! 'தலைவி இம்மாலைப்பொழுதில் உயிர்பிழைத்தல் வேண்டும் ஆதலின், வாரினை ஆராய்ந்து நின் தேரினை ஆயத்தம் செய்து நீபுறப் படுக' என்று யான் நின்னைக் கண்டு தொழுது கூறத் தூதுச்செய்தியோடு வந்துள்ளேன் என்றவாறு.

வரைமார்ப ! வடிக்கண்ணாள் மாலை உய்யத் தூதொடு வந்தேன் என்பது துறைச்செய்தி.]

துயர் அவற்கு உரைத்தல் :

‘ மான்ற மாலை மயில்இயல் வருத்தல்
தோன்றக் கூறித் துயர்அவற்கு உரைத்தன்று ’. பு இ. பெ. 4

உள்ளத்து அவலம் பெருக ஒளிவேலோய்
எள்ளத் துணிந்த இருள்மாலை — வெள்ளத்துத்
தண்தார் அகலம் தழூஉப்புணையா நீநல்கின்
உண்டாம்என் தோழிக்கு உயிர். பு. இ. பெ. 4

[தலைவனே ! உள்ளத்தில் துயரம் பெருக இகழ்தற்கு எண்ணிய இம்மாலைநேர வெள்ளத்தில் உன் மார்பைத் தெப்பமாக நல்கினால், இதனைக் கடந்து என் தோழி உயிர் பிழைப்பாள் என்றவாறு.

ஒளிவேலோய் ! இருள் மாலைவெள்ளத்து நின் அகலம் புணையா நல்கின் என் தோழிக்கு உயிர் உண்டு என்பது துறைச்செய்தி.]

கண்டு கை சோர்தல் :

‘ போதுஆர் கூந்தல் பொலம்தொடி அரிவை
காதல் கைம்மிகக் கண்டுகை சோர்ந்தன்று ’. பு.இ.பெ. 5

ஆம்பல் நுடங்கும் அணிவளையும் ஏகின
கூம்பல் மறந்த கொழுங்கயல்கண் — காம்பின்
எழில்வாய்ந்த தோளி எவனும்கொல் கானல்
பொழில்எல்லாம் ஈயும் புலம்பு. பு. இ. பெ. 5

[ஆம்பல்தண்டை வளைத்திட்ட வளைகளும் கழன்றன; கண்களும் உறக்கம் நீத்தன; வேய்த்தோளிக்குக் கடற்கரைச் சோலை தனிமைத்துயர் தருகிறது; அவள் நிலை யாதாகுமோ ? என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

பருவம் மயங்கல் :

‘ உருவ வால்வளை உயங்கத் தோழி
பருவம் மயங்கிப் படர்உழந் தன்று ’. பு. இ. பெ. 6

பெரும்பணை மென்தோள் பிரிந்தார் எம்உள்ளி
வரும்பருவம் அன்றுகொல் ஆம்கொல்—சுரும்புஇமிரும்
பூமலி கொன்றை புறவுஎல்லாம் பொன்மலரும்
மாமயிலும் ஆலும் மலை. பு. இ. பெ. 6

[வண்டுகள் ஒலிக்கும் கொன்றைகள் பொன்போல மலர்ந்துவிட்டன. மலையில் மயில்கள் ஆடுகின்றன. என் தோள் பிரிந்ததலைவர் என்னை உன்னிவரும் கார்ப்பருவம் இதுதானோ? அன்றோ? என்று தலைவிமயங்கிக் கூறிய வாறு.

கொன்றை பொன்மலர மயில் ஆலும்; பிரிந்தார்வரும் பருவம் அன்று கொல் ஆம்கொல் என்பது துறைச்செய்தி.]

பருவம் மயங்கலின் பக்கம் :

‘ ஆங்கவர் கூறிய பருவம் அன்றுஎனத்
தேன்கமழ் கோதை தெளிதலும் அதுவே.’
பு. இ. பெ. 7

பொறிமயில் ஆலின பொங்கர் எழிலி
சிறுதுவலை சிந்தின சிந்த—நறிய
பவர்முல்லை தோன்றி பரியாமல் ஈன்ற
அவர்வரும் காலம்ஈது அன்று. பு. இ. பெ. 7

[மயில்கள் ஆடின; சோலையில் மேகங்கள் சிறுதுளி சிந்தின; அதனால் காலம் அறியாது முல்லையும் தோன்றியும் அரும்பின. ஆனால் அவர் வரும் கார்காலம் ஈது அன்று என்றவாறு

எழிலி துவலை சிந்தவே முல்லை தோன்றி பரியாமல் ஈன்ற; ஆனால் அவர் வரும் காலம் ஈது அன்று என்பது துறைச்செய்தி.]

ஆண்பால் கிளவி ;

'காமுறு காமம் தலைபறிந்து ஏங்கி
ஏமுற்று இருந்த இறைவன் உரைத்தன்று.
பு. இ. பெ. 8

கயல்கூடு வாள்முகத்தாட் கண்ணிய நெஞ்சம்
முயல்கூடு முன்னதாக் காணின்—உயல்கூடும்
காணு மரபின் கடும்பகலும் கங்குலும்
நாள்நாளும் ஏயா நகை. பு. இ. பெ. 8

[கயல் போன்ற கண் பொருந்திய ஒளி பொருந்திய முகத்தாளாகிய தலைவியைக் கருதிய என் மனம், அவளைக் காணுமையால் பகலும் இரவும் மகிழ்வின்றி இருப்பினும், முழுமதியைக் காணின் அவள் முகமாகக் கருதி ஒருகால் உய்தலும் கூடும் என்றவாறு.]

பாடல் முழுதும் துறைச்செய்தி]

பெண்பால் கிளவி :

'வெள்வளை நெகிழவும் எம்உள் ளாத
கள்வனைக் காணுதுஇவ் வூர்எனக் கிளந்தன்று', பு.இ.பெ 9

வானத்து இயலும் மதிஅகத்து வைகலும்
கானத்து இயலும் முயல்காணும் — தானத்தின்
ஒள்வளை ஓடவும் உள்ளான் மறைந்து உறையும்
கள்வனைக் காணுதுஇவ் வூர். பு. இ பெ. 9

[இவ்வூரிலுள்ளார் சேய்மையில் உள்ள வானத்தில் இயங்கும் மதியினுள் உள்ள முயலையும் காண்பவராவர்; ஆனால் வளையல்கள் தாம் இருக்கவேண்டிய இடத்திலிருந்து நெகிழ்ந்து ஓடவும், என்னை நினையாது மறைந்து வைகும் தலைவனைக் காணும் ஆற்றல் மாத்திரம் இலராவர் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

வெறியாட்டு :

'தேன்கமழ் கோதை செம்மல் அளிநினைந்து
ஆங்குஅந் நிலைமை ஆய்அறி யாமை
வேங்கைஅம் சிலம்பற்கு வெறியா டின்று'. பு.இ.பெ. 10

வெய்ய நெடிதுஉயிரா வெற்பன் அளிநினையா
ஐயம் நனிநீங்க ஆடினாள் — மையல்
அயல்மனைப் பெண்டிரொடு அன்னைசொல்அஞ்சி
வியல்மனையுள் ஆடும் வெறி. பு. இ. பெ. 10

[தலைவி தலைவனை நினைந்து ஆற்றாமையால் பெருமூச்சு விட்டு, தலைவன் தனக்குத் தண்ணளி செய்யவேண்டி, மயக்கமுடைய அயல்மனைப் பெண்களோடு அன்னை கூறும் கடுஞ்சொற்கு அஞ்சி, தன் ஐயம் நனி நீங்கும்படி தன் பெரிய இல்லத்தில் வழிபாடு நிகழ்த்தினாள்.

வெற்பன் அளி நினைந்து அன்னை சொல் அஞ்சி வெறி ஆடும் என்பது துறைச்செய்தி.]

பாண் வரவு உரைத்தல் :

'மாண்இழைக்கு வயல்ஊரன்
பாண்வரவு பாங்கிமொழிந்தன்று'. பு. இ. பெ. 11

அஞ்சொல் பெரும்பணைத்தோள் ஆயிழையாய்தாம்நொடியும்
வஞ்சம் தெரியா மருள்மாலை—எம்சேரிப்
பண்இயல் யாழொடு பாணனர் வந்தாரால்
எண்ணியது என்கொலோ ஈங்கு. பு. இ. பெ. 11

['அழகிய சொல்லினையும் பணைத்தோளினையும் உடைய தலைவீ! பாணர்கள் கூறும் வஞ்சனையைச் சற்றும் அறியாத,

மயக்கம் தரும் மாலையில், எம்சேரியிடத்துப் பாணனர் தம் யாழொடு வந்துள்ளார். ஈண்டு என்ன செய்ய எண்ணி வந்துள்ளாரோ ?' எனப் பாங்கி இகழ்ந்து கூறியவாறு.

எம்சேரிப் பாணனர் என் எண்ணி வந்தார் என்பது துறைச்செய்தி.]

பரத்தை கூறல் :

‘ தேன்கமழ் சிலம்பன் தார்எமக்கு எளிதுஎனப்
பாங்கவர் கேட்பப் பரத்தை மொழிந்தன்று’. பு. இ. பெ. 12

பலஉரைத்துக் கூத்தாடிப் பல்வயல் ஊரன்
நிலவுஉரைக்கும் பூணவர் சேரிச்—செலவுஉரைத்து
வெங்கள் களியால் விறலி விழாக்கொள்ளல்
எங்கட்கு அவன்தார் எளிது. பு. இ. பெ. 12

[‘விறலியே ! பல பொய்களையும் தலைவிக்குச் சொல்லி நடித்து, முத்தாலாகிய அணிகளை உடைய பரத்தையர் சேரிக்குத் தலைவன் சென்றதைத் தலைவிக்குச் சொல்லிக் கள்ளுண்ட மகிழ்வோடு விழாக் கொண்டாடாதே. தலைவனுடைய மாலையைப் பெறுதல் பரத்தையராகிய எமக்கு மிக எளிது’ என்று பரத்தை ஒருத்தி சொற்றவாறு.

விறலி ! ஊரன் தார் எங்கட்கு எளிது என்பது துறைச் செய்தி.]

விறலியர் கேட்பத் தோழி கூறல் :

‘ பேணிய பிறர்முயக்கு ஆர்அமுது அவற்குஎனப்
பாணன் விறலிக்குப் பாங்கி மொழிந்தன்று’. பு.இ.பெ. 13

அரும்பிற்கும் உண்டோ அலரது நாற்றம்
பெருந்தோள் விறலி பிணங்கல் — சுரும்போடு
அதிரும் புனல்ஊரற்கு ஆர்அமிர்தம் அன்றோ
முதிரும் முலையார் முயக்கு. பு. இ. பெ. 13

['பெருந்தோள்களை உடைய விறலி! தலைவியோ இளையன்; அரும்பு போல்வாள். பரத்தை அலர்போல்வாள். அரும்பிற்கு அலரின் நறுமணம் இருக்குமா? தலைவனுக்கு முதிர்ந்த முலையாராகிய பரத்தையர் முயக்கம் ஆரமுதம் போலப் பேரின்பம் தரும். இங்ஙனம் யான் கூறலின் நீ வெகுளாதே' என்று பாங்கிசொற்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

விறலி தோழிக்கு விளம்பல் :

'ஆங்கவன் மூப்புஅவர்க்கு அருங்களி தரும்எனப்
பாங்கி கேட்ப விறலி பகர்ந்தன்று'. பு. இ. பெ. 14

உளைத்தவர் கூறும் உரைஎல்லாம் நிற்க
முளைத்த முறுவலார்க்கு எல்லாம் — விளைத்த
பழங்கள் அனைத்தாய்ப் படுகளி செய்யும்
முழங்கு புனல்ஊரன் மூப்பு. பு. இ. பெ. 14

[வெறுத்தவர் கூறும் கூற்றுக்கள் கிடக்க; இளையராகிய பரத்தையருக்குப் புனல்ஊரன் ஆகிய தலைவனுடைய மூப்பு, பழைய கள்ளினைப்போல மிக்க களிப்பைத்தரும் என, விறலி 'பரத்தையர் இளையர்; தலைவன் முதியன்' என்ற பாங்கிக்குச் சொற்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

பரத்தை வாயில் பாங்கி கண்டு உரைத்தல் :

'உம்இல் அரிவை உரைமொழி ஒழிய
எம்இல் வலவனும் தேரும் வரும்எனப்
பரத்தை வாயிற்குப் பாங்கி பகர்ந்தன்று.' பு. இ. பெ. 15

மாண் நலம் கொள்ளும் மகிழ்நன் தணக்குமேல்
பேணலம் பெண்மை ஒழிகஎன்பார் — காணக்
கலவ மயில்அன்ன காரிகையார் சேரி
வலவன் நெடுந்தேர் வரும். பு. இ. பெ. 15

['எம் வனப்பை நுகரும் தலைவன் எம்மை விடுத்துச் செல்வானாயின் எம் பெண்மையை யாம் விரும்பேம்' என்று பரத்தையர் சூளுறவு சொல்லிக் கொண்டிருந்தபோதே, மயிலன்ன அப்பெண்டிர் சேரிக்குத் தலைவனுடைய நெடிய தேர் பாகனோடு வரும் என்றவாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி]

பிறர் மனைத் துயின்றமை விறலி கூறல் :

'மற்றவர் சேரியில் மைந்தன் உறைந்தமை
இற்றௌன விறலி எடுத்துஉரைத் தன்று'. பு. இ பெ 16

தண்தார் அணிஅவாம் தையலார் சேரியுள்
வண்டுஆர் வயல்ஊரன் வைகினமை — உண்டால்
அறியேன் அடியுறை ஆயிழையால் பெற்றேன்
சிறியேன் பெரிய சிறப்பு. பு. இ. பெ. 16

[அடிகளில் பொருந்திய அழகிய சிலம்பு முதலியன அணிந்த தலைவியால் பெரிய சிறப்புப் பெற்ற யான், குளிர்ந்த மாலையால் அழகு புனையும் பரத்தையர் சேரியில் வயல்ஊரன் தங்கினமை உண்டு எனினும், நேரின் கண்டறிந்தேன் அல்லேன் என்றவாறு.

சிறப்புச் செய்த தலைவிக்கு உண்மை உணர்த்திய விறலி தலைவன் வெகுளாமைக்குப் பிறர் கருத்தாகக் கூறினாள்.

பாடல் முழுதும் துறைச்செய்தி.]

குற்றிசை :

'போற்றார் அகலம் புல்லிய மகளிர்க்கு
அற்றுங்கு ஒழுகாது அறம்கண் மாறின்று'. பு.இ. பெ. 17

கரிய பெருந்தடங்கண் வெள்வளைக்கை யாளை
மரிய கழிகேண்மை மைந்த — தெரியின்
விளிந்துஆங்கு ஒழியினும் விட்டுஅகலார் தம்மைத்
தெளிந்தாரில் தீர்வது தீது. பு. இ. பெ. 17

[கரிய பெரிய நீண்ட கண்களையுடைய வெள்ளிய வளை யல் அணிந்த தலைவியோடு பொருந்திய இல்லறத் தொடர் புடைய இளையனே! உயிர் நீங்கினும் தம்மைவிட்டு அகல நினையாத தலைவியரை, துறவறத்தில் செல்ல இருப்பாரைப் போல, விட்டு நீங்குவது தவறாகும் என்று சான்றோர் கூறிய வாறு.

'விட்டகலார் தம்மைத் தீர்வது தீது' என்பது துறைச் செய்தி.]

குறுங்கலி :

'நாறுஇருங் கூந்தல் மகளிரை நயப்ப
வேறுபடு வேட்கை வீயக் கூறின்று'. பு. இ. பெ. 18

பண்அவாம் தீஞ்சொல் பவளத் துவர்ச்செவ்வாய்ப்
பெண்அவாம் பேர்அல்குல் பெய்வளை — கண்அவாம்
நன்னலம் பீர்பூப்ப நல்கார் விடுவதோ
தொன்னலம் உண்டார் தொடர்பு. பு. இ. பெ. 18

[தலைவியின் பழைய நலத்தை நுகர்ந்த தலைவன், இன் சொல் செவ்வாய் பெண்மை பேரல்குல் பெய்வளை இவற்றை உடைய தலைவிதன் நலம் பசலை பாய்ந்து நலிய, அவளை விரும்பாது விடுதல் ஏற்றதன்று என்று சான்றோர் கூறிய வாறு.

பாடல் முழுதும் துறைச்செய்தி.

இவற்றிற்குக் குற்றிசை குறுங்கலி என்று பெயரிடுதல் தொல்காப்பியனாருக்கு உடன்பாடன்று என்பர் நச்சினார்க் கினியர். கலி. 99]

ஒத்த நூற்பாக்கள்

'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆர்என வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
வாடா வள்ளி வயவர் ஏத்திய
ஓடாக் கழல்நிலை உளப்பட ஓடா
உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும் .....
காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல்என்று
இருமூன்று வகையின் கல்லொடு புணர ....

தொல். பொ. 90

மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமையும்
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சியும் ....
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
ஆய்ந்த பூசல் மயக்கத் தானும்
தாமே ஏங்கிய தாங்கரும் பையுளும்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்த
தனிமகள் புலம்பிய முதுபாலையும்
கழிந்தோர் தேஎத்து அறிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்
காதலி இழந்த தபுதார நிலையும்
காதலன் இழந்த தாபத நிலையும்
நல்லோள் கணவனொடு நனிஅழல் புகீஇச்
சொல்லிடை யிட்ட மாலை நிலையும்
மாய்பெருஞ் சிறப்பின் புதல்வன் பெயரத்
தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்

மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்
பலர்செலச் செல்லாக் காடுவாழ்த்து' தொ. பொ. 79

'கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும் ,, 91

'பாலறி மரபின் பொருநர் கண்ணும்'. ,, 75

'சீர்சால் போந்தை வேம்பொடு ஆரே
உன்ன நிலையே ஏழக நிலையே
கழல்நிலை ஏனைக் கல்காண் டல்லே
கற்கோள் நிலையே கல்நீர்ப் படுத்தல்
கல்நடு தல்லே கல்முறை பழிச்சல்
இற்கொண்டு புகுதல் என்பன் னிரண்டும்
பொதுவியற் பால என்மனார் புலவர். பு. வெ. 10

'முதுபா லையே சுரநடை ஏனைத்
தபுதார நிலையே தாபத நிலையே
தலைப்பெயல் நிலையே பூசல் மயக்கே
மாலை நிலையே மூதா னந்தம்
ஆனந் தம்மே ஆனந்தப் பையுள்
கையறு நிலைஉளப் படப்பதின் மூன்றும்
மையறு சிறப்பின் பொதுவியற் பால' 11
மூதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி
பெருங்காஞ் சியியே பொருள்மொழிக் காஞ்சி
புலவர் ஏத்தும் புத்தேள் நாட்டொடு
முதுகாஞ் சியொடு நாடுவாழ்த்து உளப்பட
மையறு சீர்த்தி வரும்இரு மூன்றும்
பொய்தீர் காஞ்சிப் பொதுவியற் பால. 12
சீர்சால் முல்லையொடு கார்முல்லை என்று
தேர்முல் லையொடு நாண்முல்லை என்று
இல்லாள் முல்லையொடு பகட்டுமுல்லை என்று
பால்முல் லையொடு கற்புமுல்லை என்றுங்கு
இருநான் முல்லையும் பொதுவியற் பால. 13

முற்றும் பு. வெ. 14, 15, 16, 17

பாடாண் பகுதியுள் தொல்காப் பியம்முதல்
கோடாஅ மரபின் குணனொடு நிலைஇக்
கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்
விடுத்தல் அறியா விறல்புரி வாகையுள்
வாணிக வென்றியும் மல்ல வென்றியும்
நீள்நெறி உழவன் நிலன்உழு வென்றியும்
இகல்புரி ஏறொடு கோழியும் எதிர்வன்
தகருடன் யானை தணப்பில்வெம் பூழொடு
சிவல்கிளி பூவை செழும்பரி தேர்யாழ்
இவர்தரு சூதிடை ஆடல் பாடல்
பிடியென் கின்ற பெரும்பெயர் வென்றியொடு
உடையன பிறவும் உளப்படத் தொகைஇ
மெய்யின் ஆர்தமிழ் வெண்பா மாலையுள்
ஐயன் ஆரிதன் அமர்ந்துரைத் தனவே'. பு. வெ. 18

'காட்சி முதலாக் கலவியின் ஒருதலை
வேட்கையின் புலம்புதல் கைக்கிளை அதுதான்
கேட்போர் இல்லாக் கிளவிகள் பெறுமே.'
வீர. 106. மேற்

'இறந்த மூப்பும் எய்தா இளமையும்
சிறந்த காமத்தில் செய்யும் சிதைவும்
பிறங்குதரு மரபின் பெருந்திணை ஆகும்'. ,,

'காந்தள் வள்ளி சுரநடை முதுபாலை
தாபதம் தபுதாரம் குற்றிசை குறுங்கலி
பாசறை முல்லை இல்லாண் முல்லை
என்றிவை பத்தும் அகப்புறம் என்ப'. ,,

'கைக்கிளை ஏனைப் பெருந்திணை என்றிவை
அக்கரம் உணர்ந்தோர் அகப்புறம் என்ப'. ,,

ஆய்ந்த அகப்புறம் ஐயிரண்டும் ஆயுங்கால்
காந்தள் கலிமடமா ஏறுதல் உள்ளிட்ட
பத்தும் அகத்தின் புறம்'. ,,

புறத்திணையியல் முற்றும்.

இலக்கணவிளக்கம் – பொருளதிகாரம் – புறத்திணையியல்
நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை.

நூற்பாத்தொடக்கம்		நூற்பாத்தொடர் எண் இயல்நூற்பா எண்	பக்கம்
அலைகடல் தானை	....	613—15	178
அவற்றுள், வெட்சிதானே	....	602— 4	53
ஆன்ற காட்சி	....	599— 1	45
உழிஞைதானே	....	607— 9	116
ஏப்புழைஞாயில்	....	609—11	144
ஒளியும் ஆற்றலும்	....	617—19	231
கருங்கழல் வேந்தன்	....	611—13	154
காஞ்சிதானே	....	614—16	207
சாற்றுது ஒழிந்தவும்	....	618—20	276
தும்பைதானே	....	610—12	152
நிரைகோள்கேட்டு	....	604— 6	76
பாடாண்திணையே	....	616—18	230
மண்டமர்க்கு இவர்ந்தோன்	....	603— 5	57
முடிமிசை உழிஞை சூடி	....	608—10	118
வஞ்சிதானே	....	605— 7	95
வருபடைநோனன்	....	615—17	209
வாகைதானே	....	612—14	176
வாடாவஞ்சி	....	606— 8	97
வெட்சியும் உழிஞையும்	....	601— 3	52
வெட்சி வஞ்சி	....	600— 2	47
வேந்திடை தெரிதல்	....	619—21	276

இலக்கணவிளக்கம் - பொருளதிகாரம் - புறத்திணையியல்
எடுத்துக்காட்டுப் பாடல் அகரவரிசை

நூற்பாத்தொடக்கம்		இயல்நூற்பா எண்	பக்கம்
அ			
அகத்தன ஆர்கழல் நோன்தாள்	....	11	149
அங்கணகிணையன் துடியன்	....	5	72
அங்கையுள் நெல்லி அதன் பயம்	...	6	88
அஞ்சொல் பெரும்பணைத் தோள்	....	21	361
அஞ்சுவருதானை அமர் என்னும்	...	15	188
அடக்கருந்தானை அலங்குதார்	....	13	163
அடும்புகழ் பாடி	....	21	306
அணக்கருந்தானையான்	....	19	257
அணங்குடை நோலைபொரி	....	8	104
அணிவரும் பூஞ்சிலம்பா	....	21	354
அந்தணர் சான்றோர்	....	19	262
அந்தரம் தோயும் அமைஓங்கு	....	10	132
அந்தழை அல்குலும்	....	10	140
அம்மென் கிளவி கிளி பயில	....	21	336
அயர்வொடு நின்றேன்	....	21	343
அயில் அன்ன கண் புதைத்து	....	8	109
அரிகொண்ட கண் சிவப்ப	....	19	271
அருகு ஓடி நீங்காது	....	21	328
அருவரைத் தலைத்தரும்	....	6	93
அரும்பிற்கும் உண்டோ	....	21	362
அருவரை பாய்ந்து இறுதும்	....	17	215
அலர்மூலை அஞ்சொல்	....	21	310
அவிழ்மலர்க் கோதையர்	....	8	111
அழலடைந்த மன்றத்து	....	8	105
அழலவிர் வபங்கண்	...	19	256
அழுங்கல் நீர்	....	6	80

நூற்பாத்தொடக்கம்		இயல்நூற்பா எண்	பக்கம்
அளந்த திறையார் அகலிடத்து	....	19	250
அளியகழல் வேந்தர்	....	17	227
அரு அநிலைச்சாடி	....	5	64
அறிந்தவர் ஆய்ந்தநாள்	....	8	104
அறியார் வயவர் அகத்து	....	10	137
அன்று எறிந்தானும் இவனுல்	....	10	129
அனைய அமருள் அயில்போழ்	....	15	186

ஆ

ஆடல் அமர்ந்தான் அமர்	....	13	168
ஆடல் அமர்ந்தான் அடி	....	19	268
ஆடு அரவம்பூண்டான்	....	11	147
ஆம் இனி மூப்பும்	....	15	203
ஆம்பல் நுடங்கும் அணிவளையும்	....	21	358
ஆயபெருமை அவிர்சடை	....	21	317
ஆயாது அறிவு அயர்ந்து	....	21	317
ஆயும் அடுதிறலார்க்கு	....	17	223
ஆவும் ஆன்இயல் பார்ப்பன	....	4	55
ஆவூர் எறிந்து நிரையொடு	....	6	89
ஆழவிடுமோ அலரொடு	....	21	353
ஆளிமணிக்கொடி	...	5	74
ஆள் அமர்வெள்ளம்	....	6	87
ஆற்றின்உணரின் அருள்	....	21	316
ஆறுவயவர்முன் ஆட	....	13	169

இ

இகலே துணையா	....	5	68
இடம்படு ஞாலத்து	....	21	310
இணரார் நறுங்கோதை	....	21	337

நூற்பாத்தொடக்கம்		இயல்நூற்பா எண்	பக்கம்
இந்திரன் என்னின்	....	19	247
இம்மூவுலகின் இருள்	....	15	192
இயவர்புகழ	....	8	114
இரவு ஊர் எறிந்து	....	6	89
இருநிலமருங்கின்	....	6	82
இலநாம் உரைப்பதன்கண்	....	21	329
இளமை நிலைதளர	....	21	318
இளிகொண்ட தீஞ்சொல்	....	5	71
இறுமுறை எண்ணுது	....	5	72
இறுவரை வீழ இயக்குற்று	....	13	170
இறையே இறந்தன எல்வளை	....	21	350
இன்தொடை நல்லிசையாழ்	....	19	260
இன்று இப்படரோடு	....	21	357
இன்று பகலோன் இறவாமுன்	....	17	220
இன்னர் எனவேண்டா	....	8	108
இன்ஞ சொகினம்	....	21	314
ஈ			
ஈண்டி எருவை இறகு உளரும்	....	19	255
ஈண்டு அரில் சூழ்ந்த	....	11	148
உ			
உணங்கு புலவு அரு	....	17	218
உய்த்தல் பொறுத்தல் ஒழிவின்று	....	21	322
உய்ந்து ஒழிவார்	....	5	67
உரவு எரி வேய்ந்த	....	21	308
உரவு ஒலிமுந்நீர்	....	21	338
உரைப்பின் அது வியப்போ	....	6	84
உலவா வளம் செய்தான்	....	15	189
உவன் இன்று உறுதுயரம்	....	10	138
உவன் தலை என்னும்	....	17	221
உழிஞை முடிபுனைந்து	....	10	126
உழுது பயன்கொண்டு	....	15	190

நூற்பாத்தொடக்கம்		இயல் நூற்பா எண்	பக்கம்
உளத்தவர் கூறும் உரை	....	21	363
உள்ளத்து அவலம் பெருக	....	21	358
உள்ளம் உருக ஒளி வளையும்	...	21	340
உறுசுடர் வாளோடு	....	13	164
உறையார் விசும்பின்	....	15	202
ஊ			
ஊக்கம் முரண் மிகுதி	....	10	128
ஊடிய ஊடல் அகல	....	19	272
ஊதை உளர ஒசிந்து	....	21	319
ஊழி தோறூழி தொழ	....	21	325
ஊறின்று உவகையுள்வைக	....	15	199
எ			
எங்கணவன்எங்கணவன்	....	13	172
எண்ணின் இகல் புரிந்தோர்	....	21	311
எண்ணின் இடர்எட்டும்	....	19	254
எம் கண் மலர	....	10	140
எம் சொல் எதிர்கொண்டு	....	19	262
எம்மனையாம் மகிழ	....	21	302
எழுஅணி சீறார்	....	5	65
எழுதுஎழில் மாடத்து	....	10	139
எழுதுஎழில் மார்பம் எனக்கு	....	21	346
ஏ			
ஏந்துவாள்தானை இரிய	....	15	200
ஏவல் இகழ்மறவர்	....	10	138
ஏற்றுவலன் உயரிய	....	19	245
ஏற்றார்தியானும்	....	19	247
ஐ			
ஐந்துகதியும்	....	21	330
ஐயம் களைந்திட்டு	....	17	217
ஐயவிசிந்தி நறை புகைத்து	....	17	225

நூற்பாத்தொடக்கம்		இயல்	நூற்பா எண்	பக்கம்

ஒ

ஒட்டியார் எல்லாம்	....	21	329
ஒலிமணித்திண்தேர்	....	21	330
ஒல்லொலிநீர் ஞாலத்து	....	15	195
ஒள்வாள் அமருள்	....	19	249
ஒள்வாள் மறவர் உருத்து	....	11	151
ஒள்வாள் மலைந்தார்க்கும்	....	5	71
ஒன்றில் இரண்டு ஆய்ந்து	....	19	264
ஒன்றியவர் நாடு	....	10	141
ஒன்னு முனையோர்க்கு	....	17	226

ஓ

ஓங்கிய வேலான் பணியவும்	....	21	349
ஓடுக கோல்வளையும்	....	21	347
ஓதம் கரைதவழ்நீர்	....	15	190
ஓர் உயிராக உணர்க	....	21	312

க

கஞ்சுகம் வாய்த்த	....	21	328
கடல்புக்கு மண் எடுத்த	....	6	88
கடிகமழ் வேலி	....	17	228
கடிமனைச்சீறூர்	....	5	62
கடுங்கண் மறவன்	....	13	167
கடைநின்று காமம்	....	21	339
கணன்ஆர்ந்து உவப்ப	....	21	305
கண்டான்மலைந்தான்	....	21	326
கண்டு களித்துக்கயல்	....	21	352
கதிர்ஒடை வெல்களிறு	....	10	127
கயக்கிய நோயவாய்	....	15	204
கயல்கூடுவாள் முகத்தாள்	....	21	360

நூற்பாத்தொடக்கம்		இயல்நூற்பா எண்	பக்கம்
கரியபெருந்தடங்கண்	....	21	365
கருங்கழல் வெண்குடை	....	19	257
கருந்தலையும் வெண்ணிணமும்	....	17	222
கருந்தடங்கண் வண்டாக	...	21	334
கரும்பகடும் செம்பொன்னும்	....	19	258
கரும்பொடு காய்நெல்	....	8	113
கலந்தவனைக் கூற்றம்	....	21	309
கல்அருவி ஆடி	....	21	336
கல்என் நீர்வேலி	....	21	322
கல்கெழு சீறூர்	....	6	90
கல்நவில்தோளானை	....	21	339
கல்நின்ருன் எந்தை	....	15	198
கவலை மறுகில்	....	15	193
கவ்வை நீர்வேலி	....	17	227
கவ்வை பெருக	....	21	335
கழகத்து இயலும்	....	21	331
கழுதுஆர் பறந்தலை	....	13	162
கழுவொடு பாகர் கலங்காமல்	....	6	91
களமர் கதிர்மணி	....	8	110
கற்பின் விழுமியது இல்லை	....	13	174
கற்பொறியும் பாம்பும்	....	10	135

கா

காட்டகம் சென்று	....	6	90
காடு கனலக் கனலோன்	....	21	305
காடும் கடுந்திரை	....	21	325
காணில் அரனும் களிக்கும்	....	5	74
காதல் பெருகிக்களிசெய்ய	....	21	351
காம நெடுங்கடல்	....	21	347
காய்ந்து கடுங்களிறு	....	13	166
கார்கருதி நின்றதிரும்	....	13	161

நூற்பாத்தொடக்கம்		இயல்நூற்பா எண்	பக்கம்
காலார் கழலார்	....	6	80
காலான் மயங்கி	....	13	165
காலை முரசும் மதில்இயம்ப	....	10	137
காவல் அமைந்தான்	....	15	186
கான்படு தீயின்கலவார்	....	8	112
கான்யாறு தழீஇய	....	7	96

கி

கிளை ஆய்ந்துபண்ணிய	....	13	169

கு

குடவரை ஏந்திய	....	21	327
குடிப்பிறப்பு அடுத்து	....	15	196
குடிப்பிறப்புக்கல்வி	....	15	196
குடை அலர் காந்தள்	....	21	300
குடைவரை ஏந்திய	....	21	326
குந்தம் கொடுவில்	....	13	164
குருகு பெயரிய குன்று	....	10	130
குருந்தம் ஒசித்த ஞான்று	....	19	247
குரும்பைவரி முலைமேல்	....	21	340
குரைஅழல் மண்டிய	....	8	115
குலாவும் சிலையார்	....	17	216
குவளை நெடுந்தடங்கண்	....	21	332
குளிறு முரசம் குணில்	....	8	109
குளிறு முரசினுன் கொண்டான்	....	10	132

கூ

கூடி முரசுஇரங்க	....	8	107
கூடிய கொண்கன்குறுக	....	21	351
கூற்றினத்தன்னூர்	....	5	66

நூற்பாத்தொடக்கம்		இயல்நூற்பா எண்	பக்கம்
கேள்வி மறையோர் கிளை	....	19	253
கை			
கைகால் புருவம் கண்	....	21	332
கொ			
கொங்கலர் கோதை	....	19	264
கொங்கு அலர்தார் மன்னரும்	....	15	201
கொங்கு அவிழ் ஐம்பால்	....	19	263
கொடிபடு முத்தலை	...	19	265
கொடுவரி கூடி	....	5	68
கொடைத்தொழில் எல்லாம்	....	6	92
கொட்கும் நிமிரும்	....	17	224
கொய்தார மார்பின்	....	21	321
கொலைஆணுக் கூற்றம்	....	17	222
கொலைவில் புருவத்து	....	19	260
கொல்களிறு ஊர்வர்	....	21	301
கொன்றுஉருத்த கூர்வேல்	....	17	224
கோடுஉயர் வெற்பின்	....	10.	136
கோ			
கோடும்வயிரும் இசைப்ப	....	10	141
கோள்வாய் முதலைய	....	10	134
கௌ			
கௌவை பெருக	....	21	335
ச			
சங்கும் கருங்கோடும்	....	6	82

48

நூற்பாத்தொடக்கம்		இயல் நூற்பா எண்	பக்கம்
சி			
சில்வளைக்கைச் செவ்வாய்	....	19	261
சிறந்தது இது என்று	....	15	202
சீ			
சீர்மிகு நல்லிசை பாடி	....	21	325
சு			
சுடுமண் நெடுமதில்	....	10	135
சுற்றிய சுற்றம் உடன்	....	8	110
சூ			
சூடியவான் பிறையோய்	....	19	268
சூடினுன் வாகைச்சுடர்த்தெரியல்	....	15	185
சூழ்கதிர்வான் விளக்கும்	....	19	254
சூழ்ந்த நிரைபெயர	....	5	69
செ			
செங்கண் மறவர் சினம்	....	10	136
செங்கண் மழவிடையின்	....	8	102
செயிர்க்கண் இகழாது	....	15	194
செருமலி வெங்களத்து	....	13	165
சொ			
சொல்லும் சுவட்டவர்	....	21	328
சோ			
சோலைமயில் அன்னுள்	....	21	312
த			
தண்டா விருப்பினள்	....	5	70
தண்தார் அளியவாம்	....	21	364

நூற்பாத்தொடக்கம்		இயல்நூற்பா எண்	பக்கம்
தமருள் தலையாதல்	....	8	105
தளர் இயல் தாய்	....	13	166
தன்கண் அளி அவாய்	....	21	342
தன் நிழலோர் எல்லோர்க்கும்	....	19	263
தா			
தாங்கன்மின் தாங்கன்மின்	....	11	149
தாங்கிய கேளொடு தானும்	....	17	226
தாமரைமேல் வைகிய	....	21	334
தாய்அன்னான் தார்விலங்கி	....	21	315
தாழ்ஆரமார்பினான்	....	8	106
தாள்தாழ் தடக்கை	....	8	111
தி			
திங்கள் விளங்கும்	....	21	323
திருநுதல்வேர் அரும்பும்	....	21	335
தீ			
தீர்த்தநீர் பூவொடு	....	10	139
தீர்ந்து வணங்கித் திறை	....	21	321
தீண்டியும் கண்டும் பயிற்றியும்	....	19	251
து			
துன்னருந் தானைத்தொடு	....	21	302
துன்னருந்துப்பின் தொடுகழலார்	....	17	217
தே			
தெம்முனை தேயத்திறல்	....	17	219
தெரிவுஇன்றி ஊடத்தெரிந்து	....	21	353
தெருவின் அலமரும்	....	19	261

நூற்பாத்தொடக்கம்	இயல்	நூற்பா எண்	பக்கம்
தொ			
தொடிமணித்தோள் ஆடவர்	....	21	301
தொடை விடை ஊழா	....	15	195
தோ			
தோடு அலர்தார் யானும்	....	21	343
ந			
நகைஅமர் ஆயம் நடுங்க	....	17	223
நடுங்கி நறுநுதலாள்	....	21	356
ந			
நல்கு எனின் நாமிசையாள்	....	19	270
நல்வளை ஏக நலம்தொலைவு	....	21	344
நா			
நாடிய நட்புப்பகை செலவு	....	19	265
நாட்டிய வாய்மொழி	....	19	244
நாப்புலவர் சொல்மாலை	....	6	86
நாவல் பெரிய ஞாலத்து	....	10	142
நாவாயும் தோணியும் மேற்கொண்டு	....	10	134
நாளும் புள்ளும் கேளா	....	5	65
நி			
நித்திலம் செய்பட்டமும்	....	6	93
நிரைபொறி வாயில்	....	10	133
நிலையும் நிரையும்	....	5	67
நின்ற புகழொடு நீடுவாழ்க	....	19	259
நின்ற புகழ் ஒழிய நில்லா	....	10	131
நின்று நிலமிசையோர்	....	21	316

நூற்பாத்தொடக்கம்		இயல்நூற்பா எண்	பக்கம்
நீ			
நீர்பலகால் மூழ்கி	....	15	192
நீர்மலி கண்ணொடு	....	21	307
நு			
நுடங்கு அருவி ஆர்த்து	....	21	348
நெடிபடு கானத்து	....	5	64
நெ			
நெடுநிலை ஆயத்து	....	6	82
நெய் அணிக செவ்வேல்	....	10	126
நெய்கொள் நிணம்	....	21	323
நேராரம் பூண்ட நெடுந்தகை	....	8	107
நேரார்படையின் நிலைமை	....	13	171
ப			
பகடு வாழ்க என்று	....	15	203
பகைவர் கொண்ட படுமணி	....	6	91
படை நவின்ற பல்களிறும்	....	19	259
பணையாய்அறை முழங்கும்	....	21	348
பண்அவாம் தீஞ்சொல்	....	21	365
பரிசை பலகடந்து பற்றார்	....	11	150
பருக்காழும் செம்பொன்னும்	....	19	252
பருதி செல்வானம் பரந்து	....	17	220
பல உரைத்துக் கூத்தாடி	....	21	362
பலிபெறு நன்னகரும்	....	8	106
பா			
பாயினர் மாயும் வகையால்	....	11	147
பாய்ந்தும் எறிந்தும் படிந்தும்	....	21	327
பாலை படுமலை பண்ணி	....	21	331

நூற்பாத்தொடக்கம்		இயல்நூற்பா எண்	பக்கம்
பி			
பிடித்து ஆடி அன்ன	...	15	188
பிணங்கு அமருள் பிள்ளை	....	6	87
பிள்ளை கடுப்பப் பிணம்	....	6	84
பிறை புரை வாள் நுதல்	....	21	341
பீ			
பீடு உலாம் மன்னர் நடுங்க	....	8	113
பு			
புகழ் ஒழிய வையகத்து	....	21	314
புரிவின்றி யாக்கைபோல்	....	15	197
புரிவொடு நாவினுல் பூவை	....	21	330
புலிக்கணமும் சீயமும்	...	6	83
புல்மேய்ந்து அசைஇ	....	5	69
புல்லார் நிரைகருதியாம்	....	5	73
புல்லார் புகலொடு போக்கு	....	10	130
புனையும் பொலம்படை	....	21	320
பூ			
பூங்கண் நெடுமுடிப் பூவைப்பூ	....	19	266
பூந்தாமரையில் பொடித்து	....	19	256
பூவைவிரியும் புதுமலரின்	....	19	245
பூவொடு நீர்தூவி	....	21	304
பெ			
பெண்மேல் நலிவு	....	21	342
பெருமட நோக்கின்	....	21	337
பெரும்பணை மென்தோள்	....	21	359
பெரும்பூண் சிறுதகை	....	15	189

நூற்பாத்தொடக்கம்		இயல் நூற்பா எண்	பக்கம்
பை			
பைந்தொடிமேல் உலகம்	....	21	308
பொ			
பொய்அகல நாளும் புகழ்	....	6	88
பொய்இல் புலவர் புரிந்து	....	21	318
பொறிமயில் ஆலின	....	21	359
போ			
போர்க்குப் புணைமன்	....	17	225
பௌவம் பணைமுழங்க	....	8	103
ம			
மங்குல் மனம்கவர	....	19	269
மடங்கலில் சீறி	....	8	114
மண்டு அமர்த்திண்தோள்	....	13	175
மண்டும் எரியுள்மரம்	...	5	63
மண்பதன் நோக்கி	....	21	326
மதியேர் நெடுங்குடை	....	15	187
மயங்காத தார்ப் பெருமை	....	10	129
மயங்கி மகிழ் பெருக	....	21	352
மயில் கணத்தன்னார்	....	10	131
மருப்புத் தோளாக மழவிடையில்	....	13	167
மலைபடு சாந்தம்·மலர்	....	19	270
மல்லாடு தோளான் அளி	....	21	344
மற்கொண்ட திண்தோள்	....	21	366
மண்மேல் வரும் என	....	17	216
மன்னர் மடங்கல்	....	19	243
மாட்டிய பிள்ளை மறவர்	....	6	86

நூற்பாத்தொடக்கம்		இயல்நூற்பா எண்	பக்கம்
மா			
மாண் நலம் கொள்ளும்	....	21	363
மாயவன் மாயம் அதுவால்	....	19	266
மாலை துயல மணி எறிந்து	....	21	306
மி			
மிகத்தாய செங்குருதி	....	11	149
மிகை அணங்கு மெய்நிறீஇ	....	21	304
மின்னார் சினம் சொரிவேல்	....	13	163
மு			
முந்தத்தான் மாவொடு	....	21	313
முந்தை முதல்வர்	....	5	73
முல்லைக்குத் தேரும்	....	19	248
முற்றுமுலையார் முயங்க	....	21	349
முன்புறம் தான்காணும்	....	21	319
முன்னர் முரசு இரங்க	....	8	103
முன்னரும் பின்னரும்	....	13	170
மூ			
மூவரும் நெஞ்சமர முற்றி	...	15	191
மே			
மேலார் இறை அமருள்	....	19	249
மேவார் உயிர் உணங்கமேல்	....	6	85
மொ			
மொய்அகத்து மன்னர்	....	13	168
மொய்அணல் ஆநிரை	....	5	70
மௌ			
மௌவல் வீரியும் மணம்	....	21	324

நூற்பாத்தொடக்கம்		இயல்நூற்பா எண்	பக்கம்
யா			
யாமே பகுத்திடல் வேண்டா	....	6	91
யாம் உயங்கும் மென்முலை	....	21	350
யானை தொடரும் கொடிபோல	....	21	354
வ			
வஞ்சம் இல்கோலானை வாழ்த்தி	....	15	189
வண்டு உறையும் கூந்தல்	....	21	332
வந்தநீர் காண்மின் என்று	....	6	81
வந்த படைநோனாள்	....	15	197
வயங்கு உளை மான் தென்னன்	...	19	269
வயிர்மேல் வளைஞரல	....	13	162
வரிசை கருதாது வான்போல்	....	19	248
வரிப்பந்து கொண்டு ஒளித்தாய்	....	19	272
வளிதுரந்தக் கண்ணும்	....	19	251
வளையும் வயிரும் ஒலிப்ப	....	11	148
வள்வு ஆய்ந்து பண்ணுக	....	21	357
வா			
வாடை நலிய வடிக்கண்ணாள்	....	15	194
வாளை பிறழும் கயம் கடுப்ப	....	13	171
வாள் அமரின் முன் விலக்கி	....	21	303
வாள் நாட்கொளலும்	....	10	127
வாள் புகா ஊட்டி	....	21	307
வானத்து இயலும் மதி	....	21	360
வானம் இறைவன் படர்ந்தென	....	13	174
வி			
விட்டிடில் என் வேந்தன்	.....	17	221
வீ			
வீட்டில் கிளி நால்வாய்	....	19	254

நூற்பாத்தொடக்கம்		இயல் நூற்பா எண்	பக்கம்
விண்வேண்டின் வேருதல்	....	19	250
விலங்குநர் ஈங்குஇல்லை	....	21	355
வில்நவில் தோளானும்	....	15	200
வில்முன்கணை தெரியும்	....	15	198
வில்லார் குறும்பிடை	....	17	218

வீ

வீடு உணர்ந்தோர்க்கும்	....	8	111

வெ

வெங்கண் முரசு அதிரும்	...	13	172
வெங்குருதி மல்க	...	6	83
வெந்தொழில் கூற்றமும்	....	13	173
வெய்ய நெடிது உயிரா	...	21	361
வெய்யோன் கதிர்விரிய	....	19	252
வெல்புரவி பூண்ட விளங்கு	....	19	258
வெல்பொறியும் நாடும்	....	13	161
வெள்வாள் கருங்கழல்கால்	....	10	128
வெள்ளம்போல் தானைவியந்து	....	15	191
வெள்ளிமுளைத்த விடியல்	....	19	255
வெறிகொள் அறை அருவிவேங்கடம்	....	19	267

வே

வேட்டவை எய்தி விழைவு ஒழிதல்	....	21	341
வேண்டார் பெரியர்	....	,,	303
வேண்டுதியால் நீயும்	....	19	267
வேந்து ஆர்ப்ப வெஞ்சமத்து	....	21	313
வேயுள் விசும்பு	....	15	201

வை

வையமகளை அடிப்படுத்தாய்	....	19	244

புறத்திணையியல் - உரைமேற்கோள் நூற்பாக்கள் முதற்குறிப்பு
அகரவரிசை

நூற்பாத்தொடக்கம்	நூல்		இயல் எண்	பக்கம்
ஆங்கனம் உரைப்பின்	பன். பட.	....	2	48
ஆன்ற சிறப்பின்	பன். பட.	....	1	46
கட்டில் நீத்த பால்	தொல்.	....	1	46
காட்சி ஐயம் துணிவே	பு. வெ.	....	21	333
காண்டல் நயத்தல்	பு. வெ.	....	21	338
காமம் நீத்த பால்	தொல்.	....	1	46
கைக்கிளை முதலா	தொல்.	....	2	48
சீர்செலவழுங்கல்	பு. வெ.	....	21	355
தன்னுறு தொழிலே	பன். பட.	....	4	55
பல்லமர் செய்து	பன். பட.	....	2	48
வேட்கை முந்துறுத்தல்	பு வெ.	....	21	345

உரைவிளக்க ஒத்தநூற்பா முதலியவற்றின்
அகரவரிசை

தொடக்கம்	இயல்நூற்பா எண்	நூல் பக்கம்
அகத்தோன் செல்வமும்	11	தொல். 151
அகத்தோன் வீழ்ந்த	3	,, 53
அகப்பொருள் புறப்பொருள்	2	தொ. வி. 51
அடுத்தூர்ந்தேத்திய	19	தொல். 273
அதிரப்பொருவது	2	மு. வீ. 52
அமரர்கண் முடியும்	19	தொல். 273
அரவம் எடுத்தல்	8	வீர. 116
அறுவகைப்பட்ட	15	தொல். 205
அனைக்குரி மரபின்	3	,, 53
ஆ		
ஆபெயர்த்துத் தருதல்	6	,, 89
ஆய்ந்த அகப்புறம்	21	வீ. மேற் 368
ஆரமர் ஓட்டல்	6	தொல். 90, 94
ஆற்றும் அகமேபுறமே	2	வீர. 50
இ		
இயங்குபடை அரவம்	8	தொல். 115
இரைந்து பகைவரோடு	2	மு. வீ. 52
இறந்தமூப்பும்	21	வீ மேற். 368
உ		
உழிஞைஓங்கிய	10	பு. 143
ஊ		
ஊரொடு தோற்றமும்	19	தொல். 273
ஏ		
ஏற்றும் முதுபாலை	2	வீர. 51

தொடக்கம்	இயல்நூற்பா எண்	நூல் பக்கம்
	ஒ	
ஒருப்பாடு நற்சொல்	5	வீர. 75
	ஓ	
ஓடாப் படைஆண்மை	6	,, 95
	க	
கட்டில்நீத்த	1	தொல். 46
கணையும் வேலும்	13	,, 175
கதமலி கரந்தை	6	பு. 94
	கா	
காஞ்சிகாஞ்சிஅதிர்வே	17	பு. 229
காட்சிஐயம்	21	பு. 333, 368
காட்சிமுதலா	,,	வீ. மேற். 368
காண்டல் நயத்தல்	,,	பு. 338, 368
